282

காவேரி

விரோதி - தை

January - 1950



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
282
1-50
N50-9.6
199313

தொழிலாளர் விடுதி

ஏசிசி சிமெண்ட்

நீடித்த, சிக்கனமான, நெருப்பினுல் பாதிக்கப்படாத, சுத்தமான தொழிலாளர் விடுதிகள் கட்ட உதவுகின்றது. நல்ல தோற்றம், சுகாதார முறை உடைய வாசஸ்தலம், ஆனந்தமான சுற்றுவட்டாரம் இவை தொழிலாளிகளின் சுகாதாரத்தையும், சாமர்த்தியத்தையும், உயர்த்துகிறது-அதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துகிறது. பந்தோஸ்த்திற்கு சிமெண்டின் இந்த பிரசித்தமான பிராண்டுகளில் ஏதாவது ஒன்றைக் குறிப்பிடுங்கள்.
'ஏ.சி.சி.' 'நீலகிரி' 'சார்மினூர்'

ஏசிசி சிமெண்ட்

இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் 14 பாக்டரிகள் இருக்கின்றன.

தி சிமெண்ட் மார்கெட்டிங் கம். ஆப். இந்தியா லிட.
ஏ.சி.சி. சிமெண்டின் விற்பனை மானேஜர்கள்.

ADTS CMI 974 TAMIL

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

நின்றுவிட்டதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ் ரிஜிஸ்டர்ட்) எக்காரணத்தினுலும் எத்தனை மாதமானுலும் நின்றுபோன மாதவிடாய் அதிக சுலபமாகவும் அதி சீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். ஆயிரக்கணக்கான மக்களின் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற ஔஷதம். உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகள் வாங்கி ஏமாருதீர்கள். விலை ரூ 7—0—0. சாதாரண கேஸுகளுக்கு Ordinary விலை ரூ. 9—0—0. நாள்பட்ட கேஸுகளுக்கு Special. (த. சி. தனி.)

கர்ப்பத்தடை!

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) 12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருடக்கு சாஸ்வதமாக கர்ப்பத்தை தடுக்கும் மாதவிடாய் தவருது (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 10-0-0. ஜெல்லி விலை ரூ. 5-8-0 (த. சி. தனி).

யானைக்கால்

(நிகரற்ற மருந்து எலப்டோ பில்ஸ்) ஆரம்ப அல்லது கடுமையான யானைக்கால், பிலேரியா வியாதிகளுக்கு நிச்சயமான நிவாரணி. பலநாள் அனுபவத்தின் பலனுக பயாரிக்கப்பட்டது. உத்திரவாதமுள்ளது. ஆபத்தில்லாதது. விலை ரூ. 9—8—0. (த. சி. தனி).

Manufacturers: SEENU & CO., Post Box No. 1638, (3) MADRAS-1.
Branch: 134 (A), Serangoon Road, SINGAPORE.
Wanted Agents in MALAYA UNION & CEYLON.

நம்பத் தகுந்ததும் நேர்மையானதும்

ரூபாய் 25,000 பரிசு

ரிஜிஸ்தர் நெ. 249 — போட்டி நெ. 19

M/S. Premier Bank of India Ltd..ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ள சரியான விடைக்கு எண்ணுக்கு-எண், கட்டத்திற்கு-கட்டம், முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசைகள் சரியான விடைக்கு, இரண்டாம் பரிசு ரூ. 7000-ம். முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000-ம். முதல் மூன்று நெம்பர் சரியாக உள்ள விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000-ம். முதல் இரண்டு நெம்பர்கள் சரியானவர்களுக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் சரியாகப் பகிர்ந்து அளிக்கப்படும்.

150

RAINBOW COMPETITIONS

KEY S NO. 15 *26 TO 41=134

33.	35.	36.	30.
38.	28.	27.	41.
26.	40.	39.	29.
37.	31.	32.	34.

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions* No 15 on 3/11/49 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

For The Premier Bank of India Ltd

V. Ramanathan
28.11.49
Agent Madras

முடிவு தேதி 27--1—50 — விடை 12—2—50

பிரவேசக் கட்டணம்

கூபன் 1-க்கு ரூ. 1. 6 கூபனுக்கு ரூ. 5.

விடை கண்டுபிடிக்கும் விதம்:- 30 முதல் 45 வரையுள்ள எண்களை, கொடுக்கப்பட்டு இருக்கும் கட்டங்களில், மேல் இருந்து கீழும் இடமிருந்து வலமும் குறுக்காகவும் எப்படிக் கூட்டினுலும் 150 வரும்படியாக அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரு தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:-காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூபன்கள் வேண்டுமானுலும் எழுதி அனுப்பலாம். பிரவேசக் கட்டணத்தை மணியார்டர் மூலமாக்வோ அல்லது கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசிதை கூபன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். வசூலுக்கு தகுந்தாற்போல் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். இப்போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவு, (சட்டபூர்வமாய் கட்டுப்படுவதுமாகும்). போட்டியின் முடிவு தெரிந்து கொள்ள (RAINBOW) இங்கிலீஷ் மாதமிருமுறை பத்திரிகையில் காணவும். கிடைக்காவிட்டால் அணு 4 ஸ்டாம்பு அனுப்பினுல் விடை அனுப்பப்படும்.

THE RAINBOW COMPETITIONS No. 19 - 306/6, Mint Street, MADRAS-1.

பாலுட்ரின் மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு
ஒரு வாராந்திர மாத்திரை
ஒரு அணா
இன்றிலிருந்து நீங்கள் இந்தப் புதிய லைஸ் 0·3 கிராம் 'பாலுட்ரின்' மாத்திரையை, வாரம் ஒரு முறை சாப்பிட்டு வந்தால், உங்களை மலேரியாவிலிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம். 'பாலுட்ரின்' இப்பொழுது சுத்தமான முறையில், சீதோஷ்ணத்தால் பாதிக்கப்படாத தபடி கண்ணாடி காகிதத்தில் பாக் செய்யப்பட்டிருக்கிறது.
அளவு
மலேரியாவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுவதற்கு வாரத்திற்கு ஒரு மாத்திரை
மலேரியா வந்த ஜுரம் இறங்கும் வரை தினம் ஒரு மாத்திரை
குழந்தைகளுக்கு குறைந்த அளவு, டாக்டரின் சொற்படி
ஒரு ஸ்டிரிப்பின் விலை 8 அணா
அல்லது ஒரு மாத்திரையின் விலை
ஒரு அணா
ICI
இம்பீரியல் கெமிகல் இண்டஸ்டிரீஸ் (இந்தியா) லிட்.
PH. 20

தி விச்வபாரதி இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:- பம்பாய்)

சென்னை ஆபீஸ்:- 30, ஸகண்ட் லயன் பீச்.

இந்தியக் குடியரசு உதயமாகும். நாம் மகிழ்வெய்தும் இப்புனித நாளன்று நமது பாலிஸிதாரர்களுக்கும், ஸ்தல பிரதிநிதிகளுக்கும் மற்றும் நமது நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

பாலிஸிதாரர்கள் விஷயங்களைக் கவனிப்பதில் கண்ணும் கருத்துமாயிருப்பதுடன் ஸ்தல நிர்வாகிகளையும் கண்யமாக நடத்துவோம் என்பதை இங்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

ஸி. ஜி. திவேதி,
மானேஜிங் டைரக்டர்.

ஆர். ஜி. விஜயாகர்,
சேர்மன்.

டி. எஸ். பஞ்சு,
சென்னை பிராஞ்ச் மானேஜர்.

தேவையற்ற ரோமத்தை விலக்குங்கள்!

கடந்த 50 ஆண்டுகளாக உலகப் பிரசித்திபெற்ற

பாத்ஷாஹி

வாசனைப் பவுடர்—ஸோப்—லோஷன்

நேர்த்தியான சரும சுகத்திற்கு இணையற்றது.

தென்னிந்தியாவிற்கு ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஷாப்களிலும்
கிடைக்கும்.

ரிஜிஸ்டர்டு நெ. 529

உற்பத்தியாளர்கள்:

C. C. மஹாஜன் அண் கோ., பம்பாய்-2.

பொன் விழாவின் பொலிவு......

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்தின் சிகரம் ஆனந்தத்தாண்டவம். சுகவாழ்வும் ஆரோக்யமும் அனைவருக்கும் அத்தியாவசியமானது. அரை நூற்றாண்டுக்கு மேலாக மானிட வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியும் மாசற்ற தேகாரோக்யமும் அளித்துவரும் பண்டித டி. கோபாலாச்சார்லுவின் ஜீவாம்ருதம் பொன் விழாவின் பொலிவுடன் விளங்குகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 5-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 3-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.
(தபால் செலவு ரூ. 0-14-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0. (தபால் செலவு ரூ. 0-14-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.
(தபால் செலவு ரூ. 0-13-0)

கூஞ்சா தைலம்

வழுக்கை, மயிர் கொட்டுதல் போன்ற வியாதிகளை நிவர்த்திப்பதுடன் மயக்கத்தையும் போக்குகிறது. தலை மயிர் சம்பந்தமான எவ்வித நோயையும் கண்டிக்கவல்ல சிறந்த கேசவிருத்தி டானிக்.

ஒரு பாட்டில் ரூ. 2-0-0
தபாற் செலவு ரூ. 0-14-0 வேறு.

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI
Ayurvedha Sasthri (K. M.)
24, Debendra Ghose Road, Bhowanipore
CALCUTTA, 25
Stockists:
Messrs. APPAH & CO., 286, Netaji Subhas ChandraBose Road, Madras.

நாம் போற்றும் நல் வாழ்க்கை

வீட்டுப் பாடகி பாடுகிருள், அவ்வினிய இசையை சுற்றிலும் உள்ள நண்பர்கள் உருக்கமாக அமைதியுடன் அனுபவித்துப் புகழ்ச்சியை தெரிவிக்கிருர்கள். இதுவும் நம் தேசத்தின் பழமைக் கலாசாரக் கொள்கைகளின் ஓர் அம்சமாகும்.

இக் கொள்கைகளே இன்றும் போற்றிவரும் நாம், இக் கலாசாரம் நீடூழி வாழ, தேசத்தில் தொழிற் செழிப்பும், பெருக்கமும் இன்றியமையாதவை என்பதை மறவோம்.

டாடா ஸ்ரீகு

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்,
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்: 23B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 45,00,000

●

டைரக்டர்கள்
G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா (வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா (வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்
B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:— T. T. KRISHNAMACHARI & Co.

12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

ஜல தோஷம்,
மார்-சளி
உடம்பு வலிக்ஞக்கு
நிவாரணமளிக்கிறது

'ஜீவான்ஜன்'

சரீரத்தின் மேல் தடவி
தேய்ப்பதற்கும் ஆவியாக
சுவாசிப்பதற்கும்
உபயோகரமானது
ரஸாயனக் களிம்பு, மிருக
கொழுப்பு சேராதது

தயாரிப்பவர்கள்
ஜீவான்ஜன் லாபொரட்டரீஸ் லிட்
மதராஸ்-14

ஜீவான்ஜன்

ஸோல் ஏஜன்டுகள்
கே.கே.பிள்ளை & கோ
ராயப்பேட்டை...மதராஸ்-14

ஜீவான்ஜன்

பொருளடக்கம்

விரோதி } மலர் 9 } { தை { இதழ் 6

குடியரசுப் பொங்கல் 11

சூரிய ஸ்நானம் 12
ஸி. வி. ராமகிருஷ்ணன்

நிலைபெற்ற சிலை 17
ஜெகசிற்பியன்

பொங்கற் பாட்டு 25
ப. சு. தண்டபாணி

அமர-ஷா 27
எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

சௌந்தர்ய லக்ஷியம் 33
வாசன்

பொன்னம்மாள் 41
தி. சேஷாத்ரி

இந்தியாவும் சீனமும் 49
டாக்டர். வே. ராகவன்

பட்டண் பெருமை (தொடர் கதை) 55
கே. எம். முன்ஷி

முதல் நாடகம் 70
ஆர். எஸ்.

அகில தேச நாடகக்கலை 76
ஆண்டி

புத்தக விமர்சனம் 80

ஆத்ம சாந்தி 84
எம். எஸ். கமலா

லக்ஷியக் கனவு (தொடர் கதை) 89
கே. சுந்தரம்மாள்

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திராகாசிரியர் பொறுப்பாளியல்ல.

19933
சென்னை-600 008

காவேரி

விரோதி
மலர் 9

"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்

தை
இதழ் 6

குடியரசுப் பொங்கல்

தை பிறக்கிறது. இல்லங்களில் பால் பொங்குகிறது. சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படுகிறது. இந்தியக் குடியரசும் பக்குவமாகி மக்களின் வாழ்க்கையில் ஜனவரி 26ல் பொங்கப் போகிறது.

இந்தியா போன்ற பரந்த பிரதேசத்தை ஒரு குடியரசாக அமைத்து ஒரே கொடியின்கீழ் கொண்டு வந்து மக்கள் ஆட்சியாக அமைப்பதென்பது சரித்திரத்தில் ஓர் புரட்சிகரமான சம்பவமாகும். சுதந்திர மனப்பான்மையும் ஐக்கிய மனோபாவமும் மக்கள் மனத்தில் நங்கூரம் பாய்ந்து நல்ல தலைமையின்கீழ் குடி அரசு நடத்தப் படுமாயின் நாட்டில் காலக் கிரமத்தில் பால் மாரி பெய்வது திண்ணம்.

குடியரசின் வெற்றிக்கு ஐக்கிய மனோபாவம் அவசியம். வேற்றுமை மனோபாவம் அதற்கு எதிரி. மக்கள் உண்மையில் ஆட்சி புரிவதில்லை; அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள் தான் ஆட்சி புரிவது வழக்கம். தலைவர்களையும், பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுப்பதில் தான் மிகுந்த கவனம் வேண்டும். இந்தியக் குடியரசுத் திட்டப்படி வயதுவந்த ஆண் பெண் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை உண்டு. கட்சியின் பெயரால் நிர்வாகம் நடப்பது சகஜம். ஆனால் கட்சியின் பெயரால் திறமையற்றவர்களை இந்நாட்டில் பிரதிநிதிகளாக நிறுத்திவைத்து, தேர்ந்தெடுக்கச் செய்வதும் சகஜம். எனவே கட்சியின் பெயரால் பிரதிநிதிகள் பொறுக்கப்படினும், தகுதிவாய்ந்த திறமைசாலிகளைப் பிரதிநிதிகளாகப் பொறுக்கி அனுப்பாவிடில் குடியாட்சியில் மக்களுக்கு நம்பிக்கை போய்விடும்.

நல்ல ஆட்சியில்லாமற்போனால் மக்கள் அதிருப்தி அதிகரிப்பதோடு வெளி நாட்டு உபத்திரவங்கள் நமக்கு அதிகமாகும். பாகிஸ்தானம் நம்முடன் என்றும் நேசமாக இருக்கப்போவதில்லை. மதத்தின் பெயரால் நிறுவப்பட்ட அவ்வாட்சி இந்துக்கள் பெரும்பாலாக உள்ள இந்நாட்டைப் பகைமை மனப்பான்மையுடனேயே எப்பொழுதும் நோக்குவார்கள். நம் நாட்டில் குழப்பம் ஏற்பட்டால் அதைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் நாட்டை விஸ்தரிக்கத் தயங்கமாட்டார்கள். கம்யூனிஸ்ட் ருஷ்யா ஆசியாவைக் கம்யூனிஸ்ட் ஆதிக்கியத்தின்கீழ் கொண்டுவரத் திட்டமிட்டு வேலைசெய்து வருகிறது. சைனாவை விழுங்கியாய் விட்டது. இந்தோசைனா, பர்மா, மலேயா எங்குமே கம்யூனிஸ்ட் குழப்பங்கள் அங்குள்ள ஆட்சிகளைக் கதிகலங்க வைத்து வருகின்றன. இந்தியாவிலும் கம்யூனிஸ்டுகள் உட்புகுந்து தீவிர வேலை செய்து வருகிறார்கள். நமது கவர்மெண்டார் அதை ஓங்க விடாமல் பாதுகாத்து வருவது உண்மையாயினும், ஆட்சி முறை மக்களின் நலனைக் காத்து விருத்தி செய்யாவிட்டால், நாட்டில் குழப்பம் ஏற்பட்டு கம்யூனிஸ்டுகளுக்கு இடமளித்து விடும்.

எனவே, ஓர் பத்துப் பேர் அடங்கிய கூட்டம் ஓர் மாகாணம் முழுவதற்கும் பிரதிநிதிகளைப் பொறுக்குவது, அதை மக்கள் வேறு வழியின்றி ஆதரிப்பது, என்ற பழக்கம் ஒழிந்தாலொழிய, குடியரசுத் திட்டம் செவ்வனே நடைபெறாது. உலகம் இருக்கும் நிலையில் இந்திய மக்கள் மிக்க விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் அபாயம் நிச்சயம்.

மிகப் பாடுபட்டுச் சம்பாதித்த சுதந்திரத்தைக் காப்பாற்ற இறைவன் நமக்கு அருள் புரிய வேண்டுமென்று நாம் அனைவரும் பொங்கற் புனித நாளன்று வேண்டுவோமாக.

சூரிய ஸ்நானம்

(ஸி. வி. ராமகிருஷ்ணன்)

கோடி வீட்டுக் குப்புசாமி ஒரு வாரத்திற்கு முன்பு தான் அமெரிக்காவிலிருந்து தம்பதி சகிதமாகத் திரும்பி வந்தார். அவர்கள் வீடு, அவர்கள் நடை, பேச்சு சகலமும் அமெரிக்கா மயமாகவேயிருந்தன. அவர்கள் குழந்தை "சேம்" (சாமிநாதன் என்ற பெயர் 'சேம்' ஆகிச் சுருங்கி விட்டது) கூட அமெரிக்கப் பிரதிநிதி போல விளங்கினுன்.

காலையில் குளத்திற்குச் செல்வதற்காகக் கிளம்பின என் பாட்டி கோடி வீட்டுக் குப்புசாமியின் பையன் "சேம்", வெயிலில் வாசலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து விட்டு, அவனைத் தூக்கிக் கொண்டு அவர்கள் வீட்டிற்குள் ஓடினுள், இந்தச் சாக்கிலாவது அவர்களைப் பற்றிக் கொஞ்சம் விஷயங்கள் சேகரித்தால் குளத்தங்கரை மகா நாட்டிற்கு உதவுமே என்ற ஆசை பாட்டிக்கு!!

"என்ன பாகீ, குழந்தையை வெயிலில் விட்டுவிட்டு இப்படி வேடிக்கை பார்க்கிருயே, அது உடம்புக்கு ஆகுமா, என்னமோ அம்மா, என்னதான் அமெரிக்கா போய் விட்டு வந்து விட்டாலும் இவ்வளவு அஜாக்கிரதையாயிருக்கக் கூடாது" என்று பீடிகை போட்டுக் கொண்டே கீழே உட்காரப் போனுள்.

"யாரது, ஜானகிப் பாட்டியா, சௌக்கியமா, என்ன கீழே உட்காருகின்றீர்களே, இப்படிச் சோபாவிலே உட்காருங்கோ," என்று வரவேற்றுள் பாகீ என்கிற குப்புசாமியின் மனைவி பாகீரதி.

பாட்டி சோபாவில் தட்டி உட்கார்ந்ததுமே ஒரு குதி குதித்தாள். "என்னடி பாகீ, இது என்ன ஆளைத் தூக்குகின்றதே. உங்காத்திலே எல்லாமே விசித்திரமாயிருக்கும் போல இருக்கிறதே. குழந்தையை வெயிலில் உட்கார வைத்து விட்டு நிம்மதியாய் உட்கார்ந்து கொண்டு இருக்கிருய். இந்த ஸோபாவோ ஆளையே தூக்கித் தூக்கி அடிக்கிறது. ஒன்றுமே புரிய வில்லையே!" என்று இழுத்தாள் பாட்டி.

"இது தான் பாட்டி, அமெரிக்கா. விவரமாய்ச் சொல்லுகிறேன். கேளுங்கோ. அமெரிக்காவில் மனிதன் சந்தோஷமாயும், சௌகரியமாயும் இருக்கிறதற்கு வேண்டியவைகளைக் கண்டு பிடிப்பதிலேயே அங்குள்ள விஞ்ஞானிகள் அவர்கள் ஆயுள் பூராவும் ஈடுபட்டிருக்கின்றனர். உதாரணமாக, ஸோபாவில் ஒரே மாதிரியாக உட்கார்ந்து கொண்டிருந்தால், சூடு அதிகமாகி ஒருவித அருவருப்புத் தட்டிவிடும். ஆகவே உள்ளே நுண்மையான ஸ்பிரிங்குகள் வைத்து, ஒருவித ஆட்ட நிலையை ஏற்படுத்தி, உட்கார்ந்திருப்பதே தெரியாமல் இருக்கும்படி செய்திருக்கின்றனர். இது மாதிரியே மனிதனுக்கு வரும்வியாதிகளை ஆராய்ந்து அதைத் தடுக்கும் வழிகளையும் கண்டு பிடித்துள்ளனர். அடாடா, உங்கள் கேள்வியை மறந்து விட்டேனே, 'குழந்தையை வெயிலில் விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கலாமா?' என்றல்லவா கேட்டீர்கள். இதற்குத் தான் பாட்டி 'சூரிய ஸ்நானம்' என்று பெயர்".

"அதென்னடி அது 'சூரிய ஸ்நானம்' கங்கா ஸ்நானத்திற்குப் போட்டியாயிருக்கே" என்று குறுக்கிட்டாள் பாட்டி.

"குழந்தைகள் முதற்கொண்டு பெரியவர்கள்வரை காலை வெயிலில் கொஞ்ச நேரமாவது தங்கள் சரீரத்தின் எல்லாப் பாகங்களிலும் வெயில் படும்படி நின்ருல், காலை வெயிலில் உள்ள குறுகிய அலைகளைக்கொண்ட கிரணங்கள் சரீரத்தில் பட்டு (Ultra Violet Radiations) விடமின் 'D' என்ற சத்துப்பொருள் உண்டாகி, சில வியாதிகள் வராமல் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்று கண்டு பிடித்திருக்கின்றனர். இதைத்தான் 'சூரிய ஸ்நானம்' என்று சொன்னேன்"

"ஏண்டி, வயல்வெளிக்குப் போகின்றவர்கள், கூலிவேலை செய்கிறவர்கள் இவர்களெல்லாரும் நாள் முழுவதும் வெயிலிலேயே இருக்கின்றார்களே. அப்படியிருந்தும் அவர்கள் வியாதிகளால் கஷ்டப்பட்டுக்கொண்டுதானே இருக்கின்றார்கள்" என்று குறுக்குக் கேள்வி போட்டாள் பாட்டி.

"காலை வெயிலில்தான் பாட்டி அந்தக் குறுகிய கிரணங்கள் இருக்கின்றன. தவிரவும் 'அமிருதமும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சு' என்று சொல்லி இருக்கிறது. எனவே ஒரு சில நேரத்திற்குக் காலை வெயிலில் சரீரத்தைக் காயவைத்தால் உடலுக்கு நலமாகும்".

"என்னமோ அம்மா. நீ ரொம்பவும் படித்தவள். அழகாகப் பேசுகிறாய், என்னென்ன வியாதியெல்லாம் இந்தச் சூரிய ஸ்நானத்தினாலே நீங்கி வருகின்றன என்று கொஞ்சம் விவரமாய்த்தான் சொல்லேன் பார்க்கலாம்:" என்றாள் பாட்டி.

"கோபு பிள்ளையைப் பாருங்கள். மார்பு எலும்பெல்லாம் கூடு கட்ட ஆரம்பித்து விட்டது. குழந்தைக்கு ஏதோ திருஷ்டி பட்டு விட்டது என்று கோபு மனைவி சொல்லிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். எதிர் வீட்டுச் சாமாவைப் பாருங்கள். கால் எலும்பெல்லாம் வளைந்து அஷ்ட கோணலாய் இருக்கின்றது. எங்கள் மாமா பெண் ராகிணிக்கு ஈரல் உப்பி, இரத்த சோகை மாதிரி இருக்கிறதாம். இந்த வியாதிகளை எல்லாம் சற்று ஆராய்ந்து பார்த்தால் இவைகளுக்கு மூல காரணம் விடமின் D குறைவினால் ஏற்படும் 'ரிக்கட்ஸ்' (Rickets) என்ற வியாதியாகும் என்று தெரிய வரும்.





ரிக்கெட்ஸினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் தோற்றம்

விடமின் "D" என்ற சத்துப் பொருள் சாதாரணமாக உடற் கொழுப்பு, ஈரல், சுவாச கோசம், மூளை, எலும்புகள் முதலியவைகளில் தேங்கி நிற்கும். இந்த விடமின் குடலிலிருந்து கால்ஸியம் (Calcium), பாஸ்பரஸ் (Phosphorous) என்ற பொருள்களைக் கிரகித்து, விநியோகிக்க உதவுகிறது. தவிர தாதுப் பொருள்கள் (minerals) உடலில் தங்குவதற்கும், எலும்புகள் உறுதியாவதற்கும் இந்த விடமின் அவசியமாயிருக்கிறது. இந்த விடமினின் அளவு குறையும் பொழுது, எலும்பு வளர்ச்சி தடைபட்டு 'ரிக்கட்ஸ்' என்ற வியாதி உண்டாகிறது. இது சாதாரணமாகக் குழந்தைகளுக்கு மூன்று வயது வரையில் வரக் கூடியது. இந்த வியாதியின் காரணமாக மார்புக் கூடு கூடுதல், கால்கள், மணிக்கட்டு, முதலியன விகாரமடைதல் (Deformation) முதலியன ஏற்படுகின்றன. தவிர இந்த விகாரங்களின் காரணமாக மன வியாதியும் உண்டாகலாம். இந்த வியாதியின்

அதிர்ச்சி சில சமயங்களில் 15 அல்லது 16 வயது வரையில் கூட இருக்கும்.

கோபு பிள்ளைக்கு மார்பு எலும்பு கூட ஆரம்பித்ததின் காரணம் இந்த 'ரிக்கட்ஸ்' என்ற வியாதியாகும். சாமாவின் கால் எலும்புகள் வளைந்து கோணலாய் இருப்பது அவனுக்குச் சிறு வயதில் 'ரிக்கட்ஸ்' வந்திருப்பதையும், அது சரியாகக் குணமாக்கப் படாததையும் காட்டுகிறது. எங்கள் மாமா பெண்ணுக்கும் சிறு வயதில் 'ரிக்கட்ஸ்' வந்திருந்தது. அவளுக்குப் புஷ்டியான ஆகாரத்தை அளித்து அவள் உடலைத் தேற்ருததினால் ஈரல் வியாதியாலும், இரத்த சோகையாலும் இப்பொழுது கஷ்டப்படுகிருள். இதனின்றும் விடமின் D குறைவினால் அடுக்கடுக்காகப் பல் வேறு வியாதிகள் ஏற்படக் கூடும் என்று தெரிகின்றது.

எனவே விஞ்ஞானிகள் குழந்தைப் பருவத்திலேயே 'ரிக்கட்ஸ்' இருக்கின்றதா என்று ஆராய்ந்து அதை நீக்க முடியுமா என்று யோசித்தனர். எக்ஸ்-ரே மூலம் எலும்பை ஆராயலாம் என்று ஒருவர் கூறினர். நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்னர், முற்றின கேஸுகளில் தான் எக்ஸ்-ரே படம் 'ரிக்கட்ஸ்' இருப்பதைத் தெரிவிக்கின்றதே ஒழிய ஆரம்ப திசையில் இருப்பதை அல்ல என்று கண்டுபிடித்தனர். எனவே வியாதி வராமல் இருப்பதைத் தடுப்பதே மேல் என்று முடிவு கட்டினர்.

உடலிலே கால்ஸியம், அயம் (Iron) பாஸ்பரஸ் முதலியன குறைந்து சரியாக உபயோகிக்கப்படாவிட்டால் எல்லா வியாதிகளும் உண்டாகின்றன. ஆகவே கால்ஸியம் பாஸ்பரஸ் இரண்டையும் தகுந்த ரீதியில் இருக்கும்படி செய்வதற்கு விடமின் 'D' அவசியம் என்று கண்டுபிடித்திருக்கின்றனர். உடலில் உள்ள அயச் சத்துக்கும் விடமின் Dக்கும்கூட சம்பந்தம் இருக்கலாம் என்றும், இரத்த சோகையின் பொழுது அயச் சத்துடன், விடமின் Dயையும் கொடுப்பதின் மூலம் சோகையை நீக்கலாம் என்றும் ஆராய எண்ணியிருக்கின்றனர். இந்த ஆராய்ச்சியும் முடிந்துவிட்டால் சரீர இயக்கத்திற்கே விடமின் D அவசியம் என்று முடிவு கட்டிவிடலாம். எனவே விடமின் D இயற்கையில் உடலுக்கு எப்படி கிடைக்கிறதென்றும், செயற்கையில் அதை எப்படி அதிகரிக்கலாம் என்றும் கவனிக்கவேண்டும்.

இயற்கையில் உடலின்மேல் சூரிய வெளிச்சம் படும்பொழுது, அதில் உள்ள கண்ணுக்குப் புலப்படாத குறைந்த ஒளி அலைகளின் காரணமாக (Ultra-violet Radiation) விடமின் D உண்டாகி, இரத்தத்தில் இறுத்துக்கொள்ளப்படுகிறது. பக்ஷிகள் உடலை நக்கும்பொழுது, உடலின்மேல் உள்ள விடமின் D வாய் வழியாகச் சென்று சிறுகுடலில், ஈரல் உப்புகளின் உதவியினால், கொழுப்புடன் ஆகர்ஷித்துக் கொள்ளப்படுகின்றது. இளங் குழந்தைகளுக்கு, அவர்களது தாய்ப்பாலின்மூலம் சிறிது விடமின் 'D' கிடைக்கின்றது. ஆனால் தற்காலத்துத் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் கெட்ட வழக்கத்தை (!) விட்டுவிட்டதால், அந்தச் சிறிய அளவு விடமினும் குழந்தைகளுக்கு இல்லாமல் போய்விடுகின்றது.

ஒவ்வொருவருக்கும் சாதாரணமாக 400 லிருந்து 800 அளவுகள் வரை (Units) விடமின் D அவசியமாயிருக்கின்றது. 'ரிக்கட்ஸ்' கண்ட குழந்தைகளுக்கு 1500லிருந்து 2500 அளவுகளும், வியாதி முற்றின குழந்தைகளுக்கு 5000 அளவுகளும் விடமின் D அவசியமாகும். எனவே இயற்கையிலிருந்து கிடைக்கும் விடமினின் அளவு வெகு குறைவு என்று தெரிகின்றது. அதைச் சரிசெய்ய, செயற்கையில் கிடைக்கும் விடமின் 'D' கொண்ட பொருள்களை உட்கொள்ளவேண்டும்.

மீன், முட்டை, மீன் எண்ணெய், எர்கோஸ்டரால் (Ergosterol) முதலியவைகளில் விடமின் 'D' அதிகம் இருக்கின்றது. எர்கோஸ்டரால் என்ற தாவரப் பொருளில் சூரியகிரணங்கள் பாயும்பொழுது விடமின் D2 உண்டாகின்றது. இது 'ரிக்கட்ஸை' போக்க உதவுகின்றது. நம் உடலிலுள்ள கொழுப்பில் சூர்யகிரணங்கள் படும்பொழுது விடமின் D3 உண்டாகின்றது. இந்தவிடமின் D2ம் விடமின் D3ம் சிறந்த சத்துப் பொருள்களாகும். பசுக்கள் மந்தை வெளிகளில் மேய்வதால் அவைகளின் உடலில் விடமின் D' உண்டாகி, பசுவின் பாலில் விட

மின் D சத்துஅதிகம் கலந்து இருக்கின்றது. எனவே பால், மீன்எண்ணெய் முதலியவைகளைச் சாப்பிடுவதின் மூலம் 'விடமின் D' சத்துஅதிகமாகி, 'ரிக்கட்ஸ்', அதைத் தொடர்ந்துவரும் இரத்த சோகை, முதலிய வியாதிகள் வராது நம் சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம், "வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பது நல்லது இல்லையா, பாட்டி" என்று கூறிமுடித்தாள் பாகி.

"என்னமோடி, அம்மா, எனக்கென்ன தெரியும்? உங்கள் இங்கிலீஷ் வைத்தியமெல்லாம்" என்று முணுகினாள் பாட்டி.

பாட்டி, உங்கள் வீட்டுப்பேரனுக்கும் தினம் மீன் எண்ணெயைத் தடவி, காலை வெயிலில் உட்காரவையுங்கள். இனிமேல் நம் குழந்தைகளெல்லாம் ஒருத்தரை ஒருத்தர் பார்க்கும்பொழுது, குட்மார்னிங் என்பதற்குப் பதிலாக, சூரியஸ்நானம் ஆகிவிட்டதா என்று கேட்கவேண்டும்."

"ஏண்டி, குழந்தைகளைப்போல நாமும் 'சூரியஸ்நானம்' செய்ய வேண்டாமா?" என்று கேட்டாள் பாட்டி.

"நீங்களெல்லாம் தான், தினமும் குளத்தங்கரையில் குளித்துவிட்டு, புடவை காய்கிறவரையில் நின்று சூரியஸ்நானம், மகாநாடு முதலியவைகளை முடித்து விட்டுத்தானே வீட்டுக்கு வருகின்றீர்கள். உங்களுக்கு எதற்குப் பாட்டி தனியாக வேறு சூரியஸ்நானம் வேண்டும்."

"பாகி, நீ அமெரிக்கா போய்விட்டு வந்து பெரிய வாயாடியாகிவிட்டாயே, என்னையே மடக்கி விட்டாயே, நீ மகராஜியாக இருக்கணும்" என்று சொல்லிக் கொண்டே வம்பர் மகாநாட்டை நினைத்துக் கொண்டு, குளத்தங்கரையை நோக்கி எழுந்து நடக்க ஆரம்பித்தாள் பாட்டி.

ஸ்டாண்டர்ட் ஜெனரல் அஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்

(ஹெட் ஆபீஸ்: கல்கத்தா)

சேர்மென்: ஸர் பத்ரீதாஸ் கோயென்கா, Kt., C.I.E.

ஜெனரல் மானேஜர்: U. N. சட்டர்ஜீ

நெருப்பு, கடல், மோட்டார் முதலிய எல்லாவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் ஏற்றுக்கொள்ளுகின்றது

மதராஸ் ஆபீஸ்:

37, எர்ரபாலு செட்டி தெரு

தபால் பெட்டி நெ. 1602: மதராஸ்-1

போன் நெ. 4779 தந்தி: "STANGENAL"

மானேஜர்:

T. S. முத்துஸ்வாமி, M. A., B. L.

STANDARD

Estate Car



ஸ்டாண்டர்ட் எஸ்டேட் கார்

குடும்ப உபயோகத்திற்கு உகந்த கார். ஷாப் செல்ல,
பிரயாணம் செய்ய, மற்றும் ஏனைய பொது
உபயோகங்களுக்குச் சிறந்தது.

முழு விபரங்களுக்கு:

தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்)
லிமிடெட்

மதராஸ், பங்களூர் & உதகமண்டலம்

நிலைபெற்ற சிலை

ஜெகசிற்பியன்

தஞ்சையிலிருக்கும் என் பால்ய நண்பன் சுந்தரத்துக்குக் கல்யாண ஏற்பாடுகள் முடிந்து, எனக்கு அழைப்பும் வந்திருந்தது. அன்றிரவு ரெயிலேறி அடுத்த நாள் காலை முகூர்த்த நேரத்திற்குமுன் கல்யாண விடு போய்ச் சேர்ந்தேன். எதிர்பார்த்த அளவை விட மிகச் சிறப்பாகவே கல்யாண வைபவங்கள் நிறைவேறி முடிந்தன.

மத்தியானப் பந்தி முடிவதற்குள் பகல் இரண்டு மணியாகிவிட்டது. மாப்பிள்ளை சுந்தரமும், நானும், மற்ற நண்பர்களுமாகச் சேர்ந்து வெற்றிலை பாக்குச் சகிதம் மாடிக்குப் போனோம். சர்க்கரை ரேஷன் முதற்கொண்டு சர்வதேச செலாவணி மதிப்புக் குறைவுவரை எங்கள் பேச்சு, வாதங்களாகவும், விமர்சனங்களாகவும் வெடித்துச் சிதறிக்கொண்டிருந்தது, கல்யாணத்திற்கு வந்திருந்த வெளியூர் விருந்தினர்களில் நான் தான் அவர்கள் கண்களுக்குச் சற்றே கௌரவமானவனாகப் பட்டதால், அவர்களுடைய வாதப் பிரதிவாதங்களுக்கு என்னையே அக்கிராசனம் வகிக்கச் சொல்லிவிட்டார்கள்! எனக்கென்னவோ அவர்களின் வெட்டிப் பேச்சில் கலந்துகொள்ளப் பிரியப்படவில்லை. பத்து வருஷங்களுக்கு முன்னால் நான் இந்தத் தஞ்சையில் படித்துக் கொண்டிருந்தபோது ஓடியாடித் திரிந்த இடங்களை யெல்லாம் போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஒரு குருட்டு ஆசையே என்னுள் அப்போது தலைதூக்கி நின்றது.

இப்படி எண்ணிக்கொண்டிருக்கும்போதே திடீரென ஒரு நண்பனின் பெயர் என் நினைவுக்கு வந்தது. முகுந்தன் என்ற அவன் நான் தஞ்சையில் படிக்கும்போது என் பள்ளித் தோழனாயிருந்தான். தஞ்சைக்கு அடுத்துள்ள வல்லம் என்ற கிராமத்தில் இருந்த அவன் தினந்தோறும் கட்டுச்சோறு கட்டிக்கொண்டு இங்கு வந்து படித்துவிட்டுப் போவான். அவன் தந்தை அவ்வூருக்கு ஒரு பிரபலஸ்தர். அந்த வீட்டார் அனைவருக்கும் என்னை நன்றாகத் தெரியும். வாரத்திற்கு ஒருமுறையாவது நான் அவனுடன் வல்லத்திற்குப் போவேன். சில தினங்களில் அவன் வீட்டிலேயே தங்கிவிட்டு அடுத்த நாள் இருவரும் தஞ்சைக்கு வருவோம். பிறகு பள்ளிப் படிப்பு முடிந்து நான் சென்னைக்குப் போய் ஏறக்குறைய இன்றோடு பத்து வருஷங்கள் ஆய்விட்டன. இதற்கிடையில் முகுந்தனை நான் இரண்டொருமுறை தான் சந்தித்திருப்பேன். கடைசியாக நான் அவனைப் பார்த்து இப்போது நான்கு வருஷங்களாவது இருக்கும். ஆதலால் இன்று அவனைக் கட்டாயம் போய்ப் பார்த்துவிட்டுவர வேண்டுமென்ற துடிப்பு எனக்கு ஏற்பட்டது.

மூன்று மணிக்கெல்லாம் சிற்றுண்டி, காபி முதலியவைகளை முடித்துக்கொண்டு, சுந்தரத்திடம் சொல்லிவிட்டு வல்லம் என்ற அந்தக் கிராமத்துக்குக் கிளம்பினேன்.

தஞ்சை நகர எல்லையிலிருந்து அந்தக் கிராமம் சுமார் ஏழுமைல் தூரத்திலிருக்கும். மெதுவாக உலாவிக்கொண்டே நடந்து சென்றுவிடலாமென நினைத்து நடையைக் கட்டினேன்.

அந்தக் காலத்தில் தஞ்சை ஜில்லாவின் வெள்ளைக்காரக் கலெக்டர்களுக்கு சுக வாசஸ்தலமாக வல்லத்தில் ஒரு பெரிய பங்களா கட்டப்பட்டிருந்தது. அந்தப் பங்களாவுக்கு அவர்கள் கோச்சு வண்டியிலோ, காரிலோ செல்வதற்காகவென தனியாக ஒரு ரோடு போடப்பட்டது. அந்த ரோட்டில் அவர்களின் வாகனங்களைத் தவிர வேறு வண்டிகளோ, கார்களோ செல்லக்கூடாது. அந்த ரோடின் பக்கத்தேயிருக்கும் ஒரு கரடுமுரடான பாதை வழியாகத்தான் நம்மவர்கள் அந்தக்கிராமத்துக்குச் செல்லவேண்டும். இது அந்தக்கால அந்நியர்களின் அகங்காரக் கெடுபிடியாய் இருந்து வந்தது. நாளடைவில் இந்தக் கெடுபிடிகளெல்லாம் தவிடு பொடியாகிவிட்டன. என்றாலும் அன்றைய அந்த அக்ரமத்தை நினைவுபடுத்தும் தோரணையிலேயே இன்னும் அந்த ஒற்றையடிப்பாதை அங்கே இருந்துகொண்டு தான் வருகிறது.

இருமருங்கிலும் உயர்ந்து பரந்து வளர்ந்து நின்ற ஆலமரங்கள் அந்தச் சாலையின் வனப்பை மிகைப்படுத்தி நின்றன. செம்மணற் பரப்பாக அமைந்திருந்த அந்தச்சாலை, பச்சை மலைக் குகையில் புகுந்து ஓடும் சந்தணக் குழம்பு ஆறுபோல நீண்டு சென்று கொண்டிருந்தது.

ஐந்து மைல் தூரம் வரை தெற்கு நோக்கிச்செல்லும் அந்த ரோடு சட்டென வளைந்து மேற்குப் புறமாக நீண்டு போகும்.

நான் அந்தத் திருப்பத்தையடைவதற்குள் சூரியன் முதுமைப் பிராயத்தை எட்டிவிட்டான். மஞ்சள் வெயில் அப்பிரதேசங்களிலுள்ள மரஞ்செடி கொடிகளுக்குத் தங்க மெருகு ஏற்றிக்கொண்டிருந்தது. தஞ்சையைவிட அந்தக் கிராமம் சற்றே மேட்டுபூமியாயிருந்ததால், அங்கே துவரை, உளுந்து, வேர்க்கடலை ஆகியவைகளே அதிகமாகப் பயிரிடப்பட்டிருந்தன. மாடு மேய்க்கும் ஆயர்குலச் சிறுவர்கள் தெம்மாங்கு மெட்டு இசைத்துக்கொண்டே அருகிலுள்ள ஏரிகரைக்கு மாட்டு மந்தையை ஊர்வலமாகச் செலுத்திக்கொண்டிருந்தனர்.

திருப்பத்தைத் தாண்டி ஒரு பர்லாங்கு தூரம் சென்றிருப்பேன். அங்கே சாலையின் பக்கவாட்டமாக ஒரு சுமைதாங்கிக்கல் நிறுத்தப்பட்டிருந்தது. நான் போட்டுக் கொண்டிருந்த ஒரு செருப்பின் ஆணி வெளியேவந்து என் பாதங்களை உறுத்திக் கொண்டிருந்ததால், அதைக்கழற்றி, சுமைதாங்கியின் மீது வைத்து ஒரு சிறு கல்லால் அடித்துக் கொண்டிருந்தேன்.

"என்னங்க! மணி இப்போ என்ன இருக்கும்?" என்று ஒரு குரல் எனக்கு மிகச் சமீபத்திலிருந்து வந்ததைக்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

ஒரு பெரிய ஆலமரத்தடியில் மிகப் பழங்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டது போன்ற ஒரு சிறு மண்டபம் பயங்கரமாக நின்றுகொண்டிருந்தது. அந்த மண்டபத்தின் உள்ளிருக்கும் எந்த வஸ்துவும் கண்களுக்குச் சரியாகப் புலப்படவில்லை. மண்டபத்தின் உடைந்துபோன படிக்கல்லில் சுமார் அறுபது எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு தொண்டு கிழவன் உட்கார்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தான்! அவன் தான் என்னை மணி கேட்டிருப்பான் என்ற ஊகத்துடன், மணிக்கட்டில் கட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்து "மணி நாலரையாகப் போகிறது" என்றேன்.

எனக்கு அந்தக் கிழவனின் முதுமைக் கோலத்தைவிட, கம்பீரமாகவும், அமைதியாகவும், பழமையாகவும் ஆனால் பாழடைந்தும் போயிருந்த அந்த மண்டபமே சிந்தனையைக் கிளறுவதாயிருந்தது!

மண்டபக் கால்களில் செதுக்கப்பட்ட சித்திர வேலைப்பாடுகளைப் பார்த்தால் அது பண்டைக்கால ஞாபகச்சின்னமாகவே எனக்குத் தோற்றமளித்தது.

அந்த மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் நன்றாகச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற ஒரு குருட்டு எண்ணம் அப்போதெனக்கு உதித்தது. மனித அரவமற்ற ஒரு நெடுங்காட்டின் பாதையில் அனாதை போல நின்றுகொண்டிருக்கும் அந்த மண்டபம், அங்கே சமைக்கப்பட்டதன் காரணம் என்னவாயிருக்கும்? இது சாதாரணமாக எல்லோருக்கும் எழக்கூடிய எண்ணமே. ஆகையால் போகும் காரியத்தையும் மறந்து அந்த மண்டபத்தைச் சுற்றிப் பார்ப்பதில் முனைந்தேன்.

உயரத்தில் சற்று மட்டமாகவும், அகலத்தில் சற்றுப் பரந்தும் கட்டப்பட்டிருந்த அந்த மண்டபத்தின் முப்புறமும் ஆவாரஞ் செடிகளும், களாச் செடிகளும், சீமைக்கள்ளியும் மண்டிக் கிடந்தன. அதனால் அதன் வெளிப்புறத் தோற்றம் சரிவரத் தெரியவில்லை.

கிழவன் உட்கார்ந்திருக்கும் முகப்புப் புறமாக வந்து மண்டபத்தினுள் சென்றேன். வௌவால் புழுக்கைகளும், ஆடுமாடுகளின் சாணங்களும், பனம்பழம், முந்திரிப்பழம் ஆகியவைகளைச் சப்பிப்போட்ட சக்கை, கொட்டைகளும் அங்கே அலங்கோலமாகச் சிதறிக் கிடந்தன.

மிக்க கஷ்டத்துடன் இன்னும் சற்றே உள்ளே சென்றேன். என்ன ஆச்சரியம்! உயிருள்ள ஒரு பெண்ணரசி அங்கே தாய்மையே வடிவெடுத்தாற்போல மோன நிலையில் வீற்றிருந்தாள்! உண்மையிலேயே நான் அதைப் பார்த்து ஒருகணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். இந்த ஸ்தம்பித நிலை சற்று நேரங்கழித்துக் கலைந்த பின்புதான், அந்த உரு ஒரு ஒப்பற்ற கலைச் சிலை என்பதை என்னால் உணர முடிந்தது! அந்தச் சிலையை சூரிய ஒளிபடும் இடத்தில் கொண்டு போய் வைத்தால், அதைப் பார்க்கும் எவரும் சிலை என்று எண்ணவே மாட்டார்கள்! அவ்விதமான ஜீவகளையும், உயிர்த்துடிப்பு அபிநயமும் கொண்டதாய் விளங்கியது. ஆயினும் அச்சிலையை நெருங்கி நன்றாக உற்றுப் பார்த்தால் அதன் தோற்றுவாய் நம்மை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சரித்திர காலத்திற்கே இழுத்துச் செல்வதாய் விளங்கியது.

அங்கேயே சற்றுநேரம் நின்றுவிட்டு ஆச்சரியமும் திகைப்பும் கொண்டவனாய் நெற்றியை நெருடிவிட்டுக்கொண்டே வெளியே வந்தேன்.

இவ்வளவு நேரம் என்னையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த அந்தக் கிழவன் "என்னங்க! ரொம்பதூரம் போகணுமா!" என்றான் என் சிந்தனையைச் சிதறடித்து.

"இல்லை, இதோ பக்கத்திலிருக்கும் வல்லத்திற்குத் தான் போகிறேன்........." என்று மெதுவாக இழுத்தேன்.

"நீங்கள் என்ன இந்த ஊருக்குப் புதுசா?" என்றான் மீண்டும் அந்தக் கிழவன்.

''அப்படியொன்றும் நான் புதிசு இல்லை; ஆனால் இந்த ஊரைவிட்டு வெளியூருக்குப் போய்ப் பத்து வருஷங்களாயின'' என்றேன் பேச்சில் பிடிப்பில்லாமல்.

''அப்படியானால் இந்த மண்டபத்தை ஏன் இப்படிப் பார்க்கிறீர்?'' என்றான் மேலும் அவன்.

''நான் இதற்கு முன்னால் இந்த மண்டபத்தைப் பார்த்ததில்லை......இவ்வளவு அருமையான சிலை இந்தக் காட்டுப் பிரதேசத்தில் இருப்பது நமது கலா ரசனையையே கேலி செய்வது போலில்லையா?'' என்றேன். இந்தக் கேள்வி அவனுக்குப் புரியாது என்றே நான் நினைத்தேன். ஆனால் அந்தக் கிழவன் அதற்கு அளித்த பதில்?—

''கலையை ரஸித்துத் தம் உயிர்போல் போற்றிய நம் மூதாதையர்களே இந்தச் சிலையின் உண்மையான மகிமையை உணராமல் விட்டுவிட்டார்களென்றால், தேய்ந்து போய் இருக்கும் இன்றைய தமிழ் நாடு இதற்கு எந்த மூலை?'' என்று கம்பீரமாகவும், ஆனால் ஆதுரத்துடனும் அவன் என்னைப் பார்த்துச் சொன்னான்.

இந்தப் பதில் என்னைத் திடுக்கிட வைத்து விட்டது. அந்தக் கிழவன் பேச்சிலிருந்து இந்த மண்டபத்திற்கு ஏதோ ஒரு அதிசயக் கதை இருப்பதாகவே நான் உணர்ந்தேன். ஆனால் அந்த உண்மைக் கதை அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!

''அப்படியானால் இந்த மண்டபமும் அதனுள் இருக்கும் அந்தச் சிலையும்......?''

''அது உள்ளத்தை உருக்கும் ஒரு சோக காவியமாகும்! நேரமிருந்தால் உட்காருங்கள் சொல்லுகிறேன். இந்தச் சிலைபிறந்த கதை எங்கள் தலைமுறை தலை முறையாக ஒவ்வொருவருக்கும் சொல்லி வைக்கப் பட்டு வருகிறது. இக்கதையை இப்போது என்னைவிட என் பேரன் மிகத் தெளிவாகச் சொல்லுவான்! இப்போது நான் உமக்குச் சொல்லுவதே என் வாழ்க்கையில் கடைசியாகவும் இருக்கலாம்!......'' என்று சொல்லி மெதுவாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டான் கிழவன். அவன் கண்களில் பண்டைக்காலத் தமிழ் மக்களின் வீர ஒளி அப்போது மின்னி மறைந்தது.

மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்பைப் போல என்னை மறந்து அக்கிழவனின் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டேன்.

கிழவன் பேச்சை ஆரம்பித்தான்.

*   *   *

''உயர்ந்தும் பரந்தும் நின்ற தேவதாரு மரங்களும், அசோக மரங்களும் வில்வ மரங்களும் பாற்குடத்தில் தோய்த்தெடுத்தவைபோல முழுநிலவின் தண்ணொளியால் நிறம் மாறி மோனத்தில் ஆழ்ந்து கிடந்தன.

குடமுருட்டி ஆற்றின் சிரிப்பொலியையும், ஜாமக் காக்கைகளின் சோக கீதத்தையும் தவிர அந்தப் பிரதேசம் பயங்கர மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தது.

கங்கைகொண்ட பூபதியாகிய பார்த்திபன், சோழவள நாட்டின் அதிபதியாக அப்போது கொலுவீற்றிருந்தான். அவனது தலை நகருக்குப் பத்துக்காதம் தொலைவிலிருக்கும் இந்த வனப்பு மிகுந்த கானகத்தில் தான், சோழநாட்டின் தலைசிறந்த சிற்பக் கலைஞனான வேதநாதன் தன் சிற்பச் சாலையை அமைத்துக்கொண்டிருந்தான். ஆஸ்தான சிற்பிகளுக்கு அவனே தலைவனானதால், அவன் தலைநகருக்குச் செல்வதற்கென ஒரு தனி ராஜபாட்டை பார்த்திபனின் உத்தரவால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

பல்லவநாட்டின் சிற்பக்கலைப் பெட்டகமான ஆயனரை, அந்நாட்டு மன்னன் மகேந்திர பல்லவன் உலகுக்கு அறிமுகப்படுத்தும் போதெல்லாம் சோழநாட்டுப் பூபதியான பார்த்திபனும் தன் நாட்டின் சிற்பவிற்பன்னனான வேதநாதனை வானுற உயர்த்தி, அவனது கலாமேதையை உலகம் அறிந்து போற்ற-வாய்ப்புச் செய்ய-மறப்பதேயில்லை. தென்னாட்டின் இரு பெரும் ஜகசிற்பியர்களாக வேதநாதனையும், ஆயனரையும் போற்றிவந்தது உலகம்.

வாதாபி நாட்டின் கொடுமுடி மன்னனான புலிகேசியைப் போர்முனையில் அடி பணிய வைத்து, அந்நாடு தன் நாட்டை வணங்கச் செய்த, மகேந்திர பல்லவனின் மகனான மாமல்லனின், வெற்றித்திருவிழாவைக்காஞ்சிமாநகரில் கொண்டாட மகத்தான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன அப்போது.

சோழ, சேர, பாண்டிய நாடுகளின் பெருநில மன்னர்களையும் ஈழம், யவனம், சாவகம், கடாரம் ஆகிய நாடுகளின் குறுநில மன்னர்களையும் அப்போர்ப் பெருந் திருவிழாவில் கலந்துகொள்ளும்படி அழைப்புத் தூது அனுப்பப்பட்டிருந்தது.

சிற்பக் கலையையே தன் நாட்டின் முதல் ராஜாங்கக் கலையாகப் போற்றி வளர்த்து வந்த பட்டத்து இளவரசன் மாமல்லன், தன் வெற்றித் திருவிழாவில் சிற்பக்கலைக் கண்காட்சி ஒன்றைமுக்கிய நிகழ்ச்சிகளில்ஒன்றாக நடத்த ஏற்பாடு செய்திருந்தான். அச் சிற்பக் கலைக் கண்காட்சியில், உலகின் பலபாகங்களிலுமிருக்கும் கல்தச்சர்களின் மேதையை வெளிப்படுத்த வாய்ப்பளித்திருந்தான். அக் கண்காட்சியில் இடம் பெறும் சிற்பங்களை, ஒரு ஆய்வுக்குழு அமைத்து. அவர்களால்

முதன்மையானதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சிற்பத்திற்கு அரசாங்க வைரப்பதக்கம் ஒன்றைப் பரிசளித்துக் கௌரவப்படுத்தவும் முடிவு செய்திருந்தான், அப்பெரும் கலா ரஸிகன்.

ஆகையால் சோழநாட்டின் தலைசிறந்த சிற்பியான வேதநாதனையும் அப்புலமைப் போட்டியில் கலந்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்திருந்தான் சோழ மன்னன்.

வேதநாதனுக்குச் சோழ மன்னனின் தாக்கீது கிடைத்து ஒரு மாதமாகிவிட்டது. ஆயினும் அவனது சிற்பச்சாலையில், கண்காட்சிக்கு இடம்பெறும் எந்தச்சிற்பமும் இன்னும் உருவாகவில்லை. இந்த ஒருமாத காலமாகத் தன் உயிர்போன்ற உளிகளைக்கூட அவன் கையாலேயே தொடவில்லை. ஒரே சிந்தனை மோனத்திலேயே அவன் ஆழ்ந்துவிட்டிருந்தான்.

அன்றிரவும் அந்தப் பால் பொழியும் நிலவொளியில், தன் குடிலுக்கு எதிரிலுள்ள வில்வமரத்தினடியில் உட்கார்ந்து கற்பனை லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தான். இமயமலைச் சாரலில் உலக முதல்வனின் திருவுருவத்தைக்காண,பல்லாண்டுகாலமாகத் தவம் செய்யும் முனிவர்களின் விரக்திதாபம் போன்ற ஒரு சூன்யத்தன்மை வேதநாதனின் மனத்திலும் அப்போது பதிந்துவிட்டிருந்தது. சுவர்க் கோழிகளின் மூச்சுவிடா ரீங்கார ஒலி அந்த இரவின் பயங்கரத்தை மிகைப்படுத்திக் காட்டுவதாயிருந்தது.

தன் மோவாய்க் கட்டையை ஒருகையால் தாங்கிப் பிடித்தவாறு உட்கார்ந்திருந்தான் வேதநாதன்.

உலக ரக்ஷகர்களாகிய திருமூர்த்திகளின் எழிலுருவங்களை எத்தனை எத்தனையோ கோணங்களில் செதுக்கி விட்டான் அவன். ஜெகன் மாதாவையும், வான அரம்பையர்களையும் பற்பல நயன முத்திரைகளுடன் சிலா ரூபத்தில் செதுக்கிச் செதுக்கி அவன் உள்ளமும் கையும் தேய்ந்து போயிருந்தன. மீண்டும் மீண்டும் அவ்வுருவங்களையே வார்த்தெடுக்க அவனது புதுமை விழையும் மனம் அப்போது இடந்தரவில்லை.

"உலகையும் அதிலுள்ள மனித வர்க்கத்தையும், ஜீவராசிகளையும், பிரகிருதிகளையும் கடவுள் படைத்தார். அவரது படைப்புத் தொழிலை ஒரு கலைத்தொண்டாக ஏற்று அப்படைப்புச் சிற்பியின் பலவேத உருவங்களைச் சிலைகளாகச் சமைத்துச் சமைத்து அதைக்கண்டு ஆனந்தம் கொள்வதில் மட்டும் மனித வர்க்கத்தின்-கலைஞர்களின் - கடமை தீர்ந்து விடவில்லை! உலகைப் படைத்த முதல்வனைக் கற்பனை உருவங்களாகச்செய்து அவைகளை வணங்குவதை விட, அந்தப் படைப்புச் சூத்திரனின் உலக அமானுஷ்ய சிருஷ்டிகளை மனிதன் மறந்துவிடாதபடி அவைகளைச் சிலை ரூபங்களாகவும், சித்திர உருவங்களாகவும் ஆக்கி, அதன் உற்பத்தி ரகசிய மகிமையை முழுசாக உணர்ந்து ஒழுகுவதே, அதனைப் படைத்தவனின் தத்துவ தாற்பரியத்தை அறிந்து போற்றுவதாகும். இந்த ஒரு செய்கையால்தான் கடவுளின் உன்னதப் படைப்புச் சூத்திரத்தையும், அவரது மகிமையையும், உண்மையாக உணர்ந்தவர்களாவோம். இந்த உணர்வே அவரை மறவாமல் ஒழுகுவதற்கு ஒரு ஒப்பற்ற கலைச்சாதனமாகும்! சித்திர வேலைப்பாடுள்ள ஒரு சிறந்த சிலம்பை நாம் பார்க்கும்போது அதைச் செய்து தந்த பொற்கொல்லனின் உருவமே நம் கண்முன் வந்து நிற்கும். சிலம்பைப் போற்றினால் அது அப்பொற்கொல்லனைப் போற்றுவதாகத்தானே இருக்கமுடியும்? ஆனால் இன்று சிற்பக்கலையும், அதைப்போன்ற மற்றக் கலைகளும் வளர்ந்துவரும் தன்மை......?

இவ்விதமான புதுமை எண்ணங்கள் வேதநாதனின் மன அரங்கில் நர்த்தனமாடிக் கொண்டிருந்தன! ஆனால் அந்த எண்ணத்தை அவன் செயல் முறையில் கொண்டுவர முடியுமா? மன்னனும் மக்களும் அதை ஏற்றுக்கொள்வார்களா? வாழையடி வாழையாக வளர்ந்து வரும் இந்தப் போக்கே அவர்கள் மனதில் பதிந்துவிட்டிருக்கும்போது அவன் மட்டும் அதைவிட்டு விலகிப்போக முடியுமா? அப்படிப் போனால் அதற்கு வரவேற்பிருக்குமா? வரவேற்பைவிட அவனுக்கு வாதனை தான் மிஞ்சும்! எனினும் அவன் ஒருசுதந்திரக்கலைஞன். அதனாலேயே அவன் உள்ளத்தில் இவ்விதப்புரட்சிக் கருத்துப் பூக்க முடிந்தது! ஆனால்......? ஆகர்ஷண சக்தியினால் சந்திரன் பூமியைத் தொடாமலே சுற்றிச் சுற்றி வருகிறதல்லவா? அது போலத்தான் வேதநாதனின் இந்தப் புதுமைக் கருத்தும், மக்களின் மனதில் தொன்றுதொட்டு வளர்ந்துவந்த ரஸனை எண்ணத்தை நெருங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது!

மேலும் அவனுக்கொரு எண்ணம் அப்போது உதித்தது. கண்காட்சியில் கலந்துகொள்ளப்போகும் சிற்பிகள், பல தேசத்தவர்களாயும், பல மதத்தினர்களாயும் இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் புத்தமதத்தைச் சார்ந்தவர்களாவே இருந்துவந்தனர். அதிலும் பல்லவ மன்னன், புத்தமதத்தைச் சாரலாமா சைவசமயத்தை மேற்கொள்ளலாமா என்ற இருதலை எண்ணத்தில் குழம்பிக்கொண்டிருந்தான். ஆய்வுக் குழுவிலும்

அப்பேர்ப்பட்டவர்களே அதிகமாக இருந்தனர். அப்படி யிருக்கும்போது தெய்வத் திருவுருவங்களைப் படைத்து அக் கண்காட்சியில் வைத்தால் ஒரு வேளை மத, நாடு துவேஷத்தால் அவன் கலை மேதையை நிராகரித்து விட்டாலும் விடுவார்களல்லவா? அந்த அவமானத்தைச் சோழநாடு ஏற்றுக்கொள்ளுமா? இமயம்வரை ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும் சோழ மன்னனின் புகழ் என்னுவது? கேவலம் ஒரு சிற்பியின் தோல்வியால் நாடே அல்லவா தலைகுனிய நேரிடும்......!

வேதநாதனின் மூளை குழம்பியது. அவன் உள்ளமும் உடலும் சோர்ந்துவிட்டன. குனிந்த தலையை நிமிர்த்தி வான மண்டலத்தை நோக்கினன். அங்கே அணிற்பிள்ளை கொறித்துத் தள்ளிய முருங்கைப் பூக்களைப்

போல நட்சத்திரங்கள் சிதறிக்கிடந்தன. தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு மரத்தின்மீது அப்படியே சாய்ந்துவிட்டான்.

"ஸ்வாமி!........."

திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான் வேதநாதன். அவன் எதிரில் அவனுடைய மனைவி ரத்னமாலா சோகமே உருவாய் நின்று கொண்டிருந்தாள்! பாலொளி பொழிந்து கொண்டிருக்கும் அந்நேரத்தில் அவள் வதனம் தாய்மைப்பொழில் வழிய பிரகாசித்துக் கொண்டிருந்தது. தன் மனைவியையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான் வேதநாதன்.

"ரத்னமாலா! நீ இன்னும் தூங்காமல் கண் விழித்துக்கொண்டா விருக்கிறாய்?"

"ஆம் ஸ்வாமி! ஐயன் இங்கிருக்கும்போது எனக்கெப்படித் தூக்கம் வரும்?" இப்படிச் சொல்லி முல்லைச் சிரிப்பொன்றை அவிழ்த்தாள் ரத்னமாலா. அந்தச்சிரிப்புடன் திகழ்ந்த அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தான் வேதநாதன்.

"நம் மன்னரின் ஆக்ஞைப்படி, பல்லவ நாட்டின் சிற்பக்கலைக் கண்காட்சிக்கு நான் இன்னும் ஒன்றும் செய்யவில்லை என்பது உனக்குத்தெரியுமல்லவா?"

"தெரியும் ஸ்வாமி! என்றாலும் இப்படி ஊண் உறக்கமின்றி........."

"மாலா! என்னைப்பற்றி நீ இனிமேல் எப்போதுமே அதிக அக்கறை கொள்ளக் கூடாது! நான் உலகத்தவன்!" என்றான் வேதநாதன் லேசாகச் சிரித்துக்கொண்டே,

"உண்மைதான் ஸ்வாமி! என்றாலும் இந்தப் பேதையின் மனம்......!"

"சரி வா! போகலாம். வாடைப் பனி அதிகமாக வீசுகிறது. உன் உடம்புக்கு அது ஒத்துக்கொள்ளாது" என்று கூறியவாறே அங்கிருந்து எழுந்து அவளை அழைத்துக் கொண்டு குடிசைக்குள் சென்றான்.

ரத்னமாலா ஒரு பக்கமாகப்போய் படுத்துக்கொண்டாள். வேதநாதனும் படுக்கையில் படுத்தான். ஆனால் அவனுக்குத் தூக்கம் என்னவோ வரவில்லை. இமைகள் கனத்து, தூக்கத்திற்கு அச்சாரமிட்டாலும் அவன் உள்ளம் அதற்குப் பாய்விரித்துக்கொடுக்கவில்லை. நிமிர்ந்து படுத்துக்கொண்டு கூரையைப் பார்த்தவாறு இருந்தான்.

இவ்வளவு நேரம் விழித்துக்கொண்டிருந்ததால் படுத்ததும் தூங்கிப்போய்விட்டாள் ரத்னமாலா.

நேரம் கரைந்துகொண்டிருந்தது. ஒரு மூலையில் எரிந்துகொண்டிருந்த திரிவிளக்கு வெளியேயிருந்துவரும் காற்றினால் படபடத்துக்கொண்டிருந்தது.

நிமிர்ந்திருந்தவன் லேசாகப் புரண்டு படுத்தான். அவனுக்குச் சற்றுத் தொலைவில் ரத்னமாலா சுகமான நித்திரையில் லயித்திருந்தாள். அவள் பக்கத்தில் அவனுடைய இரண்டு வயது ஆண் குழந்தையொன்று தாயின் கதகதப்பில் உறங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தையைக் கட்டியணைத்தவாறு அவள் படுத்திருந்தாள்.

வேதநாதன் மாறிமாறி அந்த இரு வதனங்களையும் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். பின்னர் ஏதோ நினைத்துக் கொண்டவனாய் படுக்கையை விட்டுச் சட்டென எழுந்து உட்கார்ந்தான். இமைக்காமல் மனைவி ரத்னமாலாவின் முகத்தையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திரி விளக்கின் ஒளிக் கதிர்கள் தெறித்து ரத்னமாலாவின் வதனத்தைத் தங்க மயமாகச் செய்து கொண்டிருந்தன. அவள் தன் குழந்தையை அணைத்துத் தூங்கும் காட்சி, குவலயத்திற்குக் கோடானு கோடி உண்மை ரகசியங்களைப் புலப்படுத்துவதாய் அவனது கலை மனம் உணர்த்தியது.

உலகைப் படைத்து, காத்து ரட்சிக்கும் கருணாமூர்த்தியாக அந்தக் கடவுளின் திருவுருவாகவே அவளை அவன் கற்பனை செய்தான். உலகிலுள்ள மனித உயிர்களையும், மற்ற ஜீவராசிகளையும், பிரகிருதிகளையும் தமது அருள் கரத்தால் அணைத்துக் காப்பதைப் போலல்லவா அவள் அந்தக் குழந்தையை அணைத்துக் கொண்டிருக்கிறாள்! அந்த அணைப்பில், தன்னலம் ஒரு சிறிதும் தென்படவேயில்லை. அன்பும், அருளும் தாய்மையும், சகிப்புத் தன்மையும், தூய்மையும் ஒருங்கே பொழிவதாய் அவள் முகம் அவனுக்கு உணர்த்தியது. அவளையே அவன் பார்த்துககொண்டிருந்தான். சிற்பி நத்தையின் வயிற்றில் ஒரு துளி மழை அதன் உடலை உறுத்தி, உருண்டு திரண்டு முத்தாவதுபோல, வேதநாதனின் கற்பனை உள்ளத்தில்—ஒருமாத காலமாய்ச் சூன்யமாகவே இருந்த அவன் உள்ளத்தில்—ஒரு ஒப்பற்ற சிலை இப்போது உருவகமாகிக்கொண்டு வந்தது! அந்தக் கற்பனைச் சிலைதான் ஒருவேளை கல்லில் உருப்பெற்று கண்காட்சிக்கும் செல்லுமோ......!

திறந்திருந்த கதவின் வழியே வெளியே நோக்கினான் வேதநாதன். சந்திரிகை தன் பாலொளியை அவனது சிற்பச் சாலையில் வீசி அங்குள்ள அரைகுறைச் சிற்பங்களை மினுக்க வைத்துக்கொண்டிருந்தது. அந்த ஒளியில் தென்பட்ட சில பொருள்களின்மீது அவன் பார்வை விழுந்தது. அதில் ஒரு பொருளின்மீதே அவன் கண்கள் அழுந்திப்

புதைந்துவிட்டன! ஆம்; கண்காட்சிக்கு அனுப்பும் சிற்பம் செய்வதற்காக அவனே நேரிற்சென்று புரட்டிவந்து நிறுத்திய ஒரு பெரிய சலவைக்கல் அங்கு நிலவொளியில் வெண் முக்காடிட்டதுபோல நின்றுகொண் டிருந்தது!

சட்டெனத் துள்ளியெழுந்தான் வேதநா தன். அவன் கண்கள்வைரம்போன்று ஜ்வலித் தன. சிற்பச்சாலையை நோக்கி நடந்தான்! அடுத்த விநாடி ஒருமாதகாலமாக மறைந்து விட்டிருந்த உளியொலி இடைவிடாமல் எழுந்து காற்றில் கலந்துகொண்டிருந்தது!

ஏதோ கனவு கண்டவளாய், தூக்கத்தி லிருந்து திடுக்கென விழித்தாள் ரத்னமாலா. அங்கே படுக்கையில் தன் கணவன் இல்லாத தைக் கண்டு பதறி எழுந்து வெளிவாசலுக் குப் போனாள். சற்றே தொலைவிலிருக்கும் சிற்பச்சாலையில்அவள்கணவனுடைய மங்கிய நிழல் சலவைக் கல்லுடன் விளையாடிக் கொண்டிருந்தது!

நீண்ட ஒரு பெருமூச்சு விட்டவளாய் மீண்டும் வந்து படுக்கையில் படுத்துக் கொண் டாள் ரத்னமாலா.

* * *

அவன் ஆயுள் காலத்திலேயே இதைப் போன்ற சிலை உருப் பெற்றதில்லை யென உள்ளம் பூரித்தவனாய், பற்பல கோணங்களில் நின்று நின்று அந்த உயிர்ச் சிலையையே அழகு பார்த்துக் கொண்டிருந் தான் வேதநாதன். பல்லவ நாட்டின் சிற் ப்ப் போட்டியில் சோழ நாடு பரிசைத் தட் டிக் கொள்ளப் போகிறது என்று நினைத்த மாத்திரத்தில் எழுந்து ஆடலாம் போலிருந் தது அவனுக்கு!......அதைத் தொடர்ந்து மற் றொரு எண்ணமும் அவன் இதய அரங்கில் ஏறிட்டோடியது! அந்த எண்ணத்தால் அவன் முகம் அக்ஷணமே விகாரமாக மாறி விட்டது!

அந்தச் சிலை சாதாரணமான ஒரு நர ஜன் மத்தின் உருக் கொண்டதாகும். இதைக் கண்காட்சிக்கு அனுப்ப அரசன் ஏற்றுக் கொள்வானா? சம்பிரதாயத்திலிருந்து தலை கீழாகத் திரும்பியதாகவல்லவோ இருக்கிறது இந்தச் சிலை! தெய்வாம்சங்கள் அனைத்தும் இந்தச் சிலையில் வழிந்து கொண்டிருந்தாலும் இது தெய்வத்தின் உரு அல்லவே! சாதாரண ஒரு மனிதஉரு- அதிலும் பெண் உரு!......... இன்னும் சொன்னால் அவனுடைய மனைவி யின் உரு!! அன்றிரவு கண்டானே, அந்தத் தாய்மை உரு!!......

“குருதேவா!”

திரும்பிப் பார்த்தான் வேதநாதன். அவ னுடைய அத்தியந்த சிஷ்யன் அமரநாதன் கைகட்டியவாறு அங்கே நின்றிருந்தான்.

“அமரநாதா! என்ன விஷேசம்?”

“குருதேவ்! வெளியில் பரிவாரங்களுடன் நமது மன்னர் வந்திருக்கிறார் நாளை கண் காட்சிக்கு அனுப்பப் படும் சிலையைப்பார்த்து விட்டுப் போவதற்கா...!” என்றான் அமர நாதன் பணிவுடன். இதைக் கேட்ட வேத நாதனின் முகத்தில் ஆனந்தமும், வேதனையும் மாறி மாறி நர்த்தனமாடின. மன்னனை வர வேற்கப் பரபரப்புடன் வெளியே சென்றான். அதற்குள் மன்னனே அவனது சிற்பச்சாலைக் குள் வந்து நுழைந்து விட்டான்.

“வணக்கம் மன்னரே!”

“வேதநாதா! சிலைவேலையெல்லாம் முடி வடைந்து விட்டதா? இன்று மத்தியானமே அதைக் காஞ்சிக்கு அனுப்பி விடவேண்டும்! அப்போதுதான் அது நாளை கண்காட்சியில் இடம் பெற இயலும்......சோழ நாட்டின் பெருமை இமயத்தோடு மல்லாமல் உலகெ லாம் சென்று எதிரொலிக்கப் போகிறது. நாளைக்கு உன் சிலை வாங்கும் பரிசு......! என் நாடு உன்னைப்பெற என்ன தவம் செய்ததோ வேதநாதா!........”—மன்னன் பார்த்திபன் இன்னும் பொழிந்து கொண்டே போனான்.

கைகட்டிப் பணிவுடன் நின்றிருந்த வேத நாதன் மன்னனை நோக்கி “வேந்தே! இப் போதே தாங்கள் சிலையைப் பார்க்க வேண் டுமா?” என்றான். அவன் குரலில் ஏதோ ஒரு கலக்கம் கலந்திருந்தது!

“ஏன்? இன்னும் வேலை முடிய வில்லையா?” சற்றுப் பதட்டத்துடன் கேட்டான் மன்னன்.

“சிலை வேலை யெல்லாம் பூர்த்தியாகி விட் டது......”—வேதநாதன் வாக்கியத்தை முடிக்க வில்லை.

“அதைப் பார்த்து விட்டுப் போகத் தானே இப்போது இங்கே வந்தேன்!”—மன்னனின் குரலில், ஆர்வத்தால் ஏற்பட்ட படபடப்புத் தொனித்தது.

உடனே வேதநாதன் சென்று சிற்பச் சாலை யின் மத்தியில், ஒரு பெரிய சிலைக்குப் பட்டுத் திரை போட்டு மூடியிருந்ததை லேசாக விலக்கினான். என்ன ஆச்சரியம்! உயிருள்ள ஒரு எழில் மங்கை, உலகை அன்பு பொங்கப் பார்த்து அரவணைப்பதுபோன்ற அற்புத அபி நயத்துடன் அங்கே நிறுத்தப்பட்டிருந்தாள்.

அதைப் பார்த்த மன்னன் வியப்பால் நிலை தவறிப்போனவனைப்போல் பிரமித்து நின்று விட்டான். கண்காட்சிக்குச் சிலைசெய் என் றால் உயிருள்ள ஒரு எழில் மங்கையையல் லவா இங்கே அழைத்துக்கொண்டுவந்து

நிறுத்திவிட்டிருக்கிருன் வேதநாதன்; என்றே மன்னன் அப்போது நினைத்தான்! ஆனால் அவனுடைய பிரமிப்பு அடுத்த விநாடிக்கெல்லாம் தெளிந்துவிட்டது, அது ஒரு சிலை என்று அறிந்தமாத்திரத்தில்!

ஒன்று...இரண்டு—மூன்று விநாடிகள் கரைந்தன.

சந்தோஷத்தால் மலர்ந்து விரிந்திருந்த மன்னனின் முகம் சட்டென மகாபயங்கரமாக மாறிவிட்டது நான்காவது விநாடியில்! போர்க்களத்தில் பகைவனின் மார்பைக் கூர்ந்து கவனித்து வாள் வீசுவதைப்போல அந்தச் சிலையையே உற்றுப்பார்த்தான் அவன். இமைகள் நெரிந்து வளைந்து துடித்தன! கண்கள் கோபத்தால் கொவ்வைக்கனி போலச்சிவந்துவிட்டன. நெருப்பில்வாட்டியது போன்று முகம் கடுகடுத்துச் சூடேறியது. கோபத்தைத் தாளமாட்டாமல் தன் உடைவாளை அழுத்திப் பிடித்தான் பார்த்திபன்! பின்னர் சட்டெனத்திரும்பி, "வேதநாதா!" என அண்டம் கிடுகிடுக்கும்படி கர்ஜித்தான்.

தனது ஒப்பற்ற சிருஷ்டியான அச்சிலையைப் பார்த்துக் கொண்டே பரவசத்தில் ஆழ்ந்து போயிருந்த வேதநாதன், இந்தக் கோடையிடிபோன்ற குரலைக்கேட்டுப்பயந்து, "வேந்தே!......" என்று பணிவுடன் குழறிஞன்.

"இது என்னசிலை?... யாருடைய உரு?... இந்தச்சிலை சிற்ப சாஸ்திரத்திற்கே புதுமையாக இருக்கிறதே!"—மன்னனின் குரலில் இருந்த கடுமை இன்னும் கரையவில்லை.

இதைக்கேட்ட வேதநாதனின் முகம் அந்த நிமிஷமே பிரேதக் களை பெற்றுவிட்டது! அரசனுக்கு என்ன பதில் சொல்வதென்றே விளங்கவில்லை. உடல் வெடவெடன நடுங்கியது. உடனே நின்ற இடத்திலிருந்தே முழந்தாளிட்டு "அரசே! என்னை மன்னித்தருளும். நான் ஒரு பித்தன்! இப்போது எனக்குப் பித்தமே பிடித்திருக்கிறது. தங்களுக்கும், என் நாட்டுக்கும் நான் அபகீர்த்தியை உண்டுபண்ணியதுமல்லாமல் தொன்றுதொட்டுவரும் சிற்ப சாஸ்திர எல்லையையே மீறி, பெரும் பாவத்தைத் தேடிக் கொண்டேன்! புதுமையையும் புரட்சியையும் விழைந்து என் புத்தி தடுமாறி விட்டது!......" என்ருன் உடைந்து நொறுங்கிய சொற்களால்.

மன்னனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்தச் சிலை அந்தச் சர்வதேசக் கண்காட்சியில் பரிசு பெருது என்றே அவன் கருதினுன். காரணம் தெய்வ உருவை விட்டு வெகு தூரம் விலகி, மனித ஜாதியை மயக்கும் ஒரு நர மோகினியைப் போலல்லவா அச்சிலை இருக்கிறது! தன் நாடு மற்ற நாடுகளுக்கு அடி பணிந்து விடுமோ என்று நினைக்கும்போது அவன் உள்ளம் குமுறியது. "வேதநாதா! இந்தச் சிலையை இந்த நிமிஷமே சுக்கல் நூருகத் தகர்த்தெறிய வேண்டும்! இது சோழ நாட்டின் மன்னன் பார்த்திபனின் ஆக்ஞை" என்று கர்ஜித்து விட்டு அங்கிருந்து சரேலென வெளியேறி விட்டான்.

(அடுத்த இதழில் முடியும்)

கவலை வேண்டாம்?

ஜலக் கஷ்டத்தைப் போக்க மயர்ஸ் பம்புகள்



இப்பொழுது வருவதற்கு ஆரம்பித்துவிட்டன

தேவையானவற்றிற்கு விவரங்களுடன் கீழ் கண்ட அட்ரஸுக்கு எழுதவும்:-

Water Supply Specialists Ltd.,
Sole Agents for MYERS PUMPS
23/24 Second Line Beach, MADRAS.

சென்னை-600 008

பொங்கற் பாட்டு

(ப. சு. தண்டபாணி)

1. பொங்கலின்று பொங்கலின்று
பொங்கலின்று பொங்குது.
புதுவருஷப் பொங்கலின்று
புனிதமாகப் பொங்குது (பொங்க)

2. எங்கு மங்களந் துலங்கப்
பொங்கலின்று பொங்குது,
இன்ப வாழ்வு வருததென்று
இனிய பொங்கல் பொங்குது (பொங்க)

3. தமிழர் வாழ்வு உயருதென்று
தலையுயர்ந்து பொங்குது,
தமிழகம் செழிக்குதென்று
சப்தமிட்டுப் பொங்குது (பொங்க)

4. கலைகள் யாவும் வளருகின்ற
காட்சி போலப் பொங்குது
கனதனங்கள் பெருகுகின்ற
காலமென்று பொங்குது (பொங்க)

5. தீமையின்று ஓடுதென்று
செம்மையாகப் பொங்குது
தேசமொன்று சேருமென்று
சேர்ந்து பொங்கல் பொங்குது (பொங்க)

6. நன்மை கிட்டி விட்டதென்று
நல்ல பொங்கல் பொங்குது,
நாட்டுரிமை வந்ததென்றிந்
நாளில் பொங்கல் பொங்குது (பொங்க)

7. வெற்றி வந்து விட்டதென்று
வேகமாகப் பொங்குது,
வேற்றுமை பறக்குமென்று
மேதினியில் பொங்குது (பொங்க)

8. சத்தியம் தழைக்குமென்று
தை முதலில் பொங்குது
சாந்த வாழ்வு நிலவுமென்று
தரணி தன்னில் பொங்குது (பொங்க)

9. மதுவொழிந்து போனதென்று
மதுரப் பொங்கல் பொங்குது,
வனிதையர்க்கும் உரிமையின்று
வந்ததென்று பொங்குது (பொங்க)

10. புதுமை வாழ்வு வருகுதென்று
பொங்கலின்று பொங்குது,
புத்துணர்ச்சி பெருகுதென்று
பொங்கல் பொங்கிப் பொங்குது (பொங்க)

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!

நேரப் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்களில்லாமையைச் சமாளிக்கவும் **போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்** விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி,**

ஹைதராபாத் (டெக்கான்)

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

அமர-ஷா

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

வீர திலகன், அமர தேவன், கொலு இருக்கிறான். தளகர்த்தரும் படை வீரரும் குழுமி நிற்கின்றனர். பரிசும் பரிவுரையும் வழங்குகிறான் அப்பெரு வேந்தன்; 'டில்லி சுல்தான் இனிமேல் தலைகாட்ட மாட்டான்' என்று ரஜபுத்திர வீரர் ஆர்ப்பரிக்கின்றனர். அத்தருணம் முகம்மதுஷா தனது குடும்பத்துடன் வந்து தஞ்சம் வேண்டுகிறான்.

உடனே, அமரதேவன் தன் துணைவரை நோக்கினான். அவ்வளவில், சூழ்ந்து நின்று வீரரிலே ஒருவன் தனது உடைவாளின் மீது கை வைத்தான்; மற்றொருவனோ, தனது குத்தீட்டியைத் தொட்டுப் பார்த்தான்; இன்னொருவனோ, தனது மீசையின் மீது கை போட்டான்! வேறொருவனோ, 'வேந்தே! யாது கட்டளை?' என்றான்.

பாதி உயிருடன் வந்த முகம்மதுஷாவுக்கோ அப்பாதி உயிரும் ஊசலாடத் தொடங்கிற்று. அவன் குடும்பத்தாரோ, குலை நடுக்கம் கொண்டனர்; பச்சைப் பாலனொருவன் பதறியழலானான். முகமூடியணிந்துநின்ற அவன் மனையாளோ, கருவுயிர்க்கும் வேதனை தாங்காமல் விம்மி நின்றாள்.

பஞ்சணை பொருந்திய மேனாவிலேற்றி, அம்மாதை அந்தப்புரம் கொண்டு சேர்க்கும்படி நயன பாஷையில், ஆணையிட்டான் அமரதேவன். அது கண்டதும், 'நமது மரபுக்குரிய பெருங்கடமையது!' என்று பேசிக்கொண்டனர் வீரர் அனைவரும். மீண்டும் தன் துணைவரை நோக்கினான் வீரவிலாசன் அம்பாதேவன்.

"பகைப் புலத்தான் இவன்! பாதுகாப்பளித்தல் என்பது கனவிலும் கருதக் கூடியதன்று," என்றான் முதலமைச்சன் ரணமல்லன் என்பான். "மும்முறை நம்மிடம் முறியுண்டோடிய அல்லாவுதீனது உளவாளியே இவன்! அடுத்துக் கெடுக்கவே வந்துள்ளான்! வேறில்லை," என்றான் தளகர்த்தரின் தலைவன்.

"டில்லி சுல்தான்கள் வஞ்சனையில் வல்லவர்கள். வாள் முனையிலே வெற்றி கொள்ளத் தவறுகையில், வஞ்சனை வழியில் இறங்குதலே அன்னாரின் முறைமை! இந்த ஷாவை விடுத்தது சதியின் சதுரே யாகும். மதிமோசம் போனால், விதிவந்து நம்மைச் சூழ்ந்துகொள்ளும்," என்றான் பரி வீரரின் தளவாய் வியாக்கிர பாதன்.

"அரசே! எந்தாய்! யாவனாயினும் என்ன? வேவு பார்க்கவே வந்திருப்பினும் என்ன? தஞ்சம் என்று இவன் வந்துள்ளான்; தலை போயினும் சரி, காத்தல் நமது கடன்! புறா ஒன்றினைக் காக்கத் துலைக்கோல் ஏறிய தூய வேந்தனது வழி வந்தோம் நாம்; அடைக்கலம் அளிக்கத்தவறின். நமது வீரத்துக்கே இழுக்கு நேரும்," என்றான் இரதிபாலன்,

துணைவரனைவரும் வெட்டியே பேசுகின்றனர். மைந்தனொருவனே—ஈட்டிப் படையின் தலைவன்—ஒட்டிப் பேசுகின்றான். அமர தேவன் யாது செய்வது? "போர் நடுவே வந்தடைந்த விபீஷணனையும் காத்தளித்தான் நமது மூதாதையரில் ஒருவன்! யாது நேரினும் நேருக! தஞ்சமளிப்போம்," என்றான் அத்தனி வீர வேந்தன்.

* * *

தோல்வி கொண்டு, திரும்பிய தனது படைத் தலைவரில் எவருக்கும் பேட்டி கொடுக்கவில்லை அல்லாவுதீன் கில்ஜி என்பவன். 'ஒருமுறை, இருமுறை, மும்முறை முறிபட்டேவந்தனர் நம்படைஞர்; இவர்களைக் கொண்டா குமரி வரையில் நாம் கோலாகலமாகக் கொடிபோட முடியும்?' என்று குமுறினான் அச்சுல்தான்

அச்சமயம், அலப்கான் எனும் சோதரன் ஓடி வந்து, "மூத்தோய்! அப்பாவி மகன் முகம்மதுஷா என்பான், ரணதம்பரக் கோட்டையில் தஞ்சம் பெற்று, வசித்து வருவதாகத் தூதுவர் வந்து உரைக்கின்றனர். தலைக்குமேல் ஆபத்து வந்து நிற்கின்றது. தக்கது செய்து தீரவேண்டும்," என்று கூறி நின்றான் நடுக்கமுடன்.

"அந்த அமர தேவினிடமா முகம்மதுஷா அடைக்கலம் புகுந்துள்ளான்! வேறு வெட்கக் கேடு வேண்டியதில்லை. தஞ்சம் தந்தவனைத் தவிடுபொடி பண்ண வேண்டும்! தஞ்சம் புகுந்தவனையோ சித்திரவதை செய்தாக வேண்டும்! செல்லா விடத்துக் கோபங்கொண்டு என்ன பயன்?" என்று அல்லாவுதீன் கையைப் பிசைந்தான்.

பிசையும் தறுவாயில் தோன்றினான் நஸரத்கான் என்னும் நரைத்த சேனாதிபதி. இவரையனுப்பலாமே, என்றான் அலப்கான்: "அனுப்பலாம், அவர் மனம் எப்படியோ? அவருக்கு வயதோ மிக அதிகம், தள்ளாத பருவம். அவரது கிழத்தனங் கண்டு, நானே திகைக்கின்றேன்," என்றான் அச்சுல்தான்.

நஸரத்கான் அது கேட்டு, "எங்கள் சுல்தானது ஆணையும் ஆண்டவனது ஆணையும் ஒன்றே என்று எண்ணுபவன் யான்? நேற்றுவரை எங்கும் வாகை சூடியே வந்தேன்! அப்பெருமையுடன் மரிக்கவே விரும்பி நிற்கின்றேன். தண்டில் சென்று, மாலை பெருவிடின், மகிமை யெல்லாம் போய்விடுமே," என்று கலங்கினான்.

"மாலை பெருவிடில் என்ன? மகிமையாக வீர சுவர்க்கம் புகுதலாகாதோ? தோல்வி என்று நினைத்தல், சுத்த வீரர்க்கு அழகாமோ? ராஜ சேவையுடன் மத சேவையும் புரியலாமே! ஹிந்துக்களை வெல்லாவிடின், நமது மதத்தைப் பரப்புதல் எங்ஙனம்? கோடரிக் காம்பான முகம்மதுஷாவுக்குப் புத்தி புகட்டவேண்டுமன்றோ?" என்று அலப்கான் பேசினான்.

பேசவே, "எல்லாம் மெய்தான். இன்றளவும் அசையாக்கோட்டை அது! அழி

வுபடாக் கோட்டையுமாம்! மும்முறை நம்படைகள் முதுகுகாட்டி வந்து விட்டன! அக்கோட்டையைக் குலைத்தல் என்பது முடியாத காரியம்! கோட்டையைச் சிதைக்காமல், அமர தேவனை ஆட்டிவைக்க ஒண்ணுமோ?'' என்று நஸரத்கான் நவிலலானான்.

''போர்ச் சேவகத்தில் ஊறிப்போன சேனாதிபதிக்கா நான் யோசனை கூறுவது? நால்வகை உபாயங்கள் உள்ளனவே! முதல் மூன்று தடவையும் நாலாவதுஉபாயத்தை மட்டும் கையாண்டோம். ஏனைய உபாயங்களை இப்போது கையாண்டு பார்ப்போமே. ஆண்டவன் அல்லா இருக்கிறார்!'' என்று பதிலுரைத்தான் அலப்கான்.

''ஆம், ஆம்! பேதோபாயம் பெரிதும் பலன் தரும்! தானோபாயமும் தலைகொடுக்கும்!'' என்று அல்லாவுதீன் ஒப்பங்கொடுத்தான். கொடுக்கவே சுல்தானது சேனையின் சிறுமையைப்போக்கி, மறுபடியும் சிறப்பை நிலைநாட்ட வேண்டும், என்னும் துணிவு கொண்டான் நஸரத்கான். அஃதறிந்து அவனைக் கட்டித் தழுவிக் களித்தான். அல்லாவுதீன்.

பல சொல்லி என்ன? டில்லிப் படையிலே எண்பதாயிரம் பரிவீரர் எடுப்பாக எழுந்தனர். கணக்கற்ற காலாட் படை



யும் கனன்று கிளம்பிற்று. பீரங்கிப் படையும் பெருமிதமாகப் புறப்பட்டது. தீன் தீன்! அல்லாஹோ அக்பர், எனும் கூச்சல் வானை முட்டியது. அமரதேவனை ஆட்டிப் புடைப்போம், முகம்மதுஷாவை உயிர் குடிப்போம், என்றும் சேனை வீரர் கொக்கரித்தனர்.

* * *

அலப்கான், நஸரத்கான் ஆகிய இருவரும் அப்பெருஞ் சேனையை நடத்திச் சென்றனர்; ரணதம்பரக் கோட்டையை நான்கு பக்கமும் வளைத்துக் கொண்டனர்! பன்னிரண்டு மாதகாலம் பிரமாதமாக முற்றுகையிட்டுப் பார்த்தனர்! அக்கோட்டையோ சிறிதும் தளராமல் கம்பீரமாகவே நின்றது! நிற்கவே, அவ்விருவரும் இனி என்ன செய்வதென ஏக்கம் கொள்ளலாயினர்.

ஓராண்டினுக்கு மேலாகியும், வெற்றி கிட்டவில்லை, என்று கேள்வியுற்ற அல்லாவு தீன் உடனே சமரபூமி சேர்ந்தான்; அவ்விரு தலைவர்களுடன் கலந்தாலோசித்தான்; போர்முனையில் வெற்றி காண முடியாதெனக் கண்டு கொண்டான்; வேறு வழியில் முனைய வேண்டுமென்று தீர்மானம் கொண்டான், அவ்வளவு தான் தாமதம்.

"அமர தேவனது அருமைக் குமரி, அழகு மிக்க நங்கை, இரதிதேவியை மணக்கும் முனைப்புடனேயே அல்லாவு தீன் போர் புரிகின்றான், அம்மங்கை நல்லாளும் அச்சுல்தானுக்கு மாலை யிட மனமுவந்து நிற்கின்றாள், இதற்கு அமர தேவனே மாறு பேசுகின்றான். ஆனது பற்றியே இவ்வளவு வெட்டுப் பழியும் குத்துப் பழியும் நடக்கின்றன" என்று ரணதம்பர அந்தப் புரமெங்கும் ஒரு வதந்தி உலவத் தலைப் பட்டது.

அதுகேட்டு, அமர தேவன் மனங் குழம்பினான். அந்தப்புர மாதரும் ஈதென்ன மாய வதந்தி, என்று மாழ்கினர். இதற்கிடையில், தளகர்த்தரின் தலைவனும் தளவாய் வியாக்கிர பாதனும் பகைவரின் பக்கம் போய்விட்டதாக உளவர் வந்துரைத்தனர்! கோட்டையின் வெளிப்புறத்தைக் காத்து நின்ற முன்னணி முறிந்துவிட்ட செய்தியும் சேர்ந்துகொண்டது.

பொக்கிஷத்தைப் பாதுகாத்து நின்ற அதிகாரியோ பொய்யும் புரட்டும் புகன்று, பணமெல்லாம் வறண்டுவிட்டதென்றான். தளவாட அதிகாரியோ, இனி மருந்தினுக்கும் ஆயுதங்கள் கிடையா, என்று கூறினான். தானியக் களஞ்சியம் வெறுந் தரையாகக் கிடக்கிறதே என்றான் தானிய அதிகாரி. எல்லாம் முகம்மதுஷாவின் சூழ்ச்சியென்று அமரதேவனிடம் ஓதினர் சிலர்.

அந் நிலையில், அமரதேவன், "நல்லது வீர சுவர்க்கமே பிராப்தி" என்றெண்ணியவனாய், மஞ்சள் உடை அணியலானான். அஃதுணர்ந்த அந்தப்புர மாதர் அத்தனைபெயரும் இரதி தேவியை முன்னிட்டுக்கொண்டு, மங்கள நீராடி, ஆடையாபரண அலங்காரம் பலவும்பூண்டு, நீலகண்டனை நினைந்து, அந்தரமளாவ அக்கினி குண்டம் வளர்த்து, அதில் இறங்கிவிட்டனர்!

பின்னர் அமரதேவன் கொலுவில் அமர்ந்தான்; முகம்மதுஷாவை வரவழைத்தான்; "அன்ப! உனக்கு அடைக்கலம் தந்தேன். போர்முனையில் உயிர் துறக்கப்போகிறேன். அதன் முன், உன்னைப் பத்திரமான இடத்துக்கு அனுப்பிவிடுதல் எனது கடமை. எனவே குழந்தை குட்டிகளுடன் புறப்படு! சேம நிலம் சேரும் வரையில், எனது புதல்வன் இரதிபாலன் பாதுகாப்பளிப்பான்" என்று பேசினன் பரிவு மிகுந்து.

ஆணைப்படி நடக்கத் தயார், என்றான் முகம்மதுஷா. ஆயினும், "தர்மவேந்தே! தஞ்சம் தந்த உம்மை விட்டுப் பிரியும் முன்னம், எனது மனைவியும் மகளும் உம்மைக் கண்டு சலாம் செய்ய விரும்பி நிற்கின்றனர்! மனமுவந்து வந்து, இக்கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்" என்று பாதந்தொட்டு வேண்டி நின்றான். அமர தேவனும் அப்படியே ஆகட்டும் என்று புறப்பட்டான்.

"தண்ணளிகொண்டு தஞ்சம் தந்த தார் வேந்தனை வஞ்சனையாக அழைத்துச்சென்று, வாளுக்கு இரையாக்கவே, முகம்மதுஷா முயலுகின்றான். அம்மாய

வலையில் நம் மன்னவனும் சிக்கிவிட்டா
னென்று சிலர் அத்தேவனறியப் பேசிக்
கொண்டனர். 'வருவது வருக, உடை
வாள் உளது, உள்ளத்தில் உரமும் உளது'
என்று செப்பிய வண்ணம் போயினன்
அப்புண்ணிய பூபதி.

முகம்மதுஷாவின் மாளிகை சேர்ந்த
தும், அமர சிம்மன் ஆங்கிருந்த காட்சி
கண்டு திடுக்கிட்டான்! 'என்ன இது'
என்று பதைப்பு மிகுந்து வினவினன்.
"உடன் பிறந்தே கொல்லும் வியாதிஎன்
பர் பெரியோர். அவ்விதமே உம்மவரால்
வஞ்சம் மூண்டுளது. பழிக்கு என்குடும்
பம் ஆளாயது! என் மனைவியும் மக
ளும் அந்தப்புர மாதருடன் தீயில்குளிக்க
மனம் வைத்தும், அம்மங்கையர் அவநம்
பிக்கை மிகுந்து, சம்மதிதரவில்லை. என்
மனைவி விரும்பிய வண்ணம், இவ்
வாளுக்கு என் குடும்பத்தை இரையாக்கி
னேன்! இனி, உமக்குமுன் சமரில் நான்
சாகுமாறு, மனைவியும் மகளும் வரங்
கொண்டு, அந்தப்புர மங்கையரைக்
கண்டு வணங்க, மேலுலகம் போயுளர்,"
என்று தழுதழுத்த குரலில் பேசினன்
அம்முகம்மதுஷா.

* * *

விளைவை விரித்துரைத்து என்ன பயன்?
நெற்றியிலே திலகம், கழுத்திலே
மலர் மாலை! உடம்பிலே மஞ்சள் உடை,
ஒரு கையிலே பட்டாக்கத்தி! மற்றொரு
கையிலே குத்தீட்டி! இவை சகிதம் அமர
தேவன் அவன் மகன் இரதிபாலன்,
உண்மை விசுவாசி முகம்மதுஷா ஆகிய
மூவரும் முன்செல்ல, அம்மூவரையும்
பின்தொடர்ந்தனர் எஞ்சி நின்ற ராஜ
புத்திர வீரர் அனைவரும். அக்கோட்
டைக்குள்ளே பெண் என்று பெயர்
படைத்தார் ஒருவரும் கிடையாது.

பற்றற்ற அப் பெருவீர புருஷர் கோட்
டைக் கதவுகளைத் திறந்துபோட்டுப்
புலிப்போத்தெனப் பகைப் படைமீது
பாய்ந்தனர்! பாய்ந்தவளவில், அன்ன
வரின் வாள் வீச்சும் ஈட்டிக் குத்தும்
கண்டு அலாவுதீன் அலறினன்; மானி
டரா இவர்? ராட்சஸரா? என்று திகைத்
தான்; தோல்வி திண்ணம், என்று கருதிப்
பின்னணிப்பக்கம் சேர்ந்துகொண்டான்;
முன்னணி முறிந்தது கண்டு, பதுங்கவும்
இடம் பார்த்தான்.

மாயமெல்லாம் விளைத்தும், வெற்றி
மாலை சூட வகையில்லையே, என்று அலப்
கானும் நஸரத்கானும் நடுநடுங்கினர்!
குலையாக் கோட்டையின் காவலரது
போர்த்திறன் எங்கே? நமது
படைஞரின் போராண்மை எங்கே?
என்று ஏங்கித்துடித்தனர்; சுல்தானைப்
போல் நாமும் பதுங்கிக் கொண்டா
லன்றிப் பிழைக்க வகை ஏது, என்று
தேம்பினர் விம்மினர்; வீர சுவர்க்கம்
புகுதலே சுத்த வீரம் என்று பேசிய
அலப்கானே முடிவில் அறிவழிந்தான்,
ஆருயிருக்கஞ்சி அலறியழுதான்.

அமரதேவனுக்கோ உடம் பெங்கும்
எண்ணிறந்த அம்புகள் வந்து பாய்ந்தன;
இரதி பாலனுக்கோ குத்தீட்டி வந்து,
காயமெங்கும் காயமூண்டு பண்ணிற்று!
முகம்மதுஷாவின் உடலத்தையோ துப்
பாக்கி ரவைகள் வந்து சல்லடைக் கண்
ணாக்கின! மூவரின் யாக்கையினும், இர
த்த ஆடை மற்றோர் கவசமாயிற்று! உதி
ரப் பெருக்கு அதிகரிக்கவே, அவர்களின்
அங்கங்களெல்லாம் தளர்ந்தன! ஆனால்
உள்ளம் மட்டும் எள்ளளவும் தளர
வில்லை!

அன்னாரைத் தொடர்ந்து வந்த ஏனைய
ராஜபுத்திர வீரரும் வீச் சொன்றுக்கு
எட்டும் பத்துமாகப் பலரை வெட்டிச்
சாய்த்துச் சிங்கநாதஞ் செய்தனர்; ஹர
ஹர மகாதேவ, என்று வீர கோஷம்
புரிந்தனர்; மானிடப் பூண்டற்ற கோட்
டையையே உங்கள் சுல்தான் நோக்க
நேரும், என்று திரக்குரல் எழுப்பினர்;
சுல்தானது சேனையில் பாதி சிதைந்தும்
மடிந்தும் போயிற்று! ஆயினும் ஆள்
பலம் படைத்த அல்லாவுதீன் பக்க
மிருந்து, மேலும் மேலும் வீரர் திரண்டு
வந்து, வெட்டும் குத்தும் எய்தி வீறிட்
டனர்.

ஒரு சிலர் அவ்விதம் எத்துணை நேரம்
வீராவேசம் காட்ட முடியும்? மூவரும்
மூர்ச்சைகொண்டு கீழே சாய்ந்தனர்!
ஏனையராஜபுத்திரரும் அமரருலகம்சேர்ந்
தனர். பின்னரே அக்கொடும் போர் நிற்
கலாயிற்று. அதுகண்டு, அல்லாவுதீன்
ஆண்மையுடன் முன்னேறி வந்தான்;

உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த அமரதேவனைக் கண்டான்; சவநிலைமையிலும் முகத்திலே வீரக்களை மிளிர்வதை நோக்கினான்; இவனே வீரன், என்று வியந்தான்!

பின்போசீற்றம்மிகுந்து, "முகம்மதுஷா எங்கே; முகம்மதுஷா எங்கே;" என்று பிணக் குவியலை எல்லாம் துருவிப் பார்த்தான். தொண்டையிலே உயிர் துடித்துக் கிடக்கும் முகம்மதைக் கண்டான்; பழைய நேசம் மேலிட்டது. "அன்ப! உன்னை ஒஷதி கொடுத்தாற்றி, உனக்கு உயிர்ப் பிச்சையும் அளித்தால், விசுவாசம் காட்டுவையோ?" எனவினவினான், அதற்கு முகம்மதுஷா மொழிவான்:—

'சுல்தானே! எனக்கு உயிர் ஊட்டினால், உண்மையில் விசுவாசம் காட்டுவேன்! எப்படி என்றால், எனக்குத் தஞ்சமளித்த அமரதேவனது சந்ததியைத் தேடி, இந்த ரணதம்பரக் கோட்டையிலே பட்டாபிஷேகம் பண்ணுவேன்! பின்பு, அவனுடன் சேர்ந்து, பெருஞ்சேனை திரட்டி, உன்னைப் போரிலே கொன்று குவித்து, டில்லியரசிலும் அச்சந்ததியை அமர்த்துவேன் ஆடம்பரமாக!"

இவ் வார்த்தை கேட்டதும் சுல்தானது கண்கள் சிவந்தன. "உனக்குத் தஞ்சம் தந்தவன் உனக்கு முன்பே உயிரிழந்துவிட்டான்! இனிமேல், தஞ்சம் தருவார் யார்? இதோ பார். எனது யானையைக் கொண்டு உன்னைத் துவைக்கச் செய்கிறேன்," என்று கூறி, யானையை அங்குசங்கொண்டு குத்திக் கோபத்துடன் ஏவினான்.

"இதுவோ நம் விதி!" என்று முகம்மதுஷா மறுகும் தருணத்திலே, அம்பொன்று விரைந்துவந்து, அந்த யானையைத் தரையிலே தள்ளியது! அந்த யானையுடன் அல்லாவுதீனும் அலறிக்கொண்டு சாய்ந்தான்! அதுகண்டு, முகம்மது ஆறுதலடையும் வேளை, "மகிமை வாய்ந்த முகம்மது! அமரதேவன் தந்த தஞ்சம் தவறாது! சுல்தானது யானைக் காலடியில், நீ ஆவிதுறக்க நேராது! இரதிபாலனது அம்பின் வலிமை பார்!" என்னும் குரல் எழுந்தது.

அக்களிப்பின் மிகுதியிலே முகம்மதுஷா "எனது தோழனை அவ்வுலகில் சென்று விரைந்து காண்பேன்!" என்றுகூறி வீரவுலகு குறுகினன்! வட இந்தியாவிலே ரணதம்பரக் கோட்டை நின்ற தலம் குறுகின், ஆங்குள்ளோர் அமரதேவனை மனமார வாழ்த்துவர்! முகம்மதுஷாவையும் புகழ்ந்து பேசுவர்! வீரம் வாழ்க! தோழமை உயர்க!

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

நாடகம்

சௌந்தர்ய லக்ஷியம்

வாசவன்

காட்சி 1

[தஞ்சைமா நாட்டின் அரசர்கோன் ராஜேந்திர சோழனின் குமாரி தனிமவல்லி, அந்தப்புரத்தின் பலகணி வழியாக, பாலைப் பழிக்கும் வெண்ணிலவை ரஸித்துக்கொண்டிருக்கிருள். அப்பொழுது தான் வந்த ராஜேந்திரன் குமாரியின் நோக்கைப் புன்னகையுடன் கவனிக்கிருன்.]

ராஜேந்திரன் :- தனிமா!

தனிமா :- அப்பா!

ராஜேந்திரன் :- விண்ணிலே எத்தனை மீன்கள் இருக்கின்றனவென்பதை எண்ணிவிட்டாயா, குமாரி!

தனிமா :- ஊம்! ஆனல் ராஜகுமாரர்களை விட, அவைகள் அதிகமில்லை!

ராஜேந்திரன் :- அதிருக்கட்டும், தனிமா! கொங்கு நாட்டிலிருந்து இளவரசன் குலசேகரன் வந்திருக்கிருன்.

தனிமா :- ரொம்ப சந்தோஷம். அவனை முதலில் சாப்பிடச் சொல்லுங்கள்.

ராஜேந்திரன் :- சரி. பிறகு?

தனிமா :- நம் அரண்மனையின் அலங்காரங்களையெல்லாம் அவனுக்குக் காண்பியுங்கள்!

ராஜேந்திரன் :- அதற்கப்புறம்?

தனிமா :- அவனை ஊருக்கு அனுப்பிவையுங்கள்!

ராஜேந்திரன் :- தனிமா! உன்னை மணம் செய்துகொள்ள விரும்பிவரும் அரசிளங்குமாரர்கள் அத்தனை பேரையும் இப்படியே தள்ளிவிடுவாயானல்,.........

தனிமா :- ஒருத்தனுவது கிணற்றில் விழுந்து விடமாட்டான் அப்பா! எப்பொழுது பார்த்தாலும் இதே கேள்விதான?

ராஜேந்திரன் :- உன் பதிலில் ஏதாவது மாறுதல் ஏற்படாதா என்று தான் இன்னமும் எதிர்பார்க்கிறேன்.

தனிமா :- அப்படியானல், நீங்கள் ஏமாற்றம் அடைய வேண்டியது தான்!

ராஜேந்திரன் :- எனக்கு ஒரு விதத்தில்ஏமாற்றம் தான்! ஆனல், வேருெரு விதத்தில், அரச வம்சத்து இளைஞர்கள் அத்தனை பேருக்குமல்லவா ஏமாற்றமாகி விட்டது?

தனிமா :- அப்பா! நான் கல்யாணமேசெய்துகொள்ளப் போவதில்லை. ஒருவேளை செய்துகொள்வதாக இருந்தாலும், அரச குடும்பத்தில் பிறந்த ஆண் ஜன்மங்களை நான் கனவிலும் கருத மாட்டேன்.

ராஜேந்திரன் :- ஏன்?

தனிமா :- அரச குமாரர்களுடைய அந்தப்புரத்தின் அலங்காரப்பதுமைகளுள் ஒன்ருக அடைபடுவதற்கு நான் ஆசைப்படவில்லை.

ராஜேந்திரன் :- என்ன? ஒரு அரசனின் பட்டமகிஷியாக இருப்பதில் எவ்வளவு ஆனந்தம் உண்டு என்பதை எண்ணிப்பார்த்தாயா?

தனிமா :- காமக்கிழத்தியர் வசத்தில் கணவனை ஒப்புவித்துவிட்டு, இரவு பகலாய்க் கண்ணீரைப் பெருக்குகிற பட்டமகிஷிப் பதவியின் ஆனந்தம், எனக்கு வேண்டாம்?

ராஜேந்திரன் :- தவறு, தனிமா! ராஜகுமாரர்களில் ராமனைப்போல் ஏக பத்னி விரதமுடையவர்கள் இல்லையா?

தனிமா :- ஏன் இருக்க முடியாது? ஒவ்வொரு ராஜகுமாரனுக்கும் கைகேயியைப் போல் ஒரு மாற்ருந்தாய் இருந்து, அவனுடைய பட்டத்தையும் பணத்தையும் பறித்துக்கொண்டு, காட்டுக்கு ஓட்டிவிடுவாளானல் அத்தனை பேரும் ஏகபத்னி விரதர்களாகத்தான் இருப்பார்கள்.

ராஜேந்திரன் :- பணமும் பதவியும் உடையவர்களெல்லாரும் நெறியற்றவர்களா?

தனிமா :- இதென்ன கேள்வி, அப்பா! உலகத்தில், எங்கேயாவது ஒரு மூலையில், இரண்டொரு தர்ம புத்திரர்கள் இருக்கலாம். ஆனல் எங்கே பார்த்தாலும் காணப்படுபவர்

அவருடைய தம்பிமார்களான துரியோதனாதிகள் தான்!

ராஜேந்திரன்:- ஊம்! அப்புறம் என்னதான் உன் முடிவு?

தலிமா:- கல்யாணமே செய்துகொள்வதில்லையென்பதுதான் என் முடிவு!

ராஜேந்திரன்:- தளிமா! அரச குமாரர்களைத்தான் உனக்குப்பிடிக்கவில்லை; வேண்டாம். ஏழைகளிலாவது உனக்குப் பிடித்தமான ஒருவனைக் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாதா?

தளிமா:– எனக்குப் பிடித்தமானவன் ஒருவன் இருக்கலாம்! ஆனால், என்னை அவனுக்குப் பிடிக்கவேண்டுமே?

ராஜேந்திரன்:- பைத்தியம்! உன் அழகென்ன, குணமென்ன, கல்வி என்ன? உன்னைக் கல்யாணம் செய்துகொண்டு, இந்த ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் ஏறி உட்காருவதற்கு இஷ்டமில்லாதவனும் ஒருவன் இருப்பானா?

தளிமா:- அப்பா, உலகத்தில் என்னைவிட அழகிகள் கிடையாதா? குணசாலிகள் கிடையாதா? கலாவதிகள் கிடையாதா?

ராஜேந்திரன்:-இருக்கலாம். அதனால் என்ன?

தளிமா:- என்னை மணந்துகொண்ட பிறகு என்னிலும் மேம்பட்ட ஒரு ரூபவதியைக் கண்டு, அவள்மீது ஆசைப்படுவானானால்?

ராஜேந்திரன்:- அவலக்ஷணமான மனைவியாக இருந்தாலும், அவளிடம் அந்தரங்கமான பிரேமைகொண்ட மனிதர்கள் எத்தனையோ பேரிருக்கிறார்கள்!

தளிமா:– அதற்குக் காரணம் என்ன தெரியுமா?

ராஜேந்திரன்:- நீயே சொல்!

தளிமா:- மற்றவர்களுக் கெல்லாம் மகா விகாரமாகப்படுகிற ஒரு பெண்ணின் வடிவத்தை, சௌந்தர்யத்தின் லக்ஷியமாகக் கருதி வழிபடும் ஆண் மகன் உலகத்தில் ஒருவன் இருக்கத்தான் செய்வான். ஈசுவரச் செயலால், அவனுக்கே அவள் மனைவியாக வாய்த்துவிட்டால், அவர்களது இல்வாழ்க்கை தான் இன்பசாகரம்!

ராஜேந்திரன்:- அதேமாதிரி உன் வடிவத்தையும் சௌந்தர்யத்தின் லக்ஷியமாகக் கருதி வழிபடக்கூடிய ஆண்மகனொருவன் இருப்பானல்லவா?

தளிமா:- நிச்சயமாக இருப்பான். ஆனால், அவன் உலகத்தின் எந்தப் பாகத்தில் இருப்பானோ?

ராஜேந்திரன்:- அவன் யாரென்பது தெரிந்தால் ஆட்களைவிட்டுத் தேடலாம். அதுவும் தெரியவில்லையே!

தளிமா:- நான் பூஜை செய்யும் புராந்தகனுக்குத்தான் அதெல்லாம் தெரியும்!

ராஜேந்திரன்:- நல்லது. எல்லாம் அவன் சித்தப்படியே நடக்கட்டும்.

தளிமா:- அது போகட்டும் அப்பா! என் பூஜை அறைக்கு ஒரு கலைமகள் படம் கேட்டேனே!

ராஜேந்திரன்:- படம் அநேகமாகத் தயாராகிவிட்டது. நாளை உன் கைக்குக் கிடைத்துவிடும்.

தளிமா:– மறந்துவிடமாட்டீர்களே!

ராஜேந்திரன்:– மறக்காமல் மந்திரியிடம் சொல்லிவிட்டுப் போகிறேன்.

தளிமா:- எங்கே போகிறீர்கள்?

ராஜேந்திரன்:- ஓ! அதை இன்னும் உன்னிடத்தில் சொல்லவில்லையே! தளிமா! நாளைய தினம் நான் பாண்டிய ராஜதானிக்குச் செல்கிறேன்.

தளிமா:- காரணம்?

ராஜேந்திரன்:- அரசியல் விஷயம்!

தளிமா:- எப்போது திரும்புவீர்கள்?

ராஜேந்திரன்:- இன்னும் ஒரு வாரத்தில்! அதுவரையில் மந்திரியே என் பிரதிநிதியாக அரசுபுரிவார்.

காட்சி 2

[தஞ்சை மாளிகையிலே அந்தரங்க மண்டபத்திலே அரசர் பிரதிநிதி மந்திரி அமர்ந்திருக்க, ஓவிய நிபுணன் மந்தாரன் வந்து அஞ்சலி செய்கிறான்.]

மந்திரி:- ஓவிய நிபுணரே! சரஸ்வதி படம் தயாராகிவிட்டதா?

மந்தாரன்:- இதோ கொண்டுவந்திருக்கிறேன்.

[படம் மந்திரியின் கைக்கு மாறுகிறது.]

மந்திரி:– (ஆச்சர்யத்துடன்) இது சரஸ்வதி படம் தானா?

மந்தாரன்:- பிரபூ! இந்த ராஜ்யத்தின் மந்திரியாகவும், தற்சமயம் ராஜப் பிரதிநிதியாகவும் விளங்கும் தாங்கள், என் கலையை இவ்வளவு இழிவுபடுத்திப் பேசுவீர்களென நான் எதிர்பார்க்கவே இல்லை.

மந்திரி:- நான் கலையை இழிவு படுத்துவதாக எண்ணிவிட வேண்டாம். ஆனால், நிச்சயமாக, இது கலைமகளின் சித்திரம் அல்ல!

மந்தாரன்:- ஏன்? கலைமகளுக்குரிய சின்னங்களில் ஏதேனும் குறைவிருக்கிறதா?

மந்திரி:-சின்னங்களில் ஒன்றும் குறைவில்லை. புத்தகம், ஸ்படிகமாலை, வீணை, மயில்—எல்லாம் இருந்தும்.........

மந்தாரன்:– பிறகு?

மந்திரி:- அந்த முகம் தான்..........

மந்தாரன்:-முகத்திற்கு என்ன? அதில் ஞான ஒளி வீசவில்லையா?

மந்திரி:- நான் அதைச் சொல்லவில்லை!

மந்தாரன்:- அதில் ஜீவ எழில் ததும்ப வில்லையா?

மந்திரி:- ஓவிய நிபுணரே! நான் சொல்ல வந்த விஷயமே வேறு.

மந்தாரன்:- என்ன?

மந்திரி:- சித்திரத்தில் காணப்படுவது, எனக்குத் தெரிந்த ஒரு நங்கையின் முகம். அவளை உமக்கும் தெரிந்திருக்கிறதென்றே இப்பொழுது தீர்மானிக்கிறேன்.

மந்தாரன்:- என்ன அதிசயம்! இத்தகைய எழில்வதனமுள்ள ஒரு ஏந்திழை இந்த உலகத்தில் இருக்கிறாளா?

மந்திரி:- வேறு எந்த உலகத்தில் இவளை நீர் பார்த்தீர்?

மந்தாரன்:- எனக்குச் சொந்தமான கற்பனை உலகத்தில்!

மந்திரி:- கற்பனை உலகமென்பது என்ன?

மந்தாரன்:- அது கலைஞனின் லக்ஷிய உலகம்!

மந்திரி:- இல்லை, அது பொய்உலகம்!

மந்தாரன்:- என்ன?

மந்திரி:- அதனால்தான் கலைஞர்களும் பொய் பேசுகிறார்கள்!

மந்தாரன்:- இது அடாத பழி!

மந்திரி:- ஒருகாலுமில்லை. நீர் கலைமகளாகச் சித்திரித்திருக்கும் கன்னிகை, உம் போன்றவர்களது கனவில்கூடக் காண்பதற்கு அரியவள். ஆனால் இந்தப்படத்தில் விளங்கும் அவளது மனமோகனப் புன்னகையைக் காணும் பொழுது, நீர் அவளை எதிரில் வைத்துக் கொண்டே இதை எழுதி இருப்பதாகத் தீர்மானிக்கிறேன்.

மந்தாரன்:- தங்கள் அனுமானம் முற்றும் தவறானது. கலைமகளின் சித்திரம் வேண்டுமென்று நீங்கள் கேட்டீர்கள். அதற்காக, தெய்வீக சௌந்தர்யத்தின் லக்ஷியமாக விளங்கும் வதனம் ஒன்றைக் கற்பனை செய்தேன். அப்போது, என் அகக் கண்ணுக்குத் தோற்றமளித்த அற்புதக் காட்சியைப் படமாக வரைந்திருக்கிறேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

மந்திரி:- நல்லது. இதைப்பற்றிப் பிறகு பேசலாம். இப்போது உமக்குரிய சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

மந்தாரன்:- கைம்மாறு கருதுபவன் கலைஞன் அல்ல.

மந்திரி:- அப்படியானால்.........

மந்தாரன்:- இந்தச் சித்திரம் சோழ நாட்டிற்கு நான் ஹாரமாக அளித்த பரிசு!

காட்சி 3

[தளிமவல்லியின் பூஜை அறை. தளிமா மெய் மறந்த த்யான நிலையிலே கலந்துவிட்டு, இகத்திற்கு வருகிறாள்.]

மந்திரி:- (வந்து கொண்டே) ராஜகுமாரி!

தளிமா:- அமைச்சர் பெருமானே! வாருங்கள்.

மந்திரி:- குமாரி! ஒரு முக்கியமான சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்வதற்காக வந்திருக்கிறேன்.

தளிமா:- என்ன சந்தேகம்?

மந்திரி:- இன்று காலையில் ஓர் சித்திரக் கலைஞனைக் கண்டேன். அவன் கையில் ஒரு அற்புதமான சித்திரம் இருந்தது.

தளிமா:- என்ன சித்திரம்?

மந்திரி:-ஓர் பேரெழில் வாய்ந்த பெண்மணியின் சித்திரம்!

தளிமா:- அவள் அவனது காதலியாக இருக்கலாம்!

மந்திரி:- அப்படித்தான் நானும் சந்தேகப்பட்டேன். ஆனால், அவன் அவளைப் பார்த்ததுகூடக் கிடையாதென்று சாதிக்கிறான்.

தளிமா:- அப்படியானால், அவள் அவனது கற்பனா சிருஷ்டியாகத்தானிருக்கவேண்டும்!

மந்திரி:- இல்லை. அவள் உன்னைப்போலப் பிரும்ம சிருஷ்டியில் வந்த ஓர் பெண்ணரசி தான்!

தளிமா:- அவளைத் தங்கட்குத் தெரியுமா?

மந்திரி:- அவளெதிரில்தான் நான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன்!

தளிமா:- என்ன!

மந்திரி:- ஆம். சந்தேகமிருந்தால், இதோ படத்தைப் பார்!

[தளிமா படத்தை வாங்கிப் பார்க்கிறாள்.]

துணிகள் வெண்மையாக சலவை செய்யப் பட்டுள்ளன...
துணிகள் பிரகாசமாக சலவை செய்யப் பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்பினுல் தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 122-50 TM

தளிமா:- (ஆச்சரியத்துடன்) கலைமகள் படம்!

மந்திரி:- இல்லை, சோழநாட்டு ராஜகுமாரி தளிமவல்லியின் படம்!

தளிமா:- உண்மைதான்! தாங்கள் கூறுவதை என்னால் மறுக்க முடியாது.

மந்திரி:- குமாரீ! இந்த ஓவியன் உன்னை எங்கே, எப்போது, எப்படிச் சந்தித்தான்?

தளிமா:- ஓவியனாவது, என்னைச் சந்திப்பதாவது? அதிருக்கட்டும். அவன் பெயர் என்ன?

மந்திரி:- மந்தாரன்! கிருஷ்ணா, கோதாவரி நதிகளை எல்லையாகக்கொண்ட வெங்கி நாட்டைச் சேர்ந்தவன். உனக்குத் தெரியாதா?

தளிமா:- அவனைப் பற்றி நான் கேள்விப்பட்டதுகூடக் கிடையாது!

மந்திரி:- தளிமா! பெண்களின் உள்ளம் ஆழமானதுதான். ஆனால், அந்த ஆழத்தையும் அளந்துபார்க்கும் ஆற்றல், என் போன்ற அமைச்சர்களுக்கு உண்டு!

தளிமா:- மிகவும் சந்தோஷம்! என் உள்ளத்தின் ஆழத்தில் தாங்கள் கண்டுபிடித்த ரகசியம் என்ன? சொல்லுங்கள்.

மந்திரி:- குலப் பெருமைக்கு ஒவ்வாத கூட்டுறவு!

தளிமா:- என்ன சொல்கிறீர்கள்?

மந்திரி:- நீயோ ராஜவம்சத்தில் பிறந்த பெண். ஒரு ராஜகுமாரனுடைய காதலைப் பெறவேண்டியவள். மந்தாரனோ, கேவலம் படம் எழுதிப் பிழைப்பவன்!.........

தளிமா:- (வெகுண்டு எழுந்து) போதும்! நான் மந்தாரனைக் காதலிப்பதாகவே வைத்துக்கொள்ளுங்கள். அதைத் தடை செய்வதற்கு நீங்கள் யார்?

மந்திரி:- நான் உன் தந்தையின் மந்திரி!

தளிமா:- அப்படியானால், உங்கள் புத்திமதிகளை என் தந்தையிடமே சொல்லிக் கொள்ளுங்கள்.

மந்திரி:- தற்சமயம் நான் உன் தந்தையின் பிரதிநிதி!

தளிமா:- என் சொந்த விஷயத்தில் தலையிடுவதற்கு என் தந்தைக்கே உரிமை கிடையாது!

மந்திரி:- சரி அம்மா! நான் போய் வருகிறேன்!

காட்சி 4

[மந்தாரனது வீடு. ஏதோ சிந்தனையாய் முற்றத்தில் உட்கார்ந்திருக்கிறான். அப்பொழுது முகமூடி தரித்த ஒரு பெண் தருகித் தருகி நடந்தவாறு அங்கு வருகிறாள்.]

பெண்:- ஐயா! மந்தாரன் என்ற ஓவிய நிபுணர்........

மந்தாரன்:- நான் தான் நீ.........

பெண்:- இந்நகர் இளவரசி தளிமவல்லியின் தோழி.

மந்தாரன்:- என்ன விசேஷம்?

பெண்:- ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசவேண்டும்.

மந்தாரன்:- சந்தோஷம் ஆனால், அதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு.

பெண்:- என்ன?

மந்தாரன்:- முதலாவது நீ வாசற்படியில் நிற்கக்கூடாது. உள்ளே வந்து உட்கார வேண்டும்.

பெண்:- சரி, இரண்டாவது நிபந்தனை?

மந்தாரன்:- உன் முகமூடியை எடுத்துவிட வேண்டும்.

பெண்:- இந்த இரண்டாவது நிபந்தனையை மாத்திரம், சிறிது நேரம் பொறுத்துத்தான் நிறைவேற்ற முடியும்!

மந்தாரன்:- ஊம்...... உன் விஷயம்?

பெண்:- எங்கள் அரண்மனைக்குக் கலைமகளின் படத்தை வரைந்து கொடுத்தது தாங்கள்தானே?

மந்தாரன்:- ஆம், அதற்கென்ன?

பெண்:- கலைமகளின் வேடத்தில், எங்கள் இளவரசியின் திருவுருவத்தையல்லவா தீட்டி இருக்கிறீர்கள்?

மந்தாரன்:- உங்கள் இளவரசியா? அவள் அத்தனை அழகுடையவளா?

பெண்:- நான் ஒரு சித்திரக்காரியல்லவே அதைத் தெரிந்து வைத்திருப்பதற்கு!

மந்தாரன்:- மந்திரியார் என்னை மடக்கி மடக்கிக் கேள்வி கேட்டதன் காரணம், இப்போதுதான் விளங்குகிறது!

பெண்:- என்ன கேட்டார்?

மந்தாரன்:- படத்திலுள்ள உருவம், ஓர் காண்பதற்கரிய காரிகையினுடைய தென்

றும், அவளை எதிரில் வைத்துக்கொண்டே நான் அந்தச் சித்திரத்தை வரைந்திருக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

பெண்:- எங்கள் இளவரசிக்கு உங்களால் எத்தகைய அபவாதம் ஏற்பட்டுவிட்டது பார்த்தீர்களா?

மந்தாரன்:- அதற்கு நான் என்னம்மா செய்வேன்?

பெண்:- நன்றாயிருக்கிறது உங்கள் பதில். உண்மையைக் கூறிவிடுங்கள். எங்கள் இளவரசிக்கும் உங்களுக்கும் எவ்வளவு காலமாக நட்பு?

மந்தாரன்:- அட, ஈசுவரா! உங்கள் இளவரசியை நான் கண்ணால் கூடக் கண்டதில்லையே!

பெண்:- பிறகு அவள் படத்தை மாத்திரம் உங்களால் எப்படி எழுத முடிந்தது?

மந்தாரன்:- அதைச் சொன்னால் உங்களுக்கெல்லாம் புரியாது

பெண்:- எங்களுக்குப் புரியும்படி சொல்ல உங்களுக்குத் தெரியாது. அவ்வளவுதானே?

மந்தாரன்:- ஏது, பேச்சில் நீ பெரிய கெட்டிக்காரியாக இருக்கிறாயே?

பெண்:-புகழ்ச்சி இருக்கட்டும். கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்!

மந்தாரன்:- மகாராஜா ரஜேந்திரர், தமது புதல்வியின் பூஜை அறைக்குக் கலைமகளின் சித்திரம் ஒன்று தீட்டித்தருமாறு என்னிடம் கேட்டார் ....

பெண்:- சரி.

மந்தாரன்:- கலைமகளை நீ நேரில் பார்த்திருக்கிறாயா?

பெண்:- இப்பொழுது தங்களைத்தான்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!

மந்தாரன்:- நீ மகா புத்திசாலியாக இருக்கிறாய். மேலே கேள்: அதனால், கலைமகளுக்கு ஓர் அற்புதமான உருவத்தைக் கற்பிக்க வேண்டிய ஒரு நிமித்தம் எனக்கேற்பட்டது.

பெண்:- நியாயம்.

மந்தாரன்:- அந்த உருவமானது, தெய்வீகம் பொருந்தியதாக இருக்க வேண்டும். முகத்தில் சாந்தி ததும்பி, ஞான ஒளி சுடர் விடவேண்டும்.

பெண்:- உண்மை!

மந்தாரன்:- எல்லாவற்றிற்கும்மேலாக அது இணையற்ற பேரெழி லுடனும் விளங்க வேண்டும்.

பெண்:- இது வரையில் தாங்கள் கூறி வந்ததை எல்லாம் ஒப்புக்கொள்கிறேன்!

மந்தாரன்;- எனவே, தெய்வீக சௌந்தர்யத்தின் லக்ஷியமாக, ஓர் காரிகையின் வடிவத்தை என் கற்பனையில் சிருஷ்டித்தேன்.

பெண்:- சௌந்தர்யத்தின் லக்ஷியமா?

மந்தாரன்:- ஆம், ஏன்?

பெண்:- தங்கள் கற்பனையில் விளைந்த கலைமகளுக்கும், எங்கள் இளவரசிக்கும் எள்ளத்தனை வித்யாசமும் கிடையாதே!

மந்தாரன்:- உண்மைதானா?

பெண்:- சந்தேகமிருந்தால் இதோ பாருங்கள்!

[பெண் முகமூடியைக் கழற்றுகிறாள். என்ன ஆச்சர்யம்! அவள்தான் ராஜகுமாரி தளிமவல்லி.]

மந்தாரன்:- ஹா! தளிமா! என் சௌந்தர்ய லக்ஷியமே!

தளிமா:- கலைஞரே! நான் கனவு காண்கிறேனா?

ஒருகுரல்:- இல்லை, தளிமா! உன் பூஜைக்கெல்லாம் பலன் கிடைத்துவிட்டது.

[இருவரும் திடுக்கிட்டு வாசல்பக்கம் பார்க்கின்றனர். மந்திரியும், ராஜேந்திரசோழனும் உள்ளே வந்துகொண்டிருக்கிறார்கள்.]

தளிமா;- (ஆச்சரியத்துடன்) அப்பா!

மந்தாரன்:- மகாராஜ்!

ராஜேந்திரன்:- ஓவிய நிபுணரே! உமது சித்திரத்தின் செய்தியை மந்திரி மூலம் கேள்விப்பட்டு, பாண்டி நாட்டுக்குச் செல்லாமல் பாதி வழியிலேயே திரும்பிவந்துவிட்டேன். சித்திர மன்னரே.........

மந்திரி:- மகாராஜா! அவர் சித்திர மன்னர் மாத்திரமல்ல. புவி மன்னரும்தான் என்பதை இன்றுதான் ஒற்றர்கள்மூலம் அறிந்தேன்.

ராஜேந்திரன்:- என்ன!

மந்திரி:- ஆம், அவர் வெங்கிநாட்டு மன்னரான ராஜ ராஜ நரேந்திரர்!

ராஜேந்திரன்:- நரேந்திரரே!......

நரேந்திரன்:- சோழ மன்னரே! என்னை மன்னிக்கவேண்டும். ஓவியக்கலையிலே எனக்கு உயிர். உங்கள் பிரகதீசுவரர் ஆலயத்தின் சித்திர மேம்பாட்டைக்கேட்டு அதை எங்கள் வெங்கி நாட்டிலும் பரவவைக்கவே மறைமுகமாக மந்தாரனாய் வந்தேன். நான் அரசியல் விஷயமாக உளவு அறியவரவில்லை. கலையில் கொண்ட காதலால் இப்படி வந்தேன். ஆகையால் என்னை மன்னிப்பீர்களென நம்புகிறேன்.

ராஜேந்திரன்:- நரேந்திரரே! எங்கள் நாட்டுக் கலை இமயத்துக்கப்பாலும் சென்றுபரவ வேண்டுமென்பது என் அவா. அந்த மனப்பான்மையில் தமிழர்கள் தொட்டாற் சுருங்கிகளல்லர்.

நரேந்திரன்:- மிகவும் சந்தோஷம்!

ராஜேந்திரன்:- மந்திரி! தளிமவல்லியின் திருமணத்துக்கு உடனே ஏற்பாடு செய்யுங்கள்!

மந்திரி:- மணமகன் யார் பிரபு!

ராஜேந்திரன்:- வெங்கிநாட்டு வேழம் ராஜராஜ நரேந்திரர்!

பொன்னம்மாள்

தி. சேஷாத்ரி

இருட்டும் குளிரும் இரவைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டன. வானம் கம்பிகள் கொண்டு குத்துவது போல் நிறுத்தி நிறுத்தி மழைத்தாரைகளைப் பொழிந்து இரவைப் பொத்துக்கொண்டிருந்தது. இரவு நடுங்கி உட்கார்ந்துவிட்டது, பாவம்! ஓடவும் முடியாமல்.

செல்லையா சாப்பிட்டுவிட்டு முற்றத்திலேயே கை அலம்பி, படுக்கையில் வந்து உட்கார்ந்தான். அவனுக்கு ஒருகால் துடைக்குக் கீழ் கிடையாது. வெட்டப்பட்டு விட்டது. வீட்டுக்குள்ளே அவனுக்கு அந்தக் காலைப் போல உதவியவள் அவன் மனைவி பொன்னம்மாள். வெளியே செல்வதானால் மரஉதவி அந்த உபகாரத்தைச் செய்யும்.

படுக்கைக்குக் கொண்டு வந்து விட்டுத் திரும்பிய பொன்னம்மாள் முத்த மிடும் சத்தம் கேட்டுத் திரும்பினாள். செல்லையா, தன் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த மூன்றாம் மகளை முத்தம் இட்டுக் கொண்டிருந்தான். அந்தக் குழந்தைமுகம் அப்படியே பொன்னம்மாளையே 'உரித்து' வைத்திருந்தது.

"குழந்தை தூங்குவது இல்லே!" என்றான் அவன். "ஆமாம்" என்றாள். அவர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆடிக்கொண்டிருந்த சிம்னி விளக்குச் சற்று நேரம் நின்று எரிந்தது. இருவர் உள்ளத்திலேயும் அவர்கள் வாழ்க்கை விளக்கில், முன் நடந்த ஓர் சம்பவத்தை எண்ணெயாகக் கொண்டு அன்புத் திரியிலே எரிந்த ஓர் இன்ப ஜோதியும் சற்று நேரம் நின்று எரிந்தது. அந்த வெளிச்சம் அவர்களைப் பரவசப்படுத்திற்று. அதில் செல்லையா கண்கள் மலர்ந்தன. பொன்னாயி இமைகளைத் தளர்த்தி அதை மறைத்தாள். அவள் திரும்பினாள்.

'பொன்னு, நேரமாவுது. அபாரக் குளிரு. போய் சீக்கிரமே மாட்டையும் கதவையும் பார்த்துட்டு வந்து படுத்துக்கோ!' என்று ஆதரவின் அணைப்பிலே இழுப்பு மாறி நிற்கும் ஓர் உத்தரவைப் போட்டுவிட்டுப் படுத்துக் கொண்டான்.

பொன்னம்மா திரும்பியதும் வாசல் கதவு தட்டப்பட்டது. 'இதோ வந்து விட்டேன்' என்று சொல்லிக் கொண்டே பொன்னம்மாள் வாயிற் பக்கம் சென்றாள். செல்லையா எழுந்திராமலேயே "இந்த நேரத்துக்குயார்றீ வந்தது.? சரிதான் நடேசன் பருத்திக் கொட்டை வேணும்னுக்கிட்டிருந்தான். அவனாருந்தா நல்லா ரெண்டு வீசை காணும் கொடுத்தனுப்பு" என்று சொல்லிவிட்டுக் குழந்தையின் பக்கம் திரும்பிப் படுத்தான்.

பொன்னம்மாள் வாயிற் கதவைத் திறந்தாள்! எதிரே கும்பிருட்டு. கையிலே இருந்த விளக்கே பயந்து ஆடிற்று. அதன் ஒளியிலே அவள் வந்த ஆளைக் காண முயன்றாள். இளைத்த இரவே தாடி மீசைக்குள் முகத்தை மறைத்துக்கொண்டு உடல்முழுவதையும் ஒரு துணியால் மூடிக் கொண்டு இந்த வீட்டுக்குள்ளே ஓண்ட வருகிறதோ! என்றிருந்தான் வந்த ஆள்! பொன்னியின் கண்கள் தோல்வியடைய இஷ்டமில்லாமல் அவனை மீண்டும் ஊடுருவின.

அவன் இவள் மயக்கத்தைக் கண்டு பயந்தவன் போலப் பின்னிடைந்தான். குறட்டு முகப்பில் நின்று கொண்டு,

"என்ன பொன்னு? மறந்து விட்டாயா?' என்றான் வந்தவன். அவன் வார்த்தைகள் ஏழு வருஷங்கள் ஆழமுள்ள ஒரு கிணற்றிலிருந்து வந்தன!

பொன்னம்மாள் அந்தக் கடந்த காலக் கிணற்றுக்குள் உருட்டித் தள்ளிவிடப்பட்டாள்.

பொன்னம்மாள் என்றுமே அழகின் எஃகு உருவம். அழகை ஒளித்து வைத்துக் காப்பாற்ற விரும்பினான் போலும் அந்தப் படைப்பாளன்; அவளும் அப்படி; அவள் இருந்த இடமும் அப்படி. அவள் அழகு இந்தப் பொன்னம்பலத்துக்காகத்தான் வளர்

கிறது என்று அவள் எண்ணிய காலம் அது. அவள் அண்ணனும் அதையே சொன்னான். தாய் தந்தையற்ற அவள் அவன் சொல்லை மீறியிருக்க முடியாது. என்றாலும் பொன்னம்பலத்துடன் பெயர்ப் பொருத்தமுடன் மனப் பொருத்தமும் ஏற்பட்டிருந்தது அவளுக்கு.

அவள் அண்ணன் காத்தவராயனும்பொன்னம்பலமும் ஒரே மில்லில் வேலை செய்தனர்.

அன்று, அண்ணன் மனைவி பிரஸவத்துக்குப் போயிருந்தாள். பொன்னம்மாள் தான் வீட்டு வேலை.

இரவு எட்டு மணிக்குப் பொன்னன் வந்தான். அண்ணன் இல்லை. பொன்னம்மாள் தாராளமாய்,

"வாங்க மச்சான். உக்காருங்க! கையைக் காலைக்கழுவிக்குங்க. நீங்கஇங்கே தான் சாப்பிடப் போறிங்கன்னு அண்ணன் சொல்லிச்சு. இதோ வந்துடும். உங்களைத் தேடிக்கிட்டுத்

தான் போச்சு!" என்று விஷயத்தைச்சொல்லி அவனை முன் கட்டில் அமர்த்தினாள். பிறகு உள்ளே சென்று சமையலைக் கவனித்தாள். பொன்னம்பலம் மனம் அன்று சரியான நிலையிலில்லை. என்றாலும் அவள் உடலையும் செயலையும் அப்பொழுது அப்பொழுது கவனித்தன அவன் கண்கள். அவள் ஒவ்வொரு நெளிவும், அசைவும், பார்வையும் எங்கேயோ கெட்ட இடங்களில் திரியும் அவன் மனதை சாட்டையடியடித்து நிறுத்தின. அவன் அதையும் உணர்ந்தான். அந்த அடிபடும் போதெல்லாம் குறவன்போல "இல்லை அப்படிச் செய்யக்கூடாது தான்: இந்த சுவர்க்கத்தை விட்டா!" என்று சொல்லிக்கொண்ட அவன் அடுத்த கணமே' "சீ. அது தான் நம் கடமை!" என்று திடம் செய்து கொண்டான். இப்படி அவன் அலைக்கு மேலே எழும்பியும் ஒரு வாய் தண்ணீரைக் குடித்துக் கொண்டு கீழே அமுங்கிக் கொண்டும் தத்தளித்திருக்கும் போது காத்தவராயனும் வந்து விட்டான்.

இருவரும் சாப்பிட்டனர். வெற்றிலைத் தட்டுடன் முன் அறையில் பாய்போட்டு உட்கார்ந்தனர், பொன்னம்மாள் தட்டை எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தாள், அவர்கள் உட்கார்ந்த இடத்தை அடுத்த சமையலறையில். அன்று குழம்பிலே உப்புக் குறைவு. அதையும் கவனிக்காமல் சாப்பிட்டிருந்தனர் இருவரும். காத்தவராயன் அப்படிச் செய்தது அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. அப்பொழுதுதான் அவளுக்கு அவரிருவர் மனதும் இங்கே இல்லை என்று சந்தேகம் எழுந்தது. போதாததற்கு அவர்கள் சம்பாஷணையும் சாதாரண முறையில் இல்லை. மிகவும் தணிந்து பேசிக்கொண்டனர். அவள் சுவர் ஓரம் தள்ளிவந்து உட்கார்ந்து கொண்டாள்.

பொன்னம்பலம் சொல்லிக்கொண்டிருந்தான் : 'என்ன செய்வது? கருங்காலி காலை வெட்டித்தள்ள வேண்டியது தான்!'

'அப்படியா சேதி' என்றாள் பொன்னம்மாள் தன்னையும் மறந்து.

"என்ன அண்ணே சதி பண்றீங்க?"

"சே, அசடு. என்ன உளர்றே!" இருவரும் சேர்ந்து அவள் சந்தேகத்தை அடக்க முயன்றனர்.

அவளுக்குச் சந்தேகம். 'அண்ணே ஹிம்சை மட்டும் வேண்டாம் அண்ணே!' என்றாள் அவள். பிறகு பொன்னன் பக்கம் திரும்பி, "நீங்ககூட நான் சொன்னால் கேட்கமாட்டீங்களா?" என்றாள். பொன்னனைத் தலைமைப்



எமது முதல்தரமான
சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான் களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண் டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்கரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண் கோ., பம்பாய்-4.

பதவி ஆசை காட்டிப் பிடித்துக்கொண்டிருந்தது. அந்த விஷயத்தில் அது முற்றிலும் வெற்றி பெற்றுவிட்டது. ஆகவே பொன்னம்மாளின் பேச்சோ, அதன் பொருளோ அதன் இன்பக் கூர்மையோ அந்தக் கட்டை அறுக்க முடியவில்லை.

அவள் கண்கள் மேலே மாட்டியிருந்த காந்தி படத்திடம் தாமே சென்றன. அவர்கள் அதைக் கவனிக்கவேயில்லை.

சற்று நேரம் சென்றதும் இருவரும் கிளம்பினர். 'கதவைத் தாப்பாள் போட்டுக்கோ. நாங்க வர்ரோம். நீ வீணுக்குச் சந்தேகப் படாதே. உடனேயே வந்துடரோம்.' என்று சொல்லிவிட்டுச் சென்றனர். அவர்கள் நடை அவளுடைய சந்தேகத்தைக் குறைக்கவில்லை.

அவள் கொஞ்சம் கொஞ்சம் விஷயம் அறிவாள். அவர்கள் வேலைபார்த்து வரும் மில்லில் அன்று இரவு 10 மணி முதல் ஸ்ட்ரைக்கு செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்ட்ரைக்குக் கமிட்டிக்குக் காத்தவராயன் தான் தலைவன். பொன்னம்பலம் காரியதரிசி. பொன்னன் ஏற்கனவேயே முரடன். போதாதற்குத் தொழிலாளரிடையே நடந்துவரும் துஷ்பிரசாரம் அவனுடைய முரட்டுத் தனத்துக்குப் பிசாசு உருவம் தந்துவிட்டிருந்தது. அவன் தொழிலாளர் அரசு ஏற்பட்டுத் தான் தலைவனாகும் காலத்தை ஆயுதம்கொண்டு ரத்தபலி கொடுத்துச் சீக்கிரமே வரவழைக்கத் தலைவிரித்து ஆடினான். அவ்வளவு எல்லாம் பொன்னம்மாளுக்குத் தெரியாது. ஸ்ட்ரைக்கு அவசியம்தான். தொழிலாளிகள் வீணில் நசுக்கப்படுவதைத் தடுக்க அதுதான் வழி என்று மாத்திரம் அவளுக்குப் பொன்னன் பாடம் சொல்லிக் கொடுத்திருந்தான்.

இவர்களுக்கு எதிராகச் செல்லையா ஒருகட்சி தயாரித்துக்கொண்டு ஸ்ட்ரைக் நடக்கவிடாமல் முயற்சி செய்கிறான் என்று காத்தவராயன் அவளிடம் அன்று காலைதான் சொல்லியிருந்தான்.

இதை எல்லாம் எண்ணிய அவளுக்கு அன்று இருப்புக்கொள்ளவேயில்லை.

* * *

அண்ணனும் பொன்னுவும் தொலைவிலே போவதைக் கண்ட பொன்னம்மாளும் அவர்களை அவர்கள் அறியாமலேயே பின் தொடர்ந்தாள். பொன்னன் கையில் நீளமாக ஒன்றை மறைத்து எடுத்துச் செல்வதையும் பார்த்தாள். அவர்கள் இருவரும் ஒதுங்கி ஒதுங்கித் தயங்கித் தயங்கி நடந்தனர். ஏதோ விபரீதம் நடக்கும் என்று எண்ணினாள் பொன்னம்மாள். ரத்தம் கொதித்து எழுந்தது.

"என்ன செய்வது,?"

இருவரும் ஒரு சந்தில் புகுந்தனர்.

எதிரே ஒரு ஆள் வந்தான். அவன் அவர்கள் அருகில் வந்ததும் இருட்டிலே சற்றுத் தயங்கி நின்று விட்டு, "யாரு காத்தவராய அண்ணா!?" என்றான். 'நல்லவேளையாப்போச்சு. உன்னைத்தான் தேடிக்கிட்டுக் கிளம்பினேன். கும்பிடப்போன சாமி குறுக்கே வந்துடிச்சு!" என்று நிறுத்தி "வாங்க நம்ப ஊட்டுக்கு போவோமா—உங்க வீட்டுக்கே......" என்று கேட்டான். அவன் தான் செல்லையா.

காத்தவராயன் பதில் சொல்லவில்லை. பொன்னன் 'சீ நாயே!" என்றதுதான் தெரியும். பிறகு இருட்டில் 'அட பாவி!', என்ற அலறல் கேட்டது. அந்த அலறல் இருட்டைக் கிழித்துக் கொண்டு கிளம்பிற்று. ஹிம்சையை ஒறுக்க அஹிம்சை தன்னையே பிய்த்துக் கொள்ளும் அலறல் அது. தொடர்ந்து இருவர் ஓடும் சத்தத்தைக் கேட்டாள். செல்லையா கீழே தடால் என்று விழுந்த சத்தத்தைக் கேட்கவில்லை பொன்னம்மாள். அப்பொழுது அவள் தன் நினைவிலில்லை.

விழித்தவுடன் செல்லையா விழுந்து கிடந்த இடத்துக்குவந்தாள் பொன்னம்மாள். 'கொலை கொலை!' என்று சத்தமிட்டாள். பலர் வந்து கூடினர். சிலர் பொன்னம்மாளை அங்கே கண்டு ஆச்சரியமடைந்தனர். போலீஸ்காரர்களும் வந்து சேர்ந்தனர். அங்கே அவள் ஒன்றும் சொல்ல வில்லை. 'நேரம் போக்காதீர்கள், உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுங்கள் இவரை' வெளிச்சத்திலே பொன்னம்மாளைப் பார்த்தார்கள். அவள் புடைவைத் தலைப்புக் கிழிக்கப்பட்டுச் செல்லையா காலில் கட்டப்பட்டிருந்தது. ரத்தக் கறைகள் உடல் முழுவதும். பலாத்காரத்தால் ரத்தக்கறை பூசப்பட்ட நற்குணத்தின் பெண்ணுருவே போல நின்றாள் அவள். ஜனங்கள் நடந்ததைக் கேட்கத்துடித்தனர். ஆனால் அவள் "எனக்கு எல்லாம் தெரியும். வாருங்கள் போலீஸ் ஸ்டேஷனில் சொல்கிறேன்" என்று சொல்லி விட்டாள்.

பொன்னம்மாள் எப்படித் தான் துணிந்தாளோ!

அவளுடன் சென்ற போலீஸ்காரர்கள், அப்பொழுதே வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த காத்தவராயனையும் பொன்னனையும் அரிவாளுடன் பிடித்துக் கொண்டு வந்து கடுமையான காவலில் வைத்து விட்டனர். பொன்னம்மாளைப் பார்த்த அவர்களும் பல்லை நெறித்துக் கொண்டு தங்கள் செயலை ஒப்புக் கொண்டனர். ஆஸ்பத்திரியில் ஒரு வாரம் வரை செல்லையா தன் நிலைக்குவரவேயில்லை.

அவன் கால் முழங்காலுக்குமேல் வெட்டப் பட்டுவிட்டது. அவன் நிலை வந்தபோது 'பொன்னு?' என்று அழைத்தான்.

பொன்னம்மாள் 'ஏன்?' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தாள். செல்லையா திடுக்கிட்டான். 'அம்மா. நீ யார்? நான் எங்கே இருக்கிறேன்?' அவனுக்கு அவன் கண்களையே நம்ப முடியவில்லை. அவனு டைய அக்காள் அவனிடம் சொன்னாள்.

"தம்பி! இந்தப் பொண்ணுதான்டா அப்பா இந்த ஒரு வாரமாய்க் கண் விழிச்சுக் கிடந்தது. எவ்வளவு இளைச்சுப் போயிட்டு தப்பா!" என்று அங்கலாய்த்தாள்.

செல்லையாவின் களைத்த முகத்தில் பட்டுத் துணியில் ஓடிய கரைபோல் ஒரு புன்னகை வெளித் தோன்றிற்று. அவன் அவளைப் பார்த்தான். அவள் தன் எதிரியின் தங்கை! கையைக் குத்தின முள்ளின் அடியில் இருந்து தனியே வந்து மகிழவைக்கும் நீல மலர்! பொன்னனுக்கு அவள் மனைவியா வதாக இருந்தாள் என்பதையும் அவன் அறிவான்!

இவன் மனதில் எழும் எழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் ஊகித்தாள் பொன்னம் மாள்! "அதை எல்லாம் நீங்க நினைக்காதீங்க இப்ப! எல்லாம் போகப் போகச் சொல் றேன்!" என்றாள். அவள் சொற்கள் ராக ஆலாபனைக்குப்பின் கிளம்பும் இனிய சாகித் தியம்போலக் கிளம்பி ஆலாபனைக்குத் தற் பொழுது முற்றுப்புள்ளி வைத்தது.

மறுநாள் முதல் கேஸ் நடந்தது. அண்ண னுக்கெதிரேயும் அவன் சிநேகிதனுக் கெதி ரேயும் பொன்னம்மாளே சென்று சாட்சி கூறினாள். பொன்னனுக்கு ஏழு வருஷம் கடுங்காவல்; காத்தவராயனுக்கு மூன்று வருஷம் கடுங்காவல்.

அண்ணன் போகும்போது, "சீ, நன்றி கெட்ட கழுதை! இனி உன் முகத்தில் விழிப்பதில்லை!" என்றான். அவள் அசை யாமலே நின்றாள்: இங்கிருந்தும் அங்கிருந் தும் தள்ளப்பட்ட மனதும் கல்போல் நின் றது.

* * *

செல்லையாவை அன்று 'டிஸ்சார்ஜ் செய் யும் நாள். அன்று அழுது அழுது இளைத்த பொன்னம்மாள் என்ன செய்வது என்று புரியாமல் இருந்தாள். என்று செல் லையா ஒரு கால் இல்லாமலேயே மீதி வாழ் நாளைக் கழிக்கவேண்டி வரும் என்றறிந்தா ளோ அன்றே அவள் ஒரு முடிவும் செய்து விட்டாள். வெறும் நன்றியறிதலைத் தெரி விக்கமட்டும் அல்ல; அண்ணன் அவனுக்குச் செய்த தீங்குக்குப் பிராயச்சித்தம் செய்ய மட்டும் அல்ல; பொன்னனிடம் எழுந்த விரோதம் காரணமாகவும் கூட அல்ல; அவ ளுக்கே செல்லையாவின் பெருந்தன்மை ஒரு விரும்பிய பொருளாயிற்று.

ஆனால் பெண் எப்படி அதைச் சொல்லு வாள்?

அழுதுகொண்டிருந்த அவளை நோக்கிச் செல்லையா, "பொன்னு, உன்னை ஒன்று கேட்க லாம் என்று இருக்கிறேன்" என்றான்.

அழுகையை நிறுத்தி, "என்ன?" என்றாள் பொன்னம்மாள்.

"எனக்குக் கிராமத்திலேயே வீடு இருக்கு. பத்து ஏகர் நஞ்சையும் இருக்கு. பேசாமே வந்து எங்க வீட்டில் இருந்துவிடு. அண்ணன் வந்ததும் நானே சென்று காலில் விழுந்து கெஞ்சி, உன்னை அவனிடம் சேர்த்துவிடுகி றேன்......!"

மேலே பொன்னனைப்பற்றியும் ஏதாவது சொல்லிவிடப் போகிறானே என்று பயந்த பொன்னம்மாள் அவன் அக்காளைப் பார்த்து, "சரி அக்கா, வருகிறேன். நடவும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்" என்றாள்.

அங்கே சென்றாள் என்று சொல்லவேண் டியதில்லை; ஆனால் கடைசியில் செல்லையா வையே கலியாணம் செய்துகொண்டுவிட் டாள் என்பதைமட்டும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

"ஆமாம் ஒரு காலைத்தான் பொன்னன் வெட்டிவிட்டான். மறுபடியும் கிடைத்த ஊன்று கோலையும் நான் வெட்டிக்கிடுவா னேன்!" என்று செல்லையாவும் சந்தோஷத் துடன் சம்மதித்துவிட்டான். மணமும் நடந் தது. மணத்துக்கு மணம்தரக் குழந்தை களும் பிறந்துவிட்டன. 3 வருஷங்களுக்குப் பிறகு வெளியே வந்த அண்ணன் இவளைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. செல்லையாவும் காலம் ஆகட்டும் என்று ஆறப்போட்டுவைத்து விட்டான்.

* * *

பொன்னம்மாள் உடல் சிலிர்த்தாள். வெளியிலே இருந்துவரும் சீறல் காற்றினால் அல்ல; வாழ்க்கைக் கிணற்றில் கீழே ஏழு படிகள் இறங்கி இதயத்தை உலுக்கி எடுக்கும் அந்தக் குளிர்ந்த பழைய ஞாபகங்களில் விழுந்து எழுந்ததன் காரண மாக.

அவள் அறியாமலே வழிந்திருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "பொன்னா, நீயா? பழி வாங்கலாம் என்றா வந்திருக்கிறாய்? போய்விடு!" என்று கத்தினாள். அவள் உடல் படபடத்துக்கொண்டிருந்தது, காற்றில் பட்ட புளிய இலைபோல்!

அவள் திரும்பிவர நேரமானதால் பயந்த செல்லையாவும் அதற்குள் மர உதவியுடன் பின்னால் வந்திருந்தான்.

"இல்லை பொன்னு! உன்னைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகலாம்னு தான் வந்தேன். நீ நம்பினாலும் நம்பு. நம் பாட்டியும் போ. ஜெயிலிலிருந்து நேரா வாறேன். சாப்பிட்டு நாலு நாளாச்சு!" என்றான். அவன் குரலும் அவன் உடலும் கண்களும் அந்த வார்த்தைக்குத் தக்க சாட்சி கூறின.

"வாயேன், பொன்னா! உள்ளே வா." என்று அழைத்தான் செல்லையா.

"இல்லை செல்லையா! உன் வீட்டுக்குள்ளே வர நான் லாயக்கில்லை. பலாத்காரம் நல்ல பாடம் கற்பித்து விட்டது என்று சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்........."

"அது மட்டுமா? தியாகத்திலேகூட நல்ல லாபம் இருக்குன்னு நானும் கண்டுபிடித்து விட்டேன் பொன்னா, நீ என் காலை வெட்டாமல் இருந்தால் எனக்கு.........?"

பொன்னம்மாள் விழித்துக் கொண்டாள். "என்னைப் பரிகாசம் பண்ணாட்டா உங்களுக்குப் பொழுது போகாது. உங்க தியாகத்தாலே மற்றப் பேருக்குக் கிடைச்ச லாபத்தைச் சொல்லுங்களேன்!' என்றாள். அவள் முகம் மலர இமைகள் தளர்ந்தன.

பொன்னன் சொன்னான்: "அதுவும் தெரியும் பொன்னு! படுத்த படுக்கையாகவே முதலாளியிடம் பேசி எல்லாருக்கும் 3 மாதம் போனசு கொடுக்கச் சொல்லி ஏற்பாடு செய்தானும் செல்லையா. அதுவும் கேள்விப் பட்டேன்."

"சரி வா பொன்னா, உள்ளேவா. இருட்டிலே தாங்க முடியாத குளிர் வேறே. வா உள்ளே" என்று அழைத்தார்கள் கணவனும் மனைவியும் மற்ற எல்லாவற்றையும் மறந்து.

"இல்லை செல்லையா. நான் அதுக்குப் புண்ணியம் பண்ணல்லை!" என்று சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான் பொன்னன், சாப்பிட்டு விட்டாவது போ என்று சொன்னதையும் காதில் போட்டுக் கொள்ளாமல். அவனை இருள் மழை காற்று சித்திரவதை செய்தன. ஆனால் பொன்னம்மாளின் நற்குணமும் செல்லையாவின் தியாகமும் அவன் மனதுக்கு உடலை வெற்றி கொள்ளும் சக்தியைத் தந்திருந்தன.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள் நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், "காவேரி,"
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

டால்டாவில் செய்த
குலாப் ஜாமுன்கள்
1 பவுண்டு சர்க்கரையில் நீர்க்க பாகு தயாரித்து அதில் சில துளிகள் பன்னீர் ஊற்றி சூடாகவைத்திருக்கவும். 1 அகப்பை மைதாமாவில் 1 தேக்கரண்டி டால்டாவை தேய்க்கவும். ½ பவுண்டு திரட்டுப்பாலை பொடிசெய்து அரித்து மைதாமாவுடன் நன்ருய் கலக்கவும். சிறிதளவே ஜலம் சேர்த்து கலவையை நன்ருக பிசைந்து கெட்டியாகச் செய்துகொள்ளவும். பிசைந்த மாவை சிறிய நீண்ட உருளைகளாக பிடிக்கவும். டால்டாவை சூடாக்கி மிதமான சூட்டில் பொரிக்கவும். குலாப் ஜாமுன்கள் சுற்றிவர சிறுசிவப்பானதும் தனியாக எடுத்து, வடித்து, பிறகு சூடான பாகில் ஊறவைக்கவும்.
குடும்பத்திற்கு
ஊட்டமளிக்கின்றன!
மூளைக்கு விசேஷமான உணவுகள் எவை?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1
HVM. 98-23 TM
DALDA
VANASPATI

சென்ற இதழ் தொடர்ச்சி

இந்தியாவும் சீனமும்

டாக்டர், வே. ராகவன்

முதலில் சீனத்தின் நாடகக் கலையை எடுத்துக்கொள்வோம். அதிலும் இந்திய அம்சங்கள் சேர்ந்திருக்கின்றனவென்று இக்கலையில் பேராராய்ச்சி செய்திருக்கும் ரிட்ஜ்வே (W. Ridgeway) என்பார், Dramas and Dramatic Dances of Non-European Races என்ற நூலில் சொல்லியிருக்கிறார். சீனத்தில் வழங்கும் பொம்மலாட்டமும், தோற்பாவைக் கூத்தும் இந்தியாவிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவையே. கூத்து, கோயிலில் தெய்வத்தின் திருநக்ஷத்திரத்தின்போதோ, வேறிடத்தில் மற்ற மானிட ஆதரவில் நடந்தால் அவருடைய பிறந்தநாளிலோ நடத்தப்படும்; இதைப் பார்ப்பதற்குக் கூலி இல்லை; முழுநாளும் விடுமுறை நாளாயிருக்கும்; நாடகமும் நாள் முழுதும் நடக்கும்; நாட்டுச் சரித்ரத்தில் பண்டை நாளில் இருந்து, பின் தெய்வமாய்க் கொண்டாடப்பட்டு வரும் ப்ரஸித்த புருஷர்கள், தெய்வங்கள் இவர்களின் சரித்திரங்கள் நாடகமாக நடிக்கப்படும்; நாடகத்தின் நோக்கமோ, தெய்வத்தின் திருப்தியும், ஊரின் க்ஷேமமுமாகும். ஆடும் முறையில் பண்டை இந்திய நாடகத்திலிருந்தது போலப் பாட்டும், வாத்யமும் அதிகம்; சித்திரத் திரைகள் முதலிய உபகரணங்கள் பண்டை இந்திய நாடக மேடையில் எப்படி இல்லையோ அதுபோலவேதான் சீன மேடையிலும், நம் நாடக பாத்ரம் நுழையும்போது யார், எப்படி, எங்கே தோன்றுகிறார் என்று பாட்டுமூலம் தெரிவிப்பதுபோலே சீன நாடகத்திலும் தெரிவிக்கப்படும்.

நாடகத்தைக் காட்டிலும் ஸங்கீதத்தில் சீனத்திற்கும் இந்தியாவிற்கும் உள்ள தொடர்பு நன்கு தெரிகிறது. இந்தியாவிலிருந்து சீனத்தில் குடியேறிய ப்ராம்மண வம்சமொன்று தலைமுறையாய் இந்திய ஸங்கீதத்தை அந்நாட்டில் கையாண்டு வந்தது. கி. பி. 550–77-ல் இந்த வம்சத்தைச் சேர்ந்த மியோ-தா (Miao-ta) என்றவன் புகழ்பெற்ற பாடகனாய் விளங்கினான். இந்திய ஸங்கீதம் பரவிய வேகத்தைக்கண்டு பயந்து, கி. பி. 581-95ல் அரசன் கோத்ஸு (Kao-tsu) என்பான் ஒரு அறிக்கையின் மூலம் இந்து ஸங்கீதத்தைத் தடை செய்தான்; ஆனால் அவன் தடை பயன்படவில்லை. கி. பி. 736-ல் சீனத்திலிருந்து ஜப்பான்



துங்-ஹுவாங் (Tung-huang) என்றவிடத்திலுள்ள பௌத்த குகைக் கோயிலில் செதுக்கப்பட்ட சிற்பக் காட்சிகளில் ஒன்று.

சென்ற கோஷ்டியொன்று சீனத்திலிருந்து ஜப்பானிற்கு இரண்டுவிதமான இந்திய இசையைக் கொண்டுபோயிற்று; இதைக்கொண்டுபோனவன் போதி(Bodhi) என்ற ப்ராம்மணன்; இதில் ஒன்று போதிஸத்வம் என்றது, பௌத்த விஷயத்தைப் பாடிய பாட்டு; மற்றொன்று 'பயிரோ' (Bairo) என்றும் பங்-லங்-தோ (Pan-lang-to) என்றும் கூறப்படுவது; இவ்விரண்டு சொற்களும் இந்து ஸங்கீதத்தின் மூலவாசிரியரான 'பரத' மஹரிஷியைக் குறிக்கும் என்று ஆராய்ச்சியாளர் விளக்கியிருக்கிறார்கள். பல நாடுகளின் இசை முறைகளை ஆராய்ச்சி செய்துவரும் அலேன் டேனியலோ (Alain Danielou) என்பார் தாம் எழுதியிருக்கும் 'Introduction to the Study of Musical Scales' என்ற நூலில் சீன ஸங்கீதத்திற்கும் இந்து ஸங்கீதத்திற்கும் உள்ள உறவை உறுதியாய்க் காண்பித்திருக்கிறார். சுமார் 15, 20 நூற்றாண்டுகளுக்கு முன் சீனத்திற்கும் இந்தியாவிற்கும் இருந்த போக்குவரத்தில் பல வாத்தியங்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொன்றிற்குக்கொண்டு போகப்பட்டதாக நூலாதாரங்கள் இருக்கின்றன. நாம் எப்படி ஸங்கீதக் கலையை உயர்ந்த உபாஸனா வித்யையாகக் கருதி, அதனாலும் உலகிற்கு ஏற்படக்கூடும் நன்மைகளில் நம்பிக்கைவைத்திருக்கிறோமோ, அதுபோலவே சீனமும் நம்புகிறது. ஸ்வர-ஸப்தகம் கிருஸ்துவிற்கு 4, 5 நூற்றாண்டுகள் முன்னதாகவே சீனத்தில் அறியப்பட்டது. மேலும், ஏழு ஸ்வரங்களுக்கு நாம் கொடுத்த பெயர்களில் சில சீனத்தில் வழங்கி வருகின்றன; பஞ்சமம்—பன்—ஜம் அல்லது பான்-சியன்; ஹ்றயு-லி-ச அல்லது ஷே-லி-ஷே (காளையின் ஒலி) என்பது நம் ரிஷபம்; ஷ—ட-லிக் அல்லது ஷ-சே என்பது ஷட்ஜம்.

சில்பம், ஓவியம் முதலியவைகள் மத ஸம்பந்தமாய் இந்தியாவிலிருந்து சீனத்திற்குக் கொண்டுபோகப்பட்டன. தட்டுத் தட்டாய் எழுப்பப்படும் கோபுரச் சிற்பமுறை சீனத்திற்கு இந்தியாவிலிருந்தே சென்றது. ஸோங் (Song) அரசரின் காலத்தில் சீனத்திலும், ஜப்பானிலும்கூட இந்திய முறை என்று சிற்பிகள் ஒரு முறையைக் கையாண்டு வந்ததாகத் தெரிகிறது. 5-ஆவது நூற்றாண்டில் ஷான்-ஸி (Shan-Si) ராஜ்யத்தின் தலை நகரமான வேய் (Wei) என்றதின் அருகில் இந்தியமுறையில் மலைப் பக்கங்கள் குகைகளாகக் குடையப்பட்டு, பௌத்த விக்ரஹங்களும் அங்கே செதுக்கப்பட்டன. பௌத்த மதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய இந்தியாவிற்குவந்த சீன யாத்ரிகர்கள் பாஹியான், வாங்-ஹ்யூவான்-த்ஸோ முதலியவர்கள் தாம் திரும்பிப் போகும்போது இந்தியாவில் செய்யப்பட்ட பல பௌத்த விக்ரஹங்களையும், ஓவியங்களுள்ள நூல்களையும் சீனத்திற்குக் கொண்டுபோனார்கள். குணவர்மர் என்ற காச்மீர பிக்ஷு மதப்ரசாரத்துடன் இந்திய ஓவியக் கலையையும் சீனத்தில் கையாண்டுவந்தார். 5-ஆவது நூற்றாண்டில் சாக்கியபுத்நர், புத்தகீர்த்தி, குமாரபோதி என்ற மூன்று இந்திய ஓவியக்காரர் சீனத்தில் பல இடங்களில்

துங்-ஹுவாங் (Tung-huang) என்ற விடத்தில் கோயிலிலுள்ள கணேச ஓவியம். கி. பி. 6 ஆவது நூற்றாண்டு.

BUSINESS MEN ask for ACCURACY in a watch...

வியாபாரிகள் நுட்பமாக மணிகாட்டும் வாட்சையே விரும்புகிறார்கள்....

குறித்த கால அளவில் நண்பர்களைச் சந்திக்கவேண்டும். தொலைவிலிருக்கும் இடங்களுக்கு டிரங் டெலிபோன் மூலம் பேசுவதற்கு நிமிடக்கணக்கு நுட்பமாகத் தெரியவேண்டியிருக்கிறது. ஆகாய விமானம், ரயில்வண்டி இவை மூலம் பிரயாணம் செய்வதானாலும் குறித்த மணிக் கணக்கு பிசகாமல் செல்லவேண்டும். மிகுந்த பொறுப்பு வகிக்கும் விவேகமுள்ள நிர்வாகிகள், நாணயமாக மணி காட்டும் திறமையுடன் நீடித்து உழைக்கும் "வெஸ்ட் எண்ட்" வாட்ச்களைத்தான் நம்பி வாங்குகிறார்கள். இந்தியாவெங்கும் கீர்த்தி வாய்ந்த ஒவ்வொரு "வெஸ்ட் எண்ட்" கடிகாரமும் தனது பரம்பரை இயல்பாகிய சீரிய வேலைத்திறனுடன் விளங்குவதுடன் நீண்டநாள் உழைப்புக்கும் உறுதியளிக்கிறது!

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.

பம்பாய் :: கல்கத்தா



வெஸ்ட் எண்ட "தெமிஸ்"
பேடண்ட் எவர்பிரைட் ஸ்டீல் ரூ. 169/-
ரோல்ட் கோல்ட், 30 மைக்ரான் ரூ. 182/-

The WEST END WATCH Co.

BOMBAY · CALCUTTA

199317

தம் கலைத் தொழிலை நடத்திவந்தார்கள். 13-ஆவது நூற்றாண்டில் குப்ளைகான் என்ற மன்னனின் காலத்தில் சீனத்திற்கு நேபாள தேசத்திலிருந்து 17 வயதுள்ள அ-னி-கோ என்ற சில்பி, 23 சில்பிகளுடன் வந்தான்; கற் சிற்பங்களும் லோஹ சிற்பங்களும் இவர்களால் செய்யப்பட்டன; அனிகோ பின்பௌத்த ஸந்யாஸியாகி, சில்பி சமூகத்திற்கே தலைவனாகவும் நியமிக்கப்பட்டான்; சீனத்தில் விக்ரஹங்களைச் செய்வதற்கான அளவு திட்டங்கள் வழங்கி வருவன இந்த அனிகோ என்றவன் ஏற்பாடு செய்தவையே.

விஞ்ஞானத் துறையில், முக்யமாய், சோதிடத்திலும் கணக்கிலும் சீனம் இந்தியாவிற்கு அதிகமாய்க் கடன் பட்டது. இந்தியாவைப்போல் சீனமும் சோதிடத்திற்கு அடிமையாகி, அடிக்கடி இந்தியச் சோதிடர்களைத் தேடியழைக்க ஆரம்பித்தது. 7-ஆவது நூற்றாண்டிலிருந்து 300 வருஷங்களுக்குக் கௌதமம், காச்யபம், கௌமாரம் என்ற இந்திய சோதிட முறைகள் சீனத்தில் Ch'angngan சாங்கன் என்ற விடத்தில் வழங்கி வந்தன. இந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்த இந்திய சோதிடர் அவ்வப்போது சீன பஞ்சாங்கத்தைச் சீர்திருத்தி அமைத்து வந்தனர். கி. பி. 718-ல் ஸித்தார்த்தர் என்ற இந்தியச் சோதிடர் இந்திய பஞ்சாங்கத்தையே சீனத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்தார். சந்த்ர-சாரத்தையும் க்ரஹணங்களையும் காண்பிக்கும் நவக்ரஹ ஸித்தாந்தம் என்ற ஸம்ஸ்க்ருத நூல் க்யூசே-லி (Kiu-che-li) என்று சீனத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. ஈ ஹிங் (Yi-hing) என்றசீனர் கி.பி. 719-ல் வகுத்த சீனபஞ்சாங்கத்தில் ராஹு-கேதுஉள்படஒன்பது இந்திய க்ரஹங்களும் சேர்க்கப்பட்டன. ஸூய்(Sui) ராஜவம்சத்தின் சரித்ரத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 6 சோதிடகணக்குநூல்கள்சீனத்தில்மொழி பெயர்க்கப்பட்டசெய்தி கண்டிருக்கிறது; இவற்றில் ஒன்றின் பெயர் மாதங்கீ ஸூத்ரம் என்று காணப்படுகிறது; மற்றொன்றின் ஆசிரியரின் பெயர் சீன பாஷையில் ரிஷி கிகியி Kiki'ie என்று கொடுக்கப்பட்டிருக்கிறது ப்ரம்மஹோரா, நவக்ரஹம் என்ற பெயர்களும், க்ரஹங்களின் தோஷங்களைப் பரிஹாரம் செய்துகொள்ள மந்திரங்களும் பழக்கத்தில் இருந்தன.

வைத்யத்தில் ராவணனின் குமாரதந்த்ரம் என்ற பாலசிகித்ஸா நூல் ஸம்ஸ்க்ருதத்திலிருந்து சீனத்தில் 11-ஆவது நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்டது; காச்யப ஸம்ஹிதையின் சில பாகங்களும் மொழி பெயர்க்கப்பட்டன. ஹியுன் சோ (Hiun-chao) என்பவன் இந்திய மூலிகைகளைச் சேகரிக்கும் பொருட்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டான்; இவன் தென்னிந்தியாவிற்கும் வந்து சீன மன்னருக்காகப் பல மூலிகைகளைச் சேகரித்தான்.

ராஜநீதியில் நம் நூல்களிலும் கொள்கைகளிலும் காணப்படுவதுபோல் சீனத்திலும் அரசரைத் தேவாம்சம் பொருந்தியவராய்க் கருதினர். நாம் எப்படி மடிந்தோரைப் பித்ருதேவதைகளாய்ப் போற்றி அவருக்கான வழிபாடுகளை நடத்துகிறோமோ அதுபோல் சீனரும் செய்தனர்.

இந்தியாவிற்கும் சீனத்திற்கும் இம்மாதிரி பல நூற்றாண்டுகள் நடந்து வந்த பெரும் கலை வர்த்தகத்தில் தென்னிந்தியாவிற்கு விசேஷமான பங்கு உண்டு. கிரிஸ்து முதல் நூற்றாண்டிற்கு முன்னிருந்தே சீனத்திற்கும் தென்னிந்தியாவிற்கும் கப்பல் போக்குவரத்துத் துவக்கமாயிற்று. சிங்களம், மலையாளத்தில் கொல்லம் கோழிக்கோடு, பிற்காலத்தில் விஜய நகரம் முதலிய ராஜ்யங்களோடு சீனதேசத்திற்குத் தொடர்பு இருந்தும், தமிழ் நாட்டிற்கும் சீனத்திற்குமே மிக நெருங்கியதும் சிறப்பானதுமான நட்பு இருந்தது. ஜீவக சிந்தாமணியில் தமிழ் நாட்டில் தெரிந்திருந்த பாஷைகளில் ஒன்றாய்ச் சீனபாஷையும் சொல்லப்பட்டிருக்கிறது. தொண்டை நாட்டில் மஹாபலிபுரத்திலும், சோழ நாட்டில் பட்டுக்கோட்டை தாலூகா விக்ரமக்ராமத்திலும் சீன நாணயக்காசுகள் அகப்பட்டிருக்கின்றன. கிரிஸ்து முதல் நூற்றாண்டில் இருந்த பான்-கௌ என்ற சீன எழுத்தாளர் தம்முடைய Ts'ien han chou என்ற நூலில் சீன மன்னன் காஞ்சீபுரம் அரசனுக்கு நன்கொடைகள் அனுப்பி, காஞ்சியிலிருந்து சீனத்திற்கு ஒரு தூது கோஷ்டியையும், அத்துடன் ஒரு காண்டாம்ருகத்தையும் அனுப்பும்படி கேட்டுக் கொண்டான். என்று குறித்திருக்கிறார். தற்போது நேருவை ஜப்பானியக் குழந்தைகள் யானை யொன்றை அனுப்பும்படி கேட்டது நமக்கு விந்தையாகத் தோன்றலாம்; ஆனால் சீனத்திற்கும் இந்தியாவிற்

கும் இருந்தபண்டைப்போக்குவரத்தைக் கவனித்தால் அதில் அடிக்கடி அரிய மிருகங்கள், பக்ஷிகள், முக்யமாய் யானை, காண்டாம்ருகம், முதலியவைகளை இந்தியாவிலிருந்து சீன மன்னர் வேண்டிக்கொண்டிருப்பது தெரியவரும். 6 ஆவது நூற்றாண்டில் சீனத்தில் (வேய்)Wei மன்னரின்காலத்தில் தென்னிந்திய மன்னரின் தூதர் ஒருவர் சீன மன்னர் ஆஸ்தானத்திற்கு வந்தார்; அவர் நல்ல குதிரைகளைக் கொண்டு வந்ததோடு, இந்தியாவில் காணப்படும் மிருகங்களைப் பற்றியும், கிடைக்கக்கூடும் உலோஹங்கள், நுண்ணிய ஜரிகைத் துணி வகைகள், மூலிகைகள், தேன், மிளகு முதலிய வர்த்தகப் பொருள்கள்-இவைகளைப் பற்றியும் சீன மன்னருக்கு விவரங்களை அறிவித்தார். 7 ஆவது நூற்றாண்டில் காஞ்சியில் ஆண்ட பல்லவ மன்னன் நரஸிம்ஹபோதவர்மன் என்ற ராஜஸிம்ஹனுக்கும் சீன மன்னனுக்கும் ஏற்பட்ட நட்பைப் பாருங்கள்; இந்த நூற்றாண்டில் திபெத்தேசத்தியர் வங்க நாட்டை ஆக்ரமித்திருந்தார்கள்; இவர்களையும் அரபியரையும் அடக்க எண்ணங்கொண்ட ராஜஸிம்ஹன் சீன மன்னருடன் கலந்து, அவரைத் தன் யானை குதிரைப்படைகளுக்கு தக்கதோர் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்க, சீன மன்னன் பல்லவப் படைக்கு "தர்மம் பெருக்கும் படை" என்ற பெயரை வழங்கினான். பின் ராஜஸிம்ஹனுக்கே 'தென்னிந்திய சக்ரவர்த்தி' என்றபட்டத்தையும் சீனமன்னன் வழங்கினான். காஞ்சியில் ராஜஸிம்ஹனும் சீன மன்னன் ஞாபகார்த்தமாக ஒரு கோயில் எடுப்பித்து, அக்கோயிலுக்கும் பொருத்தமான பெயரொன்றைச் சொல்லியனுப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, அதற்கும் 'அறம் வளர்க்கும்' கோயில் என்ற பெயரைச் சீன மன்னன் கொடுத்தான்.

சோழ ஆதிக்கத்தின் போது சீனத்திற்கும் தமிழகத்திற்கும் மூன்று தூது கோஷ்டிகள் ஏற்பட்டன. கி.பி. 1015ல் முதல் ராஜராஜன் காலத்திலும், 1033-ல் ராஜேந்திரன் காலத்திலும், 1077-ல்

DON'T WORRY !!

Try "**KUMARI**" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless !! Thousands satisfied !!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)

"**RASAYAN**" (Tabs.) Gives youthful vigour, increases energy, purifies the blood and valuable in nervous debility and premature old-age. On the whole, it is a BOON to married couples. Each tube Rs. 4/-. 3 tubes Rs. 10-8. (V. P. Extra.)

Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA-33.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

1. இண்டோ மெடிகல் ஸப்ளைஸ், 29, வைத்யநாத முதலித் தெரு, சென்னை—1.
2. ராகவன் & கோ., ஸ்ரீ நரஸிம்ஹராஜா ரோட், பங்களூர் ஸிடி.
3. ஸிந்தி, 172—A, பிரின்ஸெஸ் தெரு, (ஹனுமான்மந்திர் மேல்புறம்) பம்பாய்—2.
4. எல். எம். முகர்ஜி & ஸன்ஸ் லிமிடெட், 167, தரம்தாலாதெரு, கல்கத்தா
5. இங்க்லீஷ் கம்பெனி, ஆலப்புழை. (திருவாங்கூர்)
6. பயனீர் பார்மஸி, 183, மெயின் தெரு, பேட்டை, கொழும்பு (ஸிலோன்)

குலோத்துங்கன் காலத்திலும் இவை நிகழ்ந்தன; கடைசி கோஷ்டியில் 72 அங்கத்தினர் ஏராளப் பொருள்களுடன் சென்று, 81,800 காசுகளை விலையாகப் பெற்றுக்கொண்டு வந்தனர். சோழர் காலத்தில் தமிழ்நாடும், பேரிந்திய தீப, தீபாந்தரங்களும் மிகவும் நெருக்கமான ராஜீய, வர்த்தகக் கலைத்தொடர்புகளுடன் பழகிவந்தன; இத் தொடர்பு சீன தேசத்தையும் வியாபித்தது விந்தையல்ல.

பாண்டியரும் சீன மன்னருடன் நெருங்கிய தொடர்பை வைத்துக்கொண்டிருந்தார்கள்; தமக்குள் உள்ள சச்சரவில் தனக்கு உதவிபுரியும் பொருட்டு 13 ஆவது நூற்றாண்டில் குலசேகர பாண்டியன் சீனமன்னன் குப்ளைகானுக்குத் தூதர் மூலம் ரஹஸ்யச் செய்தி யனுப்பினான். குப்ளைகானுக்குத் தன் ராஜ்யத்தில் பல நாடுகளிலிருந்து அரிய வஸ்துக்களை வரவழைத்துச் சேர்க்கவேண்டு மென்ற பேரவா எழுந்தது; அவன் தென்னிந்தியாவிற்கு, முக்யமாய்த் தமிழ் நாட்டிற்கு, தூதரை அனுப்பி, அரும் பொருள்களைச் சேகரித்தான். செஞ்சந்தனம், கட்டிட வேலைக்கான பொருள்கள், உயர்ந்த மூலிகைகள், அவற்றுடன் ஒரு தென்னிந்திய வைத்யர் இவ்வளவும் சீனத்திற்குக் கொண்டுபோகப்பட்டன. பின்னால்வந்த இரண்டு தென்னிந்திய கோஷ்டியினர் பலவகை மிருகங்களைக்கொண்டுவந்தனர். கி. பி. 1290-ல் மறுபடியும் தன் தூதர்களை அனுப்பி, குப்ளைகான் தென்னிந்தியாவிலிருந்து விஞ்ஞான நிபுணர், பல பாஷைகளை உணர்ந்த பண்டிதர்கள், சில்பிகள், படைவீரர், மாலுமிகள், ஸோப்பிடு வித்தைக்காரர்கள் முதலியவரை வரவழைத்துக்கொண்டான்.

இவற்றைத்தவிர மதத்துறையில் இந்தியாவிலிருந்து சீனம் சென்று பௌத்தத்தை அங்கு வளர்த்த பேராசிரியருள் சிலர் தென்னிந்தியாவிலிருந்து சென்றவர் என்று தெரிகிறது. பேரிந்தியா, சீனம், ஜப்பான் முதலிய நாடுகளில் எல்லாம் மிக ப்ரஸித்தமான இந்தியராய்ப் பெயரெடுத்த பௌத்த ஸங்யாஸி ஒரு தென்னிந்தியர்; அவர் பெயர் போதிதர்மர்; சுருக்கமாய்த் தர்மர் என்றே வழங்கப் பெற்றார்; ஜப்பானில் இவரைத் தர்மர் என்று அழைத்தனர்; சீனம், ஜப்பான் தேசங்களில் எங்கும் இவருடைய உருவம் இருக்கும்; இவர் அநேக அத்புதங்களைச் செய்ததாகக் கண்டிருக்கிறது; சீனத்திலும், ஜப்பானிலும் ஸென், சென் (Zen, Chen) என்று வழங்குவது த்யானம் என்பதின் திரிபு; இது மஹாயானமென்ற பிரிவைச் சார்ந்தது; இதை அந்நாடுகளில் பரவச்செய்தது போதிதர்மரே; இவர் காலம் கி. பி. 6-வது நூற்றாண்டு; சீன சரித்திரத்தில் இவரைக் காஞ்சிபுரத்தின் மன்னரின் மூன்றாவது மைந்தனாகச் சொல்லியிருக்கிறது.

இதே நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து சீனத்திற்கு தர்மருசி என்றவரும் வந்து 3 ஸம்ஸ்க்ருத பௌத்த நூல்களைச் சீனத்தில் மொழி பெயர்த்தார்.

7-ஆவது நூற்றாண்டில் இரண்டாம் போதிருசி என்ற பௌத்த பிரசாரகர் சீனத்திற்கு விஜயம் செய்தார்; இவர் தென்னிந்தியாவைச்சேர்ந்த ப்ராம்மணர். இவரை யசோகோஷர் என்ற பௌத்தர் மஹாயான பௌத்தத்தில் நுழைத்தார்; அதன்மேல் இவர் கடல்வழியே சீனத்திற்குக் கி. பி. 693-ல் வந்து, 53 பௌத்த நூல்களை ஸம்ஸ்க்ருதத்திலிருந்து சீன பாஷையில் மொழி பெயர்த்து, சீன மன்னரால் மிகவும் பெருமைப்படுத்தப்பட்டு, மிகக் கிழ வயதுவரை உழைத்து வந்தார். இவருக்குக் கீழே வேலை செய்து வந்தவருள் ஒருவரான ப்ரக்ஞாகுப்தரும் தென்னிந்தியரே.

8-ஆவது நூற்றாண்டில் சீனத்திற்கு வந்த வஜ்ரபோதி என்ற பௌத்த ஆசிரியர் மத்திய இந்தியாவைச்சேர்ந்த ராஜகுமாரர்; அவர் முதலில் நாளந்தா கலாசாலையில் படித்துவிட்டு, காஞ்சிபுரத்தில் நரஸிம்மபோதவர்மனுக்கு ஆசிரியராய் இருந்துவிட்டு, சிங்களம் வழியே சீனம் சென்றவர்.

தொடர்கதை

பட்டண் பெருமை

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—"சேதி"

மீண்டெழுந்த உணர்ச்சி.

(இதயத்தின் புனர் ஜன்மம்)

ராணி விக்ராட்டுக்குத் திரும்பிய பொழுது அவள் உள்ளக்கொந்தளிப்பு சொல்லி முடியாது. பிரஸன்னாவிடம் கூட அவள் மந்திரம் பலிக்கவில்லை! இனி என்ன செய்வது? இன்னம் என்னென்ன அவமரியாதைகளைச் சுவைக்க வேண்டுமோ தெரியவில்லை! திரும்பி வரும்போது அவளுக்கு மன அமைதியைக் காப்பாற்றி விஜயபாலன் முதலியவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்வது மிகவும் அரிய செயலாக ஆகி விட்டது. "நான் பிரஸன்னாவுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன்; இரண்டொரு நாளில் ஏதாவது ஒரு பதில் வரும்." நாட்கள் சென்றன. பதில் வரவில்லை. ராணி தனித்துச் சென்றாள். தலையில் கை வைத்தாள். ஈசுவரன் கைவைத்து வைகை புறப்பட்டதுபோலக் கண்களில் நீர் பெருக்கினாள். இதயம் நிரம்பிக்கொண்டே இருந்தது.

இவ்வளவில் குமாரன் ஜயதேவன் வந்தான். 'அம்மா, அங்கே சென்று என்ன செய்து வந்தாய்? நாம் எப்பொழுது தான் பட்டண் போவோம்?' என்றான்.

மீனல்தேவி மகனைத் தாவி அணைந்தாள். துணையற்ற ராணி "போகலாம், போகலாம். கவலைப்படாதே. போ தூங்கு. நேற்று குதிரைமேல் சுற்றிவந்தது. களைப்பாக இருக்கும்" என்று உயிரற்ற வார்த்தைகளால் தேற்றினாள். ஜயதேவன் போய் விட்டான்.

ராணியை மீண்டும் கவலைகள், எண்ணங்கள் சுற்றி எழுந்தன. நாலா பக்கங்களிலிருந்தும் திசைகளே இடிந்து விழுந்து அவளை நசுக்க வந்தன. இதுவரை தைரியம் அவளை விட்டதில்லை. ஆனால் இப்பொழுது தைரியம் எப்படி வரும்? பட்டணின் பெயர் முதல் முதல் கேட்டது முதல் இன்று வரை நடந்த செயல்கள் எல்லாம் கண் முன் காட்சி காட்டி நின்றன. அவளுக்கு இந்த நிலை ஏன் ஏற்பட்டதென்று புரியவில்லை. அவள் மணந்து பட்டணின் ராணியாக வந்த பொழுது தேசமே வரவேற்றது; குமாரன் ஜயதேவன் பிறந்த போதோ மக்கள் மனம் விட்டுப் புகழ்ந்தனர்! பிறகு இந்த நிலை எப்படி ஏற்பட்டது! கேள்வி வேல்கொண்டு தாக்க வல்லதாயிருந்தது. தற்பெருமை, புகழ்ச்சி இரண்டையும் தள்ளி ராணி எண்ண ஆரம்பித்தாள். "ஏன்? எந்தத் தீய செயல்கள் இப்படிக் குறுக்கிட்டு ஓடி வருகின்றன? அவள் அதிகாரத்துக்காக, அரசுக்காகப் பெரியதோர் ஆவலை நிறைவேற்றிக் கொள்ளவே சந்திரபுரியை விட்டு இவ்வளவு தூரம் பட்டண் அரசனை மணக்க வந்தாள். அவள் சரித்திரத்தில் தனக்கொரு அழியாத பக்கம் தேட வந்தாள். தன்னுடைய பெயரை மனித இதயத்தில் அழியாத கல்வெட்டுக்கள்போல விட்டுச் செல்ல விரும்பி வந்தாள். பெயரளவிலல்ல, உண்மையிலேயே வெற்றி சூழ் புகழ் ராணியாக விளங்க விரும்பினாள். இந்தப் பேராவலை நிரப்ப அவள் எவ்வளவோ சகித்தாள். அப்படியும் இன்று அவளுக்கு ஒன்றும் கிட்டவில்லை. ஏன்? எதனால்? முஞ்ஜாலைப் போன்ற அறிவாளி, கணக்கில்

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த க. ஸ்ரீ நாதூராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

சூரன், மந்திரியாயிருந்த போதும் அது அவளுக்குக் கிட்டவில்லை: அப்படியும் இதோ இன்று இந்த நிலை ஏன்? அவள் ஒருவரையும் நம்பாததனால் வந்த விளைவா இது? அல்லது அவள் ஜைன மதத்தைச் சிறந்ததெனக் கருதியதனாலா? அல்லது பட்டணில் பலதரப்பட்ட எண்ணத்தினர் இருந்ததனாலா? அல்லது தேவப்ரஸாத் சத்துருவானதாலா? இவ்வளவு விலகி நின்றும் ஜனங்கள் அந்த வீர சிரேஷ்டனுக்கு எதற்காக இவ்வளவு மரியாதை செலுத்தினார்கள்? இன்று அவன் மகனை இந்த மக்கள் ஏன் தெய்வம் என மதித்துத் தலைமேல் தாங்குகிறார்கள்? அவன் கட்டளையை ஒத்துப் பணிந்து நிறைவேற்றநிற்கிறார்கள்? தேவப்ரஸாதிடம் இருந்த சிறப்பும் வலிவும் இவளிடம் இல்லையா? பிறகு என்ன தான் காரணம்?" ராணி எண்ணப் பள்ளத்தில் ஆழ இறங்க ஆரம்பித்தாள். முஞ்ஜால் இவ்வளவு கர்வம் பிடித்தவனாக, இருந்தும் மக்கள் அவனிடம் எதற்காக மதிப்புவைக்கின்றனர்? அவள் எண்ணி எண்ணியே கருத்தழிந்தாள். இரவு கிட்டவே முரார்பால் வந்தான். ராணி சற்று மனம் திருந்தினாள்.

"ஏன் தாயே, ஏதாவது வெற்றி கிட்டிற்றா?"

ராணி தலையசைத்தாள்.

"நான் தான் சொன்னேனே; தங்கள் மருமகள் பொல்லாதவள்"

"அது சரி தான். முரார்பால்! கொஞ்சம் உட்கார். எனக்குக் கொஞ்சம் புத்திசொல். எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!"

"நான் என்ன புத்திசொல்வேன் அம்மணி! நான் பட்டண் தடபுடலைப் பார்த்து கருத்துச் சிதறிவிட்டேன். இப்பொழுது தான் குஜராத் முழுவதிலும் பட்டண் தலை சிறந்து நிற்கிறது என்று ஒருவாறு அறிந்தேன்!"

"அது ஏன்!"

"அதுவா, பட்டண் மக்களில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வீரமும் கௌரவமும் சுதந்திர உணர்ச்சியும் நிரம்பி நிற்கின்றன. நானும் எவ்வளவோ நகரங்கள் பார்த்தேன். இது ஒப்புவமை யற்றது,"

"முரார்பால், நீயும் புண்ணில் உப்புத் தெளிக்கிறாய்! பட்டணில் நான் இருந்த வரை ஒருவரும் வாய் திறக்கவில்லை. நான் வெளியேறியவுடன் அவர்கள் அறிவு பரந்து விட்டதோ?"

"இல்லை தாயே, மன்னிக்க வேண்டும். அதற்காகச் சொல்லவில்லை, ஆனால் இன்னல்கள் என்னஎன்று விளக்க முற்பட்டேன்."

"சொல், என் மதிச் சிக்கல்களை விடுவி பார்க்கலாம்."

"பட்டண் வாசிகளை வழிப்படுத்த அவர்கள் விரும்பும் ஓர் ஆளை அனுப்பினால் தான் காரியம் ஆகும்."

ராணி சீற்றம் காட்டிச் சிதறினாள். அவனை எங்கிருந்து பிடித்து வருகிறது? இருப்பதெல்லாம் நீதானே?"

"இரண்டு நாள் முந்தி நான் அந்த வேலையைச் செய்திருப்பேன். இன்று நான் கையாலாகாதவன். விசுவபாலைமதிக்கமாட்டார்கள். சாந்தி சந்திரனைக் கேட்கக் கூடமாட்டார்கள். வினய சந்திரனைத் திரும்பிகூடப் பார்க்க மாட்டார்கள்!"

'இவை யெல்லாம் நானறிந்தவை தான். 'புதிது இல்லை' என்றால் வாய் மூடிக்கொள்!'

"அம்மணி என்ன சொல்கிறீர்கள்? உத்தரவு இடுங்கள் பட்டணைச் சூழ்ந்து விடுகிறேன்"

"சை சை, அது கூடாது. தோல்வியும் ஏற்பட்டு விட்டால் உலகிலேயே இருக்க இடம் கிடைக்காது."

முரார்பால் தலையசைத்துச் சொன்னான்: "அம்மணி, நான் இதை எல்லாம் எண்ணிப் பார்த்து விட்டேன். எனக்கு இன்னமும் ஒரு பயம் கூட இருக்கிறது."

"அதுஎன்ன?"

"சந்திராவதி சேனையை நம்பமுடியாது. சிலர் கலவரமடைந்திருப்பதாகத் தெரிகிறது. இதே விதம் பத்துநாட்கள் கழியுமானால் அநேகர் பயந்து ஓடி விடுவர். இந்தச் சமயம் துறவி இருந்தால் மிகவும் உதவியாக இருந்திருக்கும்."

ராணி பயந்தாள்: "இது என்ன? கடைசி காய்கள் கூட மாறி விழுந்து விடுமா?"

முரார்பால் ராணியின் துயரம் தோய்ந்த முகத்தைப் பார்த்து மேலே சொன்னான்: "மகாராணி! கவலைப் படாதீர்கள். விஜயபாலன் கெட்டிக்காரன். ஆகையால் இன்னம், நேரம் இருக்கிறது. ஆனால் இந்த ஜைனர்கள் தேவப்ரஸாத் போய் விட்டதும் ஜைன மதம் மூன்று உலகையுமே வென்று விட்டதுபோல் குதிக்கின்றனர்....ஆனால்"

"'ஆனால்' என்ன?"

"அவர் புத்திரன் அவரைவிடப் பொல்லாதவன். மண்டலேசுவரர் வெறும் வீரர் மட்டும் தான். இவனிடம் அவன் மாமாவின் குணங்களும் சேர்ந்திருக்கின்றன."

"இச் சிறந்த மணம் கமழும் ஸ்நான ஸோப் சாதாரண சலவை ஸோப்பைவிட விலையில் எவ்வளவு குறைச்சலாய் முடியுமோ அவ்வளவுதானென்பதை நம்புவீர்களா? சலவை ஸோப்பைவிட மிக உயர்ந்த ரக இந்த ஸோப்பினால் பெறும் நன்மையையும் மகிழ்ச்சியையும் நாம் ஏன் இழக்க வேண்டும்? ஐயோ! பாவம். களைப்புற்ற என் சரீரத்திற்கு நன்கு உயர்ந்த நுரையுடன் கூடிய இது எவ்வளவு தூய்மையையும் புத்துயிரையுமளிக்கிறது. இச்சாவிமார்க் ஸோப், நூற்றுக்கு நூறு பங்கு தூய்மையானது. மேலும். ஸ்நான ஸோப்புக்கள் தயாரிக்கப்பட வேண்டிய முறைப்படி இது பிரமாதமாகத் தயாரிக்கப்படுகிறது. சலவை ஸோப்பைப்போல இது முப்பது சதமானம் ஜலமில்லை. நான் முன்பே மட்டும் அறிந்திருப்பின் கண்ட ஸோப்புக்களை உபயோகித்து என் சருமத்திற்குத் தீமை செய்திருக்க மாட்டேன். இன்றே ஒரு பெட்டியை வாங்கித் திருப்தியடையுங்கள்"

ஒரு டஜன் 'தந்தநிற'க் கட்டிகளுக்கு

ரூ. 3-8. (வரி அலாதி)

Godrej கோத்ரெஜ் ரிஜிஸ்டர்டு

Turkish Bath

டர்க்கிஷ் பாத்

100 சதம் தூய்மைக்கும் மிருகக் கொழுப்பற்ற தென்பதற்கும் உத்தரவாதமானது.

கோத்ரெஜ் ஸோப்ஸ், லிட்.,
சென்னை: 164, பிராட்வே;
கொச்சி: 6/36, கல்வத்தி.

முஞ்ஜாவின் பெயரைக் கேட்டு ராணியின் ஒவ்வொரு நரம்பும் துடித்து நின்றது. உடல் பூராவும் உணர்ச்சியின் வெள்ளம் பாய்ந்தது. அவள் நெற்றி சுமை காட்டிற்று. முரார்பால் கொஞ்சம் அறிந்து சொன்னான்: "அம்மணி, சரி என்று படாவிட்டால் மன்னித்து விடுங்கள். யோசனை கேட்டதால் சொல்ல நேர்ந்து விட்டது. மருமகனைத் திருப்ப மாமாவையே ஏன் அனுப்பக்கூடாது.

கௌரவத்தை நடித்து ராணி சொன்னாள்: "முரார்பால், அதை விடு. உயிருடன் இருந்தால் ராணியைப்போல் தான் இருப்பேன். இல்லையெனில் மடிவேன். ஆனால் துரோகிகள் முகத்தில் விழிக்கமாட்டேன்."

உங்கள் இஷ்டம் என்று சொல்லி முரார்பால் வாளா இருந்துவிட்டான்.

ராணி சற்றுநேரம் சும்மா இருந்தாள். அவளை மீண்டும் ஏமாற்றம் சூழ்ந்தது. முரார்பால் புது விஷயம்

ஒன்று சொல்லி, புதுக் கவலை ஒன்றைச் சேர்த்துவிட்டான். "என்ன இந்தச் சேனை சிதறிவிடுமா? பிறகு என்னதான் நடக்கும்?" அவளுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று.

"முரார்பால்? உண்மையிலேயே ஒரு சிற்றரசன்கூட ஒரு மண்டலேசுவரன்கூட, ஒரு நகரம்கூட நம் பக்கம் இல்லையா?"

"சந்திராவதியைத் தவிர........."

"ஆம், ஆம். முரார்பால்! உன்னை, நான் முற்றிலும் நம்பலாமா?"

"அம்மணி சொல்லுங்கள், நிம்மதியாய்ச் சொல்லுங்கள்"

ராணி பொதுவான குரலில் கேட்டாள்: "மாளவ ராஜ்யம் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கிறது?"

"குதிரைமேல் நாலு நாளில் சென்றடையலாம்!"

"சரி அவசியமேற்பட்டால் அதையே செய்வோம்." இந்த வார்த்தையைக் கேட்டுத் துள்ளி எழுந்த முரார்பால் மார்பு விரிய, தலை நிமிரச்சொன்னான்: "அம்மணி, தங்கள் அடியில் இருக்கவும் இறக்கவும் துணிந்துவிட்டேன். ஆனால் நான் கூர்ஜர தேச வாசி. மாளவத்துடன் பெருமை குலைக்கும் தொடர்பைப் பற்றிய பேச்சு எழும்பிற்றே. நான் இவ்விடம் விட்டுப் போய்விடுவேன்."

ராணி அயர்ந்துவிட்டாள். ஒவ்வொரு சிற்றரசனும் தன் பெருமையையும் சுதந்திரத்தையும்விடத் தயாரில்லாமலே இருக்கிறான். அவள் வார்த்தையைப் பறக்கவிட்டுச் சொன்னாள்: "இல்லை இல்லை. அப்படி எங்கே சொன்னேன் நான்? சரி, நாளை பார்த்துக்கொள்ளலாம்.!" முரார்பால் விடைபெற்று வெளியேறினான்.

ராணிக்கும் தூக்கத்துக்கும் அன்றிரவு பெரிய போராட்டமாகிவிட்டது. ஒரு வழியும் அவளுக்குச் சரியெனப்படவில்லை. சந்திராவதி சேனையும் சிதறி ஓடிவிட்டனர், கதவும் தாழிட்டு நின்றால் ராணியின் நிலை என்ன ஆகும்? முரார்பால் சொல்லியபடி மாளவத்தின் உதவியை நாடப்போனாலோ ஒருகூர்ஜர வாசியின் உதவிகூடக் கிட்டாது. கையிலிருந்து ராஜ்யம் போய்விட்டால் அதுவே தாள முடியாது. இதுவோ பெயரும் கெட்டு, பொருளும் போகும் நிலையாயிருக்கிறது. படுக்கையில் புரண்டு புரண்டு ராணி தன்னையே நொந்துகொண்டாள். அரசுரிமை இருந்தது. அதைச் செலுத்த மந்திரி இருந்தான். கொஞ்சம் அதிகாரமும் இருந்தது. அதிகத்துக்கு ஏன் ஆசைப்பட்டாள்? ஒருவரையும் நம்பாமல் ஏன் எல்லோரிடமும் அவநம்பிக்கை கொண்டாள்? மண்டலேசுவரனை ஏன் துன்புறுத்தத் துணிந்தாள்? இறந்தும் மண்டலேசுவரன் பழி வாங்கித் தான் விடுவானா?

ராணியின் இதயச் சுழற்சிக்கு நடுவில் ஒரு அழகிய பிரதி பிம்பம் வந்து நின்றது. அறிவில், திறமையில், செயல் வன்மையில் கடவுளை ஒத்த அந்த உருவம் பதினைந்து வருஷத் தொந்தரவுக்கு மறைவில் அவளைக் குறை கூறிற்று. அந்த உருவத்தின் கண்களின் கற்பனைக்கு மீறிய அழகொளிதான் அவளை அசட்டுத்தனம் செய்யாமல் காப்பாற்றி வந்தது. அதனுடைய பேச்சுத் திறமை, அன்பு, அறிவுரை, குறை கூறல், கோபம் காட்டல் முதலிய வகையில் சொற்களைச் சொல்லி அவளைத் தன் இஷ்டப்படி ஆட்டி வந்தது. அந்த உருவைப் பார்த்து ராணி அதில் தன்னை இழந்தாள். ஒரு நிமிஷம் ராணி தன் கவலைகளை மறந்து, பெண்ணுள்ளங் கொண்ட சாதாரண மங்கையானாள். அவள் இதயத்துக்கு அவனே அதிபன் என்பதை அவள் மீண்டுமொருமுறை அறிய ஆரம்பித்தாள்.

அவள் பகுத்தறிவு அவளைத் திட்டிக் குலைக்க ஆரம்பித்தது: "இது முட்டாள் தனம்; அந்த உருவம் சாதாரண மந்திரியுடையது; தன்னால் கைது செய்யப்பட்ட துரோகியினுடையது" இதயம் இந்த வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கவில்லை. ஆனால் பல வருஷ நாடகத்தில் படுதாக்களைத் தூக்கித் தூக்கிக் காட்டி, 'இதோ அவன் தான் உன் பிரபு' என்று வலிவுடன் சொல்லிற்று. பதினாறு வருஷங்களை நீக்கி இதயம் சந்திரபுரி வாசத்தில் கிட்டிய குற்றமற்ற சந்தோஷத்தை ஏற்று இன்பமடைய ஆரம்பித்தது. அந்த இதயம் கட்டின்றி, பேராவல் கொண்டு காதல் நிரம்பி, ஆள்பவனொருவன் அடிகளைத் தேடிக்கொண்டிருந்தது. அது தர்பாரில் தூரதேசத்திலிருந்து வியாபாரம் செய்ய வந்திருக்கும் இளைஞனொருவனைப் பார்த்தது. புத்தாவல் தூண்ட அவன் காலடியில் தன்னைச் சென்றடைவித்தது. அந்த நேரத்தின் அந்தக் கனவின்பம், பிறகு உணர்ந்து அனுபவித்த அமுதமொத்த நேரங்கள், மற்றொரு முறை உயிர்த்தெழுந்து வார்த்தை வலைகளுக்கு மிஞ்சி நின்று அவளைத் திக்குமுக்கடைவித்தன. அந்த மனித மாணிக்கம் சந்திராவதியை விட்டுச் சென்றபோது அவள் இதயம் தேம்பியதும் ஞாபகம் வந்தது. பிறகு அவனைத் தன் கண்களுக்கிலக்காக்கத்தான், பிறந்த ஊர்விட்டு வானவில்லின் நிறம் கொண்டு ஒளிரும் அந்தத் தேசத்தின் அதி

பதியை மணந்தாள்; அவனை மணந்து, தன் இதயத்தை வசப்படுத்திய அந்த ஆண் மகனுடைய பார்வைக்கெதிரே இருக்கச் சம்மதித்தாள். இதயம் பழைய இன்பங்களை மீண்டும் கொஞ்ச நேரத்துக்குக் கற்பனை மூலிகை கொண்டு உயிர்ப்பித்து மறக்க முடியாத அந்த ஆனந்தப் பாற்கடலுக்குள்ளே ராணியை முழுக வைத்தது. அவள் இதயத்தை நாலு பக்கத்திலிருந்தும் ஏதோ மாய உணர்ச்சி சூழ்ந்து எழுந்தது? அவள் முகம்........!

ராணி உதறி எழுந்தாள். அவள் உடல் ஆடிக் கொண்டிருந்தது. இதயம் குதித்துக் கொண்டிருந்தது. கண்கள் வெறிகொண்டு விழித்தன. அவள் முகத்தில் புது மணம் புரிந்த மங்கை ஒருத்தியின் மயக்கம் பரவி நின்று ஒளி வீசிற்று.

அவள் கைகளை நீட்டினாள். இதயம் ஆழத்திலிருந்து 'முஞ்ஜால், முஞ்ஜால்!' என்று கதறிற்று. மீனல் தேவி எழுந்து நின்றாள். கனவுலகம் மறைய, கல்லுலகில் இறங்கி நின்றாள். முஞ்ஜால் கைதி அல்லவா? அவள் தன்னையே தூற்றிக்கொள்ள ஆரம்பித்தாள். அவளுக்குத் தன் கற்பின் நினைவு வந்தது. அவள் உடனேயே, "கர்ணதேவா, ப்ரபு, சுவாமி, நாதா, என் உயிரே!" என்று கணவன் நாமம் துதிக்க ஆரம்பித்தாள். திரும்பி அருகில் சயனித்திருந்த அரச குமாரன் முகத்தைப் பார்த்தாள்! ஒவ்வொரு வரியையும் ஊன்றி ஊன்றிக் கவனித்தாள். அந்த முகத்தில் அந்த வரிகளில் ஒரு புதுமை, தானறியாத ஓர் மாறுபாடு தோன்றிற்று. உடனே அவளுக்குத் திரிபுவன் முகம் ஞாபகம் வந்தது. அவன் முகத்தின் வரிகள் தோற்றமெடுத்தன. அந்த ரேகைகளை எண்ணி அவள் உள்ளம் ஏன் நிறைகிறது? அந்த முகத்தில் யாருடைய சாயல் காண்கின்றது. அதற்காக அவள் இப்படிக் கருத்தழிகிறாள்? அவள் மனதிலே கோவில் கொண்டு நிற்கும் அந்த மனிதருள் மன்னரின் சாயல் இருப்பதாலா? இந்த அர்த்தமற்ற எண்ணங்களின் முயற்சியை நெட்டித்தள்ளி, "கடவுளே? இது என்ன விளையாட்டு" என்று அங்கலாய்த்தாள். மறுபடி உட்கார்ந்த அவள் மண்டைவெடிக்க ஆரம்பித்தது. இதோ வெறி ஏற்பட்டுவிடும் போலத் தோன்றிற்று. எதற்காக அவள் உள்ளம் முஞ்ஜாலை வேண்டுகிறது? கண்கள் அவனை எதிர்பார்க்கின்றன? காதுகள் அவன் குரலை ஏந்தி நிற்கின்றன? முஞ்ஜாலின் இளந்தோழியும் குஜராத்தின் ராணியும் ஒருத்தி தானா? இதயம் 'ஆம்' என்று தான் சொல்லிற்று.

காலை ஆயிற்று. சூரியனின் ஒளி நேற்று இருட்டில் சிறையிட்ட மீனல் தேவியைத் திரும்பப் பெறவில்லை! ராணிக்குப் பதில் பெண்ணுள்ளத்தின் பிடிவாதத்தில் மதிமயங்கும் ஓர் மங்கையையே கண்டெடுத்தது. கர்வம் கொண்ட பேராவலில் சுழன்று இருக்கும் யோக மாயைக்குப்பதில் இதய உணர்ச்சியில் தன்னை வணங்கி நிற்கும் மீனலே வெளி வந்தாள். அவள் நெற்றியில் அதிகாரத்தின் கவலைகளின் சாயல்கள் மடிந்து அன்பின் துயரின் சாயலே காணப்பட்டது. அவ்வளவு அழகில்லாது போனாலும் அறிவின் ஒளி சுடர் விட்டு அழகு காட்டிற்று. முப்பத்து மூன்று வயதிலும் இருபது வயது ஓட்டம் நிரம்பி நின்றது.

காலையில் சமரசேன் வந்தான். ராணியின் முகத்தின் அழியாத அழுகை அடையாளங்களைக்கண்டு உள்ளுக்குள்ளே புழுங்கி, "அம்மணி, கவலை வேண்டாம். ஸோம்நாத் பகவான் துணை புரிவார்!" என்று தேற்றினான்.

"ஸமர், கடவுள் கட்டளை நிறைவேறியே தீரும்!"

"தாயே! நான் ஏழை. அறிவிலி. ஒரு வார்த்தை சொல்ல அனுமதி தருவீர்களா?"

"ஆம், சொல். உன்னைப் போல வேறு யார் வேண்டியவர்கள் கிடைப்பார்கள்?"

"அம்மணி இந்தச் சமயத்தில் முஞ்ஜால் மந்திரி ஒருவர் தான்......" ராணி இடியுண்டவள் போலானாள்! "எல்லோருக்கும் முஞ்ஜாலொருவனைத் தான் தெரியுமா? இது என்ன?"

"சமர், நானும் தான் யோசிக்கிறேன். ஆனால் அவர் உதவமாட்டார்!"

"இல்லை, முஞ்ஜால் அப்படிப் பட்டவரில்லை......' இதற்குள் ஜயதேவன் வரவே வார்த்தை தடைப் பட்டு நின்று விட்டது. 'அம்மா, நீ ஏன் அழுகிறாய்?' என்றான் மகன்

காரணமில்லாத ஒரு வெறுப்பு ராணியைத் தன் கையில் தாங்கிற்று. தன்னையறியாமல் அவன் முகத்தின் சாயல் அவளை நடுங்க வைத்தது. ஜயதேவனைக் கஷ்டப்பட்டுத் தன்பால் அழைத்து அணைத்து, "ஒன்றுமில்லை கண்ணே!" என்றாள்.

"நீ அரசனானால் தன் தாயை எண்ணுவாயா!"

"அம்மா, ஜயசிங் மகாராஜாவின் பெருமை சுற்றுமிடம் எல்லாம் ராணி மீனல்தேவியின் புகழ் பூசை பெறும். இது என்ன சந்தேகம்?" இளம் அரசன் சரித்திரத்துக்கே விதி வகுப்பவன்போல் சொன்னான்.

"உன் வாய் இனிக்கட்டும் குழந்தாய்!" சரி வெளியே சென்று உலாவிவா; சமர், உன்

குழந்தையரசனுடன் யாரையாவது அனுப்பு."

"நான் இங்கே சுற்றிச் சுற்றி அலுத்துவிட்டேன் அம்மா. பட்டண் போகவேண்டும், அம்மா" உதட்டைப் பிதுக்கிச் சொல்லியவாறே குமரன் வெளியேறினன்.

ராணியிடம் இன்னும் கொஞ்சம் தற்பெருமை தங்கியிருந்தது. "முஞ்ஜாலிடம் பிச்சையா?" இப்படியே கவலை நீண்டு மாலையை அழைத்து வந்துவிட்டது. அதனுடன் விஜயபாலனும் வந்தான். வேண்டிய முன்னேற்பாடுகளுடன் அவன் சொல்ல ஆரம்பித்தான்

"மகாராணி, பல சிற்றரசர்கள் தங்கள் வீரர்களை இட்டுக்கொண்டு நேற்றிரவு சென்றுவிட்டார்கள். இனி ஏதாவது செய்தாகவேண்டும். சொல்லுங்கள். பட்டண் கோட்டையையாவது சூழ்ந்துவிடலாம். அல்லது திரும்பி வல்லபனையாவது தாக்கலாம். சும்மா இருந்தால் எல்லாம் வீணுகிவிடும்."

"சரி, நாளை சொல்கிறேன். நாளை மாலைக்குள் முடிவு கண்டுவிடுவேன்." தன் கௌரவத்தின் கடைப்பிடியை அமுக்கி அவள் சொன்னள்.

'சரி' என்று விஜயபாலன் வெளியேறினன்.

ராணிக்கும் இனி தாமதம் தவறு என்று பட்டது. ஆகவே இயன்றவரை அமைதியாக ஆவன எண்ண ஆரம்பித்தாள். அவள் வேகம் வெகுவாகக் குறைந்துவிட்டிருந்தது. இப்பொழுது அவள் கொஞ்சம் சரியாகவும் யோசிக்க முடிந்தது. பட்டணை முற்றுகையிட்டாலும் அல்லது மாளவ ராஜன் உதவி கிடைத்தாலும் வெற்றி கிட்டலாம்; ஆனல் தோல்வியுற்றல் ஜயதேவன் அரசனவது பகற்கனவாகிவிடும். ஆகவே அதைவிட்டு வேறு என்ன வழி? பிரஸன்ன சொன்ன சொற்கள் நினைவுக்கு வந்தன. "ரேவா நதிக்கரையில் சென்று தங்கு!" என்ன, எனக்காகத்தான இந்த உபத்திரவம் எல்லாம்? போய்விடட்டுமா, அங்கேதான்? சந்திரபுரி போய்விடட்டுமா? நான் போய்த்தான் ஜயதேவன் சுகமாக இருக்க முடியும் என்றல் நான் ஏன் இறக்கக்கூடாது? கர்ணதேவனைப் பின் பற்றி சதியாகிவிடக்கூடாது? என்பெருமையை, என் குலத்தின் அரசுரிமையை அக்னிதேவன் தான் காப்பாற்றட்டுமே!

"ஆனல் உயிருடனிருக்க வழியில்லையா? யாருக்கு ஸதி? உண்மை மனைவியாயிருந்தும் இதயத்தில் கோயில்கொள்ள இயலாத அந்த அரசனுக்கா ஸதியாகிறது? உடனே முஞ்ஜால் உரு எடுத்தாள். முரார்பால், சமர், தன் இதயம் இவர்களின் புத்திமதி ஞாபகம் வந்தது. மீனல்தேவி சுயகலத்துக்கு அடங்கியவள். பெரிய பெரிய ஆசைகள் கொண்டவள். உயிருடன் இருந்து அரசாள அடங்கா ஆவல் கொண்டவள். அப்படியானல் எல்லோரும் வேண்டும், விரும்பும் இந்த உபாயத்தைத்தான் ஏன் செய்து பார்க்கக்கூடாது? மேலும் அவள் இதயமும் தான் அவனைப் பார்க்க நேற்று இரவு முதல் பித்துப் பிடித்து அலைகிறதே!

மீனல்தேவி எழுந்து நின்று கூவினள்: "சமர்!" சமர்சேன் வந்தான். ஆச்சரியம் துள்ள, "முஞ்ஜால் மேதாவை என்னிடம் அனுப்பு."

சமர் சந்தோஷம் பொங்க, "அப்படியே அம்மணி!" என்று கூறிச் சென்றன்.

உணர்ச்சிகளும் அவைகளை ஆள்பவனும்

(இதயமும் இதயேசுவரனும்)

மீனல்தேவி மார்பில் கைவைத்து குமுறும் இதயத்தை அமுக்கிக்கொண்டு நின்றிருந்தாள். அவள் காலம் நிலை தேசம் வர்த்தமானத்தை மறந்து நின்றுள். அவள் முஞ்ஜால் அவனைச் சற்று நேரத்தில் சந்திக்கப் போகிறன். அந்த எண்ணம்தான் அவள் உள்ளம் முழுவதும் வியாபித்திருந்தது. பதினைந்து வருஷங்கள் பின்னிழிந்தன. சந்திரபுரியில் இருந்த மீனல் போலவே அநேகமாக ஆகிவிட்டாள். மறைந்த ஆண்டுகளும் வருத்திய இன்னல்கூட அவள் இதயத்தில் மாறுதல் ஏற்படுத்தவில்லை.

அவள் வெகு நேரம் நின்றுள். 'வரமாட்டாற? வந்தால் என்ன தான் சொல்வான்? பேச்சை எப்படித் துவக்குவான்?' யாரோ வரும் அடிச்சத்தம் ராணியின் எண்ணத்தைத் தட்டி விட்டது. முஞ்ஜாலா வருகிறன்? அவள் காதுகள் தனி உணர்வு கொண்டு அறிய முயன்றன. "என்ன இது? அடிகள் மௌனமாய் விட்டனவே?" இராணியின் இதயம் கிளர்ந்தது. மறுபடியும் சத்தம்? அவள் எண்ணினள். அவனகத்தான் இருக்க வேண்டும்?

இவ்வளவில் சமர்சேன் வந்தான் "அம்மணி, முஞ்ஜால் மேதா வந்துவிட்டார் வெளியே இருக்கிறர்"

"சரி உள்ளே அனுப்பு. நான் சொல்லும் வரை வேறு ஒருவரையும் உள்ளே விடாதே."

‘சரி’ என்று சொன்ன சமர்சேன் வெளியே சென்று முஞ்ஜாலை அழைத்து வந்தான்; உள்ளே விட்டு வெளியே சென்று கதவைச் சாத்திக் காவல்புரிய ஆரம்பித்தான்.

முஞ்ஜாலின் கை கால்கள் விலங்குகள் நீங்கி இருந்தன. அவன் நடை இந்த நிலையிலும் ஆணவமும் அதிகாரமும் காட்டி நின்றது. அவன் மனம் முன்னைக் காட்டிலும் அதிக உயர்ந்த எண்ணங்களின் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தது. அவன் முகத்தில் மட்டும் வருத்தத்தின் சாயல் பரவி நின்றது. அவன் உதடுகள் அதிக அழுத்தமாய்க் கூட்டி வைக்கப்பட்டிருந்தன. கண்கள் வெறுப்பையும் கூடவே தயவையும் கொண்டு மிளிர்ந்தன. அவன் மீனல் தேவி எதிரே தலை குனிந்து நின்று கொண்டான்.

அவனைக் கண்டு ராணி மயங்கினாள். எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? அவள் இடிபட்டவள் போலானாள். தலையைத் தூக்கிப் பார்க்கத் தைரியம் வரவில்லை. அவனாகப் பேசுவான் என்று எதிர்பார்த்தாள். அவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. கொஞ்ச நேரம் சென்று ராணியின் கண்கள் கீழிருந்து மேலே பார்வை செலுத்தின. முஞ்ஜால் அசையாமல் பிரதிமைபோல நின்றிருந்தான் தலை குனிந்த வண்ணம்.

“முஞ்ஜால்! நான் எப்படிப் பேச ஆரம்பிப்பேன்? உனக்குத் தாளாத துயர் தந்து விட்டேன். மன்னிப்பாயா?” ராணி பதிலுக்கு எதிர்நோக்கிச் சற்றுத் தாமதித்தாள். முஞ்ஜால் தலையை மட்டும் தூக்கிப் பார்த்தான்; அவ்வளவு தான்.

‘முஞ்ஜால்,நீ வெறுப்புக்கொண்டு நோக்குகிறாய்? நன்றாய்ப் பார். என் கர்வம் குலைந்து விட்டது. நான் என் அறியாமையைக் கண்டுகொண்டு விட்டேன். ஏமாற்றி மறைந்திருந்த நற்புத்தி மீண்டும் வந்து விட்டது. நீ என்னை அலக்ஷியம் செய்,பரவாயில்லை; ஆனால் மன்னித்து விடு”

முஞ்ஜால் அப்படியே சிலை என நின்றான்.

“நீ என்ன எண்ணுகிறாய்? என்ன பார்க்கிறாய்? பேசமாட்டாயா? வாய் திறக்கமாட்டாயா?”

“நான் கேட்டுக் கொண்டுருக்கிறேன்” முஞ்ஜாலின் கனத்த குரல் கொஞ்சம் மெலிந்திருந்தது.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 *SUNDARI ELIXIR*
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 *PHOSPHORUS OIL*
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 *MASTANA PILLS*
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

"முஞ்ஜால், நீ அறிவாளி. உன்னை ஏமாற்ற முயல்வது முட்டாள் தனம். என் அறிவின்மையை ஒப்புக்கொள். உனக்குச் சொல்லும் வன்மை என்னிடம் இல்லை என்பதை நானே சொல்லி விடுகிறேன், ஏற்றுக்கொள். நீ வழியறிந்தவன். பட்டணில் உன்னை மிஞ்ச வேறொருவரும் கிடையாது. இன்று உன் கையில் தான் என் ராஜ்யமும் என் குழந்தையின் மகுடமும் இருக்கின்றன. நீ போய் கொஞ்சம் பட்டணுக்குச் சொல்லிவா"

'நான் கைதி. எனக்குப் பட்டணில் என்ன நடந்ததென்று என்ன தெரியும்?"

"பட்டணிலா? நான் இங்கே வந்தேன்: அங்கே மக்கள் கோலாகலம் செய்து வைத்திருக்கிறார்கள். சாந்திமேதாவின் கையிலிருந்து சாவிகள் பிடுங்கப்பட்டன. உன் சகோதரி மகன் திரிபுவன் பாலன் பட்டணுக்கு அரசனாக அமர்ந்து விட்டான். தவிர மண்டுகேசுவரம் ருத்ர மஹாலயம் எரிந்து விட்டது. அதில் ஹம்ஸாவும் அவள் கணவன் மண்டலேசுவரனும் எரிந்து சாம்பலாய் விட்டனர்."

"ஹம்ஸா?" முஞ்ஜால் குரல் உணர்ச்சி உண்டு, நடுங்கிற்று.

"ஆம் ஹம்ஸா தான்! எரிந்து விட்டாள். கடைசியில் நானே அவளை மண்டலேசுவரனிடம் அனுப்பி வைத்தேன். திரிபுவன் நான் தான் அவன் தாய் தந்தையைக் கொல்வித்து விட்டேன் என்று எண்ணிச் சீறுகிறான். அதனால் ஒரு பிரதிக்கினையும் எடுத்துக் கொண்டான்......"

மீனல் 'என்ன?' என்று கேள்வி பிறக்கும் என்று எதிர் பார்த்துத் தயங்கினாள். ஆனால் என்ன என்றும் கேட்கவில்லை; அவன் ஏன் என்றும்கேட்கவில்லை. தொடர்ந்தாள். "ஒன்று மீனல் இருக்கக் கூடாது அல்லது நான் இருக்கக் கூடாது என்பது தான் அந்தப் பிரதிக்கினை." என்று சொல்லி ராணி முஞ்ஜால் முகத்தைப் பார்த்தாள். அவன் நிலையில் மாறுதலே காணோம், அலுத்த அவள் கதை சொல்ல ஆரம்பித்தாள்: இந்தச்சமயம் சந்திராவதியின் படை இரு பக்கங்களிலும் சூழப்பட்டு நிற்கிறது. ஒருபுறம் வல்லபசேன் தேவப்ரஸாத் சேனையுடன் பின்னே நிற்கிறான்; அங்கே திரிபுவன் பட்டண் கதவை அடைத்து விட்டு உட்கார்ந்திருக்கிறான். பட்டண் பக்கம் பார்க்கிறதா? வல்லபனிடம் சண்டை செய்வதா? ஜயதேவன் சிம்மாஸனம் அடியுடன் போய் விடுமா? ஒன்றுமே புரியவில்லை. இதைவிடப் பட்டணுடன் எப்படியாவது ஒப்பந்தம் ஏற்பட்டால் நல்லது என்றே நினைக்கிறேன். ஆனால் அதை எப்படிச் செய்வது?"

முஞ்ஜால் அப்பொழுதும் வாய் மூடி நின்றான்.

"ஏன் உன் யோசனையைச் சொல்லாமல் நிற்கிறாய்?"

"கைதிகள் யோசனை கூடச் சொல்லலாமா?"

"முஞ்ஜால், நீ என்னுடைய ஒரு குற்றத்தை அடிக்கடி முன்னிறுத்துவாயா? நான் அறிவிலி என்று தான் சொன்னேனே! கடந்த மூன்று தினங்கள் எனக்கு நல்லபுத்தி புகட்டி விட்டன. என் அறிவின்மைக்கு எல்லை இல்லை என்றே அறிந்து கொண்டு விட்டேன், போதுமா?"

மீனல்தேவி தலையைக் கையில்தாங்கி ஆசனத்தில், அமர்ந்தாள்.

"முஞ்ஜால்! நான் உன் வார்த்தையை உதறி அவமதித்தேன். அதற்கு நான் வருந்துகிறேன்; நீ நான் நடிக்கிறேன் என்று சந்தேகிப்பாய், ஆனால் இல்லை; உண்மை. நீயும் மண்டலேசுவரனும் அடைந்த பட்டண் மக்களின் நம்பிக்கையை நான் ஏன் பெற முடியவில்லை என்று அறிந்து கொண்டேன்".

ராணி இதுவரை சில விஷயங்களைத் தன்னிடமே மறைத்து வைத்திருந்தாள். ஆனால் வருத்தம், தழுதழுத்த உணர்ச்சி, கவலை, முஞ்ஜாலைக் கண்டு முழங்கி வெளியேறிய எண்ணங்கள் எல்லாம் சேர்ந்து அவள் இதய வாயிலைத் திறந்துவிட்டன. ஒரு முறை எண்ணங்கள் உடைந்து ஓட ஆரம்பித்தால் அவைகளை அணையிட்டு நிறுத்துவது அரிதான காரியம். அவள் முஞ்ஜாலிடம் பதிலைக்கூட எதிர் பார்க்காமல் மேலே சொல்லிச் சென்றாள். "உன்னைவிட என்னை அறிவாளியாக எண்ணிக் கொண்டது உண்மைதான். எல்லோரையும் கையில் வைத்துக்கொண்டு சதுரங்கக் காய்களைப்போல ஆட்ட எண்ணினேன். ஆனால் நீங்கள் இருவரும் பட்டண் வாசிகளின் குணத்துக்கும் குற்றத்துக்கும் பிரதிநிதிகளாயிருக்கிறீர்கள். அதனால் தான் ஜனங்கள் உங்களிடம் உயிரை வைத்திருக்கிறார்கள். இதில் நீ வெற்றி பெற்றாய்; நான் தோல்வி அடைந்து விட்டேன். எனக்குக் கண் கெட்ட பிறகு தான் அடக்கமில்லாத அதிகாரம் அசட்டுக் கனவு என்று தெரிய வந்தது."

"அப்படியா?" என்று கேட்ட முஞ்ஜால் குரலில் ஏளனம் துள்ளி நின்றது.

"ஆம். இப்பொழுது நீயும் சொல்லலாம். என் பந்தயம் தோற்று விட்டது. என் சிங்காதனத்தின் அடி ஆட்டம் கண்டு விட்டது. எல்லாவற்றையும் திருத்துவது உன் கையில் தான் இருக்கிறது. என் குழந்தை மகுடத்தைக் காப்பாற்று. என்னை அரசன் தாயாக அங்கேயே இருக்க ஏற்பாடு செய். அது போதும்."

முஞ்ஜால் அலக்ஷியத்துடன் கேட்டான், "அவன் என்ன சொல்கிறான்?"

"அவன் என்னென்னவோ சொல்கிறான். அவனைச் சொல்லப் போவானேன்! நேற்றுப் பெண், என் மருமகள் வந்து என்னை ரேவா நதிக்கரையில் ஆசிரமம் கட்டி வாழ ஆணையிட்டுச் சென்றிருக்கிறாள்! அப்பொழுது தான் அவள் ஜயதேவனுக்கு முடிசூட்டி வைப்பாளாம்! என்ன செய்வது? நான் வலி விழுந்து விட்டேன்; ஒரு நகரமும் எனக்குத் துணை இல்லை. இல்லாவிடில் அவள் நாக்கை அப்பொழுதே பிடுங்கியிருப்பேன். திரிபுவன் பிரதிக்ஞையையும்பற்றி கேள்விப்பட்டேன். ஒன்று அவன் இருப்பானும் அல்லது நான் இருப்பேனும்! என்ன செய்வது இனி? ஏன் பேசமாட்டேன் என்கிறாய்? உன் புத்தி என்ன ஆயிற்று?"

முஞ்ஜால் சிடுசிடுத்துச் சொன்னான்: "மந்திரியாயிருந்தவரை புத்தி இருந்தது. இப்பொழுது அது இல்லை!"

"புத்தி இல்லையா? முஞ்ஜால், என்ன பேச்சுப் பேசுகிறாய்? உன்னைத் தவிர எனக்குத் தற்சமயம் வேறு யாரும் கிடையாது!... ஏன் அன்றும் கிடையாது, இன்றும் கிடையாது. நீ ஓர் வழி காட்டு. உன் புத்தியோசிக்க மறுக்கும் என்பது எப்படி நடக்கும்? பிள்ளைப் பருவத்தில், என்னால் முடியாத காரியம் ஒன்றுண்டா என்றே எனக்குத் தெரியவில்லை, என்பாயே! மறந்து விட்டாயா?"

"ஆம். அது உண்மையே. எனக்கு அப்பொழுது திறமை இருந்தது. மனைவியைக் கொன்றேன்; தங்கையைக் கொல்வித்தேன்; ஒரு விதத்தில் அவள் கணவனுக்கும் எமனாக வாய்த்தேன்! பட்டணின் கழுத்தையும் நெறித்தேன். அதற்கெல்லாம் உதவிய அந்தப் புத்தி இன்று மருமகனைக் கொல்ல மறுக்கிறது!" பதவியிழந்த மந்திரி ஏதோ மிகவும் சாதாரணமான விஷயங்களைச் சொல்வதுபோல் பதட்டமில்லாமல் சொல்லி நிறுத்தினான்.

"அப்படியானால் நான் சாகட்டுமா? முஞ்ஜால்? இதற்கெல்லாம் வேர் நான் தான்; எல்லோருக்கும் இடையே சென்ற ஆணி நானே. எனக்குத்தெரியும். கடைசியில் அக்னிதேவனாவது என்னிடம் கருணைகாட்ட மறுக்கமாட்டார் என்று எண்ணுகிறேன். அவர் காலடியில் செல்வதற்குமுன் மீண்டு மொருமுறை வழியுண்டா என்று முயல ஆசைப்பட்டேன். நீ ஏதாவது சொல்லமாட்டாயா என்று நம்பினேன்."

முஞ்ஜால் கடுமை செறிந்த குரலில், "எனக்கு உயிரிழந்தவளுக்கும் அற்றவளுக்கும் இடையே ஏதாவது வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லையே!" என்றான்.

"உனக்கு எப்படித் தெரியும்? காலடி தேடி வந்து விட்டேனல்லவா? எது வேண்டுமானாலும் சொல்லிக்கொள். ஆனால் ஏதாவது ஓர் வழி சொல்."

முஞ்ஜால் குரலில் ஆத்திரம் கொதிக்க, "கடவுள் விருப்பத்தை நிறைவேற்று" என்றான்.

"அதாவது? நான் இறந்து விடட்டுமா? என் மகன் அரசுரிமையைத் தூற்றிவிட்டா?"

முஞ்ஜால் நடுங்கச் சிரித்துச் சொன்னான்: "ஸோலங்கியின் குலத்தை வேரறுக்க உதித்த யோகமாயை தானே!"

ராணிக்கு முஞ்ஜால் மௌனமாயிருப்பதை விடப் பேசுவதில்தான் தன் காரியம் வெற்றி பெறும் என்று பட்டது. அதனால் அவள் அவனிடம் சொல்லடி வாங்கத் தயாராயிருந்தாள். அவனைத் தூண்டி விடவும் துணிந்தாள். 'ஆம். ஏன் பேசமாட்டாய்? நான் வேரறுக்கவே வந்தேன். உனக்கென்ன? ஒரு சோலங்கி போனால் மற்றொருவன் வருகிறான்! அதிலும் லாபம் உனக்குத் தானே? உன் மருமகன் சக்கரவர்த்தி ஆய்விடுவானல்லவா?"

முஞ்ஜால் சுருங்கச் சொன்னான். "உலகின் ஏற்றம் இறக்கத்தில் நான் சம்பந்தம் கொண்டிருந்த காலம் போய்விட்டது" அவனை ஏமாற்றுவது ராணியால் இயலாத காரியமாகி விட்டது.

"அப்படியானால் நீ ஒன்றும் செய்யமாட்டாயா முஞ்ஜால்? இந்தப் பதினைந்து வருஷங்களுக்குப் பிறகுமா?"

பதில் முஞ்ஜாலின் நடுங்கவைக்கும் சிரிப்பில் தான் கிடைத்தது. ராணி உள்ளம் நைந்து சொன்னாள்: "சிரித்திடு. சந்தோஷமடை. நான் எவ்வளவு சொல்கிறேன், உன்னிடம் பலனே ஏற்படவில்லையே! ஒருமுறை மன்னிக்கக்கூட மறுத்து விட்டாயே! இனி

இன்னுமொரு சினிமா நட்சத்திரம்
டி. எ. ஜயலக்ஷ்மி
லக்ஸ் டாய்லட்
சோப்பின்
புதிய
பரிமளத்தால்
வசியப்படுத்
தப்பட்டார்
LUX
LUX TOILET SOAP
“நான் லக்ஸ் டாய்லட் சோப்பின்
ரம்மியமான புதிய பரிமளத்தை
மிகவும் விரும்புகிறேன்” என்று கூறுகிறார்
சினிமா
நட்சத்திரங்களின்
அழகு
தரும் சோப்
LTS. 207-23 TM

நீ கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டேன். உறுதி கூறுகிறேன்; வழி சொல்."

"வழி சொல்லும் தொழிலை ஒழித்துக் கழித்து விட்டேன்."

"இது என்ன செய்கிறாய் நீ? கொஞ்சம்கூடத் தயவு காட்ட மாட்டாயா? நான் உன்னை மந்திரி பதவியிலிருந்து நீக்கினேன், உன்னைக் கைதியாக்கினேன்; செய்நன்றி கொன்றேன். எது வேண்டுமானாலும் சொல்லித் திட்டு. சொல், நான் உன் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன்."

ராணி, முயற்சிகள் தோல்வியடைந்து வருத்த வருத்த அதிக-

முயற்சிகள் காட்டத் தலைப்பட்டாள். அந்த முயற்சியில் அவள் மேற்கொண்டிருந்த கௌரவம், கனம் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிட்டன. உள்ளூறி இருக்கும் உண்மைக் குணங்கள் வெளித்தோன்ற ஆரம்பித்தன. சென்ற இரவிலிருந்து அவள் மனம் இந்த வழியில் தான் சென்று கொண்டிருந்தது. ஒவ்வொரு கணமும் அவள் தன் சுத்த இதயத்தின் கலங்காத, நேர்மையான நிறம் மாறாத வார்த்தைகளைப் பேசிச் செல்லச் செல்ல, எதிரே நின்ற ஆண் சிங்கத்தின் தனித்தன்மை அவள் வெறி பிடித்த இதயத்துக்கு மது ஊட்ட ஊட்ட, அவள் அந்த வழியிலேயே முன்பின் பாராமல் மேலே சென்று எல்லையை அடைந்தாள். அவள் பழக்கம் நீங்கிய, செயற்கை அற்ற அதிகாரத்தின் பேராவல் சிக்கல் நீங்கிய பதினைந்து வருஷங்களுக்கு முந்திய மீனல் குமாரியாக ஆகிக் கொண்டே வந்தாள். முடிவில் அவள் கையையும் கூப்பி விட்டாள்!

''ராணி, இதைத் தவிர சொல்வதற்கு வேறு ஒன்றுமில்லை என்றால் எனக்கு விடை கொடு. இதில் நான் ஒன்றும் செய்ய முடியாது. நான் கைதியானதிலிருந்து முஞ்ஜாலே இல்லை.''

''ராணி கொதித்து எழுந்தாள். அவனுக்கு எதிரே சமீபத்தில் வந்து நின்று கொண்டாள். தன் ஒரு கையை மற்றொரு கையில் எடுத்துக் கசக்கி முறித்துக் கொண்டு, ''மறுபடியும் அதையே தான் சொல்வாயா? நான் குற்றம் புரிந்தேன், புரிந்தேன்! புரிந்தேன்! மும் முறையும் புரிந்தேன். அதற்கு என்னை அடிக்க வேண்டுமானாலும் அடித்துக் கொள். என்னைப் பட்டண் இட்டுச் செல். சென்ற பிறகு வேண்டுமானால் ரம்பம் கொண்டு வேண்டுமானாலும் அறுத்து விடு. திருப்பித் திருப்பி ஏன் அதே பேச்சைப் பேசுகிறாய்? என்னைக் கூட வெறுக்கிறாயா? என்னுடன் பேசக் கூட உனக்கு அலுப்புத் தட்டுகிறதா? அதுவும் என் காலம் தான்! முஞ்ஜால், நீ கூடத் துணிந்து ''நீ, சா'' என்று சொல்கிறாயே! இது தான் உன் கடைசிச் சொற்களா? உண்மையிலே உனக்கும் வேறு ஒரு வழி தோன்றவில்லையா? ஆனால் முப்பத்து மூன்று வயதிலே சாவது லேசானதா?'' என்று அலறினாள்.

முஞ்ஜால் கொடுமை நிறைந்த அமைதி காட்டி, ''சேட்டின் (முஞ்ஜால்) மனைவி இருபத்தைந்து வயதில் உயிர் நீத்தாள். ஹம்ஸாவின் வாழ்க்கைக் கயிறு முப்பது வருஷத்துக்குள்ளே அறுக்கப் பட்டது'' என்றான்.

ராணி ஆத்திரத்துடன் தலையிலடித்துக் கொண்டாள். ''ஆம் ஒருத்திக்கு முஞ்ஜால் கையினால் அக்னி ஸம்ஸ்காரம் கிட்டிற்று: அவள் அதிர்ஷ்டக் காரி, மற்றவளும் மண்டலேசுவரர் போன்ற மன்னன் கைகளிடையிலேயே உயிரை விட்டாள்; அவளும் பாக்கிய சாலி. என் அதிர்ஷ்டம் தான் என்னுடன் போகிறவர்களும் கிடையாது, எனக்கு அழுகிறவர்களும் கிடையாது. நான் என்ன மடத்தனம் செய்தேன், பட்டண் பேரில் அழிந்து இங்கே வருவதற்கு? வராமலிருந்தால் இந்தக் கஷ்டம் நேரிடுமா? இந்தப் பூமியே பொல்லாது; யாரையும் விழுங்கி விடுகிறது!''

''ராணி! என்னைத் திட்டு, என் தாயை ஒன்றும் சொல்லாதே!''

அழுது கொண்டே மீனல் பொரிந்தாள்— ''ஏன் சொல்லக் கூடாது?

''நீ வந்து சந்திர புரியில் இதைப் பற்றி என்னிடம் புகழாமல் இருந்தால் நான் இங்கே காலடி கூட வைத்திருக்க மாட்டேன்''

''என் - தாயைப்புகழ்வது என்கடமை. என் தாய் நாட்டைப் போன்ற நாடு உலகிலேயே கிடைப்பது கடினம்'' முஞ்ஜால் தலை தூக்கி நிமர்ந்து மீண்டும் சொன்னான்: ''உன் முட்டாள் தனத்துக்குப் பிறரை ஏன் தூற்றுகிறாய்?''

''அதுவும் சரி. நான் செய்ய வில்லை. எதற்காக?'' கண்களிலிருந்து நீரைக் கழற்றி விட்டுக் கொண்டே, ''இந்த நாட்டின் நாயகன் பின் நாளையே நானும் சரி ஆகிவிடுகிறேன். சாகாமல் எல்லை காண்பது இயலும் காரியமாகப் படவில்லை. நான் பேரிழந்து, பெருமை இழந்து உயிருடன் வாழ விரும்பவில்லை, இந்த நாளும் பார்க்க நேரிடும் என்று எண்ணியவளே இல்லை!''

இதயம் பொங்கி எழ ராணி விக்கல்களுக்கிடையே மேலே சொல்லிச் சென்றாள்!

''முஞ்ஜால் நனைந்த என் கண்களை ஒரு முறை பார். நனைந்த கண்களுடன் ஒரு முறை பார். உன் கடும் பார்வை, ஏளனம் செய்யும் முகம் என் உள்ளத்தைப் பிளக்கின்றது. நான் உன்னிடம் ஒன்றும் சொல்ல வில்லை, ஒன்றும் கேட்கவில்லை. இரண்டு வார்த்தைகள் பேசு, அது மட்டும் போதும். நீ கூட இப்படி எனக்கு ஆவாய் என்று என்னால் நம்ப முடியவில்லை.''

முஞ்ஜால் உயர்ந்த தலையைத் தணித்து வாய் மூடி நின்றான்.

ராணி வெறி கொண்டு விம்மி அழுதாள். உரக்க விக்கினாள். பிறகு தணிந்த குரலில் சொன்னாள்: ''முஞ்ஜால்,என் முஞ்ஜால்! ஒரு

கணம் சமீபத்தில் சென்ற காலத்தை மறந்து விடு. நீ கோபித்துக் கொண்டாய்; இரண்டு அடி அடித்து விடு. நான் இந்தச் சமயம் சந்திரபுரி அரசகுமாரி இல்லை; பட்டண் அரசி இல்லை. புது அரசனின் தாயுமில்லை. நான் மீனல் குமாரி. பதினைந்து வருஷத்துக்கு முன் உன்னைப் பார்த்து மதியிழந்த கட்டழிந்த சிறுமி. நான் சாகிறேன். ஆனால் சாகும் போது கூட எடுத்துச் செல்ல இரண்டு வார்த்தைகள் சொல். முஞ்ஜால்! உனக்கு அந்த நாட்கள் மறந்து விட்டனவா? உன் வார்த்தைகளில் மயங்கி நான் குஜராத்தை அடைய வெறி கொண்டு திரிந்தேனே? பட்டணின் லீலைகளை என்னென்ன புகழ்ந்தாய் நீ? ஒவ்வொரு வார்த்தையும் இதோ மீண்டும் என் காதுகளில் ஒலிக்கின்றனவே! முஞ்ஜால், நான் உன் காலில் விழட்டுமா? ஒரே நிமிஷம் நான் செய்த குற்றத்தை மறந்து விடு. ஒரு சமயம் இருந்த அதே முஞ்ஜாலாக மீண்டுமொரு முறை, ஒரே முறை, நடந்து கொள். எனக்கு மூளை குழம்பி விட்டது. என் பெருமை மடிந்து விட்டது. பதினைந்து வருஷங்களாக நான் மறந்திருந்த அந்த, முடிவுக்கு முன்னே மடிந்த என் உணர்ச்சிகள் மீண்டும் பசுத்துத் துளிர்த்து எழுகின்றன!” என்று சொல்லி வந்த ராணி உணர்ச்சி வேகம் தாங்காமல் கீழே விழுந்து விட்டாள்.

முஞ்ஜால் அவளைத் தாங்கச் சற்றே சமீபித்தான். நடுவில் நின்று விட்டான். அவன் கொஞ்சம் இளகிய குரலில், “மீனல் தேவி, இந்தப் பிரலாபம் எதற்காக? நடந்தவைகளை எண்ணி என்ன ஆகப் போகிறது? இந்தச் சமயம் நீ கர்ண தேவனின் விதவை ராணி! அதை மறக்காதே.”

“உண்மை. சாகும் பொழுது கூட என் உண்மை உள்ளத்தில் பீறிட்டெழும் உணர்ச்சிக்குச் சொல்லுடை அணிவிக்க என்ன உரிமை? நான் முதலிலிருந்தே வாயில் பட்டு உமிழப்பட்டவள். உன் நாட்டுக்கு வர, உன் அருகே இருக்க நான் மற்றொருவன் கை பிடித்தேன். இப்பொழுது என் இதயத்துடன் எனக்கு என்ன உறவு? மனதினாலும் வார்த்தையினாலும் எச்சில் வாழ்க்கை நடத்தியவளுக்குச் சாகும் போது மட்டும் எப்படிச் சுகம் கிடைக்கும்?”

“தாங்கள் வீணர்த்தம் செய்யாதீர்கள்? இந்தச் சமயம் நீங்கள் அந்த இறந்த விஷயங்களுக்கு உயிரூட்டி என்ன காணப் போகிறீர்கள்?”

“நான் இந்தச் சமயம் பலனைப் பற்றி எண்ணத் தயாரில்லை. சாவின் வாயிலிருப்பவளுக்கு லாபம் என்ன, நஷ்டமென்ன? என்ன இருக்கிறதோ அதுவே இருக்கட்டும், ஆனால் முஞ்ஜால்!” என்று சொல்லிக் கொண்டே வெறித்தெழுந்த ராணி மேலும் சொல்வாள்: நான் இறப்பதற்கு முன் இரண்டு வார்த்தைகள் சொல். எனக்கெதிர் இன்ப நகை சுரக்க அன்பு முகம் காட்டு! எனக்கு வேறொன்றும் வேண்டாம். என்னைத் தொட்டால் விஷம் ஏறி விடுமா? முஞ்ஜால், வாட்டாதே! வேண்டாம். பழியா வாங்குகிறாய்? அன்று நான் செய்ததற்கா? என் மணம் நடந்த தினத்தன்று உன்னை உதறித் தள்ளினேன். நான் இனி குஜராத் ராணி என்றேன். உன்னைப் புத்திரன் என்றேன். நான் உனக்குத் தாயாகி விட்டேன் என்றேன். நம் கெட்ட உடலாசைகளை விட்டு குஜராத்தின் தாங்குகால்களாக ஆக வேண்டும் என்றேன். நான் உன்னை வெளியேற்றினேன்; தூரத் தள்ளினேன். அதற்கா இவை எல்லாம்?”

இந்த வார்த்தைகளைக் கேட்ட முஞ்ஜால் அற்புதமான விதத்தில் மாறுதலடைந்தான். அவன் வறட்டுத் தன்மை விலகிற்று. அவன் மார்பு மூச்சு வேகத்தில் ஏறி இறங்க ஆரம்பித்தது. முகம் உணர்ச்சி ஏறிற்று. கண்கள் குளிர்ந்தன. பேச ஆரம்பித்தவன் குரல் நடுங்கிற்று. “மீனல் தேவி. தயவு செய்து அந்த நாட்களின் உருவை மீண்டுமொரு முறை தீட்டாதீர்கள்! என் உள்ளம் பிளக்கிறது!”

“உன் உள்ளம் பிளந்தால் என் உள்ளம் பிளக்க வில்லையா? முஞ்ஜால், என்னைச் சுயநலம் கொண்டவள் என்று கொள். கடைப்பட்டவள் என்று அழை. பொறுப்பற்றவள் நேர்மையற்றவள் என்று தூற்று. எவ்வளவோ தடவை என்னை இதயமற்றவள் என்று சுட்டிக் குட்டியிருக்கிறாய்! ஆனால் நான் உண்மையில் அப்படிப் பட்டவளல்ல. அந்த நாட்களின் எண்ணங்களை உண்டு தான் உயிர் பிழைத்திருக்கிறேன். அந்த நாளில் மிதியுண்டு நசுங்கிய இதயத்தின் ஆசை அபிலாஷைகளில் வேகம் தான் எனக்குச் சுயநலம் ஊட்டிற்று. முஞ்ஜால், விவாகம் செய்து கொண்டவுடனேயே, முறையைக் காப்பாற்றி அரண்மனையில் இறங்கினேனே அது ஞாபகம் இருக்கிறதா, முஞ்ஜால்! அந்தச் சமயம் ஞாபகம் வந்தால் நான் அடியுடன் மாறி விடுகிறேன். அந்தச் சமயம் நீ என்ன செய்தாய்?”

நிறைந்து அலைந்து தழுதழுக்கும் குரலில் முஞ்ஜால் சொன்னான்: “மீனல் தேவி, நிறுத்துங்கள். ஒவ்வொரு மனிதனின் வலிவிற்கும் எல்லை உண்டு. என்னால் இனித் தாளாது.”

"யார் தான் உன்னைத் தாங்கி, தனித்திருக்க வேண்டுகிறார்கள்? ஏன் நகருகிறாய்? வா. நான் அந்தக் கணங்களைத் தான் மீண்டும் ஒரு முறை வேண்டுகிறேன். ஒரு கணம் அன்றிருந்த முஞ்ஜாலாக ஆகி விடு. நான் சுகமாக நாளையே இறந்து விடுகிறேன். முஞ்ஜால்! ஏ முஞ்ஜா...ல்!" என்ற ராணி அருகே ஓடி வந்து முஞ்ஜால் கைகளைப் பிடிக்கத் தாவினாள். அவன் சற்றுப் பின்னே தள்ளி நின்றான். ராணியின் சிதறி நின்ற கண்களிலும் காந்தி நிறைந்த முகத்திலும் காணப்பட்ட நெருப்பு அவனையும் எரிக்க ஆரம்பித்தது. எதற்கும் அசையாத அவன் உடல் நடுங்க ஆரம்பித்தது. அவன் கண்ணெதிரே பழைய மீனல் நின்றாள். உதட்டை மடித்துத் துடித்து வரும் தன் உள்ளத்தை அடக்கி அமர்த்த முயன்றான். ஆனால் பயன் கிட்ட வில்லை.

"ராணி என்ன செய்கிறாய்?"

"முஞ்ஜால்" நீ ஏன் எனக்குக் கிட்ட மறுக்கிறாய்?"

முஞ்ஜால் தன் இதயத்துடன் போர் செய்து கொண்டே, "நீ அன்று என்னைத் துரத்தினாய். மீண்டுமொரு முறை புந்தானாள் விரட்டி விட்டாய்"

"ஆனால் நீ ஏன் மாற வேண்டும்? நான் கடைப்பட்டவள். நீ தேவனாயிற்றே." மீனல் தேவி வேகமாகக் குரல் கம்ம இரைத்துக் கொண்டே சொன்னாள்.

இதயத்தில் கொழுந்து விட்டு எழும் நெருப்பின் நாக்கை அணைக்க முயன்று கொண்டே "நான் மாற வில்லை!"

"உண்மையிலேயா?" மீனல் கண்களில் இருந்து பயங்கரமான மின்னொளி பறந்தது. முஞ்ஜால் வீண் முயற்சிகளைக் கைவிட்டான். தலையைத் தாழ்த்தி, "மீனல்.........தேவி!' என்று கனிந்து தழைந்த குரலில், தோல்வியுற்றுக் கதறினான். அவன் குரலில் மன்மதன் புஷ்பவில்லின் நாண் சுண்டி ஒலித்தது.

மீனல் வெறியில் மயங்கிச் சும்மா நின்றாள். வெறி பிடித்தவன் போலவே முஞ்ஜாலும் முன்னேறினான். ராணியை அழகு பொருந்தப் பருத்து வலிவுண்டு வளர்ந்த கைகளில் தூக்கித் தாங்கினான். (தழுவிக் கசக்கிப் பூமியில் உதறிவிட்டு ஓடி விட்டான்!)

(தொடரும்.)

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளைதெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

முதல் நாடகம்

— ஆர். எஸ் —

நாடகம் முடிந்து வெளியே வந்தோம். பெரிய சரத்திலிருந்து நக்ஷத்திரங்களைத் தொங்க விட்டது போல வரிசை வரிசையாக விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருந்தன. 'பட பட' வென்று நாலு தூற்றல் மேலே போட்டது. ஒரே இருட்டு, மழை கொட்டப் போவதற்கு அறிகுறியாகச் சூழ்ந்திருந்தது.

"ஓதுங்குவோமா?" என்று கேட்டார் ஸந்தானம். நானும் சத்திரத்து வாசற்படியை நோக்கி நகர்ந்தேன்.

"சகுந்தலாவின் நடிப்பு எப்படி?" என்று கேட்டார்.

"முதல் தரம். கேட்பானேன்? கடைசியில் மேடையில் வந்து நின்றவுடன் மாலையைப் போட்டார்களே, அப்போது கையைக் குவித்து ஒரு கும்பிடு போட்டு விட்டு ஒரு புன்சிரிப்புச் சிரித்தாளே அதற்கே ஆயிரம் ரூபாய் கொடுக்கலாமே!"

"இதிலே ஒரு ஆச்சரியம் என்னவென்றால் அவளுடைய முதல் நாடகத்தை நான் மட்டும் தான் பார்த்தேன்,"

"அது எப்படி!"

"அது பெரிய கதை" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார் ஸந்தானம். மழை பெய்ய ஆரம்பித்தது. நானும் கீழே உட்கார்ந்தேன்.

* * *

எட்டு வருஷங்களுக்கு முன்னால் ஒரு தடவை 'ஸீஸனு'க்குக் குற்றாலம் போனேனே உங்களுக்கு நினைவிருக்கிறதா? இல்லாவிட்டால் போகிறது. அப்போது என் துரதிருஷ்டம் ஒரு பங்களாவிலாவது ஒரு சிறிய அறை கூடக் கிடைக்கவில்லை. கடைசியில் தேடித் தேடி அலைந்துவிட்டுத் தென்காசிக்கே திரும்பி விடலாமென்று நான் யோசனை பண்ணிக் கொண்டிருக்கும் போது ஒரு நண்பர் எனக்குக் கிடைத்தார். "வீட்டுக்கு வாருங்களேன்" என்று கூப்பிட்டார்.

போனேன்.

அவர் வீடு என்று சொன்னது ஒரு சின்ன பங்களா. அதில் அவரும் ஒரு பெண்ணும் மட்டும் குடியிருந்தது போல எனக்குப் பட்டது. 'எனக்கு இருக்க ஒரு அறை கிடைக்கவில்லை, இவர்கள் இரண்டு பேருக்கு இத்தனை இடமா' என்று ஆச்சரியப் பட்டுப் போனேன். நான் கேட்க நினைப்பதற்குள் அவரே சொல்லி விட்டார்.

"வாசல் பக்கம் மாடியில் ஒரு அறை இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் இருங்களேன் ஸார்."

"ரொம்ப தாங்க்ஸ்! பாருங்கள், நாலு நாளாய்த் தென்காசிக்கும் குற்றாலத்துக்கும் அலைகிறது தான் மிச்சமே ஒழிய ஒரு இடம் கிடைக்கவில்லை ஸார்! என்ன வாடகை கேட்கிறீர்களோ கொடுத்து விடுகிறேன்."

"வாடகை கிடக்கிறது ஸார்! நீங்கள் இங்கு வந்து சேர்ந்ததே எனக்குப் போதாதா?"

எனக்கு ரொம்ப திருப்தியாக இருந்தது. மாடியில் அறையில் கொண்டு போய்ச் சாமான்களை வைத்தேன்.

மாடியில் நின்று கொண்டு பார்த்தால் அருவி வெகு அழகாகத் தெரியும். நீல வானத்துக்கும் பெரிய கற்பாறைகளுக்கும் நடுவில் பனித்தூள் விழுவதைப் போல பெரிய இரைச்சலோடு அருவி விழுந்தோடுவது ரம்மியமான காட்சி. அருவிக்கரையிலிருந்து பங்களா வரைக்கும் பாதையோரம் நிழல் விரிக்கும் மரங்களின் மரகதப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும். சந்தடியில்லாத இடம். சுகமான காற்று. நான் எதை நாடி வந்தேனோ அது வீண் போகவில்லை.

இரண்டு நாளைக்கெல்லாம் நான் சில விஷயங்கள் தெரிந்து கொண்டேன். என்னை அழைத்து வந்தாரே ஒரு நண்பர்? அவர் என்னிடம் எவ்வளவு கனிவாகப் பேசி நயமாக நடந்துகொண்டாரோ அவ்வளவுக்கவ்வளவு பெரிய முரடர் என்று தெரிந்தது. அவருடன் கூட இருந்த பெண்ணுக்குப் பதினைந்து பதினாறு வயது இருக்கலாம். தந்தத்தில் கடைந்தெடுக்கப்பட்ட பதுமை மாதிரி விளங்கினாள். சில சமயம் அருவியில் ஸ்நானம் செய்து விட்டு வந்து கூந்தலை ஆற்றத் தொடங்கி விட்டாளானால் எனக்கு ரவிவர்மா படத்து மோகினியை நேரே பார்ப்பது போல இருக்கும். தாழ்வாரத்து அறையில் அவர்கள் அடிக்கடி பேசிக் கொள்வார்கள். ஒருகால் இவர்கள் கணவன்—மனைவியாக இருப்பார்களோ என்று நினைத்தேன். அந்தச் சந்தேகம் தீர்ந்து போய் விட்டது. அந்தப் பெண் தன் பவழ வாயைத் திறந்து "அப்பா" என்று அருமையாகக் கூப்பிட்டாள். அந்தக் குரலில் தான் என்ன கனிவு! அந்தக் குழைவும் உருக்கமும் என்ன என்று சொல்வது?

அந்த மனுஷ்யன் அதற்கு நயமாக ஏதாவது பதில் சொல்வார் என்று நினைக்கிறீர்களா? இராஜபாளையத்து நாய் மாதிரி சீறிக் குரைப்பார். 'அட பாவமே! கிளி மாதிரி இந்தப் பெண்ணுக்கு இப்படி ஒரு தகப்பன் வாய்த்தானே!" என்று நினைத்துக் கொள்வேன்.

ஊருக்குத் திரும்ப இன்னும் ஒரு வாரம் தான் இருந்தது. பொழுது எப்படியோ போய் விட்டது. அவர் பங்களாவை நான்

சுற்றிப் பார்த்ததில்லை. அதையும் பார்த்து விடலாமே என்று அவரைக் கேட்டேன்.

"ஆஹா! பார்க்கலாமே!" என்று என்னைச் சுற்றிக் காட்ட அழைத்துக் கொண்டு போனார். காம்பவுண்டைத் தாண்டினால் நேரே அறைக்குப் போய் விடுவது தான் என் வேலை. சுற்றி வந்து பார்த்தால் அல்லவா அதன் அழகு பூராவும் தெரிகிறது! எத்தனை செடிகள்? எத்தனை விதக் குரோட்டன்ஸ்? விட்டு விட்டு வரவே மனம் வரவில்லையே? கொல்லைப்புறம் வந்தேன். அங்கே நின்று கொண்டிருந்தாள் அந்தப் பெண். ஒரு நிமிஷம் அவளையே பார்த்திருப்பேன். பக்கத்தில் அவர் இருப்பதை ஞாபகப் படுத்திக் கொண்டு பார்வையைச் சட்டென்று கீழே தாழ்த்தினேன். அவர் அவளையே உற்றுப் பார்த்தார்.

"இதோ சற்று இருங்கள்" என்று போனார். கொஞ்ச நேரம் அவளோடு ஏதோ கடுமையாகப் பேசிக் கொண்டிருந்தார். "ஐயோ பாவம்! இவளை அதட்ட இவனுக்கு என்ன கல் நெஞ்சு!" என்று நினைத்துக் கொண்டேன். அவள் மீது எனக்கு ரொம்பவும் இரக்கம் உண்டாயிற்று. எப்படி உண்டாயிற்று? இவர் மிரட்டுவதைப் பார்த்து மட்டும் தானா! இல்லவே இல்லை. இவர் பேச்சைக் கேட்டவுடன் வாடிச் சுருங்கிப் போகும் அந்த முகம், கொடூரத் தன்மை தாங்க மாட்டாமல் ஏக்கத்தையும் துயரத்தையும் தேக்கி வைத்துக் கொண்டிருக்கும் அந்தக் கண்கள், துடிக்கும் உதடுகள் — ஒவ்வொன்றையும் பார்த்தால் எவனும் இரங்கிப் போகவேண்டாமா?

அன்று இரவு மணி எட்டு இருக்கும், அவள் சௌந்தர்ய வடிவமும் அழகு ததும்பும் முகமும் என் கண் முன்னால் வந்து நின்றன. மாடியில் என் அறைக்குப் பக்கத்து அறைக்கு அவள் அடிக்கடி வருவாள். அவர் இன்னும் வெளியிலிருந்து திரும்ப வில்லை. என்னையறியாமல் அந்த அறைப் பக்கமாக நடந்தேன், அவள் என்ன செய்து கொண்டிருப்பாள்? அழுது கொண்டிருப்பாளோ? அழுதால் பத்மம் போன்ற அந்த முகம் என்னத்துக் காகும்? ஒரு விசும்பல் சத்தம் கேட்டது. தைரியத்தை வருவித்துக் கொண்டு உள்ளே போய் விட்டேன். என் காலடிச் சப்தத்தைக் கேட்டுத்தானோ என்னவோ தலையை நிமிர்ந்தாள், அவளுடைய கரிய விழிகளின் ஓரத்தில் இரண்டு நீர்த் துளிகள் "கீழே விழுந்து விடுவேன்" என்று பயமுறுத்திக்கொண்டிருந்தன.

"உனக்கென்னம்மா வருத்தம்?"

அவள் மருண்ட பார்வையுடன் என்னைப் பார்த்தாள். அவள் முகத்தில் படிந்திருந்த சோகம் அளவில்லாமல் இருந்தது.

"பயப்படாமல் சொல் அம்மா! என்னால் முடிந்த வரையில் உனக்கு உபகாரம் செய்வேன்,"

அவள் தலையை மெதுவாக ஆட்டினாள். பிறகு என்னைப் பார்த்தாள். அந்தக் கூரிய பார்வை என் நெஞ்சை அறுப்பது போல இருந்தது. அவள் என்னைப் பார்த்த பார்வை "சொன்னாலும் இவர் எங்கே நம்பப் போகிறார்?" என்று எண்ணுவது போல இருந்தது.

"உனக்கு என்ன கஷ்டம்? நான் இங்கே வந்து நிற்பதே உனக்குக் கஷ்டம் தானா! அப்படியானால் அதையாவது சொல்லு. போய் விடுகிறேன்." என்று போகக் கிளம்பினேன்.

"என் கஷ்டத்தை நீங்கள் தீர்க்க முடியாது." என்றாள் விம்மல்களுக் கிடையே. பதினாறு வயதுப் பெண்ணுக்கு அப்படி என்ன துக்கம்? அப்படி என்ன கஷ்டம்! எனக்கு ஆச்சரியமாக இருந்தது. தவிர, கொஞ்சம் சங்கடமாகவும் இருந்தது. நான்பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் அவர் வந்து விட்டால் என்ன செய்வது? என்ன நினைத்துக்கொள்வார்?

"சொல்வதற்கு ஒன்றுமில்லை." நான் திரும்பினேன், இப்படி அழுத்தமாகப் பேசும் பெண்ணோடு எதைப்பேசுவது? இரண்டடி வைப்பதற்குள் மறுபடியும் அந்த முகத்தை பார்க்க வேண்டும்போல இருந்தது. திரும்பிப் பார்த்து,

"என்னை அன்னியன் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

அவள் பார்த்த பார்வையில் என்னை நம்பியது போலப்பட்டது. இந்த மட்டுமாவது இணங்கி வந்தாளே என்று பக்கத்தில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். கனிவோடு அவள் பேசத் தொடங்கினாள்.

"இந்த மனிதர் என் அப்பாவே இல்லை."

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என்ன?"

"ஆமாம். இவர் என் அப்பாவே இல்லை. சின்ன வயதிலேயே அவர் செத்துப் போய் விட்டார். அம்மா மட்டும் தான் இருந்தாள். கும்பகோணத்தில் காவேரிக்கரை ஓரமாக, சகாநாயகன் தெரு. இருக்கிறது உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ? அங்கே நான் இருந்தேன் அம்மாவோடு. நாலு வீடு தள்ளி ஒரு மாடி வீடு. அந்த வீட்டில் ஒரு வாலிபன் இருந்தான். பார்க்க ரொம்ப அழகாக இருப்பான்.

அவள் முகத்தில் வெட்கம் தோன்றியது. கன்னங்கள் ரோஜாப்பூவைப்போலச் சிவந்தன.

"உம். வெட்கப் படாமல் சொல்."

"கொஞ்சம் கொஞ்சம் உங்கள் ஜாடையாக இருப்பான். உங்களைப் பார்த்ததிலிருந்து எனக்கு அவன் ஞாபகம் தான் வருகிறது. ஓயாமல் அழுகிறேன்."

"உம்."

"அவர் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை. நான் ஏழை தானே. ஒரு நாள் எங்கேயோ மறைந்து போய் விட்டார். எங்கே போனரோ? என்னை ஏன் அவர் நினைக்க வேண்டும்! அந்தச்சமயத்தில் இவர் வந்துசேர்ந்தார். அம்மாவிடம் வந்து பேசிக் கல்யாணம் நிச்சயம் செய்து கொண்டார்."

"அட!"

"நான் எப்படி சம்மதிப்பேன்? ஒரே பிடிவாதம் பிடித்தேன். அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக் கல்யாணம் நடந்தது. அப்புறம் புறப்பட்டு என்னை அழைத்துக் கொண்டு கோயம்புத்தூருக்குப் போய் விட்டார்."

"இங்கே ஏன் வந்தீர்கள்?"

"அதைச் சொல்ல மறந்து விட்டேனே? வெய்யில் காலத்தில் நாங்கள் இங்கே வந்து விடுவோம். போன வருஷம் கல்யாணம் ஆகி இரண்டு மாதம் கழித்து வந்தோம். இப்போதும் வந்திருக்கிறோம். ஒன்று சொல்ல வேண்டுமே? சொன்னால் நம்பமாட்டீர்கள்?"

"ஏன்?"

"இவரை ஏன் நான் "அப்பா! அப்பா!" என்று கூப்பிடுகிறேன் யோசித்தீர்களா?"

"இல்லை."

"அவருக்கு ஐம்பத்தைந்து வயது; எனக்குப் பதினறு வயது. அவருக்கும் எனக்கும் கலியாணம் என்று சொல்லிக் கொள்ள அவருக்கே வெட்கமாய் இருக்கிறது."

"அதனல்?"

"அதனல் அவரை 'அப்பா' என்றே கூப்பிடச் சொல்லி இருக்கிருர். ஆனல் வாழ்க்கையில் நாங்கள் கணவன்—மனைவியாக இருக்கிறோம். வயது மட்டும் ஆகியிருந்தால் பரவாயில்லை. ஆனல் என் தலை விதி......?" என்று பெருமூச்செறிந்தாள்.

"என்ன?

"அவருக்குப் பைத்தியம்."

"ஐயோ! அதென்ன?"

"பைத்தியம் என்ருல் பைத்தியம் இல்லை. கொஞ்சம் எப்போதாவது சித்தப் பிரமை மாதிரி இருக்கும். அந்த மாதிரி சமயங்களில் என்பாடு ஆபத்து. சவுக்கு ஒன்று வைத்திருக்கிருர். என்னை விளாசி விடுவார். ஒரே வெறி."

"உம்."

"என் தலை விதி. நான் ஏதோ படுகிறேன். குற்ருலத்துக்கு வந்தால் அந்த மாதிரி வியாதி எல்லாம் குணமாகும் என்று சொல்கிருர்கள். நான் உங்களுக்கு எச்சரிக்கைசெய்வதெல்லாம் நீங்கள் இதில் ஒன்றிலும் தலையிடாதீர்கள். என்னல் உங்களுக்கு எதற்குக் கஷ்டம்?"

நான் எழுந்து திரும்பினேன். திடுக்கிட்டேன். வாசற்படியண்டை அவர் நின்று கொண்டிருந்தார். தலை குனிந்தவாறே அறைக்குத் திரும்பி விட்டேன்.

என் மனம் எண்ணுததெல்லாம் எண்ணியது. அந்தப் பெண்ணின் வாழ்க்கையை நினைத்துப் புலம்பியது. அந்தச் சோக முகத்தை நினைத்து நினைத்து மனம் சோர்ந்து போனேன். எல்லாவற்றிற்கும் மேல் ஒரு பயம் தான் தலை தூக்கி நின்றது. நான் அறையில் இருந்ததை அவர் பார்த்து விட்டாரே? என்ன நினைப்பாரோ? என்னைக் கடிந்து கொண்டு வெளியே போகச் சொன்னல் ஊருக்கு வந்து விட்டுப் போகிறேன். அந்தப் பெண்ணை என்ன பாடு படுத்துவாரோ? அவர் தம்முடைய மனதுக்குள்ளே ஏதாவது நினைத்துக் கொண்டு திண்டாடுவாரோ! அந்த மாதிரி நிலை வந்து விட்டால் சித்தப்பிரமை உள்ளவர்கள் பாடு சிரமம். அப்படி ஏதாவது நேர்ந்து விட்டாலும் அவள் பாடுதானே கஷ்டம்? நல்ல பொழுதாய்க் கழியவேண்டுமே? மனிதன் மூர்க்கன் ஆயிற்றே!

நான் பயந்தது நடந்து விட்டது. மணி பதினென்று இருக்கலாம். நல்ல நிலா வெளிச்சம். மாடியிலிருந்து பார்ப்பதற்கு மலைக்காட்சி ரொம்ப அழகாக இருந்தது. என் அறையிலிருந்து நாலாவது அறை அவர்கள் படுக்கை அறை. திடீரென்று ஏதோ ரகளை நடப்பதுபோலத் தோன்றியது. எழுந்து வராந்தாவுக்குப் போனேன். சப்தம் இன்னும் நன்ருகக்கேட்டது. "சொடேர்! சொடேர்!" என்ற சவுக்கடி சப்தமும், கூடவே ஒரு பெண்ணின் "ஐயோ! ஐயோ!" என்ற கூக்குரலும் காதில் விழுந்தன. என்னல் பொறுக்க முடியவில்லை. அந்தத் திசை

யை நோக்கி ஓடினேன். தீனமான அந்த அலறல் இப்போது மயங்கி ஓய்ந்து விட்டது. சவுக்கடி சப்தம் மட்டும் கேட்டது. அறை திறந்து கிடந்தது. அவள் கீழே விழுந்து கிடந்தாள். அந்த மூர்க்கன் இன்னும் அவளை அடித்துக்கொண்டிருந்தான். நான் அவன் கையைப் பிடித்துக்கொண்டேன். சவுக்காவது சவுக்கு! டிராமாக்களில் கொண்டு வருவார்களே பார்த்திருப்பீர்களே, அந்த மாதிரி இருந்தது.

திரும்பிப் பார்த்து, "உன்னை யார் இங்கே வரச்சொன்னது?" என்று கேட்டான். அவன் முகத்தில் பேய்க்களை கூத்தாடியது. ஒரே வெறி. அவள் சொன்னதில் தப்பே இல்லை. அவனைப் பலவந்தமாக ஒரு நாற்காலியில் இழுத்துத் தள்ளினேன். கீழே குனிந்து அவளைத் தொட்டேன்.

"ஒன்றும் பிரயோசனமில்லை. தொடாதே. அவள் உயிர்போய் ஐந்து நிமிஷங்கள் ஆகி விட்டன."

பரபரப்புடன் அவள் மூக்கில் கையை வைத்துப் பார்த்தேன். மூச்சு இல்லை. கை கால்கள் துவண்டு கிடந்தன. உயிர் போயி



ருந்தாலும் ஐந்து நிமிஷத்துக்குமுன் போயிராது. சற்று முன்னால் தான் அவள் குரலைக் கேட்டேனே? ஒரு நிமிஷம் ஆகியிருக்கலாம். சாயங்காலம் உணர்ச்சிகளைக்கொட்டிய அந்த முகம் இப்போது உணர்ச்சியற்று மரக்கட்டை மாதிரி இருந்தது.

கொலை! என்னால் நினைக்க முடியவே இல்லை. ஆவேசத்தோடு எழுந்து அவன் நின்ற திக்கை நோக்கிப் பாய்ந்தேன். காலில் ஏதோ இடறியது. அறையில் எல்லாப் பொருள்களும் சுழன்றன. ஒரு பேய்ச்சிரிப்பு காதில் அதிர்ந்தது. நினைவிழந்தேன்.

மறு நாள் காலை. மணி ஏழு இருக்கலாம். கண்ணை விழித்தேன். உடம்பில் கொஞ்சம் வலி இருந்தது. என் மனதில் முந்தையநாள் நடந்ததெல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. கனவு மாதிரி இருந்தது. இப்போது நான் என் அறையில் கட்டிலில் கிடந்தேன். பக்கத்தில் ஒரு டாக்டரும் அந்த நண்பரும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

என் முகத்தில் வெறுப்புத் தோன்றியது. கொலைகாரனுடைய வீட்டில் எனக்கென்ன வேலை? எழுந்து உட்கார்ந்தேன். "படுத்துக் கொள்ளுங்கள் ஸார்!" என்றார் டாக்டர்.

"இருக்கட்டும். யாரிடம் இந்த வேஷமெல்லாம்? ஓய்! உண்மையைச் சொல்லி விடட்டுமா?" என்று நண்பரைப் பார்த்துக் கேட்டேன்.

"சொல்லுமே! வேடிக்கையாக இருக்கும்!" நான் நடந்ததைக் கூறினேன்.

டாக்டர் எழுந்து வெளியே போனார், மறுபடி இன்னொருவருடன் உள்ளே வந்தார். உள்ளே வந்தது யார் என்று நினைக்கிறீர்கள்? அதே பெண் தான்! அவளே தான்!

"கொலை செய்யப் பட்டது இவர் தானே?" என்று கேட்டார் டாக்டர், எனக்கு மறுபடியும் மயக்கம் போடப் பார்த்தது, எல்லோருமாகச் சேர்ந்து என்னைப் பைத்தியம் ஆக்குகிறார்களா என்ன?

"சொல்லி விடுங்கள் ஸார்! பாவம்! அவர் புரியாமல் தவிக்கிறார்!" என்றாள் அவள், என்ன ஜாலம்!

என் நண்பர் கூறினார். "சொன்னால் உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும், வருஷா வருஷம் நான் இங்கே வருவது வழக்கம், இது என் சொந்த பங்களா. நான் ஒரு டிராமா கம்பெனியின், முதலாளி. டைரக்டரும் கூட, புது நட்சத்திரங்களைக் கண்டுபிடித்து நேயர்களுக்கு அறிமுகப் படுத்துவதில் எனக்கு ஒரு ஆவல். அதற்காக யாராவது அகப் படுவார்களா என்று பார்க்க வருஷா வருஷம் "ஸீஸனுக்கு" இங்கே வந்து விடுவேன். நீங்கள் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னால் இந்தப் பெண் இங்கே வந்தாள். "உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன். என்னை உங்கள் கம்பெனியில் சேர்த்துக் கொள்ளவேண்டும்" என்றாள், "நீ இதற்கு முன் நடித்ததில்லை என்கிறாய். உன்னிடம் அந்தத் திறமை இருக்கிறதா என்று நான் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அதற்காக இங்கே பதினைந்து நாட்கள் என்னோடு தங்கு. ஒரு யோசனை சொல்கிறேன்." என்றேன். அவள் ஒப்புக் கொண்டாள். அதன்படி நீங்கள் இங்கு வந்த பிறகு உங்களை வைத்துக் கொண்டே ஒரு சிறு நாடகம் நடத்தி விடுவது என்று தீர்மானம் செய்தோம். இதற்குப் பத்து நாட்கள் முன்பிலிருந்தே பிடிகையை ஆரம்பித்தோம். நேற்றுத்தான் கைகூடியது.

நேற்று இரவு அவள் உங்களுடன் பேசிக் கொண்டிருந்தபோதும், ராத்திரி நீங்கள் வந்த போதும் அவள் மயங்கிக்கிடந்த போதும் நடந்ததெல்லாம் வெறும்நாடகம் தான். அவ்வளவும் நடிப்பு! இந்தப் புது நட்சத்திரத்தைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? என் வரைக்கும் எனக்குப் பூரண வெற்றி."

"நடிப்பா அது? தத்ரூபமாக இருந்ததே?" என்றேன். அப்பாவி தானே ஸ்வாமி நான்! இல்லா விட்டால் இவர்கள் கையில் ஏன் அகப் பட்டுக் கொண்டு விழிக்கிறேன்?

"இருந்தாலும், உங்களுக்கு அதிர்ச்சியில் ஜ்வரம் கூட வந்து விட்டது. அதற்காக டாக்டரை வரவழைத்தோம்." என்றார்.

அந்த மட்டுமாவது செய்தார்களே! பிறகு அன்று சாயந்திரம் எனக்கு ஒரு விருந்துநடத்தினார்கள். நான் மறுநாளே புறப்பட்டு வந்து விட்டேன். அதற்குப் பிறகு அந்த நட்சத்திரம் எங்கு நடித்தாலும் நான் தவறுகிறதில்லை. அவள் நடிப்பு எனக்கு அவ்வளவு பிடித்திருந்தது. அவள் தான் இந்தச் சகுந்தலா!" என்று முடித்தார்.

* * *

"மழை நின்று விட்டது போலே இருக்கிறதே. போய்த் தூங்குவோம் வாருங்கள்." என்றார் ஸந்தானம்.

"கதை ரொம்ப சுவாரசியமாக இருந்தது. நிகழ்ந்தது என்று நம்புவதே கஷ்டமாக இருக்கிறது,"

"இருக்கட்டும். இதை எவரிடமேனும் சொல்லி என் மானத்தை வாங்கிவிடாதீர்கள்." என்றார் ஸந்தானம்.

"ஆஹா!" என்றேன்.

சொன்னபடி செய்து விட்டேன். ஒருவருக்கு இல்லை: உங்கள் எல்லோருக்குமே சொல்லி விட்டேன்,

அகில தேச நாடகக்கலை II

(நவீன உறுப்புக்கள்)

ஆண்டி

அபினயக் கலை வேறு, அரங்கமேடைக் கலை வேறு, நாடகக்கலை வேறு. மூன்றும் மூன்றுவிதமான கலைகள். நாடக நூல்களை நடிகர்கள் தங்கள் கைகால்கள், கண்கள், உடல், வாய்ச்சொற்கள் இவைகளால் அபினயிப்பதே அபினயக்கலையாகும். இக்கலையில் நாடக நூலை இயற்றும் முறையும், அரங்கமேடையை அமைக்கும் முறையும், சீன்கள், தீபங்கள், பக்க மேளங்கள் இவைகளைக் கையாளும் முறைகளும் உட்படவில்லை.

அரங்கமேடைக் கலையில் அபினய முறையும் நாடக நூலை இயற்றும் ரீதியுமின்றி இதர விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. சீன்களைத் தயாரிப்பது. அவைகளைச் சமயோசிதம்போல் காண்பிப்பது, மாற்றுவது, மின்சார விளக்குகளையும், சங்கீதக் கருவிகளையும் உபயோகிப்பது, இவையெல்லாம் அரங்கமேடைக் கலையின் அம்சங்கள்.

நாடகக்கலையில் மேற்கூறிய இரண்டும் உட்படுவதேயில்லை. நாடகாசிரியன் அவ்விருகலைகளையும் நன்ருக அறிந்திருக்க வேண்டுமானுலும், அவனுடைய கடமை நாடகக் கதையொன்றை நிர்மித்து, அதைச் சம்பாஷணை ரீதியில் இயற்றுவதேயாகும். நடிகர்களும் அரங்கமேடை மானேஜரும் இவனுடைய கதையையும் சம்பாஷணைகளையும் குட்டிச் சுவராக்கினுலும் இவனுக்குப் பொறுப்பில்லை. தியாகய்யர் கீர்த்தனங்களைக் கொலை செய்யும் பாகவத கோடிகளைத் தியாகய்யரால் என்ன செய்ய முடியும்?

ஆனல் கதையமைப்பதிலும், சம்பாஷணைகளை எழுதுவதிலுமே நாடகாசிரியனுடைய ஆதரிசங்கள், கொள்கைகள், கவித்திறமை, சொல்லோவியம் இவைகள் மிளிர்கின்றன. சாதாரணபாமரர்கள் நாடகங்களைத் தரிசிக்கும்பொழுது கதைகளின் வேற்றுமைகளையும், மனோதர்ம விகாசங்களையும் கண்டு, அதை இயற்றும் ஆசிரியர்கள், தங்கள் மனம் போனவாறு பழையகாலத்து விக்கிரமாதித்தன் கதைகளைப்போல், சொல்லிக் கொண்டே போகிருர்கள் என்று எண்ணி விடுவார்கள். ஒரு காலத்தில் சிற்சில தேசங்களில் அவ்விதமும் நாடகங்களியற்றப்பட்டன. ஆனல் நாகரிகமும், இலக்கிய உணர்ச்சியும், ரஸிக்கும் உணர்ச்சியும் உலகிலே வளர வளர நாடகமியற்றும் முறைகளிலும் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே வந்தன.

உதாகரணமாக, நமது நாட்டில் ஸம்ஸ்கிருத நாடகத்தைப் பத்துவித உறுப்புக்களாக்கித் "தசரூபகம்" என்ற பெயருடன் கட்டுப்படுத்தியிருந்தார்கள். ஆனல் கி. பி. 10 ஆவது நூற்ருண்டுக்குமேல் இன்னும் பதினெட்டுவிதமான "உப ரூபகங்கள்" கூட ஏற்பட்டுவிட்டன. இதைப்போலவே அன்னிய நாடுகளிலும் பற்பலவிதமான உறுப்புக்கள் தோன்றியதுண்டு. 'ட்ராஜெடி' (tragedy) யென்றும், 'காமெடி'யென்றும் (comedy) புராதன கிரேக்க ரோமர்களிடம் நிலவி வந்தன. 'பிரஹசனங்க'ளென்றும், 'நாடகங்க'ளென்றும் சில தேசங்களில் வேற்றுமையுண்டாயிற்று. 'ஊமை நாடக'மென்றும் 'சொல் நாடக'மென்றும், 'சாயா நாடக'மென்றும் சில தேசங்களில் பிரித்தார்கள். 'மத பரமான நாடக'ங்களென்றும், 'மனோதர்ம நாடக'ங்களென்றும் இன்னும் சில தேசத்தார் பிரித்தார்கள். 'பாவை நாடக'ங்களென்றும், 'வாய்ப்பேச்சு நாடக'ங்களென்றும் கூடச் சில நாட்டார் வகுத்தனர்.

ஆனல் நாளிது வரையிலும் உலகிலுள்ள பற்பல நாடுகளிலுமாகத் தோன்றியிருக்கும் ஆயிரக்கணக்கான நாடகங்களையும், படித்து ஆராய்ச்சி செய்வோமானல், அவைகள் அனைத்தையும் விரிவான ஐந்து உறுப்புக்களாக வகுத்துவிடலாம். அவ்வைந்து நாடக உறுப்புக்களிலும் அரங்கமேடை அமைப்பு முறையையோ, அபினய முறையையோ தழுவிய கட்டுப்பாடு கிடையாது. கதைப் போக்கு, வசனம், ஆசிரியன் கருத்து, இவைகளைத் தழுவிய நிபந்தனைகளே உள.

1. அனுபவ மொழித்தல்

நாடகக் கலையின் அடிப்படையான நோக்கம் ஆயாச நிவர்த்தியேயென்றும், அக்கலையில் ஏதேனும் கம்பீரமான தத்துவ விஷயங்களை நுழைப்பது ரஸாபாசமாகுமென்றும் பல ரஸிகர்கள் எண்ணி வருகிருர்கள். "சம்சாரக் கடலிலே மூழ்கித் தவித்திடும் நமக்குச் சொற்ப நேரமாவது அதைவிட்டு வெளியேறிக் களைப்பாறும்பொருட்டுத் தொன்றுதொட்டே கிடைத்த இந்த நாடகக்கலை, ஜீவித ரகசியங்களைப் பற்றிய சர்ச்சை செய்யவோ, அல்லது தரும நீதிகளை உரையாடவோ முயல்வதா?" என்று அவர்கள் கேட்கிருர்கள். "நாடகத்தின் கலப்பற்ற இன்ப வெள்ளத்தில் ஆசிரியன் எதற்காக தனது அற்பக் கொள்கைகளைக் கலக்கி மலினமாக்கவேண்டும்? நாடகமென்

பது அனுபவத்தையோ, மனோராஜ்யத்தையோ, எதை அடிஸ்தானமாகக் கொண்டிருப்பினும், கண்ணையும், காதையும் கவரும் திருசிய காவியமலரிலிருந்து வார்த்தெடுக்கப்பட்ட இன்பரஸத்தை மாத்திரமே யளிக்க வேண்டும்" என்கிறார்கள். மனக்களிப்பை அகற்றும் நீதி போதங்களே இந்த ரஸிகர்களுக்குப் பிடிக்கவில்லையாம். "கால்பந்து" (Foot ball) விளையாட்டிலோ, டென்னிஸ் (tennis) பந்தயத்திலோ வாழ்க்கையின் குணகுண விசாரணையை எதிர்பார்க்கிறோமா நாம்? சீட்டாட்டத்தில் வேதாந்த சாரத்தையோ தீண்டாமையொழித்தலையோ புகுத்தவிரும்புகிறோமா? விநோதத்தையே கருத்தாகக் கொண்ட நாடகக் கலையில் மாத்திரம் ஞான போதத்தை ஏன் நுழைக்கவேண்டும்?" என்று வாதிக்கிறார்கள்.

ஆங்கில நாடகாசிரியன் 'ஷெரிடன்' (Sheridan) இயற்றிய "ஸெயின்ட் பாட்ரிக்ஸ் டே" (St. Patrik's Day), ஷேக்ஸ்பீயர் இயற்றிய "நடுக்கோடை இரவிற்கனவு" (A Midsummer Night's Dream), "புயல்" (Tempest) முதலிய கற்பனைகளில் அவர்கள் மனம் மகிழ்கின்றனர். இந்நாடகங்கள் சுத்த இன்பரசத்தையே கருத்தாயமைத்தெழுதப்பட்டவையென்றும் கூறி மகிழ்கின்றனர்.

2. இயற்கையின் புகைப்படம்

நாடகத்தை வாழ்க்கையின் சித்திரமாக்குவதே அதன் உயரிய கருத்தென்று மற்றொரு சாரார் கூறுகின்றனர். ஸ்தூல உலகிலே பிரதி தினம் நமது கண்ணெதிரே தோன்றிடும் காட்சிகளைக் கதாவஸ்துவாக்கிடவேண்டுமாம். ஸ்ரீ பாத்ரெய்க் கோலம் (Padraic Colum) என்ற அயர்லாந்து தேசத்து நாடகாசிரியர் இதைப்பற்றிப் பின் வருமாறு விளக்குகிறார்.

'நாம் ஓவியக்காரன் ஸ்டூடியோவிற்குள் இருப்பதாக எண்ணிக்கொள்வோம். அங்கே பற்பல சித்திரப்படங்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடக்கின்றன. ஓவியன் அவைகளுள் ஒன்றையெடுத்து நமக்காக ஒரு சட்டத்திலே இட்டுக் காண்பிக்கிறான். உடனே நாம் அதை அதிக நுட்பமாகக் கவனிக்கிறோம்..............அதைப்போலவே கடைத்தெருவிலே ஓர் எளிய பிச்சைக்காரி நம்மிடம் யாசகம் கேட்கிறாளென்று வைத்துக் கொள்வோம். அவளது முகத்தையோ நிலைமையையோ, பாவனைகளையோ நாம் திரும்பிக்கூடப் பார்க்கிறோமில்லை; வந்து விடுகிறோம். ஆனால் யாராவதொரு நடிகை அந்தப் பிச்சைக்காரியைப்போல் வேஷமிட்டுக்

ஜெனரல் சப்ளையர்ஸ்

Post Box-29

5. பாணாதுறை சன்னதி
கும்பகோணம்
(டிஸ்ட்ரிபியூடர்ஸ்)

பம்பாய்

சுவஸ்திக் ஆயில் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்ட

சுத்தமான ஆமணக்கெண்ணெய், ஆமணக்கெண்ணெயில் தயாரித்த கூந்தல் தைலம், மாயா கார்டீனியா கூந்தல் தைலம், 777 பார் சோப்புகள், சோப் பௌடர், தேகத்திற்கு உபயோகிக்க டாய்லெட் சோப்புகள் (காந்தி சந்தனசோப் — கார்பாலிக் யுடிகொலோன் சோப் முதலியன).

கேஸ் லாட்டாகவும், டஜன் கணக்கிலும் கிடைக்கும். தவிர லின்ஸீட் ஆயில், க்ளிசரின், பினேல் இவைகளும் கிடைக்கும்.

போதனூர்

டிடான் பெயின்ட் & வார்ணிஷஸ், லிட். கம்பெனியாரால்

தயாரிக்கும் பலரக உயர்தர பெயிண்டுகளும் வார்ணிஷ்களும்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மேற்கண்ட விலாசத்தில் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கொண்டு அரங்க மேடையிலே நடிக்கும் பொழுது நமது கண்கள் திறக்கப் படுகின்றன. அவளது முகத்திலுள்ள மேடுகள், பள்ளங்கள், வரைகள், கவலைக்குறிகள், கும்பிடும் கைகள் எல்லாம் அர்த்தபுஷ்டியுடையனவாகத் தோன்றுகின்றன. நம் அனைவருடைய மனத்தினுள்ளும் பதுங்கிக் கிடக்கும் மனோ பாவங்களின் புகைப்படமேயென்றும் உணருகிறோம்"

நாடகமென்பதே வாழ்க்கையைப் படமெடுத்துக் காண்பிக்கக் கூடியதென்றும், அதன் ஆசிரியன் ஒரு புகைப்படக் காரனேயென்றும் இக்கட்சியார் வாதிக்கின்றனர். ஆகையால் கேவலம் அற்ப வேடிக்கைக்கும் ஆயாச நிவிர்த்திக்குமாக ஏற்பட்ட கருவியென்று நாடகத்தை எண்ணிவிடக் கூடாதென்கிறார்கள். அதைப்போலவே தத்துவ ஆராய்ச்சிகளையும், நீதி நியாய சர்ச்சைகளையும் கொண்டு மலினப்படுத்திவிடக் கூடாதென்றும், அவை இயற்கைக்கு மாறான செயற்கைகளே யன்றிச் சித்திரப் படங்களாக மாட்டா என்றும் கருதி வருகின்றனர்.

இவ்வித நாடகங்களும் இந்தியாவில் அதிகமாக ஏற்பட்டதில்லை. மேலை நாடுகளிலும் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே ஆதியாகத் தோன்றின. ருஷ்ய தேசத்துப் பேராசிரியர் மாக்ஸிம் கார்க்கி (MAXIM GORKY) இயற்றிய "பாதாளவாழ்வு" (THE LOWER DEPTHS) என்ற நாடகமும், பிரெஞ்சு தேசத்திய மாரிஸ் டோனே (MAURICE DONNAY) இயற்றிய "காதலர்" என்ற நாடகமும், ஆங்கில நாடகாசிரியரான ஹென்ரி ஆர்தர் ஜோன்ஸ் என்பவர் இயற்றிய "மேரீ முந்திச் செல்கிறாள்" ("Mary goes First") என்ற நாடகமும் இத்தகைய நோக்கத்துடன் எழுதப்பட்டவைகள் தான்.

3. ஆசைகளின் சித்திரம்

மூன்றாவது கூட்டத்தார் நாடகமென்பது நமது வாழ்க்கைக்கே அதீதமான ஆத்மீக இன்பத்தை யளிக்கக் கூடியதென்றும் இதயத்தின் ஆசைகளைச் சித்திரித்து ஆனந்த மூட்டுவதே யென்றும் எண்ணிவருகின்றனர். மனோ ராஜ்யத்திலே நாம் பலவிதச் சம்பவங்களை விரும்புகிறோம். ஆனால் அவைகளிலே பெரும்பாலும் இயற்கைக்கு மாறான, அசம்பாவித ஆசைகள், ஆயினும் நாடகக் கலையின் முக்கியக் கருத்து நம்மை அம்மாயப் பிரதேசத்திற்கு அழைத்துச் செல்வதேயென்றும், நாடகம் கலைகளுக்கே சிகரமாகையால் இக்கடமையை அது செலுத்தியே தீரவேண்டுமென்றும், இச்சாரார் வாதிக்கின்றனர். வாழ்விலிருந்து தத்துவத்தை வார்த்தெடுத்து, அதற்குச் சிற்பச் சிறப்பினால் வசீகரணமான சக்தியையும் ஆசிரியன் அளிக்க வேண்டுமாம். எவற்றினுடையவும் உத்தமத்தன்மையையும், உயிரையும் மாத்திரம் எடுத்துக்காட்ட அவன் முயலவேண்டுமாம். நாடக பாத்திரங்கள் இயற்கைக்குப் பொருந்தாத, உயிரற்றனவாயினும் சரி, சூத்திரப்பாவைகளாயினும் சரி, இக்கட்சியார் பொருட்படுத்துவதே யில்லை. அத்துடன் நாடகத்தைக் கேவலம் நேரம் போக்குவதற்காக ஏற்பட்ட வேடிக்கையாக்கி விடக்கூடாதென்றும் இவர்கள் வாதிக்கிறார்கள். அது ஸாராம்சம் புகட்டுவதோடு, உயர்தர வாழ்வுக்கு வழிகாட்டாவிட்டால் நாடகமாகாதாம். நமது நாட்டு நாடகங்களாகிய "ஹரிச்சந்திரன்" "பிரகலாதன்" "நந்தன்" முதலியன வெல்லாம். இவ்வர்க்கத்தைச் சர்ந்தனவே. மேலை நாட்டிலும் மேட்டர்லிங்க், வெர்ஹாரன், பெர்னார்ட்ஷா, கால்ஸ்வொர்தீ, முதலிய நாடகாசிரியர்களும் இத்தகைய கொள்கையையே ஆதரிக்கின்றனர்.

4. தத்துவ விளக்கப் பிரதிமை

இன்னும் நான்காவது கட்சியொன்று நாடகத்தை இயற்கையின் பிரதிமையாகவும், அதன் தத்துவ விளக்காகவும் கருதி வருகிறது. இவர்கள் இரண்டாவதாகக் கூறப்பட்ட புகைப்படக் கட்சியைவிட ஒருபடி உயர்ந்தவகளாவார்கள். ஏனெனில் புகைப்படத்தில் ஆசிரியனுள்ளம் ஏது? பிரதிமையிலன்றோ சிற்பியினுள்ளம் விளங்குகிறது? ஆனால் ஆசைச் சித்திரத்திலோ ஆசிரியனையன்றி வேறில்லை! தத்துவ விளக்கின் பிரதிமையில் ஆசிரியனது உள்ளம் பதுங்கிக் கிடக்கிறது. ஸ்தூலக்கண்களுக்குத் தென்படாது. எவ்வளக் கெவ்வளவு ஆசிரியன் மறைந்து நிற்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு கலைச் சிறப்பு. ஸ்ரீ ஜ்யார்ஜ் கால்டரான் என்ற ஆராய்ச்சிக்காரர் சொல்வதென்னவெனில், "ஒவ்வொரு ஆசிரியனும் இயற்கையினிடமே தன் சிற்பத்திற்குவேண்டிய கருவிகளைத் தேடிச்செல்கிறான். அங்கிருந்து பொருளொன்றைக் கடைந்தெடுக்கிறான். இச் சிற்பியின் பிரத்தியேக குணம் யாதெனில், பழைய காலத்து ஆசிரியனைப் போல் அப்பொருளை இன்னும் வார்த்தெடுக்கவோ, அல்லது கட்டுக்கதையாசிரியனைப் போல் பற்பல சுகந்த தைலங்களையிட்டு மறைத்திடவோ செய்யாமல் மறுபடியும் அதற்கு இயற்கையினழகையே அளித்திட முயல்வதேயாகும்"

இக் கட்சியார் நாடகத்தை இயற்கைத் தோற்றங்கூட இல்லாத ஒரு வியாசமாக்கி விடுவதில்லையாகையால் மூன்றாவது கோஷ்டியைக் காட்டிலும் ஒருபடி உயர்ந்தவர்களாவார்கள். வாழ்க்கை ஒரு நாளுமே கிலுப்தமான விடை கிட்டக்கூடிய ஒரு கணித சாஸ்திரப் பிரச்னையாகத் தோன்றுவதில்லை

யென்றும், ஆயிரக்கணக்கான அற்ப விஷயங்கள் ஒன்று சேர்ந்து பிரமாதமாகத் தோன்றிடும் விஷயமேயாகுமென்றும் இவர்கள் கருதுகின்றனர்.

அயர்லாந்து நாடகாசிரியராக இருந்த காலஞ்சென்ற ஜே. எம். சிஞ்சு என்பவர் "நாடகமென்பது உயர்ந்த சங்கீதத்தைப் போல் ஒன்றையுமே கற்பிக்கவோ, ருசுப்படுத்தவோ செய்யாது. பெரிய மகாத்மாக்களின் வாழ்வைப்போல் வாய் திறவா வழி காட்டியாகவே இருக்கும்." என்றார். இத்தகைய நாடகங்களை மேலை நாட்டில் நார்வே தேசத்து நாடக சக்ரவர்த்தியாயிருந்த இப்ஸென், ரஷ்யா தேசத்து டால்ஸ்டாய், பிரஞ்சு தேசத்து ஹென்றிபெக், ஜெர்மெனி தேசத்து ஹாப்ட்மன் முதலியவர்கள் எழுதி உலகமெங்கும் பரவச் செய்திருக்கின்றனர். ஸ்ரீ ஹர்ஷன் எழுதிய "நாகானந்தம்" என்ற நாடகமும், மஹேந்திரவர்மனுடைய "மத்த விலாசம்" என்ற நகைச்சுவை நாடகமும் இத்தகைய கொள்கையுடையவையே.

5. இந்திய ஆசிரியர்கள் கடமை.

ஆனால் நமது நவீன இந்தியாவின் கடமை யாது? நாடகாசிரியர்கள் மேற்கூறிய திட்டங்களில் எதனைக் கையாள வேண்டும்? இவ்வினாக்களுக்கு ஒரே வார்த்தையில் விடையளிக்க முடியாது. மானிடப் புத்தி விகாசம் நாளுக்கு நாள் புதிய வழிகளையும் முறைகளையும் உற்பத்தியாக்கிக் கொண்டிருப்பதால் ஒன்றையுமே வரையறுத்து விதித்திட முடியாது. மேலும் இப்பொழுதும் நாம் உணராமலே புதியதோர் முறை நமது ஆசிரிய கோடிகளிடையே தோன்றிக் கொண்டிருக்கவில்லை யென்று யாரால் கூற முடியும்? கலைத்திறமை என்றுமே ஒரே வழியிலே தான் வேலை செய்யுமென்று எண்ணுவது கலாசம்பந்தமான ஒரு மாயையேயாகும். ஆகவே ரஷ்ய நாடகாசிரியருள் காளிதாஸ ஸ்தானம் வகித்த காலம் சென்ற ஆண்டன் செக்காவ் என்பவருடைய அனுபவசித்தமான உண்மை வாக்கியமே நமது நாடக ஆசிரியர்களுக்கும் உபயோகப் படுமென்றெண்ணி அதைக் கூறி விட்டு முடிக்கிறேன். அவர் கூறுவதாவது:—

"நான் மிதவாதி கோஷ்டியையோ, பண்டைப்பற்றுக் கோஷ்டியையோ, முன்னேற்ற வாதத்தையோ, அல்லது ஒன்றிலுமே சேர்ந்திடாத தனிக் கோஷ்டியையோ சேர்ந்தவனல்லன். சுதந்திர ஆசிரியனாக மாத்திரமேயிருக்க விரும்புகிறேன். ஆனால் எந்த விதமான வாய்மைகளையும், ஏமாற்றங்களையும் வெறுக்கிறேன். சடங்குகளையும், பூசாரிகளையும், மூட விசுவாசங்களையும், கொடுங்கோன்மைகளையும், வியபார ஸ்தலங்களிலும், சிறைச்சாலைகளிலும் மட்டுமல்ல, சாஸ்திர ஆராய்ச்சியிலும், இலக்கியத்திலும், வாலிபர்கூட்டங்களிலும், நான் காண்கிறேன். அவைகளையும் முத்திரை வாக்குகளையும் (Slogans), பட்டப் பெயர்களையும், கேவலம் மாயைகளாகவே கருதுவேன். மானிடதேகம், ஆரோக்கியம், புத்தி, சக்தி, அருள், அன்பு, உன்னதமான சுதந்திரம் இவைகளே என்னுடைய மகாபவித்ரமான பொருள்கள். நான் உண்மையான ஆசிரியனாயிருப்பின் இம்முறைப்படியே நடப்பேன்."

கலை உணர்ச்சியின் விகாஸத்தைக் குறுகிய சட்ட திட்டங்களால் கட்டுப்படுத்த முயலுவது மூடத்தனமாகும். அவ்விதக் கட்டுப்பாடு கலையையே மட்டந்தட்டி விடும். கலையோ நாடகமோ அதனதன் பிரேதங்களையே படிக்கற்களாயமைத்துக்கொண்டு, அவைகளை மிதித்து மேலேயுயர்ந்து விடலாமென்று நினைப்பதும் பகற்கனவு. கலை என்றுமே நவநவ ரூபங்களாலேயே ஜீவிக்கின்றது. யுவபலமுடைய சுதந்திர ஆசிரியர்களின் அருள் வாக்குகளையும் விமரிசனத்தையும் விரும்புகிறது. ஆனால் சுதந்திரமோ, கலாவாஸனையோ மலர்ந்து மணம் கமழவேண்டுமானால், பயிற்சி செய்யாமலியலாது. பயிற்சியென்றால் சட்டதிட்டக் கட்டுப்பாடல்ல. உழைப்பு உழைப்பு—உழைப்பு — ஓயாத உழைப்பு! ஓயாதுழைக்கும் வல்லமையே அருள் கலாவாசனையென்றும் சிலர் கூறுவதுண்டு.

ஆகவே நமது இந்திய நாடகாசிரியர்களுடைய ஆதர்சம் மேற்கூறிய நான்கு மார்க்கங்களில் யாதேனும் ஒன்றைப்பற்றியதாயிருக்கவேண்டுமென்பதில்லை. அவைகளுக்கப்பாலும் செல்லலாம். அவைகளின் கலப்பாகவுமிருக்கலாம். ஆனால் மிருக மனிதனை உயர் மனிதனாக்கவோ, அல்லது தெய்வீக வாழ்வுக் கழைத்துச் செல்லவோ உதவாத நாடகம் நமது இந்திய பாரம்பரிய உணர்ச்சிக்கு மாறுபட்டதென்பதை நாம் உணரத்தான் வேண்டியிருக்கிறது. வீணுக்கு விழலுக்கு முத்துலை கட்டியிறைப்பதில் ஒரு உழவாளி உளம் மகிழ்வானாயின், அவனை நாம் எந்த ஆஸ்பத்திரிக்கனுப்புவோம்?

குபேரனாகவும் வேண்டாம்! குசேலனாகவும் வேண்டாம்! பொது மனிதனைக் கலை உணர்ச்சியுடைய நாகரிக மனிதனாக்கவும். உலகத்துடன் ஒத்து வாழ்பவனாக்கவும், செருக்கோ அடிமைத்தனமோ தோன்றாமல் தலை நிமிர்ந்து நடப்பவனாகவும், மூட விசுவாசம், அஞ்ஞானம் இவைகளை அகற்றியவனாகவும் செய்திடும் உணர்ச்சியை ஊன்றிடுவதற்கே கலையும், நாடகமும், சங்கீதமும், இலக்கியமும் உதவ வேண்டுமென்பதே எல்லா உண்மைக் கலைஞரின் லக்ஷியமாயிருந்தாற் போதுமென்பது என் தாழ்மையான ஆசை.

புத்தக விமர்சனம்

மிருக வாழ்க்கை

[அப்டன் சிங்கிளேர் எழுதிய நாவல். S. சண்முகம் தமிழ் மொழிபெயர்ப்பு. விலை 3—0—0 கார்த்திகேயினி பிரசுரம். இராமச் சந்திரபுரம் P. o. திருச்சி ஜில்லா.]

அப்டன் சிங்கிளேர் அமெரிக்க நாவலாசிரியர் மட்டில் அல்ல. சிறந்த சமுதாயவாதி. மக்கள் உழைப்பை உறிஞ்சும் முதலாளித்வ ஊழல்களை வெளிப்படுத்தி, ஏனைய மக்களும் மனிதர்களாக வாழத்திட்டம் போட்டுக் கொடுக்கும் பேராசிரியர் அப்டன் சிங்கிளேர். குபேர நாடு என்று போற்றப்படும் அமெரிக்காவில் உழைத்து, உடல் நலிந்து, குடும்ப வாழ்க்கை குலைந்து சமூகத்தால் குப்புறத் தள்ளப்பட்ட ஒருவனது நரக வாழ்க்கையைச் சித்திரித்து ''ஜங்கிள்'' என்றதோர் நாவலை அப்டன் சிங்கிளேர் 1906-ல் வெளியிட்டார். ஸொஷிலிஸம்தான் ஒரே வழி, மக்கள் முன்னேற, என்று வாதித்தார். சமுதாயம் விழித்துக்கொண்டது. மேலிடங்கள், ஜனாதிபதி ரூஸ்வெல்ட், காங்கிரஸ் உள்பட, சிந்திக்கத்தொடங்கின. புத்தகம் பதினேழு மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டது. உலக நாவல் என்று உற்சாகமாக வரவேற்கப்பட்டது.

அந்த நாவலைத்தான் சண்முகம் அவர்கள் தமிழாக்கி, 'மிருக வாழ்க்கை' என்று பெயரிட்டு வெளியிட்டிருக்கிறார். 1906ஆம் வருஷத்தில் உண்மையாக இருந்த பல விஷயங்கள், இரண்டு உலக மகாயுத்தங்களுக்குப் பிறகு இன்று உபயோகமற்றவைகளாகப் போய்விட்டனவென்றாலும் இந்த நூலில் விவரிக்கப்படும் நிலைமைகளும் அவைகளிலிருந்து வெளிப்படும் தெளிவுகளும் முடிவுகளும் இன்றும் இந்தியசமுதாயத்துக்கும் கவனத்துக்குரியவைகளேயாகும். ஆதலால் தமிழாக்கியவர் முயற்சி பாராட்டத்தக்கது. மேலும் மேலும் அப்டன் சிங்கிளேரைப் போன்ற மற்ற மேல்நாட்டு ஆசிரியர்களது நூல்களையும் தமிழாக்கி இன்னும் குறைந்த விலையில் வெளியிடுவாராக.

எல்லாம் தமிழ்

[கி. வா. ஜகந்நாதன் எழுதியது. விலை 1-8-0. அமுத நிலையம் லிமிடெட், தேனாம் பேட்டை சென்னை.]

சிதறிக் கிடக்கும் சிற்சில எலும்புகளைச் சேர்த்து உடலும் உயிரும் உண்டாக்கும் ஒருவரை நாம் மந்திரவாதி என்று சொல்வோமாயின் ஜகந்நாதன் அவர்களையும் அப்படித் தான் சொல்ல வேண்டும். புறநானூறு குறுந்தொகை ஐங்குறுநூறு தொண்டை மண்டல சதகம் நாடோடிக் கண்ணிகள் இவைகளில் கிடக்கும் சிற்சில குறிப்புகளைக் கொண்டு 10 சிறு நாடகக் காட்சிகளை நம் கண் முன் காட்டுகிறார் 'எல்லாம் தமிழ்' எனும் இந்நூலில். இவரது கற்பனைத் திறனுக்கும் புலமைப் பெருமைக்கும் இது தக்க சான்று.

அரசர்களைப்பாடிப் பரிசில் பெறுவதே புலவரது போக்கு. ஆயினும் வாய்ப்பு வந்த போது அரசர்களுக்கு அறிவுறுத்தவும் தவறுவதில்லை. தமிழ்ப் புலவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து, மற்றவர்கள் அஞ்சி அடங்கியிருந்த பொழுதும், துணிவுடனும் தெளிவுடனும் தலைவர்களை அறவழியிலிருந்து பிறழ விடாது தடுத்து நிறுத்திய வரலாறுகள் பல இந்நூலில் விளக்கப் பெறுகின்றன. 'புலவரிட்ட சாபம்' என்பதில் நன்னன் என்பவன் புலவர்கள் சொல் கேளாது ஒரு பெண்ணுக்குக் கொலைத் தண்டனை விதிப்பதைப் புலவர்கள் கண்டித்து அவனையும் சபித்து அவன் வழிவந்தவர்களையும் பாடாதுபோர்ந்ததும், 'உழுபடையும் பொருபடையும்' என்பதில் கிள்ளிவளவனது அமைச்சர்கள் குடிகளது குறைகளைக் கவனியாது, கடன் தண்டும் கொள்கையோடு, நிலத்தில் விளைந்த தனைத் தையும் வசூல் செய்ய முற்படுதலும் அப்பொழுது வெள்ளைக்குடி நாகனார் புறப்பட்டு அரசனிடம் சென்று வாதாடி, 'குடிகள் வருஷம் முழுவதும் கவலையின்றி வாழ வகையிலையேல் அரசனது வெளிநாட்டு வீர விளம்பரங்கள் வீணே' என்று வற்புறுத்திப் பழஞ் செய்கடனிலிருந்து குடிமக்களுக்கு விடுதலை பெறுதலும்; போர் வெறி பிடித்து விவசாயத்தை விருத்தி செய்ய மறந்த நெடுஞ்செழியனுக்கு, குடபுலவியனார் 'குளங்களில் நீரைத் தேக்கிப் புகழைத் தேக்க'' என்று உபதேசித்ததை ''போரும் நீரும்'' என்பதிலும். தன்னை மறந்து வீட்டை விட்டு, விலகி, பரத்தையர் சேரியில் வாழும் கணவனைத் தான் குறை கூறாததோடு தோழிமாரும் கூறலாகாது என்றும், கடவுளிடம் பிரார்த்தனை செய்யும் பொழுதுகூட அரசன் வாழவும் பசியும் பிணியும் நாட்டை விட்டு அகலவுமே வேண்டி நிற்கும் தலைவியின் கற்பை 'தாயின் பிரார்த்தனை'யிலும்

அரசனது அன்புப் பார்வையைப் பெரிதாக மதித்து விலையிலாத் துயிலை இறக்காட்டிய சடையப்ப வள்ளலது சரிதத்தை 'அன்புப் பார்வை'யிலும், திருப்புகழ் பாடும் தோரணை யில் தாமாகச் சில பாட்டுக்களைச் சேர்த்துப் பாடி மேலதிகாரிக்குக் கோயில் மானேஜர் செய்யும் திங்குகளைப் புலப்படுத்திய பரதே சியின் சாமார்த்தியத்தை,'பரதேசியின் உபா ய'த்திலும், வள்ளல்களான உதியஞ்சேரலா தன், முதுகுடுமிப் பெருவழுதி, ஆனூர் சக் கரை, ரகுநாத சேதுபதி இவர்களின் பெரு ம்மையை மற்ற நான்கு சித்திரங்களிலும் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் திறமையும் புலமையும் திகழத் திட்டியுள்ளார்கள்.

மகாகவி பாரதியார்

[வ. ரா. இயற்றியது. சக்தி காரியாலயப் பிரசுரம் விலை 1—8—0.]

பாரதியாரைப் பற்றிய பற்பல புது விவ ரங்கள் இந்நூலில் கிடைக்கின்றன. பாரதி மஹாத்மா காந்தியைச்சென்னையில் சந்தித்த போது, 'எங்கள் தமிழ் நாட்டுக் கவியிவர்' என்று ராஜாஜி அறிமுகப் படுத்தியதும், "இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண் டும். இதற்குத் தமிழ்நாட்டில் ஒருவரும் இல் லையா!" என்று காந்திஜீ கேட்கவும் எல் லோரும் மௌனமாக இருந்ததும் 109ஆம் பக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதே போல் இன்னும் பல ரஸமான விவரங்கள் நமக்குத் தருகிறார். அவரை நேரில்பார்த்துப் பலநாள் பழகிய வ.ரா. அவர்கள். இந்தப் புத் தகம் முதல் பதிப்பு 1944-ல் வெளி வந்தது. இப்பொழுது (1949ல்) மூன்றாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. இதிலாவது வ. ரா, அவர்களைக்கொண்டு திருத்தி அமைக்கவேண் டிய பல அம்சங்களைத் திருத்தியே வெளியிட் டிருக்கலாம். 1944ல் வ. ரா. எழுதிய முன் னுரை இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது ஒரு குறையுரையாகவே இருக்கிறது. இன் னும் ஏன் அப்படிக் குறைப்பட வேண்டும்? வ. ரா. மனம் குளிர சுயராஜ்யப் பின்னணி யில் பாரதியாரைப்பற்றி லக்ஷணமாக கணீர் என்று பூரணமாகச் சொல்லச் சொல்வ தற்கென்ன சக்தி கார்யாலயத்தார்?

பக்தி யோகம்

[விலை ரூ. 5-0-0 சக்தி காரியாலயம் சென்னை.]

அசுவனி குமார தத்தர் எனும் வங்கப் பிர முகர் 60 வருஷங்களுக்கு முன் செய்த பிர ஸங்கங்கள் 'பக்தி யோகம்' எனும் நூலாகத் திரட்டப்பட்டது. அதை மொழி பெயர்த்து மஹேச குமார சர்மா எனும் குப்புஸ்வாமி ஐயர் 'லோகோபகாரி' எனும் பத்திரிகையில் தொடர்ந்து தமிழில் பிரசுரித்து வந்தார். அதை, சக்தி காரியாலயத்தார் இப்பொழுது 350 பக்கங்கள் கொண்ட ஒரு அழகிய நூலாகப் பிரசுரிக்கிறார்கள். இந்நூலில் பக்தி மார்க்கத்தின் பல படிகளும் பக்தக்கு எதிர்ப் படும் தடைகளும் அவைகளை நீக்க வழிகளும் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. தாயு மானவர், பட்டினத்தார் பாடல்களிலிருந்து மேற்கோள்களும். பாரதம், பகவத் கீதை, பாகவதம், நாரத பக்தி ஸூத்ரம், மனு ஸம் ஹிதை, சிவ ஸம்ஹிதை, யோகவாஸிஷ்டம், சாண்டில்ய ஸூத்ரம், விஷ்ணு புராணம், சிறப்பாக ஸ்ரீ ரூபகோ ஸ்வாமி வாக் அம்ரு தங்களிலிருந்தும் மேற்கோள்கள் கொடுக்கப் பட்டிருப்பதோடு ஷை. ஸம்ஸ்கிருத சுலோகங் களைத் திரட்டி ஒரு தனி அனுபந்தமாக நாகர லிபியில் கொடுக்கப் பட்டிருக்கிறது. எல் லோருக்கும் உபயோகப் படக்கூடிய நூல்.

மனித இயல்பு

மானுடப் பிறப்பின் மாண்பு: இதில் மிருக மனிதன், பேய் மனிதன், தேவ மனிதன் இவர்களது இலக்கணமும் மனிதனுக்குப் புதிய சிறப்பிலக்கணமும் பரமாத்வைத சித் தாந்த ஸ்தாபகாசாரியான திருவாளர் திருத் தேவர் பழனியப்ப கவுண்டரால் ஆராய்ந்து விவரித்து வெளியிடப்படுகின்றன. விலை அணா 0-12-0 கிடைக்குமிடம் திருவேட செந்தூர், மலையாண்டி பட்டணம் P. O. மதுரை.

ஹோமியோபதி

[ஜூபிலி இதழ் விலை ரூ. 1—0—0. 15 ஆயி குளம் ரோடு, கும்பகோணம்.]

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிட்யூட் சென்ற பத்து ஆண்டுகளில் செய்திருக்கும் தொண்டும், நாளும் கோளும் நன்கறிந்து மருத்துவம் துவக்க வேண்டிய அவசியமும், மற்ற வைத்ய முறைகளைவிடச் சிறப்பாக எளிதாக ஹோமியோபதி மூலம் சாதிக்கக் கூடிய சிகிச்சைகளும் கிராமங்களுக்கு ஏற்ற முறைகளும் விவரிக்கப் பட்டிருக்கின்றன.

New Model English Notes and Text-Examiner for the T. S. L. C. Public Examianation 1950 By N. Paramasiva Iyer B. A. L. T. விலை 1-10-0. கிடைக்குமிடம் General Book Company Kumbakonam.

Examiner on Social Studies V Form விலை 1-0-0 ஜனரல் புக் கம்பெனி, கும்பகோ ணம், புதிய பாடத் திட்டத்தின்படி அனுப வம்மிகுந்த ஆசிரியரால் தயாரிக்கப்பட்டது.

பள்ளி மாணவர்களுக்கு மிகவும் பயன் படக் கூடியது.

SAIVAM, தர்மபுர ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சுப்பரமண்ய தேசிக ஞானஸம்பந்த பரமா சார்ய ஸ்வாமிகளால் ஆங்கிலத்தில் நமது பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அமெரிக்காவிற்கு விஜயம் செய்து திரும்பி வந்த விழாவை முன்னிட்டு வெளியிடப் பட்டது நூல் இது. சுவாமிகளது உபதேசத்தில் சமரஸத்தின் அவசியம் நன்கு வற்புறுத்தப் படுகிறது. ஒரு பள்ளிக்கூடத்துக்கு எப்படி ஒரே மாணவன் இருந்தால் போதாதோ அப்படியே உலகத்துக் கெல்லாம் ஒரே மதம் தான் இருக்க வேண்டும் என்று வற்புறுத்துதல் ஆகாது. ஆனால் அன்பு சிவமாகி, சாந்தியாகி, சாச்வதமாகும் தன்மையை உணர அற நெறி, மார்க்கப் பயிற்சி அவச்யமாகிறது என்றும் இந்நூலில்சேர்க்கப்பட்டிருக்கும். திரு K. S. பிள்ளை, சபாரத்னமுதலியார்; A. K. C. இவர்களது விளக்க வுரைகள் மூலம் தெளிவாகின்றது. ஸ்ரீ நடராஜ கர்த்தன சிற்பப் படம் மிகவும் அழகாக நூலின் முன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சிசு ஜல்பன ஸாஹஸ்ரி

[ஸ்ரீ லலிதா தாஸரால் ஆக்கப்பட்டது. விலை 1-8-0 கிடைக்கும். இடம் R. S. வாத்யார் & ஸன்ஸ், கல்பாதி, பாலக்காடு.]

லலிதாம்பிகையைக் குறித்து விதம் விதமான விருத்தங்களில் ஆசிரியரால் அழகாக வடமொழியில் ஆக்கப் பட்ட நூல் இது. ஆசிரியரது புலமையும் அடக்கமும் ஒருங்கே வெளியிடப் பட்டிருக்கின்றன.

ஜி. டி. நாயுடு

[எழுதியவர் டி. எம். முத்து. திராவிட மணிப் பதிப்பகம். திருச்சி. விலை 0-12-0

"முயற்சி திருவினையாக்கும்" என்ற வள்ளுவர் வாக்குக்கு உதாரணமானவர் ஸ்ரீ ஜி. டி. நாயுடு. தம்முடைய உலையா முயற்சியால், முதலில் கோவைக்கும்-பழனிக்கும் பஸ் ஓட்டிக் கொண்டிருந்த நாயுடு பிறகு தென்னிந்தியாவின் சிறந்த தொழில் விஞ்ஞானியானார். அவருடைய சரித்திரத்தைத் திரு டி. எம். முத்து அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நல்ல நடையிலே எழுதியிருக்கும் இச்சிறு நூலை யாவரும் படித்துப் பயன் பெற வேண்டும்.

வள்ளுவர் காமம்

[எழுதியவர் ஒளிர் மணி. திராவிடமணிப் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி. விலை 0-6-0]

திருக்குறள் காமத்துப்பாலில் 12 குறட்பாக்களுக்கு விரிவுரையாக அமைந்தது இச்சிறு நூல். நூதனமான முறையில் தாம் எடுத்துக் கொண்ட குறட்பாக்களுக்கு உரை வகுக்கிறார் ஆசிரியர். நடையில் ஏதோ ஒருவித விறுவிறுப்பு இருந்தாலும், சுலபமாகப் புரிந்து கொள்ளும் முறையில் அமையவில்லை. "இந்நூல்பள்ளி மாணக்கர் உள்ளிட்ட பலரும் பயிலத் தக்கது" என்று ஆசிரியர் முன்னுரையில் கூறுகிறார். ஆனால் மாணக்கர்கள் பயிலக் கூடியதாகத் தோன்றவில்லை இது.

காரியதரிசி

[எழுதியவர் ஸ்ரீ சங்கர ராம். பதிப்பு காமர்ஸ் பப்ளிகேஷன்ஸ், 41-42 ராயப் பேட்டை ஹைரோட், சென்னை. விலை 3-8-0]

இது ஒரு நவீனம். இதன் ஆசிரியர் பிரசித்தி பெற்ற ஒரு எழுத்தாளர். உயர்தரக் கருத்தும், சுவையும் மலிந்த இந்த நாவலில் வரும்பாத்திரங்கள்எல்லாரும் நம்மோடு பேசுகின்றார்கள். இந்த நவீனம் பலர் வாழ்க்கையைத் திருத்திப் பண்படுத்தவும், பலர்கொண்டுள்ள வெறியை மாற்றி அமைக்கவும் பயன் படும். சுத்தமான பதிப்பு. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாத நூல்.

கலைக் கோயில்

[இயற்றியவர் யோகி சுத்தானந்த பாரதியார். ரிப்பன் பிரசுரம். ராமச்சந்திரபுரம் திருச்சி ஜில்லா: விலை ரூ. 7-8-0]

கவி யோகி பாரதியாரைப் பற்றித் தமிழ் அன்பர்களுக்குச் சொல்லவேண்டுவது இல்லை. அவர்கள் இயற்றிய நூல்கள் மிகப்பல. அவற்றுள் இந்தக் கலைக்கோயிலும் ஒன்று. இதுவும் ஒரு நவீனம். சிந்தனையைத் தூண்டவல்ல இதனைப் பாரதியார் தமக்கே உரிய, விறுவிறுப்பான ஒரு நடையில், நமக்கு ஆக்கித் தந்துள்ளார். தமிழில் தற்போது பல நாவல்கள் வெளி வந்துள்ளன. அவற்றில் பெரும்பாலன ஒரு முறை படித்துத் தூக்கியெறியத் தகுந்தன வாயுள்ளன. கலைக் கோயில் அப்படியன்று. ஒரு முறை படித்தாற்போதாது; புரியாது. பலமுறை படித்து நெஞ்சில் தேக்கிக் கொள்ளவேண்டிய அரிய விஷயங்கள் பல உள்ளன. மிக அழகிய பதிப்பு. கலாசாலையில் பாட புத்தகமாக வைத்தற்குரிய தகுதி வாய்ந்தது.

பாழடைந்த பள்ளிவாயில்:

[ஆசிரியர் திருச்சி ரசூல். அறிவு மலர்ப் பதிப்பகம். கோவிந்தகுடி. தஞ்சை ஜில்லா. விலை 12 அணா.]

இதில் 8 கதைகள் உள்ளன. இவற்றில் இரண்டு ஒன்று நீங்கலாக மற்றக் கதைகள் எல்லாம் சர்வசாதாரணமானவை: ஆயினும் வெகு அழகிய அச்சு எழுத்துக்களையும், பதிப்பையும் கொண்டுள்ளது இந்தச் சிறு கதைத் தொகுதி.

கோர தாண்டவம்:

[ஆசிரியர். ப. நாகராஜன். காற்றுடிப் பதிப்பகம். திருச்சிராப்பள்ளி. விலை 0-8-0.]

இதுவும் சிறு கதைகளைக் கொண்ட ஒரு தொகுப்புப் புத்தகம்.

வீழ்ந்த வெள்ளிகள்

[ஆசிரியர்: மதிதாசன். அறிவு மலர்ப் பதிப்பகம். கோவிந்தகுடி P. O. (வழி) கும்பகோணம். விலை 6 அணா.]

இதனை எழுதியவர் தம்மால் கற்பனையிற் கொள்ளப்பட்ட காதலர் மூஸா-மோகினி என்பவர்களின் காதல் நிகழ்ச்சிகளையும் அவர்களுடைய முடிவையும் ஒரு நூற்றொரு கவிதைகளிலே அழகாகக் காட்டியுள்ளார். புரட்சி மனப் பான்மையுள்ளவர்கள் இப்புத்தகத்தை நன்கு சுவைப்பர்.

புள்ளிருக்கு வேளூர்த் தல வரலாறு

[தருமபுர ஆதீன வெளியீடு எண் 62]

இரண்டாம் பதிப்பாக வெளி வந்துள்ள இந்நூலிலே பத்தொன்பது பகுதிகளிலே முறையே தலமும் இருப்பிடமும் முதலாக, புராணங்களும் பாடல்களும் இறுதியாக உள்ளவற்றிலே பற்பல செய்திகள் விளக்கப் பெற்றுள்ளன. சிற்பங்கள், சொத்துக்கள், திருப்பணி, கல்வெட்டுக்கள் என்னும் பகுதிகள் மகிழ்வூட்டுவனவாயுள்ளன. எல்லாத் திருப்பதிகளுக்கும் இம்முறையிலே நூல்கள் வெளிவருமானால் அன்பர்கள் பெரிதும் மகிழ்வுறுவார்கள்.

சிவாலய தத்துவமும் கும்பாபிஷேக மகத்துவமும்

[தருமபுர ஆதீன வெளியீடு எண் 204]

புள்ளிருக்கு வேளூரென்னும் வைத்தீசுவரன் கோயில் அஷ்டபந்தன சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேக நினைவு மலராக இச்சிறு நூல் வெளியிடப் பட்டுள்ளது.

இந்நூல் உருவத்தில் சிறிதாயிருப்பினும் பயன் தருவதிலே பெரிதாய்க் கொள்ளற் பாலது.

திருக் கோயிலின் அமைப்பு, வணக்கம் முதலியவற்றைப் பற்றிய அடிப்படையான உண்மைகளைத் தெரிந்து கொள்ள இந்நூல் கருவியாவதோடு கும்பாபிஷேக முறை, பயன், நோக்கம் என்பவைகளை ஒருவாறு தெரிந்து கொள்ளவும் உதவி புரியும். அன்பர்கள் ஓதியுணர்ந்து பயன் பெற வேண்டுகின்றோம்.

முருகன் துதி மாலை

[தொகுத்தவர்: K. V. P. தஞ்சை. வெளியிட்டவர்கள் வெற்றிவேல் கம்பெனி, தஞ்சை. விலை அணா 10.]

இந்நூலிலே சீர்பாத வகுப்பு முதலாக, புராணங்கள் இறுதியாக உள்ள பதினைந்து பகுதிகளிலே ஸ்ரீ அருணகிரிநாதர் முதலாகிய பெரியோர்கள் பாடியருளிய முருகன் துதிப் பாடல்கள் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன. அன்பர்கள் எளிதில் பாராயணம் செய்யப் பயன் படும் முறையில் தொகுக்கப் பட்டுள்ளது இந்நூல். இறையன்புள்ளார் அனைவரும் இதனை வாங்கிக் கற்றுப் பயன் கொள்ள விரும்புகிறோம்.

சன்மார்க்க சபதம்

[ஆசிரியர் பச்சையப்பா இளைய பெருமாள். வெளியிட்டவர் ராஜன் பப்ளிஸிட்டி, அட்வர்டைஸிங் ஏஜன்ட்ஸ், 44 லக்ஷ்மீபுரம் ஆறுவது தெரு, மதுரை.]

இச்சிறு நூல், ஓர் இருபத்தைந்து பாடல்களிலே தெய்வ வழிபாடு முதலிய நல்ல பொருள்களை அறிவிக்கும் முறையில் இயன்றுள்ளது. இதன் ஆசிரியர் தம் தந்தையார் பால் பூண்டுள்ள அன்பின் அறிகுறியாக இதனை ஆக்கி வெளியிட்டுள்ளார். இவர் செயல் இன்பூட்டுகின்றது.

ஆத்ம சாந்தி

எம். எஸ். கமலா

உலகில் எப்பேர்ப்பட்ட நோய்க்கும் நல்ல மருந்து சாந்தி. அதிலும் மன நோய்க்கு ஆத்ம சாந்தி. மமதையுடன் திரிபவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டுமென்றால் விரும்பியபோது கிடைக்கக்கூடியதல்ல. வேதனைச் சூட்டில் சிந்தனை ரத்தம் கொதித்துக் கொதித்து, கொந்தளித்துக் குளிர்ச்சியடையும்போது தான் சாந்தி......சாதாரண சாந்தியல்ல. ஆத்ம சாந்தி ஏற்படும்.

அன்று அதிகாலை அருணனின் அழகிய கிரண ஒளியில் மகிழ்ச்சியுடன் மாண்புற நகைக்கும் உஷாகன்னியின் நிழலில் இயற்கையின் அற்புத சோபையில் ஸீக்கியர் மதத் தலைவர் குருகோவிந்த் வெளியுலகை மறந்து தர்ப்பை ஆசனத்தில் அமர்ந்து, கடந்தகாலப் பாதையில் தம் நினைவுத்தேரைச் செலுத்திய போது, தம் வாலிப வயதில் நடந்த சம்பவங்கள், தம் தாய் நாட்டிற்கேற்பட்ட விபத்துகள், தங்கள் இனத்தவர்மேல் கவிந்த கார் முகில்கள். தாம் செய்த சேவை, முதலியன மனத்திடலில் தோன்றி நின்றன. நம் மூதாதையர் சொல்லியதுபோல் "புதியதொரு விந்தை, பழையது பரம அருவருப்பு" என்று தோன்றியது கோவிந்துக்கு.

பொழுது வளர்ந்து கரையவும் ஆரம்பித்து விட்டது. கோவிந்தின் சிந்தனை கரையவில்லை. அவர் வாழ்க்கை புனிதமானது தானா? என்ற பிரச்னை அவரை மறுபடியும், மறுபடியும் கேட்டு வதைத்தது. அவர் உள்ளத்தில் சாந்தி ஏற்படவில்லை. ஆத்ம சாந்திக்காக உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது. மாலை மனையை நோக்கிச் செல்லும் கதிரவனுக்கு மங்களகீதங்கள் பாடிக்கொண்டிருந்தன பறவையினங்கள். கோவிந்த் அதில் மூழ்கி எழுந்து கொண்டிருந்தார் உலகை மறந்து.

* * *

அன்றும் இதுபோல் தானிருந்தது. எங்கோ தம் சித்தத்தைத் திரிய விட்டுக் கொண்டிருந்தார் கோவிந்த். அச்சமயம் ஆசிரமத்திற்குள் விரைந்து வந்தான் ஒரு பட்டாணிய சகோதரன். டம்பாச்சாரித் தனத்தையும், அகங்காரத்தையும் வாழ்க்கையின் இலட்சியமாய் நினைக்கும் பட்டாணியன் பசித்த சிங்கம்போல் கர்ஜித்தான் கோவிந்தைப் பார்த்து. அவன் குரலுக்கு அந்த ஆசிரமம் எதிரொலித்தது.

"திருட்டுத் துறவியே! நேற்று என்னிடமிருந்து குதிரை வாங்குவதற்காகப் பெற்றுக் கொண்ட பணத்தை இன்று கொடுப்பதாய்ச் சொன்னாய். இதுவரை கொண்டுவந்து கொடுக்கவில்லையே; இதுதானா உன் சொல்லின் மகிமை. சொன்ன சொல்லைத் தவறுவது உன்போன்ற துறவிக்கு ஏற்றதா?" என்ற குரல் கோவிந்தை உலக நினைவிற்குக் கொண்டு வந்தது. வெகு சிரமத்துடன்,

"சகோதரா! நான் சொன்னது உண்மை தான். இன்று உன் பணத்தை அளிக்க முடியவில்லை. மிகவும் வருந்துகிறேன். நாளை தவறாமல் உன் வீட்டில் கொண்டு வந்து சேர்க்கிறேன்" என்றார் அமைதியாய். மூர்க்கனான பட்டாணியன் குரு கோவிந்தின் அடக்கத்தையும் அமைதியையும் அறியாது, கோவிந்தனைத் திருடனாய்க் கருதினான். விவேகம் எங்கோ போய் ஒளிந்து கொண்டது. வெறி மேலோங்கியது தான் தாமதம். துறவியின் மேலிருந்த ஆடையைப் பிடித்து இழுத்துக் கிழித்து எறிந்தான். கோவிந்தால் அதைப் பொறுக்க முடியவில்லை. மானத்திற்கு மேற்பட்ட அபிமானப் பொருள் இவ்வுலகில் வேறென்ன இருக்கிறது. ரத்தம் கொதித்தது. இமைப் பொழுதில் மின்னலைப் போல் மிளிர்ந்தது அவர் கத்தி. அடுத்த வினாடி பட்டாணியன் தலை பந்து போல் உருண்டது நிலத்தின் மேல். செங்குருதி ஆறு ஆசிரமத்தில் பாய்ந்தது.

குருதி வெள்ளத்தைப் பார்த்ததும் குரு கோவிந்தின் உள்ளம் நெகிழ்ந்தது. எந்த உணர்ச்சிக்கு ஆளாகி இம்மாதிரி அநியாயம் செய்யத் துணிந்தாரோ அது அவரை வதைத்தது. க்ஷண நேரப் பலஹீனத்திற்கு ஆளாகி, தாம் செய்த நீசச் செய்கைக்குத் தம்மைத் தாம் நொந்து கொண்டு துக்கப்பட்டார். தாம் செய்த அநீதிக்குத் தாம் ஆளாகி, தண்டனை அனுபவிக்க வேண்டியது தம் கடமை என்றறிந்தார். அவர் தண்டனைக் காலம் எப்பொழுதோ? அதற்காவன செய்யத் தலைப்பட்டார்.

* * *

பட்டாணியனின் இருக்கைக்குச்சென்று அவன் ஒரே மைந்தனை வெகு கஷ்டப்பட்டு

விசாரித்துத் தம் ஆசிரமத்திற்கு அழைத்து வந்து அன்பை ஊட்டி, அறிவை வளர்த்து, புத்தி கற்பித்து, கத்திக் குத்து, சிலம்பம், குதிரை ஏற்றம் முதலிய எல்லா வித்தைகளிலும் உயர்ந்தவனாக்கினர். இரவும் பகலும் கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றத் தொடங்கினர். தம் சொந்த ரத்தத்தில் உருவான ஐந்து மைந்தர்களை யுத்த அரக்கனுக்குப் பலி கொடுத்த கோவிந்தரின் துக்கம் தோய்ந்த தந்தையுள்ளத்திற்கு அவன் கற்பகக் கனி போன்றவனானன். மாண்ட மைந்தர்களுடன் மறைந்த புத்திரவாத்சல்ய அலைகள் பட்டாணியச் சிறுவனின் வருகையால் மேலுக்கெழும்பின. உளுத்துப் போன ஆலம்விழுதில் சுழல் காற்றால் வந்து ஒட்டிய சிறு விதை துளிர்த்து வளர்ந்து படிந்து மலர்ந்து அடிமரத்தையே மறைத்து வளர்ந்து வானை மறைப்பது போலாகி விட்டது குரு தேவரின் வாழ்க்கை.

அவனைக் காப்பாற்ற வேண்டியது தம் விதியென்று எண்ணினர். அச்சிறுவனே அவர் வாழ்வின் லக்ஷியக் காலாகி அவர் புத்திரர்களிடத்தை ஆக்கிரமித்து, கோவிந்தின் உள்ளத்தில் உயர்ந்தவிடத்திலமர்ந்தான். இந்த விந்தையைக் கண்டு சீடர்கள் வெகுவாய்ப் பயந்தார்கள். துணிச்சல் கொண்ட ஒரு சீடன் ஒரு நாள் குருவின் முன் வந்து நின்று, "குரு தேவா! இதென்ன விபரீதம்? புலிக் குட்டிக்குப் பாலை ஊற்றி வளர்த்தாலும் இயற்கையாய் அதனிடமுள்ள குரூரத்தனத்தை விட்டுவிடுமா? வளர்ந்தபின் அதன் நகங்கள் கூர்மையாகாமல் மழுங்கி விடுமா?" என்று கேட்டான்.

"குழந்தாய்! என் விருப்பமும், விரும்புவதும் அது தான். புலிக்குட்டியை நல்ல புலியாக வளர்க்கா விட்டால் நான் பட்ட சிரமத்திற்குப் பலனேது?" என்றார். சீடன் தலை கவிழ்ந்து சென்றான்.

சில ஆண்டுகளில் அவன் பூரண யுவனாகிவிட்டான். கண்ணாடியில் தென்படும் பிரதிபிம்பத்தைப்போல், குருதேவர் எப்பொழுதும் அவனைத் தொடர்ந்துகொண்டேயிருந்தார். ஆசைகளை நிறைவேற்றுவதில் தந்தையைப்போலவும், கல்வி கேள்விகளைக் கற்பிப்பதில் ஆசானைப்போலவும் தம் வாழ்நாட்களை உருட்டிக்கொண்டிருந்தார் கோவிந்த். அவர் எண்ண அலைகள் ஓயவில்லை. "அப்பா!" என்ற குரல் விழிப்புறச் செய்தது. பட்டாணிய வாலிபன் பாதங்களில் வணங்கி, "அப்பா! உங்கள் ஆசியால் எல்லாவித்தைகளிலும் திறமைபெற்றவனானேன். இனி என் கைகளை உழைத்து வாழ்வேன். அரசர் சைனியத்தில் போர்வீரனாகச் சேர இச்சை கொண்டுள்ளேன். குருதேவா! அனுமதி கொடுங்கள்" என்று அவர் பாதத்தில் வணங்கினான். குருவுக்குத் தூக்கிப்போட்டது. அதை மறைத்துக்கொண்டு புன்முறுவல் உதட்டில் நெளிய அன்புடன் அவன் தலையை வருடி,

"குழந்தாய்! உண்மை. எல்லாவித்தையிலும் தேறிவிட்டாய். ஆனால் உன் மனிதத் தன்மை, வீரம், எல்லாம் பரிபூர்ணமாய் உன்னிடம் குடிபுகுந்துவிட்டனவா என்றறிய இன்னும் ஒரு பரிக்ஷை இருக்கிறது. நாளை அதில் தேறிவிட்டால் உன் விருப்பம்போல் விடையளிப்பேன்" என்றார். தம் சொந்த மைந்தர்கள் யுத்தத்திற்கே பலியானது போதாமல் தம் ஆத்ம சாந்தியின் பொருட்டு வளர்த்த இவனும் சேனையில் சேருவதா?

* * *

மறுநாள் காலை கதிரவன் கனகுஷியாய் விண்ணில் தோன்றி மண்ணிலிருப்பவர்கள் கண்களைக் கூசச்செய்தபோது கோவிந்த் தம் வளர்ப்பு மைந்தனை ஆயுதங்களுடன் தம்முடன் வரும்படி அழைத்துக்கொண்டு எங்கோ புறப்பட்டார். சீடர்கள் பயத்துடன் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அவர் கண்டிப்பாய் அவர்களைத் தம்முடன் வரக்கூடாதென்று உத்தரவிட்டு நடந்தார்.

யுவனும் துறவியும் மௌனமாய்த் தங்கள் பிரயாணத்தைக் கடத்தினர்கள். இருளடைந்த காடு. அருகில் காட்டாறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. அதன் இருமருங்கிலும் இயற்கையன்னையின் இன்பக்காட்சிகள் கண்களைக் கவர்ந்தன. மழை பொழிந்ததால் அழுக்கை அலம்பிவிட்ட ஆற்றங்கரை படிகங்களைப்போன்ற வெண்சங்குகளின் ஒளியில் மின்னிக்கொண்டிருந்தது. கதிரவன் தன் பிரயாணத்தை முடித்துக்கொள்ளப்போகும் சமயத்தில் ஒருமரத்தருகில் வந்து நின்றனர் குரு சிஷ்யர்கள். குருவின் குரல் அடைத்துக் கொண்டிருந்தது. கனைத்துக்கொண்டு, "மஹமத்! இந்த இடத்தைத் தோண்டு" என்று தாம் நின்ற மரத்தருகில் காட்டினர். அவர் சொற்படி செய்தான் மஹமத். அந்த இடத்தில் சிவந்த நிறமுடைய சிறிய கல் ஒன்று இருந்தது. அதை வெளியிலெடுக்கச் சொன்னர். ஆச்சரியத்துடன் எடுத்தான். கோவிந்த் அவன் முகத்தை உற்றுப் பார்த்து "மஹமத்! இந்தக் கல்லின், நிறத்தைப் பார்த்தாயா? இந்தச் சிவப்பு எங்கிருந்து இந்தக் கல்லுக்கு ஒட்டிக்கொண்டதோ தெரியுமா? இந்தச் சிவப்பு நிறம் தான் உன் தந்தையின் ரத்தம். ஆம், அவர் தலையிலிருந்து வடிந்த ரத்தம். இந்த என் கையால் அவர் தலையை வெட்டினேன். அவரிடம் பெற்ற கடனைத் தீர்க்க முடியாமல் போயிற்று. எத்தனையோ ஆண்டுகளாய் யோசித்துக்கொண்டிருக்கிறேன். இன்று தான் சந்தர்ப்பம் கிடைத்தது. உன் தந்தையின் புனித ரத்தம் உன் உடலில் ஓடிக் கொண்டிருந்தால்......... நீ உன் தந்தைக்கு உண்மையான மகனாகவிருந்தால்......... உன்

உறையிலிருக்கும் கத்தியை எடு. இதோ என் தலை, அதை வெட்டி அந்தச்சூடான ரத்தத்தில் உன் தந்தைக்கு எள்ளும் தண்ணீரும் விடு. உன் தந்தையின் கடனைத் தீர்த்துக் கொள். ஊம்'' என்று ஆவேசம் வந்தவரைப் போல் மஹமதை உற்றுப் பார்த்துச் சொன்னார் குருதேவர். அவர் முகம் அப்பொழுது இருந்த கோரத்தை.........

இதைக் கேட்டதும் மஹமதின் ரத்தம் கொதித்தது. கண்கள் மின்னின. சிங்கக் குட்டியைப்போல் ஒரு குதி குதித்தான். குருதேவர் கடுகளவும் கலங்கவில்லை. மஹமத் அன்பின் பலஹீனத்திற்கு ஆளாகவில்லை. ஆனால் மனச்சாட்சி அவனை எச்சரித்தது.

"இத்தனை நாள் கஷ்டப்பட்டுப் போஷித்த புண்யவானையா.........தந்தைக்குச் சமானமான குருதேவரையா.........எப்பொழுதோ மடிந்துமாய்ந்த சம்பவங்களின் காரணத்தைக் கொண்டு வதைக்கப் பார்க்கிறாய். நியாயமா? மஹமத்! ஜாக்கிரதை'' என்று சொன்ன சொற்கள் அவன் குருவின் வீராவேசமான பழிக்குப் பழிவாங்கும் எண்ணத்தைச்சிதைத்தன. கத்தியை வீசி எறிந்தான். குருவின் காலில் வெட்டுண்ட மரம்போல் சாய்ந்தான், குரல் கம்ம, கண்ணீர் சோர.

"குருதேவா! என்னிடமா இம்மாதிரி...... கடவுள் சாட்சியாய், எங்கள் புனிதமான மஹம்மதிய மதச்சாட்சியாய் நடந்தவைகளை நான் என்றோ மறந்துவிட்டேன். என் தந்தையின் மரணத்தை மறந்தேன். என் தந்தை யாரென்பதே எனக்குத் தெரியாது. எனக்கு விவரம் வந்தது முதல்உங்களைத்தான் தந்தையாகக் கருதினேன். என் உள்ளத்தில் உம்மை வைத்துப் பூஜை செய்தேன். அந்த அன்பின் பிணைப்பு நீடூழி வளர அருள் புரிவீர் குருதேவா!'' என்று அவர் கால்களைக்

கண்ணீரால் கழுவினன். உடனே பைத்தியம் பிடித்தவன்போல் எழுந்து தலை குனிந்து கொண்டு ஓடத் தொடங்கினன்.

"மஹமத்! மஹமத்!!" என்று உரத்துக் கூவிக்கொண்டே ஓடினர் குரு கோவிந்த். அன்று சுகப்பிரம்மரிஷியைப் பின்பற்றிஓடிய வியாச பகவான், 'மைந்தா! மைந்தா!!' என்றலறிக் கொண்டோடியதைப் படித்துள்ளோம். ஆனல் கோவிந்தின் அலறலோ, சோகக்குரலோ மஹமதைக் கலக்கவில்லை. அவன் திரும்பிப் பாராமல் ஓடினன்.

* * *

குருவின் மனம் கலக்கத்திலாழ்ந்தது. அழுதார் பச்சிளம் பாலகனைப் போல். வெதும்பினர் குலவதியைப் போல். வேதனைப்பட்டார் கைம்பெண் போல், சில நாட்கள் கடந்தன. மஹமத் கோவிந்தின் முன் தென்படாமல் விலகியே இருந்தான். ஆசிரமத்திற்கருகில் வருவான். உள்ளே வர மனம் இடம் கொடாது. குருவைப் பார்க்காமல் இருக்கவே பிரயத்தனம் செய்வான். குருவுடன் வேட்டைக்குச் செல்வதை அறவே விட்டொழித்தான். இரவில் 'குருத்வாரா, வைக் காக்கும் தொழிலையே விட்டு விட்டான். பைத்தியம் பிடித்தவன் போலானன்.

குரு கோவிந்துக்கும் மஹமதுக்கும் இருந்த பாசம் கிழக்கு மேற்குப் போல் ஆகி விட்டதென்று சீடர்கள் சொல்லிக் கொண்டனர். ஆனல் அவர்கள் மனப் பலகையில் எழுதப்படும் விபரமற்ற கிறல்களின் வேதனையை அவர்கள் கண்டார்களா? காயாயிருக்கும் போது துவர்க்கும் காய் தான் பழுத்தால் இனிக்கிறது. அதே அதிகம் பழுத்தால் துர்நாற்றம் தான். காயைப் பத்திரப் படுத்தும் மனமே பழத்தை விரும்பிச் சாப்பிடுகிறது. அந்தப்பழமே அழுகிவிட்டால் கருணையற்றுக் கடினமாய்த் தூர எறிந்து விடுகிறது. குரு கோவிந்தின் மனமும் அந்நிலைக்கு வந்து விட்டது. தம் மனதை எத்தனை திட வைராக்யத்துடன் நிறுத்தி, கடவுள் தியானத்திலாழ்ந்திருந்தாரோ அத்தனைக்கத்தனை கடவுளை வெறுத்துத் தம் சாதனை மேல் அசூயை கொண்டார். தம் மனம் அழுகி, துர்நாற்ற மடிப்பது போல் தோன்றியது. தம்மை உலக வீதியில் தூக்கி எறியும் ஆள் ஒருவன் வேண்டியிருந்தது. அந்த ஒருவன் தன்னை மிகவும் பயபக்தியுடன் விரும்பிப் போற்றுபவனயிருந்த மஹமத்தானே! அவன் கையால் எறியப் பட்டால் தானே! 'ஆத்ம சாந்தி' ஏற்படும். சிந்தித்தார். உலகில் சத்தியத்திற்குத் தான் சாதனை, வெற்றிக்கு வஞ்சனை தான் முக்கியம் என்றது தந்திரம்.

"துரியோதனன் ஜயித்ததும் பகடையால், நளன் இழந்த அரசைப் பெற்றதும் பகடையால். இழந்த மனச்சாந்தியைத் தாம் பெற வேண்டியதும் பகடையால்" என்று தோன்றியது. இல்லாமலா கட்டக் கந்தையில்லா ஏழை மக்கள் அவர்களிடமிருக்கும் காலணவைப் பந்தயத்தில் வைத்துச் சாலை ஓரங்களில் கட்டங்கள் போட்டு, புளியங் கொட்டைகளைப் பகடைகளாய் வைத்தாடுகிருர்கள். ஏழைக்கேற்ற சாம்ராஜ்யம்.

அன்று இரவு முழுவதும் தூக்கமே வராது புரண்டார் யோகி. விடிந்ததும் வெகு கஷ்டப் பட்டு மோப்பம் பிடித்துச் செல்லும் வன விலங்கு போல் குருத்வாராவின் வெளியில் புதர்களுக்கிடையே பதுங்கிப் பதுங்கிச் சென்ருர். ஜாதி மல்லிகைப் புதர்க் கிடையில் பாம்பைக் கீரி பிடித்துக் கடித்துக் கொண்டிருப்பதைக் கண் கலங்கப் பார்த்துக் கொண்டு நிற்கும் மஹமதைப் பார்த்தார். இளைத்துத் துரும்பாய் ஏக்கத்தில் சுறுசுறுப்பை இழந்து உணர்ச்சியற்றவன் போல் நிற்கும் மஹமதருகில் சென்று அன்பாய் அவன் தோளைப்பற்றி எத்தனையோ ஆறுதல் மொழிகளைச் சொல்லி ஆசிரமத்திற்குள் அழைத்து வந்தார். பலிபீடத்திற்கருகில் நிறுத்தப்பட்ட ஆட்டுக் குட்டியைப் போல் மிரண்டு மிரண்டு விழித்துக் கொண்டு நின்ருன் மஹமத்.

"குழந்தாய்! மஹமத்!! உன் தந்தையிடமே உனக்குப் பயமா? நீ விளையாடிய இடமே உனக்கு வேற்று இடமா? வா! இப்படி என் அருகில் உட்கார்" என்று முதுகை வருடினர். அவன் உதடு துடித்தது. கண்களிரண்டும் குளங்களாயின. குரல் கரகரக்க,

"குருதேவா! மானிட வர்க்கத்தைத்தவிர மற்ற ஜீவராசிகளுக்கு ஜனன காரணர் தந்தை. பிறந்து பால் உண்ணும் வரை தாய். அதற்குப்பின் அவைகளே ஒன்றை ஒன்று மாய்த்துக்கொள்ளும் சத்துருக்கள்" என்று தரையைப் பார்த்தான்.

"குருவுக்கு மிஞ்சிய சீடன். கல்ல மேற்கோள்" என்று தம்முள் சொல்லிக் கொண்டு, "குழந்தாய்! அதற்காகத்தான் 'அரிதரிதுமானிடராய்ப் பிறத்தலரிது' என்று சொல்லப்பட்டுள்ளது" என்று புன் முறுவலுடன் தலையைநிமிர்த்திக் கண்களைத் துடைத்தார்.

"மானிடன்....மானிடனயிருந்தால் தானே......" என்று வாய்விட்டலறினன். கோவிந்த் கண்களும் கசிந்தன. 'மனிதன் மனிதனயிருந்தால் மனச் சாந்தியுடன் வாழலாமே! அது இல்லாததால்தானே இம்மாதிரி வெளிவேஷங்களுக்குப் பாத்திரமாகிப் புகழ்க் கோட்டைக்குள் நின்று புனிதமடையப்பார்க்கிருன்' என்று நினைத்தார். வெளிப் படையாய்.

"மஹமத்! உன் இளம் உள்ளத்தைக் கடமைஎன்ற கல்லால் உடைத்துக் காயப் படுத்திவிட்டேன். அந்தப் புண் ஆழமாகி

உன்னை அவஸ்தைப்படுத்துகிறது. உன் வேதனையை மறக்க நல்ல மருந்து 'சதுரங்கம்'தான். வா! குழந்தாய்!! வா!!! உன் கண்ணீர் என் புண்ணீர். உன் விம்மல் என் உள்ளத்து இசிவுவேதனை. நீ சொன்னதைப் போல் கடந்த சம்பவங்களை நினைத்துக் கர்மத்தை அதிகமாக்கிக்கொள்ளவேண்டாம்" என்று அவனுக்குத் தம் கையினாலேயே கனிகளை உட்கொள்ளக்கொடுத்துப் பாலையும் கொடுத்தார். தந்தையின் கடின சிட்சைக்குப் பயந்து கடுகியோடின குழந்தை, அவர் காட்டிய இனிப்புப் பண்டத்திற்கு இலக்காகி மறுபடியும் அவர் மடியிலேறி விளையாடிய மகிழ்ச்சி இருவருக்கும் ஏற்பட்டது.

மெள்ள மெள்ள மஹமதின் பயம் அகன்றது. அவர் சொல்வதைச் செய்ய இயந்திரம்போல் காத்து நின்றான். தினமும் அவன் வேலை முடிந்ததும் சதுரங்கப்பலகையுடன் குரு தயாராய்க் காத்திருப்பார். அவனும் மகிழ்ச்சியுடன்போய் ஆட அமருவான். ஆட்டத்தில் தேர்ந்தவனாகிவிட்டான். ஆனால் அங்கும்குருவுக்குஅளிக்கவேண்டியமரியாதையை அளித்துத்தான் விளையாடுவான். அவரைஅத்தனை பக்தியுடன் பார்த்தான். அவன் மனதில் சத்துருவின் மைந்தனுக்கு அவர் காட்டிய அன்பும் பண்பும்தான் நிறைந்திருந்தன. அவற்றின் முன் இந்த உலகம்கூட வெகு சிறியதுதான்.

* * *

என்றும்போல் அன்று மஹமத் படுக்கையைவிட்டெழுந்து மலர் கொய்வதற்காகக் புறப்பட்டான். சோர்ந்த முகத்துடன் ஆசிரமத் திண்ணையில் சதுரங்கப் பலகையுடன் அமர்ந்திருந்த குரு கோவிந்த் "மஹமத்!" என்றழைத்தார். "ஏன்?" என்று கேட்க வாயெடுத்தவன் சதுரங்கப் பலகை முன்போய் அமர்ந்து, "இத்தனை காலையிலேயா?" என்றான்.

"வயதாகி விட்டது. காரியா காரியங்களின்மேல் சிரத்தை இல்லை. குழந்தைபோல் விளையாடத்தான் பைத்தியமாய் விட்டது. இதுதான் என் சந்தோஷம். ஜீவாதாரம்" என்றார். அவன் வாய் பேசாது காயை நகர்த்தினான். மெள்ள அவனைக் கடமைகளை மறந்து ஆட்டத்தில் சிரத்தை கொள்ளச் செய்தார். பொழுது கழிந்துகொண்டே வந்தது. ஆட்டத்தில் வெற்றிதோல்வி வெளியாக வில்லை. காலையிலமர்ந்தவர்கள். பிற்பகலாகிவிட்டது. குருதேவ் தாம் தோல்விப்படியில் நிற்க விரும்பி வேண்டுமென்றே அவனுக்கு விட்டுக் கொடுத்துவந்தார். அவனோ அவரைத்தோற்கடிக்க இஷ்டமில்லாமல் தப்பித்துக் கொண்டு காய்களை நகர்த்தினான்.

கிழக்கே தோன்றிய கதிரவன் மேற்கே போய் நின்று நகைத்தான். சாயாதேவி தன் வண்ணச் சேலைகளை விண்ணில் பற்பல கோணங்களில் விரித்துக் களியாட்ட மாடிக் கொண்டிருந்தாள். பறவையினங்கள் பாக்களைப் பாடிக்கொண்டு கூட்டங் கூட்டமாய்ப் பறக்கத் தொடங்கின. மணத்தை அடக்கி வைத்திருந்த மலர்கள் தங்கள் மகிழ்ச்சியைக் காட்ட மணத்தைக் காற்றில் கலக்கக் கண்களைத் திறந்தன. குரு கோவிந்த் ஒருமுறை ஆகாயத்தைப் பார்த்தார். வெண் மதியும் தோன்றி விடுவான்போல் தோன்றியது. வெற்றி தோன்றவில்லை. திடுக்கிட்டார். கன்னத்தைத் தேய்த்துக்கொண்டார் ஆட்டத்தில் சிரத்தைகாட்டுபவர்போல். அவனுக்கு வெற்றிப் பாதையைக் காட்டினார், அவன் அதன் முகத்வாரத்தைக்கூட அணுக மறுத்தாற்போல் ஆடினான். குருவுக்குக் கோபம் உச்சிக்கேறியது. கையிலிருந்த பகடையை அவன் நெற்றியைப் பார்த்து வீசி எறிந்து, "அதமனே! உன் தந்தையைக்கொன்றவனைத் தோற்கடிக்கும் சக்தி உன்னிடமிருந்தால்... உன் தந்தையையே வெட்டிச்சாய்த்த நான் உன்னைத்தோற்கடிப்பதுதானா கஷ்டம். உன் உடலில் பாய்ந்தோடுவது உன் தந்தையின் ரத்தமா யிருந்தால்லவோ......" என்றார். கண்கள் சிவக்க. வாலிபனின் உள்ளம் கொந்தளித்தது. நெற்றியில் அடி. உள்ளத்தில் சொல்லம்பு. இரண்டும் அவனை எழுப்பின. தந்தையின் ரத்தம் தன் உடலில் பாயாமல்... சட்டென்று உறையிலிருந்த கத்தியை உருவினான். குருவின்மேல் வீசி எறிந்தான். அவர் அப்படியே பின்னுக்குச் சாய்ந்தார். மஹமதின் மனம் பதறியது. "ஹா!" என்றலறினான். குரு கோவிந்த் நிறைந்த மனதுடன் சிரித்துக்கொண்டே,

"குழந்தாய்! மஹமத்!! நீ உண்மை வீரன், இன்றுதான் துடித்துக் கொண்டுதிரியும் உன் தந்தையின் 'ஆத்மாவும் சாந்தி' யடையும். எனக்கு 'ஆத்மசாந்தி' அளித்தாய். என் உதிரத்தால் உன் தந்தைக்குத் தர்ப்பணம் செய், என் கஷ்டத்தின் பலனைப்பெற்றேன். பாபத்தைத் தொலைத்தேன்" என்று இன்பமாய்ச் சிரித்தபடி இறைவனடி சேர்ந்தார். எமனையும் வென்ற அந்த இன் சிரிப்பு மஹமதை வதைத்தது. வீறிட்டான்.

பால்பேன்ற வெண்ணிலவில் குருகோவிந்தின் செங்குருதி ஒருபுறம் ஓட, மஹமதின் கண்ணீர் அதைக்கரைத்துக் கொண்டிருக்க மஹமத் கதறிக்கொண்டிருந்தான். எங்கிருந்தோ பெருங்காற்று அடித்தது. மரத்தை விட்டு வெளிவர மறைந்து கிடந்த மலர்ந்த மலர்கள் குருகோவிந்தின் சடலத்தின்மேலும் மஹமதின்மேலும் நிறைந்தன. இறந்தஇரு ஆத்மாக்களுக்கும் சாந்தி ஏற்பட்டதோ? இல்லையோ? அறியோம், மஹமதின் மனச்சாந்தி குலைந்துவிட்டது. கற்சிலைபோல் கண்ணீர் வடித்துக் கொண்டுநிற்கும் மஹமதைப் பார்க்க முடியாமல்தான் கதிரவன் கடுகியோடிவிட்டான் போலும்.

[ரவீந்திரரின் 'ஆத்மபலி' என்ற கதையைத் தழுவி எழுயது.]

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

சென்னையில் வந்தும் நிலையத்துடன்கூட ஓர் சங்கமும் ஏற்படுத்தினோம். பெரிய மனிதர் வீட்டு ஸ்திரீகள் யாவரும் சேர்ந்து திட்டம் வகுத்து வேலை செய்து வந்தோம். அநேக வித ஏற்பாடுகளில், 'தினம் யாராயிருந்தாலுமே சங்கத்திற்கு வரும் பொழுது ஓர் பிடி அரிசி கொண்டு வந்து ஒரு பாத்திரத்தில் போட வேண்டும், மாதம் சேர்ந்ததும் அதை எடுத்துப் பணமாக்க வேண்டும்' என்பது சங்கத்தின் நோக்கம். அதன் உபயோகம் ஹரிஜனங்களுக்கு என்பது லக்ஷியம். பிடி என்று பெயருக்கு. ஒவ்வொருவர் படிக் கணக்கிலும் கொண்டு வருவார்கள். ஒரு வருஷத்தில் அரிசி விற்ற பணம் ரூ 500 சேர்ந்தது. இவ்விடத்திலும் எனக்குத் தலைவிப் பதவியைக் கொடுத்தார்கள். 500 ரூபாயை எந்த விதத்தில் செலவழிப்பது என்ற யோசனைக்காக ஒரு கூட்டம் போட்டோம். பலர் பல விதமான அபிப்பிராயங்கள் சொன்னார்கள்.

"நாம் வேலை செய்து வருகிறோமே, அந்தச் சேரியிலுள்ள ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்து வைப்போம். ஆண் பிள்ளைகள் செய்வது ஒரு புறமிருக்கட்டும். நாமும் இதில் பங்கெடுத்து நமது பெயரும் பத்திரிகையில் அடி படட்டும். அந்தப் பணம் காணும் வரை பக்கத்துக் கிராமங்களில் சென்றும் ஹரிஜனங்களை அழைத்து வருவோம்" என்றாள் ஜட்ஜ் மனைவி சாரதா தேவி.

"ஆலயப் பிரவேசம் என்பது எளிதில் செய்யக் கூடிய காரியமல்ல. எவ்வளவோ சட்டங்களும், அனுமதிகளும் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் அலைந்து திரிந்து, ஒரு நாளைக்கு அவர்களை ஸ்னானம் முதலிய சுத்தம் செய்து கோவிலுக்குள் அழைத்துச் சென்று விட்டு வருவதில் அவர்களுக்கு யாதொரு பலனுமில்லை: உபயோகமுமில்லை. அதற்காகப் பாடுபட்டு வரும் ஸ்தாபனம் தக்க முயற்சியுடன் நடத்தும். நாம் செய்வதில் நமது பெயர்கள் பத்திரிகைகளில் அடிபடும் பெருமையைத் தவிர அவர்களுக்குப் பெருமையில்லை. அதனால் அவர்கள் ஜீவாதாரத்திற்கு உபயோகமாக உள்ள ஒரு காரியத்தைச் செய்தால் நல்லது. அவர்கள் இஷ்டத்தையே வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள். 'எங்க சாமி எங்களுக்குண்டு. உங்க சாமி தேரை நாங்க தானே இழுக்கிறோம். வெளியில் வர்ற சாமியைப் பார்த்தால் போதும். ஒரு நாளைக்குக் கோவிலுக்குப் போய் சச்சரவு படுவதைக் காட்டிலும் எங்களுக்குக் கஞ்சி கிடைக்கும் வழியைக் காட்டுங்கள். போதும்' என்றே சொல்லுவார்கள். அவர்களுக்கு, 'ஆறுமாதத்துக் கடன் காரன்' என்று ஒரு மார்வாடியுண்டு அவன் இவர்களுக்கு வட்டிக்கு, கடன் கொடுப்பான். எப்படி என்றால் பத்து ரூபாய்க்கு 1 அணா வீதம் 0-10-0 அணா ஒரு மாதத்து வட்டியாக அப்பொழுதே எடுத்துக் கொண்டு மீதி ரூ 9-6-0 தான் கொடுப்பான். பிறகு ஆறு மாதம் கழித்து வருவான். இவர்களுக்குப் பணம் கொடுக்க முடியாது போகவே வட்டியை மாத்திரம் கொடு என்று சண்டை போட்டு வாங்குவான், இப்படி இரண்டு மூன்று ஆறு மாதத்திற்கு வட்டி வாங்கி விட்டால் முதலுக்கு மேலேயே செல்லுபடியாகி விடும். பிறகு கெடுபிடி செய்து முதலையும் வாங்கி விடுவான். ஆனால் எந்தச் சமயம் எவ்வளவு பணம் கேட்டாலும் கொடுப்பான். இவர்களுக்குக் கடன் கொடுப்பவர் ஒருவருமில்லாத நிலைமையில் இவ்விதம் நடைபெறுகிறது. நாம் இந்த நிலைமையை மாற்றி அவர்களுக்கு உதவி செய்யலாம்.

"இப்பொழுது சேர்ந்திருக்கும் பணத்தை ஒரு கமிட்டி ஏற்படுத்திக் கொண்டு வைத்து அவர்களுக்குச் சொற்ப வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்கினால் மெத்த உதவியாக இருக்கும். 'பத்து ரூபாய் கடன் கொடுத்தால், வாரத்திற்குக் கால் ரூபாயாக கட்டி, பத்து மாதத்தில் தீர்க்க வேண்டும்' என்ற நிபந்தனை ஏற்படுத்தினால் அவர்களுக்கு உதவியாக இருக்கும்" என்றேன் நான்.

"இது வேலையற்ற வேலை. அதுகள் ஒழுங்காக கடனை அடைக்காதுகள். பணம் விரயமாகும். தேகம் கஷ்டப்படுவதுதான் மிச்சம்" என்றாள் முனிசிப் மனைவி விசாலம்.

"முதலில்' அவர்களை ஒன்று கூட்டி விஷயத்தை விளக்கமாக எடுத்துச் சொல்லி, தவறுகிறவர்களுக்கு அபராதம் என்று சொல்லி, ஏதாவது அவர்களின் சாமியை வைத்து பிரப்மாணம் செய்யச் சொன்னால் அதற்கு நிச்சயம் கட்டுப்படுவார்கள். நாம் சற்றே சிரமத்தை மேற் கொள்ளவேண்டும்" என்றேன்.

பிறகு அநேக வித ஆக்ஷேபனை சமாதானத்தின் மேல் இதை ஒத்துக் கொண்டார்கள். என்னுடன் ஒத்துழைக்க ஒரு மஹமதியப் பெண். பிறகு கமிட்டி பிரசிடெண்ட், பொக்கிஷதார் என்றெல்லாம் பிரித்து ஒவ்வொருவரையும் ஓட்டுக்கு விட்டே தேர்ந்தெடுத்து எங்கள் கிளப் கட்டித்திலேயே ஒரு அறையை இக் கொடுக்கல் வாங்கல் விவகாரத்திற்கு ஏற்படுத்தி, நடத்தி வந்தோம். எண்ணி, பத்துப்பெயரைத் தவிர மற்றவர்கள் அரை மனதுடனேயே ஒத்துழைத்தார்கள் லக்ஷியம் நன்றாகவே நிறைவேறிற்று. அநேகமாக அவர்களாகவே கையில் கிடைத்த பொழுதெல்லாம் கொண்டு வந்து விடுவார்கள். நாலிற்கு ஒன்று பழுது எதிலேயும் உள்ளது தானே. சிலர் தாமதப் படுத்துவர். அதனால் சில சமயம் அவர்கள் இருப்பிடம் சென்று வர நேரிடும். அந்த வேலையை நானும் மும்தாஸ்பீகமும் தான் ஏற்றுக் கொள்வோம். இரண்டு வருஷ காலம் நன்றாகவே நடந்து வந்தது. அரிசி சேர்த்து விற்பதும் நடந்து வந்தது, பல வேலைகள் செய்து வருவதினால் ஒரு சமயம் வடக்கே ஒரு காரியமாகப் போகவேண்டி வந்தது. சென்ற இடத்தில் ஆறு மாதம் தங்க வேண்டி வந்துவிட்டது. அண்ணா மன்னி, அக்கா நால்வருமே சென்றிருந்தோம். திரும்பி வந்து பார்க்கும் பொழுது, ஏற்படுத்திய பாங்க் மூடப் பட்டுவிட்டது. மும்தாஸூம் ஊரை விட்டுப்போய் விட்டாள்.

ஹரிஜனக் காலனியைப் பார்த்தால் 'பழயை குருடி கதவைத் திற' என்பதுபோல் குப்பை மேடு, பறட்டைத் தலை அழுக்குத் துணியுடன் காட்சியளித்தது. நாம் போய் செய்து கொண்டிருந்தால் தான் சுத்தம், கற்றுக் கொடுத்ததைத் தொடர்ந்து செய்ய மனமில்லையா? அல்லது சிருஷ்டி விநோதமே அவ்விதமா?" என்று அலுப்புத் தோன்றினது. இது மட்டுமல்ல எந்தப்பொதுஸ்தாபனத்தில் வேலைசெய்யப் போனாலும், இரண்டு பிரிவு உண்டாகி விடும். இரண்டிலும் குறையிருப்பதாகவே எனக்குத் தோன்றும். அதனால் ஒன்றிலும் சேராமல் நடந்து வந்தால் தூஷணை பூஷணை இரண்டும் கிடைக்கும். யாவற்றையும் ஒன்று போல் பார்த்து, பொறுமையைக் கடைப் பிடித்து நடந்தால் ஏதோ லக்ஷியம், எட்டுக் கோணத்திற்கும் ஒன்று போல் அமையா விட்டாலும் ஒரு கோணத்திலிருந்து பார்ப்பதற்காவது நிறைவேறியது போலத் தோன்றலாம்.

இந்தச் சஞ்சலமெல்லாம் சனிக்கிழமை பஜனையிலும். வீணை, நாட்டியம் கற்றுக் கொடுப்பதிலும் தான் தோன்றாமலிருக்கும். இவ்வளவு வருஷ காலமாகப் பாடுபட்டதற்கு ஒன்றையும் காணோம். மனச் சாந்தியையாவது தேடிக்கொள்ளலாம் மூன்று ஆச்ரமம் ஆரம்பிப்பதற்கு என்னுடைய சிறிய மூளையும் உபயோகப் பட்டிருப்பதினால், என்னிஷ்டம்போல் ஏதாவதொரு ஆச்ரமத்தில் பஜனை சங்கீதம் நடனம் இவைகளில் பொழுதைக் கழித்து விடலாம் என்ற முடிவிற்கு வரும் சமயம் தான் அவரைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பம்பாயிலுள்ள தென்னிந்திய மாதர் சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்கவும்,வீணைக்கச்சேரி செய்யவும் அழைத்திருந்தார்கள். கொண்டாட்டங்கள் முடிந்ததும் ஒரு முஸ்லீம் சிநேகிதி அழைப்பிற்கிணங்கி அவள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அந்தச் சமயம் ஹோலி பண்டிகைபோலும், ஹிந்து முஸ்லீம் சண்டைக்குப் பேர்போன இடமல்லவா? என்ன காரணமோ, பெரிய ரகளை ஏற்பட்டு விட்டது. அந்தத் தெருவில் வீட்டிற்குள் கூடப் புகுந்து கலகம் செய்யத் தொடங்கி விட்டார்கள். போலீசார் வந்தும் அடங்க வெகு நேரம் பிடித்தது. செஞ்சிலுவைச் சங்கத்தில் நானும் அவளும் பயிற்சி பெற்றிருந்ததினால் காயம்பட்டவர்களுக்கு முதல் சிகிச்சை செய்ய நாங்களே முன் வந்தோம். வீட்டு வாசலில் மண்டையில் அடிபட்டுக் கிடந்தார் இவர். இருவருமாகத் தூக்கி உள்ளே கொண்டுபோய்ப் பார்த்ததில் அடி பலமாக விழுந்து இரத்தம் வெளி வந்து கொண்டிருந்தது. மயக்க முற்றிருந்தார். உடனே டாக்டர்வந்து பார்த்துவிட்டு, 'இந்த நிலைமையில் அசையாமல் இருக்க வேண்டும். அதனால் இன்று இவ்விடமே இருப்பதில் ஆக்ஷேபனையில்லையே?' என்றார். என் தோழியின் கணவர் அச்சமயம் வெளியூர் சென்றிருந்தாரானாலும் தயங்காமல் இருக்க ஒத்துக்கொண்டாள் அவள்.

"இரவு முழுவதும் ஐஸ் ஒற்றடம் கொடுக்க வேண்டும். கலக நிலையில் நர்ஸ்களைத் தேடிப்பிடிக்க வேண்டும். உங்களால் செய்ய முடியுமானால் மிகவும் நல்லது" என்றார்.

என்னுடைய இயற்கையான வழக்கப்படி அப்பணியை நான் செய்வதாக ஒத்துக் கொண்டேன். விடியற்காலம் சுய உணர்வு வந்தது. ஆனாலும் ஜ்வரம் அதிகமாக இருந்

Aid
to Beauty
a Guardian
of COMPLEXION
மருந்து சத்துக்கள், தாவ்ர எண்ணெய்கள்-முக்
கியமாக வேப்பெண்ணெய்—வாசனைத் திரவி
யங்க்ள் இவைகளைக் கலப்பதில் கைதேர்ந்த
அனுபவத்தில் உருவானது மலபார் லிம்டா
சோப் தொடர்ந்து உபயோகித்தால் சரும
நோய்களை அண்டவிடாமல் தடுக்கும். மிருகக்
கொழுப்பு சேராதது. உஷ்
ணப் பிரதேசங்களுக் கேற்ற
தோர் அருமையான சோப்.
LIMDA
MALABAR
LIMDA
SOAP
VEGETABLE SOAP WORKS, CALICUT.
PROPRIETORS: SAIT N.P.& CO., LTD CALICUT-BOMBAY-2, MADRAS-1.

தபடியாளுல் மூன்று நாள் அவள் வீட்டிலேயே தங்கும்படியாகி விட்டது.

“மூன்று நாளும் சாப்பாடு?” என்ருள் லீலா.

நான் அவள் வீட்டில் சாப்பிடத் தயாராக இருந்தாலும் அவள் போடுவதற்குத் தயாராக இல்லை. ‘மனமொத்த அன்புஇருக்க வேண்டியதே. அதற்காக அவரவர்கள் மதாசாரத்தை ஏன் விடவேண்டும்’ என்று ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைக்க ஏற்பாடு செய்துவிட்டாள். கரியடுப்பு வைத்துக்கொண்டு அவருக்கு வேண்டியவைகளைத் தயார் செய்தேன்.

மூன்று நாட்கள் சென்றதும் அவருக்கு ஜ்வரம் இறங்கி விட்டது. தலைப் புண்ணும் கொஞ்சம் குணமாயிற்று. டாக்டரிடம் தம்மிருப்பிடம் செல்ல, அனுமதி கேட்டார். டாக்டரும் அனுமதியளித்தார். டாக்டரின் விலாசத்தைக் கேட்டுக்கொண்டு ‘செக்’ அனுப்புவதாகச் சொன்னர். டாக்டர் சென்றதும் ‘தங்கள் இருப்பிடம் எங்கே?



குடும்பத்துடனிருக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''குடும்பமொன்றுமில்லை. தனியாக ரூம் எடுத்துக்கொண்டு ஹோட்டலில் தான் சாப்பிடுகிறேன், தற்சமயம் இரண்டு வருஷமாக இவ்வூரிலேயே உத்யோகம் வஹிக்கிறேன்'' என்றாரவர்.

என்தோழி இன்னும் ''இரண்டு தினங்கள் இருந்து உடம்பு நன்றாகக் குணமான பின்பு செல்லலாம்'' என்று சொன்னாள்.

''இவ்வளவு நாள் உங்களுக்குச் சிரமம் கொடுத்ததே தவறு. நீங்கள் இருவரும்செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். தெரு வழியே சாதாரணமாக வந்த எனக்கு இத்தகைய ஆபத்து நேரிட்டுவிட்டது. மன்னித்து எனக்கு விடையளியுங்கள்'' என்றார்.

டாக்ஸி வந்து புறப்படும் சமயம், ''நீங்கள் இவ்வூரில் வாசம் செய்வது எவ்வளவு நாளோ?'' என்றார் கானமோகினி காதம்பரி தேவியைப்பற்றி கேட்டிருந்தவர், நேரில் பார்த்த பின் என் அலுவல்களைத் தெரிந்து கொண்டவர் போல்.

''நாளை ஒரு நாள் தான் இவ்வூர் வாசம். அலகாபாத்தில் கூடும் மஹாநாட்டு வரவேற்புக் கமிட்டியின் அங்கத்தினருள் அடியேனுமொருத்தி. அதனால் அடுத்த காம்ப் அலகாபாத்'' என்றேன்.

''ஓ! நீங்கள் தானா அது. நீங்கள் முன்பிருந்தே பழகியதினால் ஆள் நியமிக்கும் கூட்டத்திற்கே சென்றிருந்தீர்கள் போலும். நான் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினன் அக்கமிட்டியில்'' அதனால் நானும் அவ்விடம் செல்ல வேண்டியவனே. இரண்டு நாள் தங்கினால் இருவருமே சேர்ந்து புறப்படலாமென்று நினைக்கிறேன்.''

ஏதோ ஆபத்து ஏற்பட்டது. உதவி செய்தோம் போனார். அவ்வளவினோடு நிற்க வேண்டியது தான். ஆனால் மேலும்



உறவு நீடிக்கும்படி அவர் விரும்புகிருர். நமக்கும் அதைத் தடை செய்ய மனம் வரவில்லை என்று சிந்தனை செய்தவாறு நின்றேன்.

"என்ன யோசனை செய்கிறீர்கள். சௌகரியமில்லாவிடில் வேண்டாம். அவ்விடத்தில் சந்தித்துக் கொள்ளுவோம்" என்ருர்.

'அப்படி ஒன்றும் அசௌகரியமில்லை, இரண்டு காலைய பழக்கத்தில் எவ்வளவு அன்பு என்று நினைத்து வியந்தேன், சேர்ந்தே புறப்படுவோம்" என்றேன்.

"ரொம்ப சந்தோஷம். அப்படியாளுல் இப்பொழுது நீங்கள் இருவரும் என் கூட வந்தால் என் இருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளலாம். பிறகு ஒருவர்க்கொருவர் பார்த்துக் கொள்ள வசதியாக இருக்கும்" என்ருர்.

"என் சிநேகிதி அவள் கணவர் வந்த பின்பு வருவதாகவும், அவரை சௌகரியப்

பட்ட பொழுதெல்லாம் தன் வீட்டிற்கு வரும்படியும் கேட்டுக்கொண்டாள். பிறகு நான் மட்டும் அவருடன் சென்றேன். அறை மிக்க ஒழுங்கான முறையில் காட்சியளித்தது. டிபனும் காப்பியும் வரவழைத்தார். இருவருமாகச் சாப்பிட்ட பின்பு சற்று நேரம் ஹிந்து முஸ்லீம் கலகத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து விட்டு விடை பெற்றுக் கொண்டேன். தனது வேலைக்காரனைத் துணையாக வைத்து டாக்ஸியில் அனுப்பி வைத்தார்.

இந்தத் தடவை பதினைந்து நாளில் திரும்புவதாக இருந்தபடியினால் அக்காவோ அண்ணாவோ ஒருவரும் வரவில்லை. மேலும் அண்ணாவும் மன்னியும் பிள்ளையுடன் தனிக் குடும்பம் போனதிலிருந்து சுற்றுப் பிரயாணத்தைத் தனியாகவே செய்து வரலானேன். பம்பாயை அநேக முறை சுற்றிப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர் "சுற்றிப் பார்க்கலாம் வருகிறீர்களா?" என்று டாக்ஸியுடன் வந்து கூப்பிடும் பொழுது மறுக்க மனமில்லாமல் சென்றேன். இப்படியாக எதிர்பாராத விதமாக இருவருக்கும் பழக்கம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

ரயில் பிரயாணமும் தமாஷிலேயே கழிந்தது. மஹாநாட்டிலும் ஒன்று சேர்ந்து வேலைகளை வெகு திறமையாகவே செய்தோம். மஹாநாடு முடிந்து அலகாபாத்தை விட்டுப் புறப்படுவதற்கு முதல் நாள் அஸ்தமன சமயம். பௌர்ணமியானதினால் நிலவு பால்போல் காய்ந்தது. யமுனையை நிலவில் காண நானும் அவருமாகச் சென்று ஜன நடமாட்டம் அதிகமில்லாத இடத்தில் ஜலக்கரையோரம் உட்கார்ந்து கொண்டோம். தெளிந்த நீரோட்டமும் ஆற்று மணலை வெள்ளிபோல் செய்து கொண்டிருக்கும் சந்திரோதயமும், குளிர்ச்சியான மந்த மாருதமும், மனதிற்கு ரம்யமாகத் தோன்றினவே தவிர காதலர் உணர்ச்சி தோன்றவில்லை என் மனதில். அவர் மனதில் அந்த உணர்ச்சி தோன்றியிருக்கலாமென்று நினைக்கிறேன்.

"சமூகத்தில், அதிலும் நம்மரபில் நீங்கள் இவ்வளவு துணிவுடன் நடந்து பெண் சமூகம் முன்னேற வழி காட்டியது புரட்சிகரமான செயல் தான். உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்றார்.

"ஏதோ எல்லாம் நாம் செய்வதாக எண்ணுகிறோமே தவிர 'விதி' இருக்கிறதே, அது ஆட்டுவிக்கும் கருவிகள் தாம் நாம்"

"விதியை நீங்கள் நம்புகிறீர்களா?"

"நம்பாமல்? என் வாழ்க்கையில் எவ்வளவு அற்புதங்கள்?"

"நான் சொல்லுவது குற்றமாகத் தோன்றினால் மன்னித்து விடுங்கள். கேட்டதை வாபஸ் வாங்கி விடுகிறேன். விதவா விவாகம் என்ற அற்புதத்தை உங்கள் சொந்த முறையிலேயே நடத்திக் காண்பிக்கவில்லையே ஏன்?"

"நீங்கள் கேட்பதில் தப்பிதமென்ன? என் முயற்சியில் எவ்வளவோ நடந்திருக்கின்றன. 'பணி செய்வதே என் கடன்' என்ற அண்ணாவின் புத்திமதி மனதில் வேரூன்றியபடியினால் அவ்விஷயத்தில் முயற்சியெடுக்கத் தோன்றவில்லை. இவ்வளவு நாளும். பொது நலனுக்குப் பாடு பட்டோம் என்ற ஒரு திருப்தியைத் தவிரப் பொது நலம் என்னவோ முன்னேறுவதாகத் தோன்றாத நிலையில் அவைகளினின்றும் விடுதலை பெறத் தீர்மானித்து விட்டேன்."

"பிறகு என்ன செய்வதாக உத்தேசம்?"

என் தீர்மானத்தைச் சொன்னேன்.

"எல்லா வித வேலைகளிலும் அனுபவம் கிடைத்து விட்டது. குடும்ப வாழ்க்கையின் அனுபவத்தையும் பார்த்து விட்டால்?"

"முப்பத்தெட்டு வயதிற்கு மேலா?" என்றேன். சிரிப்பை அடக்க முடியவில்லை. ஜலக்கரையே எதிரொலித்தது.

"ஆண் பிள்ளைகள் அறுபத்தெட்டு வயதில் மேற்கொள்ளவில்லையா?"

"அவர்களுக்குப் பதினெட்டு வயதுப் பெண்கள் தாராளமாகக் கிடைப்பார்களே."

"ஏன் உங்களுக்கும் கிடைக்க மாட்டார்கள்?"

"ஒன்று நல்ல தீர்ந்த அழகாக இருக்க வேண்டும். சுமாரான அழகானாலும் தேகம் மெல்லியதாக வயது ஏறினதைக் கண்டு பிடிக்கா வண்ணம் இருக்க வேண்டும். என் நிலைமை எனக்குத் தெரியாதா? கண்ணாடி முன் நின்றால் நான் இருக்கும் அழகு கண்ணில் படாதா? தலை நரைக்கவில்லை. முகம் சற்று இளமை காட்டுகிறது. உடம்பு? சற்று இடுப்புப் பெருத்த பின்பு நானே ஐந்து வருஷமாகப் பரத நாட்டியமாடுவதை விட்டு விட்டேன். அஞ்சலி தேவி என்ன செய்கிறாளோ? அவள் உடம்பு அன்று போலவேயிருக்கிறது. என் நிலைமைக்கு யார் ஏற்பார்கள்?" எனச் சிரித்தேன்.

"அறுபத்து எட்டு வயதிற்குப் பதினெட்டு வயதுப் பெண் என்றால் முப்பத்து எட்டு வயதிற்கு இருபத்து எட்டு வயதுப் பிள்ளை இவ்வளவு தானே? உங்கள் முகத்தில் இளமை

யிருக்கிறது. குணமும் உழைப்பும் இருக்கின்றன. வேறு என்ன வேண்டும்?"

"இவையெல்லாம் சும்மா வாய்ப் பேச்சு. காரியத்தில் இறங்க யாருக்கும் துணிவு ஏற்படாது."

"மனமிருந்தால் இடமுண்டு. நீங்கள் சம்மதிக்கும் பக்ஷத்தில் நானே உங்களை ஏற்றுக்கொள்ளுகிறேன்."

"சங்கர்!" என்றேன். என்னல் மேலே பேச முடியவில்லை என்று சொல்லும் பொழுதே, 'சங்கர்' என்னும் பெயரைக் கேட்டதும் லீலாவின் தேகம் நடுங்கினதைக் கண்டு, பேச்சை நிறுத்தி, "ஏன் லீலா, உன் உடம்பு இப்படி நடுங்குகின்றது?" என்றாள்.

"ஒன்றுமில்லையக்கா. தாங்கள் உணர்ச்சியுடன் பேசி வந்ததினால் 'சங்கர்' என்று சொல்லும் பொழுது எனக்கும் அந்த உணர்ச்சி தாக்கினது. அவ்வளவு தான், உங்கள் சொல் வன்மையினால் நேர்ந்தது. மேலே சொல்லுங்கள்."

"ஏன் என்னைப் பிடித்திருக்கிறதல்லவா தங்களுக்கு? அன்று அடிபட்ட சமயம் இரவு பகல் நீங்கள் செய்த சேவை என் மனதைக் கவர்ந்து விட்டது. அழகு எதற்கு? குணம் தான் வேண்டும்" என்றார்.

"சங்கர், உங்கள் குணமும் பணிவுள்ள பேச்சும் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. உங்களிடத்தில் ஒருவித பாசமும் ஏற்பட்டுத் தானிருக்கிறது. உங்களையும் என்னையும் பார்த்தவர்கள் 'அக்கா' தம்பி, என்றே நினைக்கும்படிக்கு இருக்கும். யோசியுங்கள்.

"தாத்தாவும் பேத்தியும்போல் போகும் பொழுது அக்காவும் தம்பியுமாகப் போனல் போகிறது."

"அப்படியானல் சங்கர் உண்மையாகவே தான் சொல்லுகிறீர்களா?"

"இவ்விஷயத்தில் விளையாட முடியுமா? என் லக்ஷியமே அது தான்."

அத்தியாயம்—8

"என்ன ஒரேயடியாக மௌனத்தில் ஆழ்ந்து விட்டீர்களே" என்ற சங்கரின் கேள்வியும், "விதியதாம் மாறுததே அதுவே வேதனையாம்" என்ற பிச்சைக்காரன் பாட்டும் என் கவனத்தைச் சுய நினைவிற்குக்கொண்டு வந்தன.

"உங்கள் விஷயத்தில் என்னையும் அறியாத பாசம் தோன்றி விட்டபடியினல் உங்கள் சொற்படி நான் நடந்தால் உங்கள் பெற்றோர் சம்மதம் கிடைக்குமா? குடும்பங்களில் பிளவு ஏற்பட நான் காரணமாக இருக்கக் கூடாதென்பது என் கொள்கை."

"நான் குடும்பத்தினின்றும் விடுதலை பெற்று வெளியே வந்து நான்கு வருஷத்திற்கு மேலாகிறது. பெற்றோர்கள் விடுதலைப்பத்திரம் வாங்கிக்கொண்டு என்னை வெளியே அனுப்பிவிட்டார்கள்."

"காரணம்?"

"வாலிபர் சங்கம்" என்று பத்திரிகைகளில் அடிபட்டு வந்துகொண்டிருந்ததே அதைக் கவனித்திருப்பீர்களென்று நினைக்கிறேன். தற்சமயம் அது தலைவனில்லாததினல் அபிப்பிராய பேத மேற்பட்டு ஏதோ ஒரு மாதிரியாக நடந்து வருகிறது. அதற்கு முன்னல் அப்பப்பா, அச்சங்கம் செய்த அருமையான சேவைகளால் அநேகம் பெண்கள் சமூகத்தின் மூடப் பழக்கங்களினல் ஏற்படும் கொடுமைகளினின்றும், வறுமையின் கொடுமையினல் வாழ்வைப் பாழ்படுத்தும் கிழவர்களின் கொடுமையினின்றும் மீட்கப் பட்டார்கள். அச்சங்கத்தில் யானுமொரு முக்யமான அங்கத்தினன். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு லக்ஷியத்தை நிறை வேற்றும் பொறுப்பு ஏற்பட்டது. எனக்கு வயதிற்கு மூத்தவளான விதவையை மணம் செய்து இல்வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற பொறுப்பு ஏற்பட்டது. அதனல் பெற்றோர் ஏற்பாடு செய்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று சொன்னதினல், ஏற்பட்டதின் விளைவு."

"அச்சங்கத்தைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அதன் செய்கைகள் எனக்கு அவ்வளவாக ரசிப்பதில்லை. உங்களுக்காக நான் அச்சங்கத்தில் சேர முடியாது."

"சுதந்திரம் வேண்டும் என்பதாகப் பறையடிக்கும், நாங்கள் ஸ்திரீ சுதந்திரத்தில் குறுக்கிட மாட்டோம். என் லக்ஷியம் தான் பாக்கி. அது நிறைவேறி விட்டால் பின்பு சங்கத்தைப்பற்றி அக்கரையில்லை. உங்கள் நிமித்தம் அதை விட்டு விலகினலும் அனுமதியளிக்கும் சங்கம்."

"நீங்கள் கேட்கும் உரிமைக்கு, என்னைப் பன்மையில் அழைப்பது எப்படி முறை? ஒருமையில் தானே பேச வேண்டும்?"

"உறுதி ஏற்பட்டு விட்டால் பிறகு தான் அந்த, சகஜ மனப்பான்மை தோன்றும். உறுதிதானு?"

"என்னை இவ்வளவு தூரம் முன்னேறும் படி செய்த தமையனரின் உத்தரவில்லாமல் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. அவரிடம்

உபயோகத்திற்குப் பிரசித்தி பெற்றவை

அழகாக எழுதுவதற்கு

PACHOLI HAIR TONIC

பச்சோலி ஹேர் ஆயில்

கூந்தலின் அழகிய வளர்ச்சிக்கு

சிறந்த சுகாதார வசதிகளுக்கு

பிரகாசமான நீடித்த வெளிச்சத்திற்கு

Manufacturers :

RAMAN INKS Co., Regal Agencies,

186, Royapettah High Road, :: MADRAS.

கேட்டுப் பிறகு உங்களுக்கு உறுதி சொல்லுகிறேன்."

"உங்களுக்குச் சம்மதமானால் இவ்விஷயத்தில் உங்கள் அண்ணா என்ன சொல்ல முடியும்?"

"அப்படியல்ல. இன்று சங்கீத வானில் நக்ஷத்ரமாகப் பிரகாசிப்பதாக என்னை யாவரும் கொண்டாடுகிறார்களே, அந்தச் சொல் ஏற்படக் காரண புருஷரானவர் என்னை ஏற்றுக்கொள்ள அக்காலத்திலேயே விரும்பினார். வயது, குணம், சங்கீதம் முதலிய சகல அம்சங்களிலும் இருவருக்கும் நல்ல பொருத்தமென்றே சொல்லலாம். எனக்கும் சம்மதமாகத்தானிருந்தது. அந்தச் சமயம் குடும்ப பந்தத்தினின்றும் விடை கொடுத்த புண்ய புருஷரும் உயிருடனிருந்தார். அண்ணாவிற்கு விஷயம் எட்டவும் விதியினால் தாம்பத்ய வாழ்க்கையினின்றும் பிரிக்கப் பட்ட நான், சமூக சேவையில் ஈடுபட வேண்டுமென்பதே ஈசனின் கட்டளை என்பதாக உபமான உபமேயங்களுடன் எடுத்துரைத்தார்கள். என் அறிவுக் கண் திறந்தது. லக்ஷியப் பெண்ணாக விளங்கலாம் என்ற நம்பிக்கையில் அவரின் காதலை உதறி விட்டேன். மனம் நொந்து அன்றே வெளியேறி விட்டார். உயிருடன் தான் இருக்கிறாரோ, இல்லையோ. ஏதோ முதலில் ஏற்பட்ட பிரேமையென்பதினாலோ என்னவோ. ஏதாவதொரு சமயத்தில் அவரைப் பற்றிய சிந்தனை தோன்றும், அவ்வளவே. பொதுப் பணியில் சாந்தி கிடைக்குமென்று நம்பினேன். கானல் நீர் போல் தான் அதில் சாந்தி தென்பட்டது. எவ்விதமான பணியேற்றாலும் பூர்ண திருப்தியேற்பட்டதாகவே தோன்றுவதில்லை. அதனால் தான் உங்கள் விருப்பத்திற்குச் சற்றே செவி சாய்கக மனதுமிடமளித்தது. இப்பொழுதும் அண்ணா மறுப்புக் கூறினால் நான் கட்டுப்பட வேண்டியவளே. அதனால் ஊருக்குச் சென்று உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்" என்றேன்.

"அடுத்த வாரம் நானே நேரில் வருகிறேன். உங்கள் அண்ணா சம்மதம் நிச்சயம் கிடைக்கும்" என்றார்.

"சரி, அப்படிக் கிடைத்து விட்டால் பாக்கியவதி தான் நான். ஆனால் எனது வாழ்க்கை வரலாறு முழுவதும் சொல்லி விட்டேன். முன்னால் மனதில் ஒருவருக்கு இடமளித்ததையும் கூறி விட்டேன். அப்படியிருந்தும் என்னை ஏற்றுக் கொள்வதில் உங்களுக்கு ஏன் ஆவல்?"

"அதுதான் விதியின் செயல். ஒரு காலத்தில் நானும் அதுபோல் தவறு செய்திருக்கலாம். அதனால் அந்த மனப்பான்மை நான் அறியாமலிருக்க முடியுமா? எல்லாவற்றையும் ஒளியாமல் சொன்னதினாலேயே உங்களிடம் இன்னும் அதிகமான மதிப்பும் பாசமும் ஏற்படுகின்றன."

"உங்கள் பெற்றோரை நான் பார்க்க முடியுமா?"

"மன்னிக்க வேண்டும். நான் வெளியேறும் பொழுது, அவர்களின் குடும்பக் கௌரவம் காப்பாற்றப்பட, ஒருவரிடத்தும், அவர்களின் பெயரையாவது இருப்பிடத்தையாவது சொல்லுவதில்லை யென்று வாக்களித்திருக்கிறேன். தற்சமயம் நான் ஏகாங்கி. இந்த நிலைமையில் நீங்கள் மனமுவந்து ஏற்றுக் கொள்ளுவதானால் சரி. இல்லையேல் பிரிவது தான் விதி. வேறு மார்க்கமில்லை. ஓரிடத்தில் ஒரு பெண்ணைச் சந்தித்தேன். இருவரும் மனமொத்து விரும்பினோம். கடைசியில் சங்கத்தின் செயலால் அவளுக்கு அநேக வித சமாதானம் கூறி விடை கேட்டேன். கதறினாள், வேண்டினாள். கடுஞ்சொற் கூறினாள். பலனில்லை. கடைசியில் விடைகொடுத்தாள். ஆனால் தன்னினைவில்லாதிருக்கும் பொழுது கிராதகன் போல் விட்டு வந்தேன். பெற்றோர் கிடையாது என்றாலும் ஆதரவாக நடத்தும் ஓர் குடும்பத்தினுள் அவளிருந்தபடியினால் அவள் சுகமாக இருக்க முடியும் என்ற தைரியத்தில் விட்டுவிட்டு வந்து விட்டேன். புத்திசாலிப் பெண். விவேகி. தைரியத்துடன் எங்காவது முற்போக்கான வாழ்க்கை நடத்த வேண்டும் அல்லது அந்த மூர்ச்சை தெளியாமலே இருந்து விட்டதோ? நீங்கள் சொல்லுவது போல் ஏதாவதொரு சமயத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாளோ? என்று எண்ணம் தோன்றும். அவ்வளவே. அந்தச் சமயம் வேறு விஷயங்களில் மனதைச் செலுத்தி விஷயத்தை மறக்கச் செய்து விடுவேன். நானும் உண்மையைச் சொல்லி விட்டேன். இனி நாம் ஒன்று கூடி வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டால், இந்த நினைவு கூடத்தோன்றாது என்பது எனது நம்பிக்கை.

"சரி. நடக்க நடக்கப் பார்க்கலாம்" என்றேன்.

"ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றுடன் நமது பழைய விஷயங்களைப்பற்றிப் பேசுவது முடிவடைந்து விடவேண்டும். இனிமேல் இவைகளைப் பற்றி இருவரும் பேச வேண்டாம். இது நல்லது தானே?"

"சாலச் சிறந்தது."

கொஞ்ச நேரம் ஆகாயத்துச் சந்திரனை உற்று நோக்கியவாறு உட்கார்ந்திருந்தார்.

பதினைந்து நிமிஷம் மௌனத்தில் சென்றது. அதற்கு மேல் எனக்குப் பொறுமையில்லை. "என்ன ஆகாயக் கோட்டையோ?" என்றேன்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லி விட்டு ரோமியோ ஜூலியட்" என்று எழுந்திருந்தார்.

"ஏன் அவர்கள் நினைவு. அவர்கள் காதல் போல் நமது காதல் ஆகிவிடுமென்றா?" என்று ஏளனமாகச் சிரித்தேன்.

"நமது காதல் அப்படியாகாது என்பது எனக்குச் சர்வ நிச்சயம். கடந்த காலம் பற்றிப் பேச வேண்டாமென்று சொல்லி விட்டு நானே பேச முடியுமா? போகட்டும் அவ்விஷயம். நாம் போகலாம், "வாருங்கள்" என்று என் கையைப் பற்றி எழுந்திருக்கச் செய்தார். அந்த ஸ்பரிசத்தில் இன்பமோ, கூச்சமோ எதுவுமே தோன்றவில்லை என்றாலும் கையைப் பற்றியவாறே நடந்தோம்.

"சரி, இவை போகட்டும். உங்கள் அண்ணாவின் சம்மதம் எப்படி கிடைத்தது என்பது பற்றிச் சொல்லுங்கள்."

ஊருக்குச் சென்றதும் இரவு சாப்பாட்டிற்குப் பின்னர் அண்ணா, மன்னி, நான் மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுது என் விஷயத்தை எவ்விதம் பிரஸ்தாபம் செய்வது என்று ஒரு சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது. பகவான் மனமிரங்கினாற் போல மன்னி பேச்சைத் துவக்கினாள்.

"பம்பாயில் கலகம் நடந்த பொழுது, நீயும், ஜின்னத் பீகமும் காயம் பட்டவர்களுக்கு உதவி செய்ததாகப் பத்திரிகையில் வந்திருந்ததே. என்ன நடந்தது?" என்றாள்.

"என்னைத் தெரிந்தவர்கள் யாராவது வந்திருந்திருப்பார்கள். அவ்வளவு தான். பத்திரிகைக்காரர்கள் போடுவதற்குக் கேட்பானேன். ஒருவர் கொஞ்சம் நாலுபேர் புகழக் கூடிய நிலைமையிலிருந்தால், அவர்கள் வீட்டுக் காக்காய் வந்தால்கூட அவர்கள் வந்ததாகப் போடுவது சகஜம் தானே. அன்று உண்மையில் கலகத்தில் பாடுபட்டவர்கள் ஏழைத் தொழிலாளிகள். நானும் ஜின்னத்தும்வாசற்படியில் விழுந்த ஒரே ஒருவருக்குத் தான் உதவி செய்தோம். இரண்டு நாட்கள் ஜின்னத் வீட்டில் அவருக்கு நர்ஸ் வேலை செய்தேன். சுகமுற்றார். நல்லமனிதர். பிறகு மஹாநாட்டில் வரவேற்புக் கமிட்டியில் சங்கர் என்று பேர்போட்டிருந்ததே அந்த ஆசாமி என்று தெரியவந்தது. அதனால் இருவருமே சேர்ந்தே பிரயாணம் செய்தோம். மஹாநாட்டிலும் இருவருமே எந்த விஷயத்தையும் ஒன்றாகவே செய்து வந்தோம். இருவர் மனமும் மிக மிக ஒற்றுமை. அவர் நினைப்பதை நான் சொல்லுவதும் நான் நினைப்பதை அவர் சொல்லுவதும் சர்வ சகஜமாக இருந்தன."

"எந்த ஊர்க்காரனோ?"

"ஆள் நம்மரபினர் என்பது தெளிவாகத் தெரிந்தது. மற்ற விஷயங்களை அவர் சொல்லவிரும்பவில்லை. நான் கேட்கவும்விரும்பவில்லை. ஒருவர் குணம் மற்றவருக்குப் பிடித்து விட்டது அதனால்........."

"அதனால் என்ன காதம்பரி! ஏதோ முக்யமான விஷயம் பேசப்போகிறாய் என்பதை உனது முதல் வார்த்தையிலேயே நான் தெரிந்துகொண்டு விட்டேன். விஷயத்தைத் தயங்காமல் சொல்லு" என்றார் அண்ணா.

எப்படிச் சொல்லுவதென்று விளங்காமல் தவித்தேன். என் மௌனத்தைக்கண்ட மன்னி "என்ன காதம்பரி, நீ கூட குழந்தை போல் தயங்குகிறாய். உன் இஷ்டப்படி நடக்க உனக்குச் சுதந்திர முண்டு. கட்டுப்படுத்தி, காவல் காக்கும் காலம் கடந்து விட்டது. அவருடன் ஏதோ உடன் படிக்கை செய்துகொண்டு வந்திருக்கிறாய் என்றுநினைக்கிறேன். என் யூகம் சரிதானே?" என்றாள்.

"உன் யூகம் சரிதான் மன்னி. இவ்வளவு காலம் பொதுப்பணியில் ஈடுபட்டு வந்ததில் ஒரு விதத்திலும் மனதிற்குத் திருப்தியோ சாந்தியோ கிடைக்கவில்லை. ஆனால் இவ்விதமான நிலைமைகளைப் பொறுமையுடன் சஹிப்பதினால் தான் லக்ஷியவாழ்க்கை நடத்த முடியும். ஆனால் என் மனதில் நிரந்தர அலுப்புத் தோன்றி விட்டது. அதனால் வாழ்க்கையில் மாறுதல் பெற விரும்புகிறேன்"

"எவ்விதமான மாறுதல்?" என்றார் அண்ணா.

"சங்கர் என்னை விட வயதில் இளையவர். அவரது லக்ஷியம் தமக்கு மூத்தவளான விதவையைக் கல்யாணம் செய்து கொள்ளுவது என்பதாம். அவருடைய லக்ஷியத்திற்கு நானே பாத்திரவதியாகலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிறேன். ஆனாலும் உங்களின் பூர்ண சம்மதமில்லாமல் செய்ய மாட்டேன் என்பது திண்ணம்" என்று சொல்லி முடிப்பதற்குள், இவ்வளவு வயதாகியும் எவ்வளவோ அனுபவங்கள் பெற்றிருந்தும் பெண்ணின் இயற்கையான நாணமோ பயமோ என் உடம்பெல்லாம் குப்பென வியர்த்துக் கொட்டி விட்டது.

"காதம்பரி, இவ்வளவு காலத்திற்குப் பின் உனக்கு இவ்வெண்ணம் உதித்தது ஆச்சர்யம்! காரணம்?" என்றார் அண்ணா.

''காரணம் முன் சொன்னது தான். உங்கள் லக்ஷியப் பெண்ணாக இவ்வளவு நாள் கழித்தேன். விதியின் கோளாறோ, மதியின் மயக்கமோ இப்பொழுது அந்த வாழ்க்கை அர்த்தமற்றதாகத் தோன்றுவது தான்''

''சுதர்மனின் சாபம் பலித்தது போலும். 'இயற்கைக்குப் புறம்பான உனது லக்ஷியம் கனவாகத்தான் முடியப்போகிறது.'' காதம்பரி! மனதின் இஷ்டப்படி நடப்பதா நமது லக்ஷியம். யௌவனத்தைச் சுலபமாகக் கழித்த உனக்கு இனிமேல் கழிப்பதா கஷ்டம்? உன்னை நான் சாதாரணப் பெண்ணாகவே நினைக்கவில்லையே. தெய்வாம்சம் பொருந்தியவளென்று தான் தீர்மானம் செய்திருக்கிறேன். சபலம் வராதே'' என்றார்.

அவர் என் மீது வைத்த பற்றுதல் அசாதாரணமானது என்பதற்கு முன்னால் நடந்த ஓர் விசித்ரம்கேள். நான்கூட என்னைச் சாதாரண மனுஷிதான்' என்பதை அதற்கப்புறம் தான் தீர்மானம் செய்தேன். சுதர்மன் சென்ற பிறகு, அந்த மனவியாகூலமானது எவ்வளவு நான் அடக்கிக் கொண்டாலும் என்னையறியாமல் சஞ்சலப்படுத்தும். அந்த மனோபாவத்தினால் தேகத்தில் சிறு மாறுதல்கள் தோன்றலாயின. அதைக் கவனித்த அண்ணாவானவர்,

''காதம்பரி! நீ தெய்வாம்சம் பெற்றவள் என்பதில் சந்தேகமே இல்லை. நேற்று ஓர் சொப்பனங்கண்டேன். கன்னிமரியாளிடம் இயேசு பிறந்ததுபோல், கிரீட குண்டலதாரியான ஓர் குழந்தை உனக்குப் பிறந்ததாகக் கண்டேன். ஆண்வாடையின்றிப் பிறக்கும். அக்குழந்தை தேவனாகத் தான் இருக்க முடியும். உன் தேக மாறுதலுக்குக் காரணம் இதுவே'' என்றார். நானும் உண்மையென்று நம்பினேன்.

பெண்களுக்கே இயற்கையான அனுபவத்தில் யூகித்துக் கண்டறியும் சக்தியுண்டல்லவா? மன்னி என்னைத் தனிமையிலழைத்து, ''காதம்பரி, உன் நன்மையைக் கோரியே உன்னைக் கேட்கிறேன். பெண்ணிற்குப் பெண் லஜ்ஜைப் படாமல் உண்மையை என்னிடம் மறைக்காமல் கூற வேண்டும். இக்கலியுகத்தில் அமானுஷிகமான காரியங்கள் நடைபெறுவது கனவில் தான் காணமுடியும், உன் தேகக் கோளாறுகளுக்குக் காரணம் இரண்டேதானிருக்க வேண்டும். ஒன்று நீயும் சுதர்மனும் நெருங்கிய தொடர்பேற்படுத்திக் கொண்டிருந்ததினால் விளைந்த பலனாக இருக்க வேண்டும். அல்லது வியாதியின் அறிகுறியாக இருக்க வேண்டும். வீண் மனப்பிராந்தியில் வியாதியை வளர விடுவது புத்தி சாலித் தனமாகாது. அதனால் சுதர்மன் விஷயத்தில் நீ நடந்து கொண்ட விதத்தை மறைக்காமல் என்னிடம் சொல்லிவிடு. எப்படியாவது அவரைத் தேடி அழைத்து வந்து உங்கள் பிணைப்பை ஊர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்து விடுகிறேன்'' என்றாள்.

''எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. உண்மை என் மனமறியும். வியாதியினால் துன்பப் படப் போகிறோம்'' என்ற பீதி பற்றிக் கொண்டது. அதனால், 'மன்னி! தாய்க்கு மேலானவள் நீ. உன்னிடம் உண்மையை மறைத்தால் நான் போகும்வழி என்ன? சுதர்மனும் நானும் மனம்விட்டுப் பேசிய பின்பு பத்துத் தினங்கள் தானே அவர் இவ்விடம் இருந்தார்'' என்று முடிக்கு முன்,

'அட, பைத்யமே! பத்துத்தினம் எதற்கு?'' என்றாள்.

''அப்படியல்ல மன்னி! உண்மையை ஒளிக்காமல் உன்னிடம் சொல்லுவதற் கென்ன? அவர் புறப்படும் வரை என்னைத் தீண்டியவரேயல்ல. ரயிலுக்குப் போகுமுன் ஓர் முத்தமிட்டார், அவ்வளவே. அதனால் என்னை டாக்டரிடம் அழைத்துச் செல்லுங்கள் என்றேன். ஒரு மாதம் மருந்து சாப்பிட்டதில் உடம்பு பழைய நிலைமைக்கு வந்து விட்டது. 'கிரீட குண்டலத்தையும் காணோம் குழந்தையையும் காணோம்' இந்தச் சமயம் அந்த நினைப்புத் தோன்றவே,

''அண்ணா, தெய்வாம்சம் பெற்றவளானால் இந்த நிலைமைக்கு வந்திருக்க முடியாது. நீங்கள் என் மீது வைத்திருக்கும் கைம்மாறு கருதாத அன்பானது அப்படி நினைக்கச் சொல்லுகிறது. மனித உணர்ச்சி என் உடலில் ஊறத்தானே செய்கிறது'' என்றேன்.

''அன்று வரை எந்த விஷயமானாலும், எப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டாலும், அண்ணாவின் பேச்சுக்கு எதிர்த்தவளே அல்ல மன்னி, அவர் எது சொன்னாலும் இன் முகத்துடனே ஏற்றுக் கொள்வாள். அன்று அவள் பேசியதை என்னால் நம்பவே முடியாது நேரில் பார்க்காமற் போனால்.

''இந்த விஷயத்தில் நான் குறுக்கிடுவது பற்றி மன்னிக்க வேண்டும். இவ்வளவு நாள் நீங்கள் எதிர் பார்த்த லக்ஷியப் பெண்ணாக விளங்கினாள். அத்துடன் நீங்கள் திருப்தி கொள்வது தான் உசிதம். இனி அவள் ஏற்கப் போகும் வாழ்க்கையும் ஒரு லக்ஷியத்தைப் பொறுத்தேயிருக்கிறது. சமூகசேவையின் போரில் அந்த முனையிலும் நின்று வெற்றி பெற்றாள் காதம்பரி. அவளைப் போற்றுதார் உலகிலில்லை. அப்படியிருந்தும் இதுவரை அவளுக்குப் பாதுகாப்பாக நாம்

இருந்து வந்தோம், நமக்கு வயதாகி விட்டது. நமது பிள்ளையின் உத்தியோகமோ ஜில்லா ஜில்லாவாக மாறும் உத்தியோகமாக அமைந்திருக்கிறது. இனிமேல் அவனைவிட்டுத் தனித்திருப்பது முறையல்ல, காதம்பரி தனியாக இருப்பது சற்றுக் கஷ்டமே. நம்முடன் வந்திருந்து ஓய்வெடுத்துக் கொள்ள அவருக்கு இன்னும் எவ்வளவோ நாட்கள் இருக்கின்றன. ஓடியாடித்திரியும் கிளியைக் கூண்டிலடைப்பது போலாகும் நம்மிடம் அழைப்பது. ஆனல் அவளுக்கும் துணை வேண்டும். அவள் குடும்பமேற்காத நிலைமையிலிருந்தால் வேறு விதமான ஏற்பாடு செய்ய வேண்டும் என எண்ணியிருந்தேன். இவ்வளவு சேவைகளைச் செய்து அனுபவம் பெற்றது போல் குடும்ப வாழ்க்கையையும் அனுபவித்துப் பார்ப்பதில் தவறு என்ன? சுதர்மனே வந்திருந்தால் இன்னும் நன்மையாக இருக்கும், அவன் உயிருடனிருக்கும் நிச்சயமே தெரியவில்லை.ஏதோ, ஓர்லக்ஷிய புருஷன் அவளை ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கும் சமயம் நாம் அதைத் தடை செய்வது இதுவரை அவளுக்கு நாம் செய்த நன்மையினல் பலனேயில்லாமல் செய்துவிடும். அதனல் அவள் கல்யாணத்திற்கு நீங்கள் அனுமதி கொடுத்தே யாகவேண்டும். பெண்ணுள்ளம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளாதிருப்பதில் எனக்கு வியப்பில்லை.'' என்ருள்.

''லக்ஷ்மி! நீ கூட இவ்வளவு தூரம் பேசி விட்டாயே. காதம்பரியை விட, உன் சொல்லே என் மனதில் புரட்சியை உண்டாக்கி விட்டது. சரி, உன்னிஷ்டப் படியே காதம்பரிக்கு அனுமதி கொடுக்கிறேன். என்ருலும், மனம் நொந்து சுதர்மன் இட்ட சாபம் சலித்து விட்டது என்றே என் மனம் இடித்துக் கூறுகிறது, என் லக்ஷியம் கனவு தான் என்பதை. அவனை என்ருவது கண்டால் அவன் முன்னுல் ஒத்துக் கொள்ளுகிறேன். இல்லை இறந்து தெய்வமாக விளங்கினல் அவன் ஆத்மாவின்முன் மானஸிகமாக ஒத்துக் கொள்கிறேன். காதம்பரி, அந்த லக்ஷியவாதியை நான் பார்க்க வேண்டுமே'' என்ருர்.

''நாளை நின்று இவ்விடம் வருவார். அண்ணு,என்னை மன்னித்து ஆசீர்வதியுங்கள். உங்கள் மனப் பூர்வமான ஆசியில்லாவிடில் நான் துவக்கும் வாழ்க்கை பரிபூர்ணமடையாது. அதனல் உங்களுக்கு மனமில்லாவிடில் வேண்டாமென்று கட்டளையிட்டு விடுங்கள்'' என்று நமஸ்கரித்தேன்.

''காதம்பரி, விதியை வெல்ல யாராலும் முடியாது. நடப்பதை ஏற்பதே மாந்தர் கடமை. இவ்வளவிற்குப் பின் உனக்கு இத்தகைய வாழ்வைப் பகவான் அளிக்க விரும்புகிருர். அதைத் தடுக்க நான் யார்? அன்று பகவான் தடுக்க விரும்பினதினுலேயே எனக்கும் அவ்விதம் தோன்றினது போலும். இன்று என் மனப்பூர்வமாக உனக்கு அனுமதி கொடுக்கிறேன். நானே முன்னின்று சாஸ்திர சம்மதப்படி விவாகம் செய்து வைக்கிறேன்'' என்ருர்.

''புத்தி கர்மானுசாரம்'' என்ற பெரியார் வாக்கு எவ்வளவு உண்மை? காலத்திற்கேற்றவாறு மனதும் மாறி விடும் போலும் என்ருள் லீலா.

''என் விஷயத்தில் அது நிதர்சனமாகி விட்டது.''

''சரி பிறகு சொல்லுங்கள்'' என்ருள் லீலா.

சொன்னபடியே மூன்ருவது நாள் அவர் வந்தார்.வந்தவுடனேயே''மாப்பிள்ளை,வாருங்கள்'' என்று வரவேற்ருர் அண்ணு. மூன்று நாள் தங்கினர். இருவருமாக ஊர் சுற்றிப் பார்த்தோம். கடைசியில் அண்ணு, மன்னி, அவர், நான் யாவரும் கூடிப் பேசித் தீர்மானித்ததின் சாராம்சம் 'வருகிற மாதம் இருபத்து ஐந்தாம் தேதி, ரிஜிஸ்டர் விவாகம். அதற்கடுத்த மாதம் ஐந்தாம் தேதி, கன்யாகுமரியில் அக்னி சாக்ஷியான மாங்கல்ய தாரணம். அண்ணு மன்னியும் கூட வருவார்கள். அவருக்காக அவரின் சங்க நண்பர்கள் இருபது பேர்கள் வருவார்கள். அங்கிருந்தபடி நாங்கள் இருவரும் ஹனி மூன் கிளம்பி விடுவது' என்பதே. இந்த ஒன்றரை மாதம் அவருக்கு முக்கியமான ஜோலியிருப்பதினல் தான் விவாகம் ஒத்தி வைக்கப்பட்டது. அதற்குள் சந்திக்க முடியாது என்பதற்காகப் படம் கொடுத்திருக்கிருர். தோல் பெட்டியை எடு, காட்டுகிறேன்'' என்று அவளை அணைத்த கையை எடுத்தாள்.

''அம்மாடி'' என்ற நீண்ட மூச்சுடன் எழுந்து பெட்டியைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''அதிலிருந்த போட்டோவை எடுத்து, லீலாவைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு இருவருக்கும் மத்தியில் படத்தைக் கையில் பிடித்த வண்ணம், ''லீலா, பார்த்தாயா ஆசாமி எப்படி? நிறம் நல்ல சிகப்பு'' என்ருள் ஆனந்தம் பொங்கும் குரலில்.

''நல்ல அழகன். இருவரும் ஏற்ற ஜோடி தான்'' என்று வாய் சொல்லிற்றே தவிர, ''லீலா! என் லக்ஷியம் நிறைவேறி விட்டது பார்த்தாயா?'' என்று தன்னைக் கேட்பது போலிருந்தது படத்தில் அவன் பார்வை. ஹ்ருதயத்தைப் பிடுங்குவது போன்ற வேதனை தாங்கமாட்டாமல் கையினுல் அமுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

''ஜோடி என்பதை ஒருவரும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். சாந்தம் ததும்பும் அவர் முகத்தை நீ பார்க்க வேண்டுமென்றே காண்பித்தேன்'' என்று திரும்பியவள், ''ஏன் லீலா உன் உடம்பிற்கென்ன?'' என்ருள்.

"ஒன்றுமில்லை. வாயுப் போல் மாரைக் குத்துகிறது. அடிக்கடி ஏற்படுவது தான். சோடா வாங்கி வைத்திருக்கிறேன். சாப்பிட்டால் சரியாகப் போய் விடும்" என்றாள்.

"அடடா! டாக்டரிடம் காண்பிப்பதற்கென்ன? இச்சிறு வயதில் இப்படியெல்லாம் வரக் கூடாது."

"இது குழந்தை முதலில ஏற்பட்டது தான். டாக்டர்கள் பார்த்து, சோடா சாப்பிடும் உபாயத்தைச் சொன்னார்கள். இது ஒன்றும் கெடுதலான வியாதியல்ல" என்றாள்.

"இருந்தாலும் மறுபடியும் டாக்டரிடம் காண்பி. சரி, அவர் நண்பர்கள் வருகிறார்கள். அது போல் என் தோழி வர வேண்டாமா? அஞ்சலி தேவியும், சுகுணாவும் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நீயும் வருகிறாயா? நீ தானே அந்தரங்கத் தோழி. அவர்களிடம் குறிப்பாகக் கல்யாணம் என்பதாக மட்டுமே சொன்னேன். உன்னிடம் தானே விபரமாகச் சொல்ல வேண்டுமென்று தோன்றினது" என்றாள்.

"அக்கா, உங்கள் சந்தோஷத்தில் எனக்குப் பங்குண்டு என்பதில் தடையுண்டா? மன்னிக்க வேண்டும். நீங்கள் குறிப்பிடும் தேதியில் தான் இங்கிலையத்தின் வருடாந்தரக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தச்சமயம் நான் அவசியம் இவ்விடம் இருந்தாக வேண்டு மென்பது உங்களுக்குத் தெரியாத விஷயமன்று. வாழ்த்துத் தந்தி அனுப்பி விடுகிறேன். பிறகு உங்கள் ஹனிமூன் முடிந்து வந்த பின்பு நேரில் வந்து பார்க்கிறேன்."

"அதுவும் சரி தான். அப்படியே செய். இந்த விஷயங்களெல்லாம் எதற்காக உனக்கு விபரமாகச் சொன்னேனென்றால், உனக்கும் இது மாதிரியான ஒரு காலம் வருமென்பதற்காகவே."

"இல்லையக்கா, எனக்கு இது மாதிரியான காலம் வரவேண்டு மென்று நான் விரும்பவுமில்லை, வரவும் வராது."

"நான்கூட அப்படித்தான் நினைத்திருந்தேன், சுதர்மனின் பிரிவு சமயம். காலம் மனதை மாற்றி விடுகிறது என்பது இப்பொழுது புலனாயிற்று."

"உங்கள் லக்ஷியம் வேறு. என் லக்ஷியம் வேறு. உங்கள் சுதர்மன் மறைந்தார். காலம் வெகுவாகச் சென்றது. பல துறையில் உழன்று அலுப்புத்தோன்றின மனதிற்குச் சாந்தியைத் தேடினீர்கள். என்னவர் மறையவில்லை. என்மனம் இன்னும் உற்சாகத்திலேயே பணியை மேற்கொள்ளுகிறது. என்னவர் மற்றவளுக்குச் சொந்தமாகிவிட்டார் என்ற செய்தியும் எனக்கு நிச்சயமாகத்தெரிந்துவிட்டது. அவரையன்றி மற்றவரை என் மனம் ஒருகாலும் ஏற்காது. இனிமேல் அவரையும் ஏற்காது என்பது திண்ணம். தியாகத்தின் ஜோதியில் என் வாழ்வின் இருள் மறைந்து விடும்." என்று எழுந்தாள்.

"சரி, காலம் போகப்போக, விஷயம்நடக்க நடக்கப் பார்த்துக்கொள்ளுகிறது. வெகுநேரமாகி விட்டது படுத்துத் தூங்குவோம்" என்றாள்.

விளக்கை அணைத்து விட்டுப் படுத்ததும் சந்தோஷ மிகுதியில் நித்ராதேவி காதம்பரியை அணைத்துக் கொண்டாள். அதுவரை அடக்கி வைத்திருந்த துன்பக்கேணியின் ஊற்றிலிருந்து பெருக்கெடுத்த நீர் தலையணையை தெப்பமாகச் செய்ததனால் உறக்கம் லீலாவின் கண்களைத் தழுவ மறுத்தது.

"ஆஹா! விதி. அதன் விசித்ர செயல்கள்தானென்ன? காலதேவா! உன் களி நடனத்தின் ஒவ்வொரு தாளத்தின் அடியும் என் ஹ்ருதயத்திலா படவேண்டும். எங்கோ சென்றார், யாரையோ மணந்தார். எவ்விடமோ வாழ்க்கை நடத்தினார் என்ற கனவு இப்படியா முடிய வேண்டும். என் உயிரினுமினியவளாகவும், குருவாகவும், என் வாழ்க்கைப் பாதையின் கரடுமுரடுகளைச் சமனாக்கி அமைதியுடன் நடக்கச்செய்தவளுமான காதம்பரி தேவியே, என் வாழ்வின் பங்காளியா? அவர்களின் தாம்பத்ய வாழ்க்கை என் கண் முன்னாகவா? அதைப் பார்த்துச் சஹித்துக்கொண்டிருக்கவேண்டுமா? தாயே! பவானி! என்னால் முடியாது. நாளையே கண்காணாது நெடுந்தூரம் சென்று விடலாமா? தன்னந்தனியே சென்றால் நன்மை கிடைக்குமா? ஈசா, இதென்ன சோதனை? அவர் என்னைப் பார்த்துவிட்டால்?

"பார்த்து விட்டால் என்ன? ஆம். லீலாவின் உறுதியையும் தன்னலமற்ற வாழ்க்கையையும் காணட்டும். அவர் லக்ஷியத்தைவிட என் லக்ஷியம் எப்படி என்பதைஉணரட்டும். ஆனால் நேருக்கு நேர் பார்க்கும் பொழுது என் நிலைமை என்னாகுமோ? நான் தெரியாதவள்போல் நடந்துகொண்டு விடுவேன். அவர்? அவரும் நம்மைக் குறித்துச் சொல்லியிருக்கவில்லை. ஏதோ ஒரு ஊரில், ஏதோ ஒரு பெண்ணைச்சந்தித்தேன், அதனால் அவரும் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ள மாட்டார்" என்று பலவாறாக ஆக்ஷேபனையும் சமாதானமுமான போராட்டத்தில் வெகு நேரம் சிக்குண்டு, கடைசியில் "இவ்விடமேயிருப்பது, கூடிய மட்டும் அவர் கண்களில் படாவண்ணம் நடப்பது. அது தான் உண்மையன்பின் சின்னம்" என்ற முடிவிற்கு வந்தும் கண்ணீரென்னவோ நிற்கவில்லை. 'துக்கத்தின் முடிவு தூக்கம்' என்ற வாக்யம் லீலா விஷயத்தில் பொய்யாக முடியுமா?

(தொடரும்)

உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?

நீங்கள் இனி ஏமாற்றமடைய வேண்டாம். "வசிகரன்" கைக்குட்டையின் உதவியால் நீங்கள் விரும்புபவரை அடையலாம். மிகவும் கடின மனதுடையவரும் உங்கள் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடப்பர். உத்யோக விஷயங்களில் விசேஷ அபிவிருத்தி ஏற்படும். இறந்தவர்களுடன் ஆத்மீகத் தொடர்பு கொள்ளலாம். வழக்குகளில் வெற்றி, வியாபாரத்தில் லாபம், லாட்டரி முதலியன மூலம் வருமானம் ஏற்படும். அதிர்ஷ்டம் உங்களைத் தேடி வரும். உங்கள் விருப்பங்கள் யாவும் நிறைவேறும்.

வசிகரன் கைக்குட்டை.

No. 1 ரூ. 1—15—0

ஸ்பெஷல் ,, ரூ. 3—15—0

இதன் அபூர்வ இயல்புகள் உபயோகிக்க ஆரம்பித்து 24 மணி நேரத்திலேயே தெரியும். ஆயிரக்கணக்கான நண்பர்கள் உபயோகித்து நன்மை அடைந்திருக்கிறார்கள். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!

Shree Mahavir Swami

(C. K.) Kartarpur (E. P.)

மாதவிடாய்:

சகோதரிகளே! எமது "சும்பகி—ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 5/- தபாற்செலவு ரூ. 0-14-0

கர்ப்பத்தடை:

"தம்பதி—சகா" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு :: ரூ. 4-4-0

6 மாத காலத் தடைக்கு :: ரூ. 2-0-0

(தபாற் செலவு ரூ. 0-14-0)

வீரியம், யௌவனம்:

உடல், மனம் இரண்டிற்கும் "மதன விலாஸ் ரஸாயனம்" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து. சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மணவாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 2—8—0

விரைவாதம்:

குடல் இறக்கம், யானைக்கால், கீல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "ஸம்ஸந்தி". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்!

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M. KAVYATIRTHA (C. M.)

70, Cornwallis Street, CALCUTTA-6.

சிறந்த சலவை...

இந்த **OK** கொண்டு தான்!

ஒ. கே. சலவை சோப்பை



EAZ 15 TM

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு, இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம், சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX 5TM

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

19948

உங்கள் (தேக) ஆரோக்கியத்தை
பருகுங்கள்



விளையாட்டுக் காரருக்கும் சரி, பலஹீனருக்கும்சரி, போர்ன்-வீடா அதிக நன்மையும் அதிக புஷ்டியும் அளிக்கும் அதனுல் அதிகசக்தியும்பெறுகின்றனர். குழந்தைகள் அதன் சாக்லேட் வாசனையை விரும்புகின்றனர். காலையிலும் மாலையிலும் ஒரு கிளாஸ் சூடான அல்லது குளிர்ந்த பாலில் இரண்டு தேக் கரண்டியளவு கலந்து பருகவும்.

Cadbury
THE TREE OF HEALTH

-ஆரோக்கிய விருக்ஷம்-

CFY-I TAM

காட்பரீஸ்
போர்ன்-வீடா

...ம், ஏ & டி விடமின்களும் நிறைந்தது

... (இந்தியா) லிமிடெட்

... கல்கத்தா தபால் பெட்டி நெ. 1725 மதராஸ்

மூளைக்கு
குளிர்ச்சியையும்
கேசத்துக்கு
வளர்ச்சியையும்
கொடுப்பதில்
நிகரற்றவை
டி.எஸ்.ஆர்.
கோகுல் ஹேர் ஆயில்
சந்தனாதி தைலம்
அரைக்கீரைவிதை தைலம்
கோகுல் அம்பர் வத்தி
Sandanathi Thailam
டி.எஸ்.ஆர். & கோ,
கும்பகோணம்.
இணையிலா வாசனை
தயாரிப்புகளுக்